# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| 1. கணக்குகளும் நிதியும் | 1 |
| 2. வங்கி மேற்பார்வை | 64 |
| 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் | 67 |
| 4. தொடர்பூட்டல் | 68 |
| 5. நாணயம் | 70 |
| 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | 73 |
| 7. பொருளாதார ஆராய்ச்சி | 76 |
| 8. ஊழியர் சேம நிதியம் | 80 |
| 9. செலாவணிக் கட்டுப்பாடு | 84 |
| 10. வசதிகள் முகாமைத்துவம் | 89 |
| 11. நிதி | 89 |
| 12. நிதியியல் உளவறிதல் பிரிவு | 91 |
| 13. மனித வளங்கள் | 93 |
| 14. தகவல் தொழில்நுட்பம் | 97 |
| 15. உள்ளகக் கணக்காய்வு | 99 |
| 16. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | 100 |
| 17. சட்டம் மற்றும் இணங்குவிப்பு | 103 |
| 18. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு | 104 |
| 19. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் | 105 |
| 20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு | 107 |
| 21. பொதுப்படுகடன் | 108 |
| 22. பிரதேச அபிவிருத்தி | 110 |
| 23. பிரதேச அலுவலக முகாமைத்துவம் | 113 |
| 24. இடர்நேர்வு முகாமைத்துவம் | 115 |
| 25. செயலகம் | 116 |
| 26. பாதுகாப்புப் பணிகள் | 117 |
| 27. அலுவலர் பணிகள் முகாமைத்துவம் | 118 |
| 28. புள்ளிவிபரவியல் | 119 |
| 29. நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை | 124 |
| 30. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை | 124 |
| 31. பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 127 |

# 1. கணக்குகளும் நிதியும்

## 2016ஆம் ஆண்டுக்கான நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் செயற்பாட்டு அறிக்கை

### 1. அறிமுகம்

இலங்கை மத்திய வங்கியின் கணக்காய்வுக் குழுவானது 2001ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுடன் 2009இல் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழு எனப் பெயர் மாற்றப்பட்டது. இக்குழுவானது நிதியியல் அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடுகளும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளும், இணங்குவிப்பு, உள்ளக கணக்காய்வு மற்றும் வெளியக கணக்காய்வு போன்ற விடையங்களில் கொள்கை மற்றும் வங்கியின் கணக்காய்வுடன் தொடர்பான விடையங்கள் தொடர்பாக நாணயச்சபைக்கு ஆலோசனை வழங்குகின்றது. மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது காலாண்டுக்கொரு முறை அல்லது தேவைப்படும் போது அதன் விதந்துரைகளையும் செயலாற்றத்தினையும் நாணயச்சபைக்கு அறிக்கையிடுகின்றது.

### 2. மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் அமைப்பு

மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது நாணயச்சபையின் நியமன உறுப்பினர் ஒருவரினால் தலைமைவகிக்கப்படுவதுடன் இரண்டு வெளிவாரி தொழில்சார் கணக்காய்வு நிபுணர்களையும் உள்ளடக்கியிருக்கிறது. நாணயச் சபைக்கான செயலாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு செயலாளராகவும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உதவிச் செயலாளராகவும் இருப்பார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கான செயலகப் பணி வசதிப்படுத்தல்களை வழங்குகின்றது. கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திலிருந்தான ஒரு பிரதிநிதி மதியுரைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கு அவதானிப்பாளராக கலந்து கொள்வார்.

மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது நாணயச் சபையின் உப குழுவாக காணப்படுவதுடன் 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான குழுவின் அமைப்பு பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| **i.** | திரு. ஏ என் பொன்சேகா | - | தலைவர் (2016.08.16 இலிருந்து நடைமுறைக்கு) |
| **ii.** | திரு. எம் ஆர் மிகுலர் | - | உறுப்பினர் |
| **iii.** | திரு. ஏ எம் பற்றிக் | - | உறுப்பினர் |

நாணயச்சபையின் முன்னாள் உறுப்பினர் திரு. ஆர் ஏ ஜெயதிஸ்ஸ 2016.05.24 வரை மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் தலைவராக பணியாற்றியதுடன் நாணயச்சபையின் உறுப்பினர் திருமதி எம் இராமநாதன் 2016.05.25 இலிருந்து 2016.08.15 வரை தலைவராக பணியாற்றினார்.

வங்கியின் இணங்குவிப்பு அலுவலர் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தொடர்பான அலுவலர் ஆகியோர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் ஏனைய ஒழுங்கான பங்கேற்பாளர்கள் ஆவர். தேவைப்படுமிடத்து, மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் தலைவரினால் திணைக்கள தலைவர்கள் அழைக்கப்படுவர். வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் போது முதன்மைக் கணக்காளர் மற்றும் வெளிவாரி கணக்காய்வினை மேற்கொள்வதற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனத்தின் ஈடுபாட்டு பங்காளர் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

குழுவானது ஒரு வருடத்தில் குறைந்தது ஆறு தடவைகள் அல்லது மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் தலைவரினால் தீர்மானத்தின் படி அல்லது நாணயச்சபையின் பணிப்புரையின் படி சந்திப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. குழுவின் கூட்டமானது குழுவின் செயலாளரினால் கூட்டப்படும். ஒரு கூட்டத்திற்கு தவைலர் உள்ளடங்களாக இரண்டு (02) உறுப்பினர்களைக் கொண்ட நிறைவெண் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

### 3. 2016இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

2016 காலப்பகுதியில் மதியுரைக் கணக்காய்வுக் குழு எட்டு (08) கூட்டங்களை நடத்தியுள்ளதுடன் கீழ்வருவன தொடர்பில் விதந்துரைகளை மேற்கொண்டுள்ளது.

அ) <u>நிதியியல் அறிக்கையிடல்:</u>

குழுவானது,

i. 2015இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு மீதான இடைகால பிரச்சனை தொடர்பான விஞ்ஞாபனத்தினை மீளாய்வு செய்ததுடன் கணக்கியல் கொள்கைகளுக்கான மாற்றங்கள், குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக கணக்கியலில் கிடைக்கத்தக்க பல்வேறு முறைகள் மற்றும் வங்கியின் நிதியியல் அறிக்கைகளின் வெளிப்படுத்தல் தெளிவினை முன்னேற்றுதல் போன்றவை தொடர்பில் நாணயச்சபைக்கு விதந்துரைகளை மேற்கொண்டது.

ii. 2015ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவ கடிதத்தினை மீளாய்வு செய்ததுடன் இலங்கை மத்திய வங்கியின் செயன்முறைகள் மற்றும் நடவடிக்கைகளின் உள்ளகக் கட்டுப்பாடுகளினை மேம்படுத்துவதற்கான கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கியல் முறைகள் போன்றவற்றின் மாற்றங்கள் தொடர்பில் விதந்துரைகளை மேற்கொண்டது.

ஆ) <u>உள்ளக கட்டுப்பாடுகளும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளும்:</u>

குழுவானது நாணயத் திணைக்களம் மற்றும் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் போன்றவை உள்ளடங்கலாக பல திணைக்களங்களின் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் ஆகியவற்றின் போதுமாந்தன்மையினையும் காத்திரமானதன்மையினையும் மீளாய்வு செய்து ஆலோசனை வழங்கியிருந்தது.

இ) இணக்குவிப்பு:

குழுவானது,

i. நிதியியல் அறிக்கையிடல் மற்றும் ஏனைய தொடர்பான விடையங்களிலான சாத்தியமான தவறுகளை அறிக்கையிடுவதற்கு அலுவலர்களையும் வெளிவாரி பங்காளர்களையும் அனுமதிக்கும் செயற்பாட்டிலுள்ள உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்து ஆலோசனை வழங்கியிருந்தது.

ii. உள்ளக கட்டுப்பாடுகளின் காத்திரமானதன்மையினை மதிப்பிடுவதற்கான வங்கியின் நடவடிக்கைகள் தொடர்பில் மீளாய்வு செய்து ஆலோசனை வழங்கியிருந்தது

ஈ) உள்ளக கணக்காய்வு:

குழுவானது,

i. உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தினை மீளாய்வு செய்து திருத்தியதுடன் திருத்தப்பட்ட சாசனத்திற்கான நாணயச்சபையின் ஒப்புதலைப் பெற்றுக்கொண்டது.

ii. தொடர்புடைய தொழில்சார் நியமங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் உள்ளக கணக்காய்வுத் திணைக்களமானது அதன் தொழிற்பாடுகளை செயற்படுத்துகின்றது என்பதனை உறுதிசெய்யும் நோக்கில் சுயாதீனமான வெளிவாரித் தர மதிப்பீட்டு மீளாள்வாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட வெளிவாரிக் தர மதிப்பீட்டு மீளாய்வு மீதான அறிக்கையினை மீளாய்வு செய்தது.

iii. உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் பின்பற்றப்பட்ட இடர்நேர்வு அடிப்படையிலான கணக்காய்வு முறையியலினை மீளாய்வு செய்தது.

iv. உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் 3 வருட உபாய கணக்காய்வுத் திட்டம் ஆகியவற்றினை மீளாய்வு செய்து நாணயச்சபையின் ஒப்புதல் பெறப்பட்டது.

v. உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பில் திணைக்கள தலைவர்களுக்கு வழங்கப்பட்ட விதந்துரைப்புக்களின் நடைமுறைக்கிடல் செயன்முறைகளையும் பின்தொடரும் நிலைமைகளையும் மீளாய்வு செய்தது.

vi. உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் தகவல்களின் பொருத்தமான அணுகுமுறையின் போதுமாந்தன்மையினை மதிப்பிட்டதுடன் நாணயச்சபைக்கு விதந்துரைகள் மேற்கொண்டது.

vii. உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் நடவடிக்கைகளின் செயற்பரப்பு திருத்தப்பட்டதுடன் திணைக்களத்தினால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட முன் கணக்காய்வு வேறுபடுத்தல் இலக்குகள் இடைநிறுத்தப்பட்டதுடன் அதற்கு பதிலாக இடர்நேர்வு அடிப்படையிலான கணக்காய்வு அணுகுமுறைக்குள் அதே இடம், ஆச்சரியம் மற்றும் சோதனை போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன.

viii. உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் வளங்களின் போதுமாந்தன்மை மீளாய்வு செய்யப்பட்டதுடன் உள்ளக கணக்காய்வு திணைக்களத்திற்கான இயலளவு அபிவிருத்தி செயற்றிட்டம் பற்றி கலந்துரையாடப்பட்டது.

உ) வெளிவாரி கணக்காய்வு:

குழுவானது

i. 2015இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு மீதான இடைகால பிரச்சனை தொடர்பான விஞ்ஞாபனம், அது தொடர்பிலான முகாமைத்துவத்தின் பதிலிறுப்புக்கள் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களின் விதந்துரைகள் போன்றவற்றை மீளாய்வு செய்தது.

ii. 2015ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவ கடிதம், அது தொடர்பிலான முகாமைத்துவத்தின் பதிலிறுப்புக்கள் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களின் விதந்துரைப்புக்கள் போன்றவற்றை மீளாய்வு செய்தது.

**4. மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் கட்டமைப்பிற்கான திருத்தங்கள்**

குழுவானது மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் கட்டமைப்பினை பல்வேறு கூட்டங்களில் மீளாய்வு செய்ததுடன் திருத்தப்பட்ட கட்டமைப்பு 2016 செத்தெம்பரில் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

செயலாளர்

நாணயச் சபையின் மதியுரைக் கணக்காய்வுக் குழு

# இலங்கை மத்திய வங்கி

### முகாமைத்துவக் கூற்று
### 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரியது

### இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்பான பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றமும்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச் சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால், மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத் தன்மைக்கான பொறுப்பபுடைமையின் அடிப்படையானது அதன் பிரதான குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளினூடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக் கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்குள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக் கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமை வாய்ந்ததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோள்களிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது.

இப் பின்னணியில், மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல் ஆகியவற்றை அமுலாக்குகின்ற போது உருவாகின்ற இலாபம் மற்றும்/ அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதால், இக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச் சூழலமைவிற்கிணங்க வரைவிலக்கணம் அளிக்கப்படுதலும் புரிந்து கொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது, நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு ஏர்னஸ்ற் அன்ட் யங் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக் கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } பீஏஎவ்/எச்/சீபீஎஸ்எல்/1/16/1 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2017 மார்ச் 28

கௌரவ நிதி அமைச்சர்,

**இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது நாணய அதிகாரச்சட்டத்தின் (422 ஆம் அத்தியாயம்) 42(2) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**அபிப்பிராயம்**

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஏனைய விரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களின் கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் நாணய அதிகாரச்சட்டத்தின் 42(2) ஆம் பிரிவுடன் (422 ஆம் அத்தியாயம்)சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுடனான இணங்கியொழுகுதலை பரீட்சிப்பதற்காக பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் எனக்கு உதவியளிக்கப்பட்டது.

வங்கியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்) இணங்க மேற்படி நிதிக்கூற்றுக்கள் அனைத்து பொருண்மையான விடயங்களையும் நியாயமாக பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்ஏ) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பந்தியில் அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

மேலும் விபரிக்கப்படுகின்றன. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஒழுக்கநெறிக் கோவைக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வுடன் தொடர்புடைய ஒழுக்கநெறி தேவைப்பாடுகளிற்கு அமைய நான் வங்கியின் செயற்பாடுகளிலிருந்து சுயாதீனமானவனாக உள்ளேன் என்பதுடன் இத் தேவைப்பாடுகளிற்கு இணங்க எனது ஏனைய ஒழுக்கநெறி பொறுப்புக்களையும் நான் நிறைவேற்றியுள்ளேன். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**நாணயச் சபையின் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நாணயச் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு வங்கியின் நாணயச் சபை பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், வங்கியின் தொடந்தியங்கும் நிலையை தொடருவதற்கான இயலுமை, வெளிப்படுத்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பிரயோகித்தக்க விடயங்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்கும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருக் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்துவதற்கும் நாணயச் சபை பொறுப்பாக உள்ளது.

**நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக உள்ள போதிலும், சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வு பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்படன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாக செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கொள்ளப்படும்.

சர்வதேச கணக்காய்வு நியமங்களின் (ISA) பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பிடுதல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்தல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் மற்றும் ஏனைய உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லைமீறல்களை உள்ளடக்குவதால், மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டு பிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறினைவிட கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பிடுதல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நாணயச் சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும், பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்படுகின்றன. இருப்பினும், எதிர்கால நிகழ்வுகளும்

AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

நிலைமைகளும் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடை நிறுத்துவதற்கு காரணங்களாக அமைய முடியும்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பிடுதல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட ஏனைய விடயங்களான கணக்காய்வின் திட்டமிடப்பட்ட நோக்கெல்லையும் காலமும் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள எவையேனும் முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பில் நாணயச் சபையுடன் நான் தொடர்பாடுகின்றேன்.

ஒப்பம்: எச். எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

## இலங்கை மத்திய வங்கி
### நிதியியல் நிலைமைக் கூற்று
### 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறானது

| | குறிப்பு | 2016 ரூ.000 | 2015 ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவையும் காசுக்குச் சமமானவையும் | | 423,783,737 | 557,474,685 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 5 | 43,278,755 | 35,779,665 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 5 | 348,544,650 | 352,054,482 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 6 | 198,880 | 4,145 |
| ப.நா. நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 7 | 117,008,340 | 83,636,350 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | | 6,175,049 | 5,075 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 938,989,411 | 1,028,954,402 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 8 | 351,426,470 | 102,866,995 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 9 | 83,306,771 | 151,131,671 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 10 | 484,043 | 886,357 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட பங்குரிமை முதலீடுகள் | 11 | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 12 | 12,322,596 | 11,164,424 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 447,580,975 | 266,090,542 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | 1,386,570,386 | 1,295,044,944 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| தங்கம் | 13 | 111,009,339 | 97,723,836 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 14 | 6,114,861 | 3,419,964 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள் | | 7,226,801 | 14,347,811 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள் | 15 | 18,132,390 | 15,422,315 |
| அருவச் சொத்துக்கள் | 16 | 156,320 | 240,610 |
| **மொத்த நிதியல்லாச் சொத்துக்கள்** | | 142,639,711 | 131,154,536 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 1,529,210,097 | 1,426,199,480 |
| **பொறுப்புக்களும் உரிமை மூலதனமும்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 17 | 45,566,681 | 12,048,241 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 6 | 14,573,675 | 24,280,308 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 18 | 79,863,615 | 68,887,459 |
| ப.நா.நிதியம் | 19 | 269,540,596 | 251,644,344 |
| ஏனையவை | 20 | 96,250,032 | 217,924,142 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 505,794,599 | 574,784,494 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 21 | 303,251,290 | 181,726,732 |
| அரச மற்றும் அரச முயற்சிகளிலுள்ள வைப்புக்கள் | 22 | 450,884 | 428,142 |
| மீள்கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 23 | 70,054,436 | 105,491,006 |
| ஊழியர்கள் நன்மைகள் திட்டத்திலுள்ள மீதிகள் | 24 | 51,744 | 7,212 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 25 | 552,777,865 | 491,699,948 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 26 | 8,563,548 | 6,824,992 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 935,149,767 | 786,178,032 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | 1,440,944,366 | 1,360,962,526 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 27 | 80 | 106 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 45 | 2,429,153 | 10,942,541 |
| பல்வகைப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 28 | 193,297 | 199,325 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | 2,622,530 | 11,141,972 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 1,443,566,896 | 1,372,104,498 |
| **உரிமை மூலதனம்** | | | |
| மூலதன நிதியம் | | 50,000,000 | 50,000,000 |
| ஒதுக்குகள் | | 35,643,201 | 4,094,982 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | 85,643,201 | 54,094,982 |
| **மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம்** | | 1,529,210,097 | 1,426,199,480 |

நாணயச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2017 மாச்சு 07ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி - ஆளுநர்

எம்.ஐ. சுபியான் - முதன்மைக் கணக்காளர்

(பகுதி *II* - 10) தொடக்கம் (பகுதி *II* - 63)ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி
### வருமானக் கூற்று
### 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 31 | **14,869,835** | 13,047,314 |
| தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | 32 | **9,739,043** | (34,853,795) |
| தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம் | | **1,755,321** | 6,686,252 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **26,364,199** | (15,120,229) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 33 | **(3,953,835)** | (3,622,737) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(3,953,835)** | (3,622,737) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்/ (நட்டம்) | | **(6,775,246)** | 10,589,267 |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்/ (நட்டம்)** | | **15,635,118** | (8,153,699) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 31 | **21,020,691** | 9,323,553 |
| வட்டிச் செலவு | 33 | **(2,197,815)** | (8,919,984) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்**/ (செலவு) | | **18,822,876** | 403,569 |
| ஏனைய வருமானம் | 34 | **1,508,261** | 1,577,442 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்/ (நட்டம்)** | | **35,966,255** | (6,172,688) |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| ஆளணிச் செலவுகள் | 35 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(4,258,884)** | (4,201,583) |
| - கட்டாய பகிர்ந்தளிப்புத் திட்டச் செலவு | | **(629,786)** | (629,357) |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டச் செலவிற்கான பங்களிப்பு | | **(1,479,963)** | (1,329,578) |
| | | **(6,368,633)** | (6,160,518) |
| பெறுமானத் தேய்வும் கடன் பதிவழிப்பும் | | **(520,961)** | (557,158) |
| பொருட்பட்டியல் செலவு (புதிய நாணயங்களை வெளியிடுவதற்கான செலவு) | | **(3,076,747)** | (3,311,761) |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள் | 36 | **(1,468,009)** | (1,611,537) |
| நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் மீதான தேறிய நட்டம் | | **(378,907)** | - |
| சொத்துக்களின் மீதான பெறுமதியிழப்பு கட்டணங்கள் | | **(139,131)** | - |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள்** | | **(11,952,388)** | (11,640,974) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்/ (நட்டம்)** | | **24,013,867** | (17,813,662) |
| பிடித்துவைத்தல் வரி | 37 | **(1,834,348)** | (1,788,157) |
| **இவ்வாண்டிற்கான தேறிய இலாபம்/ (நட்டம்)** | | **22,179,519** | (19,601,819) |

## இலங்கை மத்திய வங்கி
### அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று
### 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டுக்கான தேறிய இலாபம்/ (நட்டம்) | **22,179,519** | (19,601,819) |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| **தொடர்ந்துவரும் காலப்பகுதியில் இலாபம்/ (நட்டம்) இற்கு மீள்வகைப்படுத்துவதற்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | **2,022,241** | (624,957) |
| **தொடர்ந்து வரும் காலப்பகுதியில் இலாபம்/ (நட்டம்) இற்கு மீள்வகைப்படுத்தப்படாத ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டின் மீதான இலாபம் | **3,036,305** | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | **9,485,849** | (7,257,078) |
| **மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/ (நட்டம்)** | **36,723,914** | (27,483,854) |

10 தொடக்கம் 63ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## உரிமை மூலதன மாற்றக் கூற்று
## 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | பங்களிக்கப் பட்ட மூலதனம் ரூபா 000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா 000 | ஏனைய ஒதுக்கங்கள் (குறிப்பு 29) ரூபா 000 | திரட்டிய இலாபங்கள் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|
| **2015 சனவரி 1இல் உள்ளவாறு** | 50,000,000 | 5,986,602 | 31,493,260 | (5,768,011) | 81,711,851 |
| தேறிய நட்டம் | - | - | - | (19,601,819) | (19,601,819) |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | 256,478 | (256,478) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | - | - | - | (7,257,078) | (7,257,078) |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள் மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | - | - | 10,589,267 | (10,589,267) | - |
| இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | (132,839) | (132,839) |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/(நட்டம்) | - | - | (624,957) | - | (624,957) |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | (176) | (176) |
| புதிய ஓய்வூதியத் திட்டத்தினை நிறுவுவதற்காக ஓய்வூதிய நிதியத்திலிருந்து நிதிகளை மாற்றல் | - | - | (2,000,000) | 2,000,000 | - |
| **2016 சனவரி 1இல் உள்ளவாறு** | **50,000,000** | **5,986,602** | **39,714,048** | **(41,605,668)** | **54,094,982** |
| தேறிய இலாபம் | **-** | **-** | **-** | **22,179,519** | **22,179,519** |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | **-** | **-** | **220,272** | **(220,272)** | **-** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | **-** | **-** | **-** | **9,485,849** | **9,485,849** |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு நட்டத்தினை மாற்றல் | **-** | **-** | **(6,775,246)** | **6,775,246** | **-** |
| இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கிற்கான மாற்றல் | **-** | **-** | **-** | **(175,470)** | **(175,470)** |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/(நட்டம்) | **-** | **-** | **2,022,241** | **-** | **2,022,241** |
| இடைக்கால இலாபத்தினை அரசிற்கு மாற்றுதல் - 2016 | **-** | **-** | **-** | **(5,000,000)** | **(5,000,000)** |
| நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கான மாற்றல் | **-** | **3,036,305** | **-** | **-** | **3,036,305** |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | **-** | **-** | **-** | **(225)** | **(225)** |
| சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து திரட்டிய இலாபத்திற்கு நிதியங்களை மாற்றுதல் | **-** | **-** | **(4,650,806)** | **4,650,806** | **-** |
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **50,000,000** | **9,022,907** | **30,530,509** | **(3,910,215)** | **85,643,201** |

10 தொடக்கம் 63ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## காசுப்பாய்ச்சல் கூற்று
## 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **11,097,325** | 14,641,329 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **690,326** | 600,046 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **1,755,321** | 6,686,252 |
| தேறல் செய்யப்பட்ட செலாவணி இலாபம்/(நட்டம்) | | **(19,001,328)** | (13,838,368) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **1,500,669** | 1,570,072 |
| | | **(3,957,687)** | 9,659,331 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **3,922,805** | 3,740,805 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **2,196,385** | 10,967,407 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **5,464,654** | 6,267,998 |
| வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | | **5,557,729** | 6,645,579 |
| செலுத்தப்பட்ட வரி | | **2,595,700** | 1,817,747 |
| | | **19,737,273** | 29,439,536 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | 38 | **(23,694,960)** | (19,780,205) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு)/குறைவு | | **(2,100,302)** | (823,124) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் தொகை அறவீடுகள் | | **890,497** | 1,523,438 |
| ஆதனம், பொறி, கருவிகளின் விற்பனை | | **709** | 749 |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(35,429,276)** | (222,787,000) |
| | | **(36,638,372)** | (222,085,937) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(7,066,141)** | (89,998,376) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **30,222,682** | (289,309) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **89,038,712** | (139,352,884) |
| ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் கொடுபடத்தக்கவையிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(791)** | 2,274 |
| கொடைகள் தவிர்ந்த ஆதனம், பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் | | **488,036** | 1,206,040 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | **1,124** | 21,627 |
| குத்தகைச் சொத்துக்களின் கொள்வனவு | | **5,135** | 14,361 |
| தங்க இருப்பிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **-** | (5,124,212) |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் | | **488,183** | 920,424 |
| | | **113,176,940** | (232,600,055) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(149,815,312)** | 10,514,118 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடுதல் | | **(595,035,881)** | (504,508,531) |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை மீளப்பெறல் | | **656,113,797** | 579,313,118 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் தேறிய வழங்கல் | | **61,077,916** | 74,804,587 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| அரச கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | 39 | **160,378,295** | (23,208,921) |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பில சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | 40 | **(121,524,559)** | (20,944,825) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | | **38,853,736** | (44,153,746) |
| **சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **22,224,180** | 118,958,333 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | **(13,612,965)** | 68,788,313 |
| ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள் | | **225** | 175 |
| திரட்டிய நிதியத்திற்கான இலாப மாற்றல் | | **5,000,000** | - |
| | | **(8,612,740)** | 68,788,488 |
| **நிதியியல் நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | | **30,836,920** | 50,169,845 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **(142,673,352)** | 40,903,760 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **8,982,404** | 29,500,154 |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **557,474,685** | 487,070,771 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 41 | **423,783,737** | 557,474,685 |

10 தொடக்கம் 63ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி

### 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்

### 1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க இலங்கை நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி (வங்கி அல்லது இ.ம.வங்கி) இலங்கையின் நாணய, ஒழுங்குவிதிகள், நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பொறுப்பான அதிகாரசபையாக இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ளது.

இந் நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கு நாணயச் சபையின் சார்பில் ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2017 மாச்சு 07ஆம் திகதி அதிகாரமளிக்கப்பட்டது.

### 2. கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 2.1 தயாரிப்பிற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு, காணி, கட்டடம், தங்கம் மற்றும் ஒரு சில நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த ஏனையவை சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டு வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.1 அறிக்கையிடல் படிவம்

வங்கியானது நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்கு வரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறை குறிப்பு 4இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

#### 2.1.2 இணக்கக் கூற்று

2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந் நிதிக்கூற்றுக்கள் பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. எனினும், குறிப்பிட்ட வகைப்படுத்தல் வேறுபாடுகள் காரணமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுத் தொகைகள் இந்நிதிக் கூற்றுக்களிலிருந்து வேறுபடலாம்.

#### 2.1.3 சமர்ப்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட நாணயம்

வேறு விதமாக கூறப்பட்டிருந்தாலொழிய அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவின் ஆயிரத்திற்கு கிட்டிய தொகையில் தரப்பட்டுள்ளன.

#### 2.2 முக்கியமான கணக்கியல் தீர்ப்புகளும் மதிப்பீடுகளும்

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்தின் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன தேவைப்படுவதுடன், இவை வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிவிக்கப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிர்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இக்கருதுகோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதியில் தாக்கத்தினை விளைவிக்கக்கூடும்.

#### 2.2.1 விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்பு

சந்தைப் பெறுமதியானது அதன் கிரயத்திற்கு கீழே கணிசமானளவு அல்லது நீண்ட காலப் போக்கில் வீழ்ச்சியடையும் போது வங்கியானது, விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்புக்களை நிர்ணயிக்கிறது. குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட காலப் போக்கு எது என்பதை நிர்ணயிப்பதற்கு திறனாய்வுகள் அவசியமாகின்றன.

#### 2.2.2 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நலத் திட்டங்களும்

குறித்துரைக்கப்பட்ட நலத் திட்டங்களின் செலவு ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், எதிர்கால இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத் திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் குறிப்பு 45இல் தரப்பட்டுள்ளன.

#### 2.2.3 நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சந்தைப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும்.

#### 2.3 விடுக்கப்பட்டும் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாத நியமங்கள்

விடுக்கப்பட்டும் வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் வழங்கல் திகதி வரை நடைமுறைக்கிடப்படாத வங்கிக்கு ஏற்புடைத்தான நியமங்கள் மற்றும் விளக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவை நடைமுறைக்குவரும் பொழுது, வங்கி இந்நியமங்களை பின்பற்ற எண்ணுகிறது.

#### 2.3.1 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 நிதியியல் சாதனங்கள்

2014 யூலையில் ப.க. நியமச் சபையானது நிதியியல் சாதனங்களினது செயற்றிட்டத்தின் அனைத்துக் கட்டங்களையும் பிரதிபலிக்கின்ற பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 நிதியியல் சாதனங்களின் இறுதிப் பதிப்பினை வெளியிட்டதுடன் ப.க நியமம் 39 நிதியியல் சாதனங்கள் நீக்கப்படுகிறது. நியமமானது, வகைப்படுத்தல் மற்றும் அளவீடு, பெறுமதியிழப்பு மற்றும் பாதுகாப்புக் கணக்கீடு என்பனவற்றிற்கான புதிய தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்துகிறது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 அனுமதிக்கப்பட்ட உரிய நேரத்திற்கு முன்னர் பிரயோகத்துடன் 2018 சனவரி 1 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்குகின்ற வருடாந்தக் காலப்பகுதிக்கு நடைமுறைப்படுத்தப்படும். பின்னோக்கிய பிரயோகங்கள் தேவைப்படுத்தப்படுகின்ற போதும், ஒப்பீட்டு அடிப்படையிலான தகவல்கள் கட்டாயமானவையல்ல. ஆரம்பப் பிரயோகத் திகதி 2015 பெப்புருவரிக்கு முன்னதாக இருப்பின் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இன் முன்னைய பதிப்பினை (2009, 2010 மற்றும் 2013) உரிய நேரத்திற்கு முன்னர் பிரயோகித்தல் அனுமதிக்கப்படும். பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுவது வங்கியின் நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் அறவிடலின் மீது தாக்கமொன்றினைக் கொண்டிருக்குமெனினும் வங்கியின் நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் தாக்கமெதனையும் கொண்டிருக்காது.

**2.3.2 பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 7 காசுப் பாய்ச்சல் கூற்றுக்கான திருத்தங்கள்**

2016 சனவரியில், பன்னாட்டு கணக்கீட்டு நியமச் சபையினால் நிதியியல் நடவடிக்கைகளின் வெளிப்படுத்துகளை மேம்படுத்தும் நோக்கத்திற்காகவும், மற்றும் அறிக்கையிடும் நிறுவனங்களுடைய திரவத்தன்மை நிலை தொடர்பாக பாவனையாளர்களிற்கு சிறந்த புரிந்துணர்வை வழங்குவதற்காகவும் பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 7 காசுப் பாய்ச்சல் கூற்றுக்கான திருத்தங்கள் வெளியிடப்பட்டது. புதிய தேவைப்பாடுகளின் கீழ், நிறுவனங்கள் தமது காசுப் பாய்ச்சல் மற்றும் காசல்லா விடயங்களில் ஏற்படும் மாற்றங்களைப் போன்று (உ+ம்: வெளிநாட்டு நாணய நகர்வுகளினாலெழும் இலாபம் மற்றும் நட்டம்) நிதியியல் நடவடிக்கைகளின் விளைவாக நிதியியல் பொறுப்புக்களில் ஏற்படும் மாற்றங்களை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. இத்திருத்தம் 2017 சனவரி 01 இலிருந்து அமுலுக்குவரும். வங்கியானது இதன் தாக்கத்தினை தற்போது மதிப்பீடு செய்கின்றது.

**2.3.3 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 குத்தகைகள்**

பன்னாட்டு கணக்கீட்டு நியமச் சபையினால் 2016 சனவரியில் குத்தகைகளின் கணக்கீட்டிற்கென புதிய கணக்கீட்டு நியமம், ப.க.அ.நியமம் 16 குத்தகைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய நியமம் குத்தகைக்கு விடுபவரின் குத்தகைகளின் கணக்கீட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. எனினும், குத்தகைதாரர் பெரும்பாலான குத்தகைகளை, குத்தகைப் பொறுப்பொன்றாகவும் அதனுடன் தொடர்புடைய சொத்துக்களைப் பாவிப்பதற்கான உரிமையையும் நிதி நிலைமைக் கூற்றில் அடையாளப்படுத்தாதிருப்பதற்கான தெரிவு காணப்படுகின்ற போதும், குத்தகைக்காரர்கள் அடையாளப்படுத்தப்பட்ட அனைத்து குத்தகைகளுக்கும் கட்டாயமாக தனி மாதிரியொன்றைப் பிரயோகிக்க வேண்டும். பொதுவாக, அடையாளப்படுத்தப்பட்ட குத்தகைகளுக்கான இலாபம் மற்றும் நட்டம் ஆகியவற்றின் அடையாளம் காணல்முறை தற்போதைய நிதிக் குத்தகைக் கணக்கீட்டினைப் போன்று காணப்படுவதுடன், வட்டி மற்றும் பெறுமானத்தேய்வு செலவுகள் வருமானக் கூற்றில் வேறாக இனங்காணப்படுகின்றன.

ப.நி.அ. நியமம் 16, 2019 சனவரி 01இல் தொடங்குகின்ற ஆண்டிலிருந்து அமுலுக்கு வருகின்றது. புதிய வருமான நியமம் ப.நி.அ. நியமம் 15 பிரயோகிக்கப்படுகின்ற, அதே திகதியில் பிரயோகிக்கப்பட்டால் மட்டுமே, உரிய நேரத்திற்கு முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்படும். குத்தகைதாரர், ப.நி.அ. நியமம் 16 இனை முழுமையான பின்னோக்கிய பிரயோகத்துடன் அல்லது ஒரு மாற்றியமைக்கப்பட்ட பின்னோக்கிய பிரயோக அணுகுமுறையுடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.

வங்கியானது உரிய நேரத்திற்கு முன்னர் பிரயோகிக்க எதிர்பார்க்காதிருப்பதுடன், தற்போது இந் நியமத்தின் தாக்கத்தினை மதிப்பீடு செய்கின்றது.

**2.3.4 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15 வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்**

ப.நி.அ. நியமம் 15, 2014 மேயில் வெளியிடப்பட்டதுடன் உரிய நேரத்திற்கு முன்னைய பிரயோகத்துடன் 2018 சனவரி 01 இல் அமுலுக்கு வருகின்றது. ப.நி.அ. நியமம் 15, வருமானத்தை இனங்காண்பதற்கான கொள்கைகளை வரையறை செய்வதுடன் வாடிக்கையாளருடனான அனைத்து ஒப்பந்தங்களுக்கும் பிரயோகிக்கப்படக் கூடியது. எனினும், நிதியியல் சாதனங்களின் மூலமான வட்டிகளும் கட்டணங்களும் மற்றும் குத்தைகள் என்பன ப.நி.அ. நியமம் 15இன் வீச்சு எல்லைக்கு வெளியே காணப்படுவதுடன், ஏனைய பொருத்தமான நியமங்களின் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்றன (உ+ம்: ப.நி.அ. நியமம் 9 மற்றும் ப.நி.அ. நியமம் 16 குத்தகைகள்)

ப.நி.அ. நியமம் 15 இன் கீழ் வருமானமானது, பொருட்கள் மற்றும் சேவைகள் மாற்றப்படும் போது, அதனைப் பெற்றுக்கொண்டவர் பொருட்கள் மற்றும் சேவைகளின் உரிமையைப் பெற்றுக் கொள்ளும் அளவிற்கேற்ப அளவிடப்படும். இந் நியமமானது வருமானத்தின் தன்மை, அளவு, காலப்பகுதி, வருமானத்தின் நிச்சயமற்ற தன்மை மற்றும் வாடிக்கையாளருடனான தொடர்புடைய காசுப் பாய்ச்சல்கள் தொடர்பான மிக விரிவான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளையும் குறிப்பிடுகின்றது.

வங்கியானது உரிய நேரத்திற்கு முன்னைய பிரயோகத்தை எதிர்பார்க்காதிருப்பதுடன், தற்போது இந்நியமத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்கின்றது.

**3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்**

**3.1 வெளிநாட்டு நாணய மாற்றுவீதங்கள்**

வங்கியின் நடைமுறை மற்றும் சமர்ப்பண நாணயம் இலங்கை ரூபாவாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளுக்கு ஏற்புடையதான நடைமுறை நாணயத்திலேயே பதிவு செய்யப்பட்டன. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியில் ஏற்புடையதாகவிருந்த செலாவணி வீதத்திற்கேற்ப இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபா செலாவணி வீதங்கள் பின்வருமாறு:

| நாணயம் | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | **108.2380** | 105.3888 |
| 1 கனேடிய டொலர் | **111.0617** | 103.7278 |
| 1 யூரோ | **158.4959** | 157.4097 |
| 1 யப்பானிய யென் | **1.2818** | 1.1970 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | **201.3811** | 199.6310 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | **184.5087** | 213.5508 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | **149.8000** | 144.0623 |
| 1 சீன யுவான் (கரைகடந்த) | **21.4901** | 21.9285 |

நிதியல்லாத விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டுச் செலாவணியின் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் அளவிடப்பட்டுள்ளது.

**3.2 சந்தைப் பெறுமதி அளவுகள்**

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் காணி, கட்டடம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சந்தைப் பெறுமதியில் அளவிடுகின்றது. அத்துடன், பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி குறிப்பு 46இல் வெளிப்படுத்தப்பட்டன.

சந்தைப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களுக்கேயான கொடுக்கல்வாங்கல்களின் பொருட்டு பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். சந்தைப் பெறுமதி அளவீடு சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அநுகூலம் நிறைந்த சந்தை

முதன்மை அல்லது மிக அநுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சந்தைப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் பொருளாதாரத்தில் கொண்டுள்ள சிறந்த

ஈடுபாடுகளில் அவர்களது ஊகங்களில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை விலையிடும் பொழுது பயன்படுத்தப்படுகிறது. நிதியல்லாச் சொத்தொன்றின் சந்தைப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்தில் சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்தில் சிறந்த முறையில் பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கணக்கில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமான மதிப்பீட்டு நுணுக்கங்களைப் பயன்படுத்துவதுடன் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான சந்தைப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சந்தைப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சந்தைப் பெறுமதிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு பொதுவாக சந்தைப் பெறுமதியின் அளவிடலுக்குப் போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்.

மட்டம் 2 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சந்தைப் பெறுமதியினை அளவிடுவதற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு நேரடியாகவோ மறைமுகமாகவோ அவதானிக்கப்படுதல்.

மட்டம் 3 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சந்தைப் பெறுமதியினை அளவிடுவதற்குக் குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு அவதானிக்கப்பட முடியாதவை.

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் மாற்றல்கள் வகைகளின் மீள்மதிப்பீட்டின் மூலம் (பொதுவாக சந்தைப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) ஒழுங்கமைப்பிலுள்ள மட்டங்களுக்கிடையில் நிகழ்ந்திருக்கின்றன.

### 3.3 நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

வங்கியானது, நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன், இணைந்த வருமானம் மற்றும் செலவுகளையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், ரூபா நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந்நடவடிக்கைகளைத் தனித்தனியாக விளக்குவதன் மூலம் வங்கியின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைந்து அறிக்கையிடுதல் நிதிக் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங்காணப்பட்டதுடன் இச்செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் அனைத்து கிரமமான வரியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் முறையே வர்த்தகம் நடைபெற்ற திகதியைக் கொண்டு இனங்காணப்படுகின்றன. கிரமமான வரியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் என்பன பொதுவான ஒழுங்குவிதிகளில் அல்லது சந்தையின் மரபுவரி முறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் விநியோகத்தைத் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளாகும்.

#### 3.3.1 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள்

வர்த்தகப்படுத்தக் கூடிய நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள “பிணையங்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள்” வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்டு சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் வர்த்தகப்படுத்தக்கூடிய பிணையங்கள் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

பிணையம் வங்கிக்குச் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம் அல்லது நட்டம் “விலை மீள் பெறுமதியிடலிலிருந்து பெறப்படாத இலாபமாக / (நட்டமாக)” அறிக்கையிடப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக / (நட்டமாக) அறிக்கையிடப்படும்.

#### 3.3.2 வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள்

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒதுக்குகளின் கீழ் பிணையங்களின் விற்பனைக்காகவுள்ள பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளம் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபமும் நட்டமும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கப்படும் வரை அல்லது வேறு விதமாக இதனை அகற்றும் வரை அல்லது முதலீட்டினை இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை உரிமை மூலதனப் பங்கின் (நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏனைய ஒதுக்குகளின் கீழ் காட்டப்பட்டுள்ள) தனியொரு கூறாக இனங்காணப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் முன்னைய உரிமை மூலதனப் பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படும்.

#### 3.3.3 நிதிப் பெறுதிக் கருவிகள்

வங்கி, பெறுதிகளான குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள், வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல் என்பவற்றை இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றதேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. அத்தகைய நிதிப் பெறுதிக் கருவிகள் சந்தைப் பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன், சந்தைப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்தில் சொத்தாகவும், எதிர்கணியமாக இருக்குமிடத்தில் பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படும் நிதிப்பெறுதிக் கருவிகளின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் “தேறல் செய்யப்படாத விலை மதிப்பீட்டிருந்தான இலாபத்தில்/ (நட்டத்தில்)” உள்ளடக்கப்படுகின்றன.

#### 3.3.4 “1 நாள்” வேறுபாடு

கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாதனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான திகதியை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை (ஒரு நாள் வேறுபாடு)

"தேறாத விலை மீள்மதிப்பீடுகள் இலிருந்தான 'இலாபம்/ (நட்டம்)" ஆக இனங்காணும் அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சந்தைப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள் அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### 3.3.5 பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்

வங்கியானது இலங்கை அரசின் முகவராக செயற்படுவதனை காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில், ப.நா. நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன், அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு அறிக்கையிடல் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

### 3.3.6 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்குச் சமமானவைகளும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலுள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

உள்நாட்டு நாணயங்களினது நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் ஏலத்தில் கோரப்படாத பகுதியின் கொள்வனவு உட்பட அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நிதிக் கொள்கைப் பொறிமுறையாக வங்கியினால் பிரயோகிக்கப்படுகிறது. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந் நிதிக்கூற்றில் 38, 39 ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தலில் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி காசு/கொடுப்பனவுக் கட்டளைகள் ஊடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்புடன் அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/வெளிநின்ற கொடுப்பனவுக் கட்டளைகள் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 3.3.7 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல்வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

### 3.3.8 துணைநில் வைப்பு வசதி

2014 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதியானது (முன்னர் துணைநில் மீள்கொள்வனவு வசதி) பிணை ஒதுக்கங்கள் இல்லாத "தூய வைப்புக்கள்" ஆக மாற்றப்பட்டன. எனவே, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவற்றின் மிகையான நிதியங்களை தூய வைப்புக்களாக துணைநில் வைப்பு வசதி வீதத்தில் நாளாந்த அடிப்படையில் முதலிடலாம்.

துணைநில் கடன் வழங்கல் வசதியின் நடைமுறைகள் (முன்னர் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி) துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றது.

### 3.3.9 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இ.ம.வ. பிணையங்களை வழங்குகின்றது.

வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. வழங்கப்பட்ட விலைக்கும் முகப்புப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் செலவாகப் பதிவு செய்யப்படுகின்றது.

### 3.3.10 இலங்கை அரச பிணையங்கள்

வங்கியின் முதலீட்டுப்பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகின்றது. இவை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதனால் நிதி நிலைமை பற்றிய கூற்றில் இச் சொத்துப்பட்டியல் கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதியப்படுகிறது.

**3.3.11 அரசிற்கான முற்பணங்கள்**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை தொடர்ச்சியாக கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதியப்படுகின்றன.

**3.3.12 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் கொண்டு செல்லப்படுவதுடன் அறவிடமுடியாத தொகை ஏதுமிருந்தால் அதைக் கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன் (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொடுப்பனவுத் தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப் பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிடமுடியாக் கடன்கள் அடையாளம் காணப்படும் போது பதிவழிக்கப்படுகின்றன.

**3.3.13 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்**

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளுக்காக காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது வங்கியிடமிருந்து அப் பிணையங்களை திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்களின் படி) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் நிபந்தனையற்ற பூரணமான உத்தரவாதமெனப்படும்.

கடன்பட்ட பிணையங்கள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத பிணையங்களினதும் சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. தரகு ஒன்று சேர்ந்த அடிப்படையில் செலவிடப்படுகின்றன.

கடன் வழங்கும் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல், சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றம் செய்யப்பட்டால் மட்டுமே நிதிக்கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

**3.3.14 பணியாளர்களுக்கான கடன்கள்**

வங்கியின் பணியாளர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். மேற்படி 2008ஆம் ஆண்டிலிருந்து கடன்கள் ப.க.நி. 39இன் பிரகாரம் கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி நியாயமாகப் பெறுமதியிடப்பட்டுள்ளன.

**கழிவு வீதம்** - மேற்படி வீதமானது இ.ம.வ. யின் (பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால்) ஐ.அ.டொலர் வர்த்தக வட்டி வீதத்துடன் வங்கிக் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு 1 சதவீத இடர்நேர்வுத் தவணைத் தொகையையும் சேர்த்து நீண்டகாலப் பணவீக்க இலக்கின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு கழிவு வீதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திற்கும் இடையிலுள்ள பணியார்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதியின் வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் கடன்தீர் நிதியாக தீர்க்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக் கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சந்தைப் பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

**3.3.15 நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழக்கக்கூடிய தன்மை**

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து பெறுமதி இழக்கக்கூடியதா என வங்கி மதிப்பிடுகிறது.

**3.3.16 கடன்தீர் கிரயத்திலுள்ள சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

கடன் மீதான நட்டத்தின் தேய்வடையக்கூடிய தன்மை மற்றும் கடன்தீர் நிதிக் கிரயத்தின் பெறுகைகள் எடுத்துச் செல்லப்படுதல் ஏற்பட்டு, ஒரு புற உண்மைச்சான்று இருக்குமானால் அந்த நட்டத் தொகையானது சொத்துக்கள் எடுத்துச் செல்லும் தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களின் அசல் தாக்குமிகு வட்டி வீதத்தில் கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்கால பெறுமதிக்கும் (ஏற்படாத எதிர்காலக்கடன் நட்டங்கள் உள்ளடங்கப்படவில்லை) இடைப்பட்ட வித்தியாசமாக அளவிடப்படுகிறது. (பயனுறு வட்டி வீதம் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டளவில் கணிக்கப்பட்டுள்ளது) சொத்தின் எடுத்துச் செல்லும் தொகையானது ஒன்றில் நேரடியாகவோ அன்றேல் படிகளின் கணக்கை உபயோகிப்பதன் ஊடாகவோ குறைக்கப்படும் வருமானக் கூற்றிலே நட்டத் தொகை இனங்காணப்படும்.

தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச்சொத்துகளுக்காக தனிப்பட்ட முறையிலுள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளாக, தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் பெறாத நிதிச் சொத்துக்களுக்காக தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக உள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளா என முதலில் வங்கி மதிப்பிடுகிறது. முக்கியமானதோ இல்லையோ, தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு நிதிச் சொத்துக்கு முடக்கம் இருப்பதற்கான புறவுண்மைச் சான்றுகள் இல்லையென அது தீர்மானிக்குமிடத்து, அச்சொத்தானது ஒத்த கடன் இடநேர்வுக் குண அம்சங்களைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் குழுவில் உள்ளடக்கப்படுகிறது. அத்துடன் நிதிச் சொத்துக்களின் குழுவானது முடக்கத்துக்கு உள்ளானது என கூட்டாக மதிப்பிடப்படுகிறது. முடக்கத்திற்காக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துக்களானவை அவைகளுக்கு முடக்க இருப்பு இருப்பின் அல்லது இனங்காணப்பட்டவையாகத் தொடர்ந்து இருப்பின் முடக்கத்தின் கூட்டு மதிப்பீட்டிற்குள் அவைகள் உள்ளடக்கப்படமாட்டாது.

தொடர்ந்து வந்த ஒரு காலப்பகுதியில் தேய்வடையக்கூடிய இழப்பின் தொகை வீழ்ச்சி அடைந்தால் அந்த வீழ்ச்சியை புறவுண்மை ரீதியாக முடக்கம் இனங்காணப்பட்டதன் பின்பாக கடந்த ஒரு நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடியும். முன்னதாக இனங்காணப்பட்ட முடக்க இழப்பும் நீக்கப்படும். அதைத் தொடர்ந்து வந்த முடக்க இழப்பின் நீக்குதலும் சொத்தின் எடுத்துச் செல்லும் பெறுமதி, அதனுடைய கடன்தீர் நிதிக் கிரயத்தை அந்த நீக்குதல் திகதியில் விஞ்சிவிடாது இருக்கும் அளவிற்கு வருமானக் கூற்றிலே இனங்காணப்படுகின்றது.

**3.3.17 விற்பனைக்குள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்பு**

விற்பனைக்குத் தயாராகவுள்ள ஒரு சொத்து முடக்கப்படுமாக இருந்தால் அதனுடைய கிரயத்திற்கும் (எந்தவொரு முதன்மைக் கொடுப்பனவும் கடன்தீர் நிதியும் நீங்கலாக) அதன் தற்போதைய நியாயப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசத்தை உள்ளடக்கிய தொகையானது, இலாபத்திலோ நட்டத்திலோ முன்னதாக இனங்காணப்பட்ட எந்தவொரு முடக்க இழப்பையும் கழித்து, நிகரச் சொத்துக்களின் பெறுமதியிலிருந்து வருமானக் கூற்றிற்கு மாற்றப்படுகிறது. விற்பனைக்குத் தயாராகவுள்ளதாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களின் கருவிகள் சம்பந்தமான நீக்குதல்கள் இலாபத்தில் இனங்காணப்படுவதில்லை. கடன் கருவிகளின் மீதான முடக்க நட்டங்களின் நீக்குதலானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நீக்கப்படுகிறது. அந்தக் கருவியின் நியாயப்

பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுவதானது புறவுண்மை ரீதியாக இலாபம் அல்லது நட்டத்தில் முடக்க நட்டம் இனங்காணப்பட்ட பின்பாக இடம்பெறும் நிகழ்வோடு தொடர்புடையதாக இருக்க முடியும்.

**3.3.18 வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்கள்**

வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்கள், கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றின் தவணைப் பொறுப்புக்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகிறது. வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றத்தின் விளைவாகத் தோன்றும் வருமானமும் நட்டமும் உடனடியாகவே வருமானக் கூற்றில் செலவுகளாக இனங்காணப்படுகின்றது. பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது நட்டமோ விலை தேறல் செய்யப்படாத மீள்பெறுமதியிடலிலிருந்தான இலாபமாக/ (நட்டமாக) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பின் மீள்கொடுப்பனவின் ஊடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபமாக/ (நட்டங்களாக) பதிவு செய்யப்படுகிறது.

**3.3.19 ஏனைய நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயத் தாள்கள், காசு வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப்படுகின்றன.

**3.4 ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்**

**3.4.1 தங்கம்**

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக்கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. ஆதலால், 2016 திசெம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறு வங்கியானது அதன் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக ரூ.124.41 பில்லியனை (ஒதுக்கப்பட்டது ரூ.111.01 பில்லியன் மற்றும் ஒதுக்கப்படாதது ரூ.13.40 பில்லியன்) தங்கத்தில் வைத்திருந்தது. மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருந்தமையால் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதோடு, தங்கமானது சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுகளுக்கு மாற்றப்பட்டன. இலாப ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தீர்க்கப்படாத இலாபங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டன.

**3.4.2 இருப்புக்கள்**

**3.4.2.1 நாணய இருப்பு**

வங்கியின் இருப்புக்களானது, சுற்றோட்டத்திற்கு இன்னும் வெளிப்படாத புதிய நாணயங்களை உள்ளடக்கியுள்ளது. புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் உற்பத்தி மற்றும் வடிவமைப்புடன் தொடர்பான செலவுகள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. சுற்றோட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளிற்கான செவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதுடன், வெளியிடப்படும் வேளையில் வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது. மெதுவாக அசையும் இருப்புக்களுக்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

**3.4.2.2 ஏனைய இருப்புக்கள்**

ஏனைய இருப்புக்கள் கிரயச் செலவு மற்றும் தேறிய விற்றுப் பெறக்கூடிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றது. கிரயச் செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

**3.4.3 ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனம், பொறி, உபகரணம், நாளாந்தப் பராமரிப்புச் செலவுகளைத் தவிர்த்து பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் பெறுமதி முடக்கத்தை ஒன்று சேர்த்துக் கழித்துக் கிரயத்தில் கூறப்பட்டுள்ளது. இனங்காணல் விடயத்தை பூர்த்தி செய்வதற்காக இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவீனங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது. காணியும் கட்டடங்களும் கட்டடம் மீதான பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு மீள்பெறுமதியிடல் திகதியை தொடர்ந்தான முடக்கம் அறவிடப்பட்டு நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.

சொந்தக் காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க இருப்புக்காலத்தைப் பயன்படுத்தி தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது.

| சொத்தின் வகை | பயனுள்ள இருப்புக் காலம் |
|---|---|
| சொந்தக் காணியிலுள்ள கட்டடங்கள் | 50 வருடங்களுக்கு மேல் |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | குத்தகைக் காலத்திற்கு மேல் |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 வருடங்கள் |
| உந்து ஊர்திகள் | 5 வருடங்கள் |
| 2014 இலிருந்து பெறப்பட்ட உந்து ஊர்திகள் | 10 வருடங்கள் |
| கணனி வன்பொருள் | 4 வருடங்கள் |
| ஏனையவை | 3 வருடங்கள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் எடுத்துச் செல்லும் பெறுமதியானது மீளப்பெற முடியாதென சுட்டிக்காட்டும் பொழுது பொறிகளினதும் உபகரணங்களினதும் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் முடக்கத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. கிரயத்தின் ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் எடுத்துச் செல்லப்படுகின்றன. இது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் சந்தைப் பெறுமதியாக உள்ள பொழுது, கட்டடங்கள் மீதான பின் தொடர்ந்து வந்த ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமானத் தேய்வுகளும், பின்தொடர்ந்து வந்த ஒன்று சேர்க்கப்பட்ட முடக்க நட்டங்களும் கழிக்கப்பட்டு இருக்கும்.

வங்கியின் காணி மற்றும் கட்டிடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுக்கொரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும்.

எந்த மீள்மதிப்பீடு மிகையும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நிகரச் சொத்துப் பிரிவில் உள்ளடக்கப்பட்டு, மீள்மதிப்பீட்டு ஒதுக்கில் செலவு வைக்கப்படுகிறது. வருமானக்கூற்றிலே முன்னதாக இனங்காணப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியானது, மறுதலையாகாத அளவில், இருக்கும் போது அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. அதே சொத்தின் மீதான நேரடியாக குறைநிரப்பும், ஒரு முந்திய தொகையின் பற்றாக்குறையானது மீள்மதிப்பீட்டு ஒதுக்கின் மிகைக்கு எதிராக நேரடியாக மிகை நிரப்புவது தவிர்ந்த நிலைமைகளில், ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. அகற்றும் நிலையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், தக்கவைத்துக் கொள்ளும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது. ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணம், அகற்றுகையின் போது அல்லது அதன் பாவனை அல்லது அகற்றுகையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அதன் இனங்காணல் முடிவடைகிறது.

அச்சொத்தின் இனங்காணல் முடிவடைவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை வருமானத்துக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்து இனங்காணப்படல் முடிவடைந்த வருடத்தின்

வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. மிகுதியாகவுள்ள சொத்தின் பெறுமானங்கள் பயனுள்ள இருப்புக் காலங்கள் மற்றும் முறைகள் மீள்பார்வை செய்யப்படுவதுடன் பொருத்தமாய் இருப்பின் கிரமமாகத் தக்கவாறு அமைத்துக் கொள்ளப்படுகிறது.

### 3.4.4 அருவச் சொத்துக்கள்

கணனி வன்பொருள்களில் முழுமையாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயச் செலவில் இனங்காணப்பட்டுள்ளன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து 4 வருட கால பயனுள்ள ஆயுட்கால அடிப்படையில் திரண்ட கடன்தீர் நிதி எவையேனும் இருப்பின் கழிக்கப்பட்டு கிரயச் செலவில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

### 3.4.5 ஏனைய சொத்துக்கள்

ஏனைய சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட பெறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

### 3.4.6 நிதிசாராச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

சூழ்நிலைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் முன்கொண்டு செல்லும் பெறுமதியில் முடக்கத்தை உண்டுபண்ணலாம் என்பதைக் காட்டுகின்றனவா என்பதையும் நிதிசாரா சொத்துக்கள் முடக்கப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதையும் அறிக்கை செய்யும் ஒவ்வொரு திகதியிலும் வங்கி மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்ளும். ஒரு சொத்தின் தேய்வடைந்ததாகக் கருதப்படின் அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்தெழுதப்படும்.

### 3.4.7 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக் கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக் கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியுமாயின் ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

### 3.4.8 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதி நிலைமை பற்றிய கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

### 3.4.9 ஓய்வூதியம் மற்றும் தொழில்நிலைக்குப் பிந்திய ஏனைய நலத்திட்டங்கள்

வங்கியால் கையாளப்படும் ஊழியர் நிலைக்குப் பிந்திய ஓய்வூதியம் மற்றும் ஏனைய நலத்திட்டங்கள் குறிப்பு 45இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.4.10 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பிந்திய மருத்துவ நலன்கள் போன்ற குறித்துரைக்கப்பட்ட நலத்திட்டங்களை வங்கி செயற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளியும் பிறிதாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர். எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து, ஒவ்வொரு திட்டத்திற்கும் குறித்துரைக்கப்பட்ட திட்டங்களின் கீழ் நன்மை வழங்கும் செலவு நிர்ணயிக்கப்படுகின்றது.

### 3.4.11 நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள்

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்களாகும்.

### 3.4.12 கொடைகள்

கொடைகள் (பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்காக உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் சந்தைப் பெறுமதியில் இனங்காணப்பட்டு, உரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கணக்குக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சந்தைப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

### 3.4.13 ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்று சேரும் விடுவிப்புக்கள் என்பன மற்றைய உள்நாட்டு கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3.4.14 தொழிற்படு குத்தகைகள்

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையைக் கருத்திற் கொண்டு வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது.

### 3.4.15 வரி விதிப்பு

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 118ஆம் பிரிவின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், வங்கியானது 2013ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பொருளாதார பணிகள் விதிப்புச் (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி, பொருளாதார பணிகள் விதிப்பு விலக்களிக்கப்பட்டதுடன், 2013ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி நிதியியல் பணிகள் வழங்கல்கள் மீது பெறுமதிசேர் வரியானது விலக்களிக்கப்பட்டது.

### 3.4.16 வருமானங்களும் செலவினங்களும்

வங்கிக்குப் பொருளாதார நன்மைகளை பெரும்பாலும் கொண்டு வரக்கூடியதாகவும் அவ் வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகும் உள்ள போது வருமானமானது இனங்காணப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் இனங்காணப்பட்டுள்ளன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்:

### 3.4.16.1 வட்டி

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் கொடுபட வேண்டிய கழிவுகளையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

### 3.4.16.2 பங்கிலாபங்கள்

பங்குடமையாளர்கள் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டதுடன் பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகிறது.

### 3.4.16.3 பல்தரப்பட்டவை

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் ஒன்று திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

தற்செயலான நடவடிக்கை மற்றும் முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், நட்டங்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

### 3.4.17 எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் நிதி நிலைமை பற்றி கூற்றுக்கு வெளிவாரியான விடயங்களாக இனங்காணப்பட்டு எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகளாகிய உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச் சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றது.

## 4. நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க திருத்தப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் அல்லது பின்பற்றுவதற்கு அங்கீகாரமளிக்கப்படும் கொள்கைகளை அல்லது நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன ஒப்படைக்கப்பட்டதுடன் பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிர்வாகம் என்பவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறை என்பவற்றின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறை முகவராண்மையாகவும் தொழிற்படுகிறது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்
- நாணய வெளியீடு
- நிதி முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துதல்
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும், முகாமைப்படுத்தலும், மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்துதலும்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குக் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படும்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற நோக்கத்துடனும் அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக்கொள்ள முடியும். மேற்படி நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருானக்கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4.1 வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழான இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயங்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணயங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண் யப்பானிய யென் மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன காணப்பட்டன. இவ் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதிக் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

### 4.2 உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் துறையிலிருந்து நிதியங்களை மீளப் பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்று வைத்திருக்கப்படுகின்றது. வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

### 4.3 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதிக்கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

## 5. வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| **இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள்** | | |
| - வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் | **29,882,588** | 23,986,740 |
| - தங்கம் (ஒதுக்கப்படாதது) | **13,396,167** | 11,792,925 |
| | **43,278,755** | 35,779,665 |
| **விற்பனைக்குள்ள முதலீடுகள்** | | |
| - வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் | **341,225,162** | 344,668,225 |
| - அலகு முதலீடு | **7,319,488** | 7,386,257 |
| | **348,544,650** | 352,054,482 |
| **மொத்த வெளிநாட்டு பிணையங்களிலான முதலீடுகள்** | **391,823,405** | 387,834,147 |

வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகளானவை, இலங்கை மத்திய வங்கியால் 2016இல் உலக வங்கியின் ஒதுக்கு ஆலோசனை முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்துடன் செய்யப்பட்ட முதலீட்டை உள்ளடக்கியுள்ளது. 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான இம் முதலீட்டின் பெறுமதியானது ரூ. 29,882.59 மில்லியனாகும்.

## 6. பெறுதி நிதியியல் சாதனங்கள்

(அ) கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதியினைத் தருகின்றது. மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பெயரளவுத் தொகை, பெறுதித் தொகை, சொத்துக்கள் தொடர்பான வீதங்களை அல்லது சுட்டெண்ணினை சுட்டுகின்றதாக இருந்ததுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுமொன்றாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

| | 2016 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|
| | சொத் துக்கள் | பொறுப் புக்கள் | பெயரளவு தொகை | சொத் துக்கள் | பொறுப் புக்கள் | பெயரளவு தொகை |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நாணய பரஸ்பர பரிமாற் றல்கள் | **198,880** | **8,659,453** | **374,297,030** | - | 13,989,728 | 379,377,271 |
| முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி | - | **2,410** | **2,771,960** | 2,259 | 169 | 4,725,243 |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தெரிவுகள் | - | **5,911,812** | **85,524,565** | - | 10,290,162 | 157,782,073 |
| வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல்கள் | - | - | - | 1,886 | 249 | 1,440,623 |
| மொத்தம் | **198,880** | **14,573,675** | **462,593,555** | 4,145 | 24,280,308 | 543,325,210 |

(ஆ) நாணய பரஸ்பர பரிமாற்றல்கள், நாணயத் தெரிவுகள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் மற்றும் வட்டிவீத பரஸ்பர பரிமாற்றல்கள் போன்றவற்றை உள்ளடக்கிய மேற்படி பெறுதிகள், பன்னாட்டு ஒதுக்குகளை பேணுவதற்கான நியதித் தேவை நோக்கங்களை வசதிப்படுத்துவதற்காக வங்கிகளால் பேணப்படும் பன்னாட்டு ஒதுக்குகளின் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. மேலும், வங்கியானது நாட்டின் நிதியியல் முறைமையினை வலுப்படுத்துவதற்காகவும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் வெளிநாட்டு மத்திய வங்கிகளை நீண்ட காலத்திற்கு வெளிநாட்டு நிதியங்களை கொண்டு வருவதற்கு ஊக்குவிப்பதற்காகவும் இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதித்தன்மையினைப் பேணுவதற்காக வெளிநாட்டு ஒதுக்குகளின் மட்டத்தினை உயர்த்தும் பொருட்டு அவ்வங்கிகளுடனான பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறது.

(இ) பெறுதிகள் என்பது வட்டிவீதங்கள், நிதியியல் சாதனங்களின் விலைகள், பண்ட விலைகள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள், கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சுட்டெண்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலிறுத்தும் விதத்தில் அவற்றின் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் நிதியியல் உடன்படிக்கைகளாகும்.

(ஈ) வங்கியின் பெறுமதிகளினது சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க பகுதி குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்கானதொரு உபாயமாக மேற்கொள்ளப்பட்ட நாணய பரஸ்பரபரிமாற்றத்தினை உள்ளடக்குகின்றது. நாணய பரஸ்பர பரிமாற்றலில் வங்கியானது இணங்கப்பட்ட வீதங்களில் மற்றொரு நாணயத்தின் பரிவர்த்தனையில் வேறுபட்ட நாட்களில் நாணயத்தின் குறிப்பிட்ட தொகையினை செலுத்துகிறது/ பெறுகிறது.

(உ) வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தத்திலிருந்து, வங்கியானது இணங்கப்பட்ட எதிர்காலத்திகதியொன்றில் இணங்கப்பட்ட வீதமொன்றில் வெளிநாட்டு நாணயத்தின் குறிப்பிட்டதொரு தொகையினை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான கடப்பாடுகளை பெற்றிருக்கிறது.

(ஊ) வட்டிவீத பரஸ்பர பரிமாற்றத்தில் வங்கி தொடர்பான வீதமொன்றிற்கு (உ-ம். 3 மாதகால இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதம் + இலாப எல்லை) சுட்டெண்படுத்தப்பட்ட மிதக்கும் வீதத்தினைப் பெறுகின்ற வேளையில், இணைத்தரப்பினருக்கு (பரஸ்பர பரிமாற்றல் வீதம்) நிலையான வீதத்தைச் செலுத்துகின்றது மற்றும் எதிர்மாறானது.

(எ) பெறுதி உடன்படிக்கைகளுக்கு வங்கியின் வெளிப்படுத்துகைத் தன்மையானது, அத்தகைய பெறுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் வங்கிக்கு திடமான தன்மை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் ஒட்டு மொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது.

## 7. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் | **303,070** | 970,272 |
| ப.நா.நிதிய அனுமதிப் பங்கு | **116,559,364** | 82,527,455 |
| ப.நா.நிதியத்துடனான வைப்புக்கள் | **145,906** | 138,623 |
| **மொத்த ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்** | **117,008,340** | 83,636,350 |

### (அ) சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்

சிறப்பு எடுப்பனவு உரிமைகளைக் (சிஎஉ) கொண்டிருத்தலென்பது, ப.நா.நி. அங்கத்தவர்களுக்கு எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக் கூடியதாயுள்ள நாணய வகைகளுக்கான நிலையான உரிமையாகும். அதாவது சிஎஉ வைத்திருப்பவர்களால் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைப் பரிமாறிக் கொள்ள முடியும். இவ்வங்கத்தவர்கள் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைத்திருப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் கடப்பாடுடையவர்களாதலாலும் அத்துடன் சிஎஉ முறைமையின் நெறிப்படுத்தல்களுக்கு ஏற்புடையதான நானாவிதப் பொறுப்புகளுக்கு மதிப்பளிப்பதற்கு கடப்பாடுடையவர்களாதலாலும் ஒதுக்குச் சொத்தாக சிஎஉ முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயத்தின் மீது சிஎஉ இற்குள்ள உரிமைக்கு இரண்டு விதத்தில் மதிப்பளிப்பதை ப.நா.நி. உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமைகளிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு

நிலைமையிலுள்ள அங்கத்தவர்களைப் பெயரிடுவதன் மூலமும் மற்றும் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் அங்கத்தவர்களிடையே தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்வதன் மூலமுமாகும். மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கையிடல் தினங்களில் வங்கி வைத்திருந்த மொத்தத் தொகை மேலே காட்டப்பட்டுள்ளது.

**(ஆ) ப.நா. நிதிய அனுமதிப் பங்கு**

அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்ற ப.நா.நிதிய அனுமதிப் பங்கானது (மூலதன உதவுதொகை) ப.நா.நிதியத்தின் வளங்களுக்கான முதன்மை மூலமாகும். பரந்தளவில் ஒரு நாட்டின் ஒப்பீட்டளவிலான பொருளாதார நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும். வங்கியொன்றின் ப.நா. நிதியத்துடனான அதன் கொடுக்கல்வாங்கல்கள், ப.நா.நிதியத்தின் உறுப்புரையின்படி, அரசாங்கத்தின் சார்பில் அதன் சொந்தக் கணக்கின் மீது இடம்பெறுவதனால் ப.நா.நிதியத்தின் அனுமதிப் பங்கு வங்கியின் சொத்துக்களைப் பிரதிபலிக்கிறது.

ப.நா. நிதியம், பொது அனுமதிப் பங்கு மீளாய்வு உடன்படிக்கைக்கு அமைவாக, 2016 சனவரியில் ப.நா. நிதியத்தின் 189 அங்கத்தவர்களினதும் அனுமதிப் பங்கினையும் 2016 சனவரியில் அதிகரிக்க முடிவு செய்தது. இதன் விளைவாக, இலங்கையின் ப.நா. நிதிய அனுமதிப்பங்கு 2016 பெப்புருவரி 17இல் முன்னைய அனுமதிப்பங்கு தொகையான சிஎஉ 413.40 மில்லியனிலிருந்து சிஎஉ 578.80 மில்லியனுக்கு அதிகரித்தது.

ப.நா. நிதியத்தின் அனுமதிப் பங்கு தொடர்பில் செலுத்தப்படத்தக்க தொகை குறிப்பு 19இல் அனுமதிப் பங்கு பொறுப்பு என்ற தலையங்கத்தின் கீழ் காட்டப்படுகிறது. உறுப்பினரொருவரின் அனுமதிப் பங்கு பின்வருவன உட்பட ப.நா. நிதியத்துடனான நாட்டின் நிதியியல் மற்றும் நிறுவன ரீதியான தொடர்புகளை நிர்ணயிக்கின்றது.

(i) **சந்தாக்கள்:** ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் பங்களிப்பானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும். அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய கூடியபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நிதியம் தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தும் (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) மற்றும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் நாணயத்தின் மூலமும் செலுத்துதல் வேண்டும்.

(ii) **வாக்களிக்கும் அதிகாரம்:** ப.நா.நிதியத்தின் தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் அதிகாரமானது அனுமதிப் பங்கின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் அடிப்படை வாக்குகளுடன், அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர். 2008 சீர்திருத்தமானது மொத்த வாக்குகளின் 5.51 சதவீதத்தில் அடிப்படை வாக்குகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்துள்ளது.

(iii) **நிதியிடலை பெறுவதற்கான வசதி:** அங்கத்தவரால் ப.நா. நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குவிதிகள் மற்றும் விஸ்தரிக்கப்பட்ட திட்டங்களுக்கேற்ப அங்கத்தவரால் தற்காலத்தில் வருடாந்த அனுமதிப் பங்கின் 200 சதவீதமும் திரண்ட ரீதியில் 600 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களிலும், குறிப்பிட்ட பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டும் இவ் வசதி இதை விட அதிகரிக்கலாம்.

(iv) **சிஎஉ ஒதுக்கல்:** அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குத் தொகை தீர்மானிக்கப்படுகிறது.

**(இ) ப.நா. நிதியத்துடனான வைப்புக்கள் - பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு**

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு-2 (எ.நி.கணக்கு-2) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783 இனை மாற்றுவதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்பு வைப்பு மேற்கொள்ளப்பட்டது. எ.நி. கணக்கை முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக எ.நி. கணக்கில் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றுவதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது.

**8. இலங்கை அரச பிணையங்கள்**

அரச பிணையங்களின் பட்டியலானது நாணய விதிச்சட்டத்தின் 90 (2) பிரிவின் கீழ், நாணய விதிக்கொள்கையை அமுல்படுத்துவதற்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டு பேணப்படுகின்றது.

**9. அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்**

இவை நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்களைக் குறிக்கின்றன. இது திரண்ட நிதியத்திலிருந்து உறப்படுவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் செலவுகளுக்கான முற்பணங்களின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

**10. வங்கிகளுக்கான கடன்கள்**

இக்கடன்களானது நாணய விதிச் சட்டத்தின் பாகம் V பகுதி III 'ஏ' இற்கிணங்க, உற்பத்தித்திறன் தேவைகளுக்காக கடன் கொடுத்தலை வசதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **31,340** | 33,534 |
| சுசகன சுனாமி கடன் திட்டம் கட்டம் I மற்றும் II | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **-** | 10,665 |
| மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **112,652** | 233,867 |
| சௌபாக்யா கடன் திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **101,176** | 175,296 |
| - ஏனையவர்கள் | **30,768** | 47,864 |
| கிழக்கின் பொருளாதார நடவடிக்கைகளை மீளமைத்தல் கடன்திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **115,977** | 212,265 |
| - ஏனையவர்கள் | **53,296** | 76,984 |

| | | |
|---|---|---|
| வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட வீடுகளின் திருத்தல் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **30,310** | 36,267 |
| வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (மீள்நிதியிடல் கட்டம் II) | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **34,632** | 84,140 |
| - ஏனையவர்கள் | **1,194** | 2,778 |
| **கழிக்குக:** | | |
| ஐயத்திற்குரிய பெறத்தக்கவைகளுக்கான ஏற்பாடு | **(27,302)** | (27,302) |
| **தேறிய பெறத்தக்கவை** | **484,043** | 886,357 |

ஐயத்திற்குரிய கடன்களுக்கான ஏற்பாட்டிலுள்ள அசைவு

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் | **27,302** | 27,302 |
| ஐயக்கடன்களின் பதிவழிப்பு | - | - |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **27,302** | 27,302 |

### 11. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 105 "ஏ" ற்கு அமைய, இம்முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப் பிரிவின் கீழ் நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித்தொழில் மற்றும் நிதித் துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக்கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு வங்கிக்கு வலுவளிக்கப்பட்டுள்ளது.

**(i) முதலீட்டு நிலைமை**

| கம்பனி | வியாபாரத்தின் தன்மை | கொண்டிருக்கும் உடமை % 2016 | 2015 |
|---|---|---|---|
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **19.66** | 19.66 |
| பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | கொடுகடன் தரமிடல் | **10.00** | 10.00 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | தன்னியக்க நிதிய மாற்றல் | **7.50** | 7.50 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் ஏற்பாடு | **19.30** | 19.30 |

**(ii) முதலீடுகளின் கொண்டு செல்லும் பெறுமதி**

| கம்பனி | 2016<br>ரூபா<br>000 | 2015<br>ரூபா<br>000 |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | **5,845** | 5,845 |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | **29,500** | 29,500 |
| பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | **3,500** | 3,500 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | **2,250** | 2,250 |
| **மொத்த முதலீடுகள்** | **41,095** | 41,095 |

### 12. ஏனைய சொத்துக்கள்

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| உள்ளக நிதியங்களின் முதலீடு | **5,208,837** | 4,302,590 |
| சொத்துக்களின் மீதான பெறுமதியிழப்பு கட்டணம் | **(139,131)** | - |
| உள்ளக நிதியங்களில் தேறிய முதலீடு | **5,069,706** | 4,302,590 |
| தீர்ப்பனவுச் செலவில் அலுவலர் கடன்கள் | **4,588,285** | 4,234,875 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை | **1,401,497** | 1,378,695 |
| பிரதேச அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறத்தக்கவை | **208,977** | 311,572 |
| தீர்ப்பனவுச் செலவில் தொகுதிக் கடன்களில் முதலீடு | **11,964** | 10,564 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | **26,941** | 27,103 |
| | **11,307,370** | 10,265,399 |
| நிதியல்லாச் சொத்துக்கள் | | |
| அலுவலர் கடன் தொடர்பான பிற்போடப்பட்ட சொத்து | **1,015,226** | 899,025 |
| | **12,322,596** | 11,164,424 |

தொகுதிக் கடன்களில் செய்யப்பட்ட முதலீடுகள், ஒடுக்கிவிடும் செயற்பாடுகள் நிலையிலுள்ள மேர்கன்ரைல் கிறடிட் லிமிடெட்டினால் 1988 காலப்பகுதியில் பெறப்பட்டு, 2011இல் பதிவழிக்கப்பட்ட மீள்நிதியிடல் கடன்களின் பகுதித் தீர்ப்பனவாக வங்கியினால் பெறப்பட்ட தொகுதிக் கடன்களை பிரதிபலிக்கிறது.

வங்கியினால் இலங்கை சேமிப்பு வங்கியின் ரூ.10,839,500.00 மொத்தப் பெறுமதி கொண்ட தொகுதிக் கடன்கள் பெறப்பட்டதுடன் அது தீர்ப்பனவுச் செலவில் குறிப்பிடப்படுகிறது. தொகுதிக் கடனின் 10 ஆண்டுகள் பிணைகளற்றவையாகவும், மீட்கப்படக் கூடியவையாகவும் மற்றும் கீழ்நிலைப்படுத்தப்பட்டவையாகவும், ஆண்டொன்றிற்கு 5 சதவீத வட்டியை அல்லது ஓராண்டு திறைசேரி உண்டியல் விளைவு வீதத்தினை இதில் எது குறைவானதோ அத்தொகை வருடாந்தம் ஒன்றுசேர்ந்து வைக்கப்படும்.

### 13. தங்கம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(1) மற்றும் பிரிவு 67(2) இன்படி, தங்கம் வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படுகிறது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(2) இன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது நாணய வடிவிலா வைத்திருப்பதற்கு முயல வேண்டும்.

### 14. இருப்புக்கள்

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | **3,402,661** | 2,179,294 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | **1,779,021** | 961,716 |
| வழங்குனரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயக்குத்திகள் | **116,197** | 143,336 |
| வழங்குனரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயத் தாள்கள் | **803,227** | 128,026 |
| | **6,101,106** | 3,412,372 |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | **(45,000)** | (45,000) |
| | **6,056,106** | 3,367,372 |
| எழுதுகருவிகளும் சில்லறை பொருட்பட்டியல்களும் | **58,557** | 52,259 |
| மருந்துவ நிலைய இருப்புக்கள் | **198** | 333 |
| **கிரயச் செலவு அல்லது பெறத்தக்க தேறிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் மொத்த இருப்புக்கள்** | **6,114,861** | 3,419,964 |

## 15. ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள்

| கிரயம் | காணியும் கட்டடமும் | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் | தளபாடங்களும் கருவிகளும் | உந்து ஊர்திகள் | கணனி | ஏனையவை வாசிப்புப் பொருட்கள் | ஏனையவை நடைபெற்று வரும் கட்டுமானம் | 2016 மொத்தம் | 2015 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு** | 13,369,401 | 1,283,488 | 1,230,501 | 489,475 | 810,574 | 53,007 | 1,366,603 | **18,603,049** | 17,422,764 |
| மீள் மதிப்பீடுகள் | 1,848,249 | - | - | - | - | - | - | **1,848,249** | - |
| மேலதிக சேர்ப்பனவுகள் | - | 5,295 | 49,535 | - | 47,988 | 764 | 389,590 | **493,172** | 1,235,918 |
| நீக்கப்பட்டவை | - | - | (1,145) | - | (18,176) | - | - | **(19,321)** | (25,756) |
| மாற்றல்கள் | 1,506,711 | 207,139 | 2,923 | - | 2,653 | 237 | (1,724,798) | **(5,135)** | (29,877) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 16,724,361 | 1,495,922 | 1,281,814 | 489,475 | 843,039 | 54,008 | 31,395 | **20,920,014** | 18,603,049 |

| தேய்மானம் | காணியும் கட்டடமும் | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் | தளபாடங்களும் கருவிகளும் | உந்து ஊர்திகள் | கணனி | ஏனையவை வாசிப்புப் பொருட்கள் | ஏனையவை நடைபெற்று வரும் கட்டுமானம் | 2016 மொத்தம் | 2015 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு** | 662,493 | 718,434 | 706,812 | 340,845 | 718,222 | 33,928 | - | **3,180,734** | 2,736,068 |
| ஆண்டிற்கான தேய்மானம் | 198,998 | 66,408 | 81,326 | 35,611 | 51,125 | 1,220 | - | **434,688** | 469,674 |
| மீள் மதிப்பீடுகள் | (809,150) | - | - | - | - | - | - | **(809,150)** | - |
| நீக்கப்பட்டவை | - | - | (1,089) | - | (17,559) | - | - | **(18,648)** | (25,008) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 52,341 | 784,842 | 787,049 | 376,456 | 751,788 | 35,148 | - | **2,787,624** | 3,180,734 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | 16,672,020 | 711,080 | 494,765 | 113,019 | 91,251 | 18,860 | 31,395 | **18,132,390** | 15,422,315 |

காணிகள் கட்டடங்களுக்கான கொண்டு செல்லும் பெறுமதி சந்தைப் பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றது. மிக அண்மைக்கால சுயாதீனமான மதிப்பீடு எவ்.எம். வலுவேர்ஸ் (FM மதிப்பீட்டாளர்) இனால் 2016 திசெம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டதோடு, அது 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

பிரேசில் மற்றும் நியூயோர்க்கிலுள்ள வங்கியின் ஆதனங்களினை வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சின் செயலாளருக்கு மாற்றல் செய்வதற்கு 2016 நவெம்பரில் அதிகாரமளிக்கப்பட்டமையால், சந்தைப் பெறுமதியில் பதிவு செய்யப்படவில்லை. மேலும், மேற்படி ஆதனங்களானவை விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களாக (Assets Held for sale) வகைப்படுத்தப்படாது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

நிதியாண்டுப் பகுதியில் வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் காசு வடிவிலமைந்த மொத்தச் செலவு ரூ.488.04 மில்லியன்களாகும். (2015 - ரூ.1,206.04 மில்லியன்)

2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகத் தேய்வடைந்த சொத்துக்களின் பெறுமதி ரூ.1,404.91 மில்லியனாக இருந்தது (2015 - ரூ.1,303.09 மில்லியன்).

### வங்கியின் சொந்த உரிமைக் காணி கட்டங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள் என்பனவற்றின் மதிப்பீடு தொடர்பான தகவல்கள்

| ஆதனம் | பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளரின் பெயர் | மதிப்பீட்டு அணுகுமுறை | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை | சதுர அடி ஒன்றுக்கான மதிப்பீட்டு விலை | மாதமொன்றுக் கான மதிப்பிடப் பட்ட வாடகை | வெளிச் செல்லும் செலவுகள் | கொள்வனவு ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டடம் | | | | | | | |
| தலைமை அலுவலகம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 12,500,000 | 9,000 - 15,000 | - | - | - |
| வைற்ஏவேய்ஸ் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 13,500,000 | - | 6,000,000 | 40% | 16.66 |
| லொய்ட்ஸ் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 13,500,000 | - | 6,750,000 | 40% | 16.66 |
| சென்றல் பொயின்ட் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 14,000,000 | - | 7,500,000 | 35% | 16.66 |
| வங்கிக் கற்கைகளுக்கான மத்திய நிலையம் - இராஜகிரிய | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 2,500,000 - 3,500,000 | 2,500 - 9,500 | - | - | - |
| வங்கி இல்லம் - கொழும்பு 07 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 7,500,000 | 3,500 - 8,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - மாத்தறை | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 1,500,000 - 3,000,000 | 4,000 - 7,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - மாத்தளை | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 100,000 - 500,000 | 2,500 - 7,500 | - | - | - |
| விடுமுறை இல்லம் - நுவரெலியா | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 1,000,000 | 2,000 - 7,000 | - | - | - |
| விடுமுறை இல்லம் - கதிர்காமம் | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 200,000 | 4,500 - 10,000 | - | - | - |
| குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள் | | | | | | | |
| பிரதேச அலுவலகம் - அநுராதபுரம் | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 3,500 - 7,500 | - | - | - |
| விடுமுறை இல்லம் - அநுராதபுரம் | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 5,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 1,500 - 7,000 | - | - | - |

**காணி, கட்டடங்களின் உள்ளடக்கம்**

| | கொண்டு செல்லும் பெறுமதி 2016 ரூபா 000 | கொண்டு செல்லும் பெறுமதி 2015 ரூபா 000 |
|---|---|---|
| சொந்த உரிமைக் காணி | **8,976,339** | 5,689,063 |
| சொந்த உரிமைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **7,424,982** | 6,935,388 |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **270,700** | 82,457 |
| | **16,672,021** | 12,706,908 |

மீள் பெறுமதியிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் தேய்மானங்கள் கழிக்கப்பட்ட கிரயச் செலவு எடுத்துச் செல்லல் பெறுமதியாக நிதிக் கூற்றுக்களில் புகுத்தப்பட்டிருப்பின் இது ரூ.8,762.63 மில்லியனாகும் (2015 - ரூ.9,998.75 மில்லியன்).

### 16. அருவச் சொத்துக்கள்

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| **கணனி மென்பொருட்கள்:** | | |
| **கிரயச் செலவு:** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **948,648** | 927,022 |
| மேலதிக சேர்ப்பனவு | **1,124** | 21,626 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **949,772** | 948,648 |
| **பதிவழிப்பு மற்றும் பெறுமதியிழப்பு** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **708,038** | 620,938 |
| ஆண்டுக்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம் | **85,414** | 87,100 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **793,452** | 708,038 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **240,610** | 306,084 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **156,320** | 240,610 |

நிதியாண்டுப் பகுதியில் வங்கி காசுக் கொள்வனவு செய்த அருவச் சொத்துக்களின் மொத்தச் செலவு ரூ.1.12 மில்லியனாகும் (2015 - ரூ.21.63 மில்லியன்).

2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகப் பதிவழிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூ.613.34 மில்லியனாகும் (2015 - ரூ.594.08 மில்லியன்).

## 17. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **45,267,025** | 11,524,984 |
| ஏனைய வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **299,656** | 523,257 |
| | **45,566,681** | 12,048,241 |

## 18. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியமானது, 1974ஆம் ஆண்டில் பங்குபற்றும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கிடையே கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்கின்ற நிறுவனமாக, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக் குழுவின் அனுசரணையின் கீழ் நிறுவப்பட்டது. இலங்கை, பங்களாதேஸ், ஈரான், நேபாளம், பாக்கித்தான், இந்தியா, பூட்டான், மியன்மார் மற்றும் மாலைதீவு ஆகியன பங்குபற்றும் நாடுகளாகும். இது பங்குபற்றும் நாடுகளுக்கிடையே நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களைப் பல்தரப்பு அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கான தீர்ப்பனவு வசதியொன்றாகும். ஒவ்வொரு மாத இறுதியிலுமுள்ள தேறிய நிலையை இரண்டு மாத கடன் கால கட்டத்தின் பின்னர் தீர்த்து வைத்தல் அல்லது பெற்றுக்கொள்ளல் நடைபெறுகிறது. தேறிய கடன்படுநர்களால் 0.34 சதவீதத்திற்கும் 0.51 சதவீதத்திற்குமிடையிலான வட்டி அமெரிக்க டொலரிலும் (2015இல் 0.02 சதவீதம் மற்றும் 0.07 சதவீதம்), 0.00 சதவீதத்திற்கும் 0.00 சதவீதத்திற்குமிடையிலான வட்டி யூரோவிலும் (2015இல் 0.00 சதவீதம் மற்றும் 0.00 சதவீதம்) இவ் வசதிக்காகச் செலுத்தப்படுவதுடன் இது, தீர்த்து வைக்கும் நாட்களுக்கிடையே தேறிய கடன்படுநர்களின் நாளாந்த மொத்த மீதிகளுக்கு மாற்றப்படுகிறது. மேற்படி மீதிகளின் மூலம், குறிப்பிட்ட அறிக்கையிடல் திகதியில் ஆசிய தீர்ப்பனவுக் ஒன்றியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை காட்டப்படுகிறது.

## 19. பன்னாட்டு நாணய நிதியம்

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறையல்லாதவை | **48,288,764** | 34,386,440 |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறை | **34,687,890** | 65,334,236 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | **79,638,200** | 78,946,116 |
| ப.நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை | **52,858,160** | 47,512,222 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | **54,067,582** | 25,465,330 |
| | **221,251,832** | 217,257,904 |
| ப.நா.நி. தொடர்பான மொத்தப் பொறுப்புகள் | **269,540,596** | 251,644,344 |

(அ) வட்டியுடனான கடன்கள், ப.நா.நிதியத்திடமிருந்து பெறப்பட்ட நீடிக்கப்பட்ட நிதிய வசதிகளையும் (நீ.நி.வசதி) மற்றும் துணைநில் ஒழுங்குகளையும் உள்ளடக்கியுள்ளது.

(ஆ) **நீடிக்கப்பட்ட நிதிய வசதி (நீ.நி.வசதி)** என்பது சென்மதி நிலுவை மற்றும் அரசினுடைய பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் என்பனவற்றுக்கு உதவும் ப.நா. நிதியத்தால் வழங்கப்பட்ட மூன்று வருடகால வசதியாகும். ப.நா. நிதியம் சிஎஉ 1.10 பில்லியன் பெறுமதி கொண்ட நீ.நி வசதியினை (அண்ணளவாக ஐ.அ.டொலர் 1.50 பில்லியன்) 2016 யூனில் அங்கீகரித்தது. இத்தொகையானது நாட்டின் தற்போதைய ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கின் 185 சதவீதத்திற்குச் சமனானதாகும். நீ.நி. வசதியின் கீழ் முதற்கட்ட தொகுதிக் கொடுப்பனவு சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 168.10 மில்லியன்) 2016 யூனில் கிடைக்கப்பெற்றது. நீ.நி. வசதியின் இரண்டாவது மீளாய்வின் பின்னர், இரண்டாவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 162.59 மில்லியன்) 2016 நவெம்பரில் பகிர்ந்தளிக்கப்பட்டது. மிகுதித் தொகையானது மூன்று வருட காலத்தில் ஐந்து மேலதிக தொகுதிக் கொடுப்பனவாக பகிர்ந்தளிக்கப்பட எதிர்பார்க்கப்படுவதுடன், இறுதித் தொகுதிக் கொடுப்பனவு 2019 ஏப்பிறலில் பெற எதிர்பார்க்கப்படுகின்றது. நீ.நி. வசதிக்கு உரித்தான வட்டி வீதமானது சிஎஉ வட்டி வீதத்திற்கு சமனான (தற்போது வருடாந்தம் 0.05 சதவீத நிலையிலுள்ளது) அடிப்படை வீதக் கட்டணத்துடன் மேலதிகமான 100 அடிப்படைப் புள்ளிகளையும் உள்ளடக்கியுள்ளது.

(இ) **துணைநில் ஒழுங்குகளானது** கடன்பெறும் நாடுகளின் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தின் மீதான குறிப்பிட்ட நிலைமைகள் தொடர்பாக, பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்படுகின்ற சென்மதி நிலுவைக்கு உதவும் நிதியியல் வசதியாகும். ப.நா. நிதியம் சென்மதி நிலுவைக்கு உதவியாக இலங்கைக்கு 2009 யூலையில் சிஎஉ 1.65 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 2.60 பில்லியன்) ஒப்புதலளித்தது. துணைநில் ஒழுங்குகள் 2012 யூலையில் இறுதித் தொகுதியை பெற்றுக்கொண்டதுடன், 2012இல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. இக்கடன் வசதி 5 ஆண்டுகளுக்குள் மீளச் செலுத்தப்பட வேண்டியதுடன் மீள் கொடுப்பனவுகள் 2012 ஒத்தோபரில் தொடங்கப்பட்டன. துணைநில் ஒழுங்குவசதிகளின் வட்டி வீதம், தீர்ப்பனவுக் கட்டணம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ஆகிய இரண்டு கூறுகளை உள்ளடக்கியதாகும். தீர்ப்பனவுக் கட்டணம் சிஎஉ வட்டி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு வாராந்தம் கணிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கில் 300 சதம் வரையிலான வெளிநின்ற கடன் தொகையில் ஆண்டிற்கு ஒரு சதவீதமாக இருக்கும். வெளிநின்ற கடன் தொகை அனுமதிப்பங்கான 300 சதவீதத்தினை விஞ்சும் பொழுது 300 சதவீதத்தினை விஞ்சிய வெளிநின்ற தொகை மீது ஆண்டிற்கு 2 சதவீதமான மேலதிகக் கட்டணம் விதிக்கப்படும். முதலாவது மீள்கொடுப்பனவான சிஎஉ 25.80 மில்லியன், 2012 ஒத்தோபர் 25ஆம் நாளன்று செலுத்தப்பட்டது.

மொத்தத் தொகையான சிஎஉ 1,128.24 மில்லியன் மீள்கொடுப்பனவுகள் 2013 - 2015 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதுடன், சிஎஉ 327.28 மில்லியன் 2016 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான வெளிநின்ற மீதி சிஎஉ 172.25 மில்லியனாக விளங்கியது.

12 மாத காலப்பகுதிக்கு முன்பும் பின்பும் அதன் பின்னர் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வட்டியுடன் கூடிய கடன் தொகைகள் பின்வருமாறு:

| | செல்லுபடியாகும் வட்டி வீதம் % | முதிர்ச்சி | 2016 ரூ. 000 | 2015 ரூ. 000 |
|---|---|---|---|---|
| **நடைமுறை** | | | | |
| து.நி.ஒ | 0.244 | 2017 | **34,687,890** | 65,334,236 |
| | | | **34,687,890** | 65,334,236 |
| **நடைமுறையற்ற** | | | | |
| நீ.நி.வ | 0.244 | 2026 | **48,288,764** | - |
| து.நி.ஒ | | 2017 | **-** | 34,386,440 |
| | | | **48,288,764** | 34,386,440 |
| **வட்டி உழைக்கும் மொத்தக் கடன்கள்** | | | **82,976,654** | 99,720,675 |

**(ஈ)** **சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ)** என்பது கைவசமுள்ள ஒதுக்கச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா. நிதியத்தால் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா.நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தின் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா. நிதியத்திற்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா. நிதியத்தால் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரசு சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா. நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கேற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா. நிதியத்தால் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉவை இரத்துச் செய்வதற்குக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 7 ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும் அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா. நிதியம் சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா. நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

**(உ)** **ப.நா. நிதியத்திற்குச் செலுத்தப்படத்தக்க ஏனைய தொகைகள்:** தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல்வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

**(ஊ)** **அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்:** 7ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா. நிதிய அனுமதிப் பங்கிற்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

## 20. ஏனையவை

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் II (அ) | **364,794** | 1,413,418 |
| எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள் (ஆ) | **5,857,173** | 11,957,787 |
| திறைசேரி துணைச் செயலாளர் எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் வீதிச் செயற்றிட்டம் III (இ) | **13,245,476** | 21,701,612 |
| திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II (ஈ) | **12,754,696** | 14,406,230 |
| திறைசேரி துணைச் செயலாளர் சிறப்பு டொலர் க/கு - சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் பசுமை வலு உலகளாவிய கடன் திட்டம் (உ) | **2,195,121** | - |
| திறைசேரி துணைச் செயலாளர் - சிறப்பு யூரோ க/கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் பசுமை வலு உலகளாவிய கடன் திட்டம் (உ) | - | 7,483.465 |
| திறைசேரி துணைச் செயலாளர் சிறப்பு டொலர் க/கு - அம்பத்தல் நீர்வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் (ஊ) | **291,768** | 720,312 |
| திறைசேரி துணைச் செயலாளர் - பெரதேனியா பல்கலைக்கழகத்தின் நொராட் வசோ ஏசியா திட்டம் (எ) | **6,409** | - |
| சார்க் பரஸ்பர பரிமாற்றல் வசதியின் கீழ் இந்திய ஒதுக்கு வங்கி செலுத்தவேண்டிய தொகை (ஏ) | **59,920,000** | 158,468,530 |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | **1,614,595** | 1,772,788 |
| | **96,250,032** | 217,924,142 |

**(அ) எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் (II)**

சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் வசதி உடன்படிக்கையொன்று ஐ.அ.டொலர் 500 மில்லியன்களாக 2011 மாச்சு 31ஆம் நாளன்று கையெழுத்தானது. இவ்வுடன்படிக்கையின் நிதியானது முதன்மை வீதிகளின் அபிவிருத்திக்கும் புனரமைப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. வசதி உடன்படிக்கையின்படி எஸ்குரோ முகவராக, இக்கடன்களை வைப்புச் செய்யும் ஒரே நோக்கத்திற்கான இலங்கை மத்திய வங்கியில் எஸ்குரோ கணக்கொன்று திறக்கப்பட்டது. இக்கணக்கானது இவ்வுடன்படிக்கையினைத் தொடரும் விதத்தில் கடன் வழங்குநராலும் (சீன அபிவிருத்தி வங்கி) கடன்பெறுநராலும் (இலங்கை அரசாங்கம்) கூட்டாகத் தொழிற்படுத்தப்படும்.

எஸ்குரோ நிதியத்தின் முதற்றொகுதியான ஐ.அ.டொலர் 326 மில்லியன் 2011 யூன் 29ஆம் திகதி பெறப்பட்டதுடன் இரண்டாவது தொகுதியான ஐ.அ.டொலர் 174 மில்லியன் 2011 ஒத்தோபர் 28ஆம் நாள் பெறப்பட்டது.

எஸ்குரோ கணக்கிற்கு அனுப்பிய ஒப்புதல் அறிவித்தலொன்றின் மூலம் பகிர்ந்தளிப்புக் கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட கணக்கிற்கு எஸ்குரோ நிதியத்தினை வழங்குமாறு கடன் வழங்குநர் எஸ்குரோ முகவருக்கு அறிவுறுத்தினார்.

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து ஒப்புதல் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற பின்னர் ஐ.அ.டொலர் 1.77 மில்லியன் கொண்ட தொகை முதலாவது பகிர்ந்தளிப்பு 2011 ஒத்தோபர் 18ஆம் நாள் மேற்கொள்ளப்பட்டது.

சீன அபிவிருத்தி வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க, 2011 மற்றும் 2012 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 157.50 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.

2013, 2014 மற்றும் 2015 காலப்பகுதியில் முறையே ஐ.அ.டொலர் 118.52 மில்லியன், 161.01 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 51.37 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டில், ஐ.அ.டொலர் 7.38 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31இல் நிலுவையாக ஐ.அ.டொலர் 2.44 மில்லியன் காணப்படுகிறது.

**(ஆ) எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள்**

ஐ.அ.டொலர் 214.20 கொண்ட இவ்வுடன்படிக்கை சீன அபிவிருத்தி வங்கிக்கும் (கடன் வழங்குநர்) இலங்கை அரசாங்கத்திற்கும் (கடன் பெறுநர்) 2012 யூன் 28ஆம் நாளன்று கையெழுத்தானது. இக்கடன் உடன்படிக்கையின் நோக்கம், மொறககந்தையிலுள்ள நீர்மின் வலு நிலையத்தின் கட்டுமானத்திற்கு நிதியிடுவதற்கு வசதியளிப்பதேயாகும். இத்திட்டம் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கி இவ்வுடன்படிக்கையின் வங்கியாளராக வங்கியின் பொதுப் பேரேட்டில் "நிதி திட்டமிடல் அமைச்சு - சீன அபிவிருத்தி வங்கி மொரககந்த அபிவிருத்தி செயற்றிட்டக் கணக்கொன்றினை" வெளிவாரி மூலவளங்கள் திணைக்களத்தின் கோரிக்கையின்படி திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தது. நீர்ப்பாசன மற்றும் நீர் மூலவள முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, அத்தகைய பணம் வரவு வைக்கப்பட்டுள்ள கணக்குகளின் தொழிற்படுத்துநராக மத்திய வங்கி விளங்கியது. 2012 யூன் 29ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 214.20 மில்லியன் கொண்ட தொகை சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 64.34 மில்லியன் கொண்ட முதலாவது பகிர்ந்தளிப்பு 2012 ஓகத்து 24ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்டது. 2013 - 2015 காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 66.86 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 43.90 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 39.10 மில்லியனாகக் காணப்பட்டது.

**(இ) எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III**

இவ்வசதி உடன்படிக்கையானது சீன அபிவிருத்தி வங்கிக்கும் (கடன் வழங்குநராக) இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் (கடன்பாட்டாளராக) 2014 மாச்சு 11ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 300 மில்லியனுக்காக கையெழுத்தானது. இக்கடனின் நோக்கம் யாதெனில் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III - கட்டம் I இன் மேம்பாட்டிற்கும் புனரமைப்பு வேலைகளுக்கும் ஏற்படும் செலவிற்கு நிதியிடுவதேயாகும். வசதி உடன்படிக்கையின்படி, வங்கியானது இலங்கை அரசாங்கத்திற்கான வங்கியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை வீதி அபிவிருத்திக்கு பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு 2014 மாச்சு 28ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 300 மில்லியன் பெறப்பட்டது. 2014 - 2015 ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 149.36 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2016 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 62.22 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2016 திசெம்பர் 31இல் எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 88.42 மில்லியன் காணப்பட்டது.

**(ஈ) எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II**

இவ்வுடன்படிக்கையின் கட்டம் II 2014 நவெம்பர் 24ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 100 மில்லியன் பெறப்பட்டது. 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 14.86 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 85.14 மில்லியனாகக் காணப்பட்டது.

**(உ) சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளும் பசுமை வலு உலகளாவிய கடன் திட்டமும்**

இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஐரோப்பிய முதலீட்டு வங்கிக்குமிடையில் 2013 நவெம்பர் 13ஆம் நாள் இடம்பெற்ற நிதியியல் ஒப்பந்தமாகும். வசதி உடன்படிக்கை என்ற ரீதியில் இலங்கை அரசாங்கத்தின் வங்கியாளராக வங்கி நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை செயற்றிட்டத்திற்குப் பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது. 2014 ஒத்தோபர் 6ஆம் திகதியன்று மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு ஐ.அ.டொலர் 21.13 மில்லியன் பெறப்பட்டது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 11.80 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31ஆம் திகதி எஞ்சியுள்ள நிலுவை ஐ.அ.டொலர் 9.33 மில்லியன் காணப்பட்டது. 2015ஆம் ஆண்டுப்பகுதியில் செயற்றிட்டத்தில் காணப்பட்ட எஞ்சியதொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளும் பசுமைவலு உலகளாவிய கடன்திட்டத்தினதும் இரண்டாவது தொகுதி யூரோ நாணயத்தில் 2015 யூலை 09 ஆம் நாளன்று பெறப்பட்டது. இதன்படி, அக்கடனை வைப்புச் செய்து, அத்தகைய பெறப்பட்ட பணத்தினை செயற்றிட்டத்தின் பகிர்ந்தளிக்கும் ஒரே நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்பேரேட்டில் திறக்கப்பட்டிருக்கிறது. மேற்குறிப்பிட்ட கணக்கு முறையே யூரோ 26.68 மில்லியனும் யூரோ 46.87 மில்லியனும் முறையே 2015 யூலை 09ஆம் நாளும் 2015 திசெம்பர் 23ஆம் நாளும் பெறப்பட்டிருந்தது. 2015ஆம் ஆண்டுப்பகுதியில் யூரோ 26.01 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2015 திசெம்பரில் எஞ்சிய மீதி யூரோ 47.54 மில்லியனாகக் காணப்பட்டது.

யூரோக் கணக்கின் எஞ்சிய மீதியான யூரோ 37,337,757.66, 2016 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் கணக்கிற்கு திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் சம்மதத்துடன் மாற்றப்பட்டதுடன், இத் தொகையானது ஐ.அ.டொலர் 42,204,394.11 இற்குச் சமனானதாகும். 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 27.55 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 14.65 மில்லியனாகக் காணப்பட்டது.

**(ஊ) சிறப்பு டொலர் கணக்கு அம்பத்தல நீர்வழங்கல் மேம்பாட்டுச் செயற்றிட்டம்**

இக்கொடுகடன் வசதி உடன்படிக்கையானது கடன்வழங்குனரான ஏஜென்ஸ் பிரான்கைஸ் டி டெவலப்பெமன்றிற்கும், கடன்பாட்டாளரான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குமிடையில் 2014 செத்தெம்பர் 29 அன்று கையொழுத்தானது. இக்கடனைப்பெற்று பகிர்ந்தளிக்கும் நோக்கத்திற்காக திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க இவ்வுடன்படிக்கையில் வங்கியாளர் என்ற முறையில் வங்கி அதன் பேரேட்டில் கணக்கொன்றினைத் திறந்துள்ளது. 2015 செத்தெம்பர் 14ஆம் நாளன்று மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு ஐ.அ.டொலர் 5 மில்லியன் பெறப்பட்டது.

2016 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3.05 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2016 திசெம்பர் 31இல் ஐ.அ.டொலர் 1.95 மில்லியன் மீதியாகக் காணப்பட்டது.

**(எ) பெரதேனியா பல்கலைக்கழகத்தின் நொராட் வசோ ஏசியா திட்டம்**

இயலளவைக் கட்டியெழுப்பும் திட்டத்திற்காக நொராட்டிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள பெரதேனியாப் பல்கலைக்கழகத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியால் பேணப்படுவதாகும். பெரதேனியா பல்கலைக்கழகமானது, திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தினூடாக மீளெடுப்பனவு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஐ.அ.டொலரில் அல்லது இலங்கை ரூபாவில் மீளெடுப்பனவைப் பெற எதிர்பார்க்கின்றது. 2016 திசெம்பர் 23இல் மேற்படி கணக்கிற்கு ஐ.அ.டொலர் 42,784.73 பெற்றுக் கொள்ளப்பட்டது.

**(ஏ) சார்க் பரஸ்பரபரிமாற்றல் வசதியின் கீழ் இந்திய ஒதுக்கு வங்கிக்குச் செலுத்தவேண்டிய தொகை**

2011 செத்தெம்பர் 25ஆம் நாளன்று வாசிங்டன் டிசியில் நடைபெற்ற சார்க் நிதி ஆளுநர்கள் மாநாட்டில் சார்க் நாடுகளுக்கான நாணய பரஸ்பர

பரிமாற்றல் ஒழுங்குகளுக்கான கட்டமைப்பிற்கான அதன் இணக்கத்தினை வழங்கியது. இப்பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையானது சார்க் நாடுகளுக்கு இவ்வொழுங்குகள் வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டு காலப்பகுதிக்கு செல்லுபடியாகும். இவ்வெழுங்குகளின்படி இந்திய ஒதுக்கு வங்கியும் இலங்கை மத்திய வங்கியும் இருபுடை பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையொன்றினை செய்து கொண்டன.

உடன்படிக்கை செல்லுபடியாகும் காலப்பகுதியில் பல்வேறு தொகுதிகளாக எடுப்பனவு செய்வதற்கு அனுமதிக்கப்படலாம். ஒவ்வொரு எடுப்பனவும் மூன்று மாதங்களுக்கானதாக இருப்பதுடன் இன்னொரு மூன்று மாத காலப்பகுதிக்கு புதுப்பிப்பதற்கும் அனுமதிக்கப்படும். எடுப்பனவிற்கு ஏற்புடையதான வட்டிவீதம் ஒவ்வொரு எடுப்பனவு திகதியிலும் நிலவுகின்ற 3 மாத ஐ.அ.டொலர் லண்டன் வங்கிக்கிடையிலான எடுப்பனவு வீதத்துடன் 200 அடிப்படைப்புள்ளிகள் கூட்டியதாக இருக்கும்.

2016 திசெம்பர் 31இல் உள்ள வெளிநின்ற மீதியானது, 2016 திசெம்பர் 16இல் மேற்கொள்ளப்பட்ட எடுப்பனவான ஐ.அ.டொலர் 400 மில்லியனைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், இந்த எடுப்பனவுடைய மீளச் செலுத்துகையானது 2017 மாச்சு 16இல் செலுத்தப்படவேண்டியதாகும்.

**21. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்**

இவை நாணய விதிச் சட்டத்தின் 93ஆம் பிரிவின் கீழ் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் வைப்புக்களாக இருப்பதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியோரினால் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வங்கிகளினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழான கொடுப்பனவுகளை கௌரவிப்பதற்காக பேணப்படும் வைப்புக்களாகவும் காணப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் முழுமையாக பிணையிடப்பட்ட வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவுக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படுகிறது. இவ்வைப்புக்கள் தொடர்பான தரப்பினராலும் (அதாவது அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிறுவனங்கள்) மற்றவர்களினாலும் வைப்புக்கள் போன்ற கணக்கீட்டு வெளிப்படுத்துகைத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக வகைப்படுத்தப்பட்டு தொடர்பான நியதி ஒதுக்கு வீதங்களில் பேணப்பட்டு வருகின்றதேயன்றி அவ்வரச நிறுவனங்களுடனான வங்கியின் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொடர்புகளுக்காகவல்ல.

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| **வங்கிகளினால் செய்யப்பட்ட வைப்புக்கள்** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **183,836,224** | 89,340,293 |
| - ஏனையவை | **110,060,140** | 92,380,448 |
| | **293,896,364** | 181,720,741 |
| **நிதியியல் நிறுவனங்களால் செய்யப்பட்ட வைப்புக்கள்** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **477** | 729 |
| - ஏனையவை | **9,354,449** | 5,262 |
| | **9,354,926** | 5,991 |
| **வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினாலும் செய்யப்பட்ட மொத்த வைப்புகள்** | **303,251,290** | 181,726,732 |

**22. அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்**

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| அரச வைப்புக்கள் | **167,615** | 174,871 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | **283,269** | 253,271 |
| | **450,884** | 428,142 |

வங்கி, அரச மற்றும் / அல்லது அரச முகவர்களின் அல்லது நிறுவனங்களின் வைப்புக்களுக்கான அலுவல்சார் வைப்பாளராக இருப்பதனால் நாணய விதிச் சட்டத்தின் 106 (1)ஆம் பிரிவின் நியதிகளில் இவ்வைப்புக்கள் பேணப்படுகின்றன.

**23. மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்**

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| அரச பிணையங்கள் | **21,383,724** | 23,662,520 |
| துணைநில் வைப்பு வசதிகள் (குறிப்பு 3.3.8) | **48,670,712** | 81,828,486 |
| | **70,054,436** | 105,491,006 |

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக, நாணய விதிச் சட்டத்தின் பிரிவுகள் 90 மற்றும் 91 இன் கீழ் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை, பணச்சந்தையின் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இம்மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை காலத்திற்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கைக்கு அமைவாக ஓரிரவு அல்லது தவணை முறையில் அரச பிணையங்களில் ஈடுபடுத்தப்படுகின்றன.

**24. ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்**

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களிற்கு நடைமுறைக் கணக்கு வசதிகளினை வழங்குகின்றது. தனியாக நிருவகிக்கப்படுகின்ற வங்கியின் ஊழியர் நன்மைத் திட்டங்களின் நடைமுறைக் கணக்கு மற்றும் உள்ளக நிறுவகக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டுள்ள தொகைகள் பின்வருமாறு:

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| இ.ம.வ சேம நிதியம், ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றின் மீதிகள் | **51,744** | 7,212 |
| | **51,744** | 7,212 |

**25. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. குறிப்பிட்ட வங்கியினால் வெளியிடப்பட்டு அறிக்கையிடல் திகதிகளில் சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயத் தரவுகள் பின்வருமாறு:

| பெறுமதி | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| **குத்திகள்:** | | |
| சதம் 1 | **3,631** | 3,631 |
| சதம் 2 | **5,703** | 5,703 |
| சதம் 5 | **23,247** | 23,247 |
| சதம் 10 | **39,208** | 39,208 |
| சதம் 25 | **120,586** | 120,558 |
| சதம் 50 | **185,611** | 185,371 |
| ரூபா 1 | **851,968** | 794,975 |
| ரூபா 2 | **1,272,301** | 1,155,840 |
| ரூபா 5 | **3,725,947** | 3,473,827 |
| ரூபா 10 | **4,505,834** | 3,345,748 |
| ஞாபகார்த்த நாணயக் குத்திகள் | **584,177** | 582,423 |
| | **11,318,213** | 9,730,531 |

| | | |
|---|---|---|
| **தாள்கள்:** | | |
| ரூபா 1 | **4,981** | 4,981 |
| ரூபா 2 | **26,696** | 26,696 |
| ரூபா 5 | **37,194** | 37,194 |
| ரூபா 10 | **1,382,089** | 1,449,773 |
| ரூபா 20 | **5,331,571** | 4,882,579 |
| ரூபா 50 | **5,141,033** | 4,671,924 |
| ரூபா 100 | **20,590,404** | 18,979,404 |
| ரூபா 200 | **130,526** | 131,246 |
| ரூபா 500 | **33,475,699** | 31,656,334 |
| ரூபா 1000 | **141,169,379** | 133,243,521 |
| ரூபா 2000 | **20,436,195** | 38,973,585 |
| ரூபா 5000 | **313,733,885** | 247,912,180 |
| | **541,459,652** | 481,969,417 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | **552,777,865** | 491,699,948 |

26. ஏனைய கொடுபடத்தக்கவை

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| ஏற்பாடுகளும் கட்டணங்களும் | **563,783** | 556,337 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வைப்புக்கள் | **2,440,187** | 2,314,645 |
| பெறப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்களுக்கெதிரான பொறுப்பு | **4,094,268** | 3,221,244 |
| ஏனைய கொடுபடத்தக்கவை | **1,465,310** | 732,766 |
| | **8,563,548** | 6,824,992 |

கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கொடுபடத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான வழிகாட்டலின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிகக் கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதங்களுடன் சேர்த்து வங்கிகளின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

27. பிற்போடப்பட்ட கொடைகள்

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறு | **106** | 515 |
| இவ்வாண்டின் கடன் தீர்ப்பனவு | **(26)** | (409) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **80** | 106 |

பிற்போடப்பட்ட வருமானம் அத்தகைய சொத்துக்களின் தேய்மானத்துடன் பொருந்தத்தக்க விதத்தில் இக் காலப்பகுதியில் பதிவழிப்புச் செய்யப்பட்டன. இது, எந்தவித கரிசனைகளுமில்லாது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களின் சந்தைப் பெறுமதி பிற்போடப்பட்ட கொடைக் கணக்கொன்றில் செலவு வைக்கப்படுவதுடன், தொடர்பான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைகளின்படி அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் ஏனைய வருமானமாகக் கொள்ளப்படுகிறது.

28. பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும்

பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும் கொடுப்பனவு செய்யத்தக்க கணக்குகளிலுள்ள கொடுபடத்தக்க மீதிகள், ஒப்பந்த ரீதியான பிடித்துவைத்தல்கள், மீட்கத்தக்க விலைக்கோரல் வைப்புக்களாக எடுக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் செலுத்தப்படவேண்டிய தண்டப்பணங்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

29. பங்குரிமை மூலதனம்

பங்குரிமை மூலதன விடயங்களின் தன்மை

மூலதன நிதியம்

(அ) **பங்களிப்பு மூலதனம்** - நாணய விதிச் சட்டத்தின் 6ஆவது வாசகத்தின் பிரகாரம் மூலதனக் கணக்கு, வங்கியின் மூலதனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2014ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 6ஆம் பிரிவின்படி, வங்கியின் மூலதனம் ரூ.50 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, வங்கி, 2014 செத்தெம்பரில் நிதி அமைச்சரின் சம்மதத்துடன் அதன் ஒதுக்கங்களை மூலதனமாக்கியதன் மூலம் மூலதனத்தினை ரூ.50 பில்லியனுக்கு அதிகரித்தது.

(ஆ) **நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்** - ப.க.நி 16 இன் படி இவ்வொதுக்கானது ஆதனம், பொறி மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டு மிகையை உள்ளடக்கியுள்ளது.

(இ) **ஏனைய ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:**

(i) **பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்** - பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்கமாகும். இதன் பிரகாரம், தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களிலுள்ள மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதன் ஊடாக உருவாகின்ற தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு ஒதுக்கத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(ii) **சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்** - வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் சந்தைப்படியான விலைகளின் மோசமான தாக்கத்திற்கு வழிவகுக்கின்ற பன்னாட்டுச் சந்தைகளின் தளம்பல்களின் ஏதேனும் மோசமான தாக்கத்தினை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டுச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து கிடைக்கும் விலைப் பெறுமதி இலாபங்களை மாற்றல் செய்வதற்காக 2003 சனவரி 30ஆம் நாளன்று நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டது. நாணயச் சபையானது இந்த ஒதுக்கினை இலங்கை மத்திய வங்கியின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கில் உயர்ந்தபட்சம் 10 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு தீர்மானித்தது.

மேலும், 29 பெப்புருவரி 2016இல் திகதியிடப்பட்ட வங்கியின் இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை தொடர்பில் பிரேரிக்கப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் எம்பீ/ டீயி (டபிள்யு)/7/1/2016 இற்கமைய, நாணயச் சபையானது அவசியம் எனக் கருதும் பட்சத்திலும், குறிப்பிடத்தக்க தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நட்டத்தின் காரணமாக திரட்டிய இலாபங்கள் எதிர்மறையாகக் காணப்படுமிடத்தும் சந்தை மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து திரட்டிய இலாபத்திற்கு மாற்றல் செய்யமுடியும்.

இதன்படி, கடந்த காலங்களில் திரட்டப்பட்ட குறிப்பிடத்தக்களவிலான தேறல் செய்யப்படாத விலை மதிப்பீடுகளிலிருந்தான நட்டத்தின் காரணமாக உருவான எதிர்மறை திரட்டிய இலாபத்தை மேம்படுத்தும் விதமாக ரூ.4.65 மில்லியன் பெறுமதியான தொகை

சந்தை மீள் மதிப்பீடு ஒதுக்கத்திலிருந்து திரட்டிய இலாபத்திற்கு மாற்றப்பட்டது.

(iii) **ஏனைய ஒதுக்குகள்** - பொது ஒதுக்கு, கட்டட ஒதுக்கு மற்றும் கொடுகடன் உத்தரவாத ஒதுக்கு என்பவற்றை உள்ளடக்குகிறது. பொது ஒதுக்கு, நாணயச் சபையினால் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் வருவாய்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது.

(iv) **விற்பனைக்குள்ள பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/(நட்டம்)** - விற்பனைக்குள்ள பிணையங்கள் மற்றும் அலகு முதலீடு என்பனவற்றை மீளமதிப்பிடப்பட்டதன் மூலம் உருவாகிய தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

(v) **அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை கடன்கரைப்பு நிதியம்** - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதில் பங்குபற்றுகின்றவர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந் நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

(vi) **ஓய்வூதிய நிதிய ஒதுக்கம்** - வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் வடுக்களால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் பற்றாக்குறை உருவாகுமாயின், அதனை ஈடுசெய்யும் பொருட்டு 2007ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து மேலதிகமாக ரூ. 3 பில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. 2015 யூனில் ரூ. 2 பில்லியன் ஓய்வூதிய நிதிய ஒதுக்கிலிருந்து, புதிய ஓய்வூதிய பொறுப்புக் கணக்கிற்கு, நாணயச் சபை பத்திர இலக்கம் எம்பீ/எச்ஆர்/11/12/2015 இன்படி புதிய ஓய்வூதியத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக மாற்றல் செய்யப்பட்டது.

(vii) **தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம்** - குறிப்பாக தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைப்பாடுகள், நவீனமயமாக்கல் அல்லது இ.ம.வங்கியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொதுப்பேரேடு, அ.நே.மொ. தீர்ப்பனவு முறை, திறைசேரி முகாமைத்துவ முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை ஆகிய தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இவ்வொதுக்கம் 2007 ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து உருவாக்கப்பட்டது.

(viii) **மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம்** - 2010ஆம் ஆண்டுப் பகுதியில், வங்கி இலாபத்திலிருந்து உருவாக்கிய நிதியத்தின் மூலம் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாகாணங்களுக்கு ரூ.2.90 பில்லியன் கொண்ட நடுத்தர கால மற்றும் நீண்ட கால மீள்நிதியிடல் இலங்கை வங்கியூடாகவும் மக்கள் வங்கியூடாகவும் வழங்கப்பட்டன.

(ix) **சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம்** - இவ்வொதுக்கானது நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்து ரூ.2 பில்லியனை மாற்றல் செய்ததன் மூலம் 2014இல் ஏற்படுத்தப்பட்டது. இதில் ரூ.1 பில்லியன் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் சௌபாக்கியா கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குதல் (கட்டம் II) மற்றும் வடக்கு, கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்தல் என்பனவற்றின் மீளமைத்தலுக்கு ஆதரவளிப்பதற்காக ஒதுக்கப்பட்டது. மற்றைய ரூ.1 பில்லியன் வர்த்தக வங்கிகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் வழங்கலுக்கு உதவியளிப்பதற்கான சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத்திட்டத்தினை நடைமுறைக்கிடுவதற்காக ஒதுக்கப்பட்டது.

ஏனைய ஒதுக்கங்களிலான அசைவுகள் பின்வருமாறு:

| | நடுத்தர கால, நீண்ட கால கொடுகடன் ஒதுக்கம் | சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | ஏனைய ஒதுக்கங்கள் | சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம் | அ.நே. மொ. தீ. கடன் கரைப்பு நிதியம் | பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | விற்பனைக்குள்ள பிணையங்களின் தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/(நட்டம்) | ஓய்வூதிய நிதிய ஒதுக்கம் | தொழில் நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம் | மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்ட நிதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2016 சனவரி 01இல் உள்ளவாறு | **2,925,000** | **4,650,806** | **2,489,920** | **2,000,000** | **1,332,628** | **19,157,122** | **1,258,572** | **2,000,000** | **1,000,000** | **2,900,000** | **39,714,048** |
| அ.மொ.தீ. நிதியத்திற்கு வருமானத்தை மாற்றல் | - | - | - | - | 220,272 | - | - | - | - | - | 220,272 |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு நட்டத்தினை மாற்றல் | - | - | - | - | - | (6,775,246) | - | - | - | - | (6,775,246) |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்க பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம் | - | - | - | - | - | - | 2,022,241 | - | - | - | 2,022,241 |
| சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து திரட்டிய இலாபத்திற்கு நிதியங்களை மாற்றல் | - | (4,650,806) | - | - | - | - | - | - | - | - | (4,650,806) |
| 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான | **2,925,000** | **-** | **2,489,920** | **2,000,000** | **1,552,900** | **12,381,876** | **3,280,813** | **2,000,000** | **1,000,000** | **2,900,000** | **30,530,509** |

## 30. இலாபப் பகிர்ந்தளிப்பு

நாணய விதிச்சட்டத்தின்படி, நாணயச் சபை இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்பிற்கு ஒப்புதலளித்து (2015 இலிருந்து நடைமுறைக்குவரும்) பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் விதத்தில் ப.நி.அறிக்கையிடல் நியம இலாபத்திற்கு/ (நட்டத்திற்கு) பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட்டன.

(அ) செலாவணிவீத இலாபம்/ (நட்டத்தினை) நீக்குதல் (நாணய விதிச்சட்டத்தின் 41ஆம் பிரிவு)

(ஆ) தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிருந்தான இலாபத்தினை நீக்குகிறது (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபங்கள்) எனினும் தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டங்கள்) நட்டங்களை விதிக்கிறது. (இலங்கை மத்திய வங்கியின் இலாப பங்கீட்டு கொள்கையின்படி)

(இ) நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 38 இன்படியான வேறு ஏதேனும் மாற்றல்கள் மற்றும் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 இலிருந்து எழும் வேறு ஏதேனும் சீராக்கங்கள்.

மேலும், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேறு ஏதேனும்

சீராக்கங்கள் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் விதத்தில் சீராக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட சீராக்கங்களின் அடிப்படையில், 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பகிரத்தக்க இலாபம் பின்வருமாறு:

| விடயம் | 2016 (ரூ. 000) |
|---|---|
| ப.நி.க. நியமம் இலாபம்/ (நட்டம்) | **22,179,519** |
| கழிக்குக: | |
| நாணயவிதிச்சட்டத்தின் படி பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கான செலாவணி வீத நட்டத்தை மாற்றல் | (6,775,247) |
| வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்தான சந்தைப் படியான இலாபத்தை சந்தை மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றல் | 14,028,792 |
| தொடர்பான நிதியத்திற்கு உள்ளக நிதியங்களின் மீதான வட்டி வருமானத்தின் மாற்றல் | 396,063 |
| நாணய விதிச்சட்டம், வங்கியினுடைய இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை மற்றும் ஏனைய சீராக்கங்கள் என்பவற்றின் படியான பங்கிடத்தக்க இலாபம்/ (நட்டம்)- தேறல் செய்யப்பட்ட இலாபம்/ (நட்டம்) | **14,529,911** |
| ஒதுக்குகளிற்கான மாற்றல் (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 38இன்படி) | |
| - தொழில் நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் காப்புறுதி மதிப்பீட்டின் நன்மைகளுக்கான செலவின் 50% இற்குச் சமனான தொகையினை விசேட ஒதுக்கத்திற்கு மாற்றுதல் | 689,026 |
| - பொது ஒதுக்கத்திற்கு மாற்றறுதல் | 7,462,613 |
| திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட தொகை மற்றும் வெளிநின்ற இலங்கை அரசின் கடப்பாட்டின் மீள்பெறுகை (நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 39) | 6,378,272 |

## 31. நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் | **1,479,882** | 1,464,525 |
| நிதியியல் சொத்துக்கள் | **4,628,934** | 6,635,778 |
| பெறுதிகள் | **8,761,019** | 4,947,011 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **14,869,835** | 13,047,314 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **20,333,567** | 8,749,944 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **687,124** | 573,609 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **21,020,691** | 9,323,553 |
| **நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **35,890,526** | 22,370,867 |

## 32. விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம்/ (நட்டம்)

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டுப் பிணையங்கள் | **3,166** | 397,078 |
| தங்கம் | **8,306,063** | (17,305,760) |
| வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | **5,719,563** | (11,565,555) |
| வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல்கள் | **(1,637)** | 2,017 |
| நாணயத் தெரிவுகள் | **(4,288,112)** | (6,381,575) |
| **மொத்த விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம் (நட்டம்)** | **9,739,043** | (34,853,795) |

## 33. நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | **174,504** | 38,009 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **1,180,604** | 1,394,723 |
| பெறுதிகள் | **396** | 341,117 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்த வேண்டியன | **2,598,331** | 1,848,888 |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **3,953,835** | 3,622,737 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **345,835** | 4,067,059 |
| துணைநில் வைப்பு வசதி | **1,519,585** | 4,582,318 |
| முறிக் கடன்பாடுகள் | **-** | 82,711 |
| கைவிடப்பட்ட ஆதனம் | **332,395** | 187,896 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **2,197,815** | 8,919,984 |
| **நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **6,151,650** | 12,542,721 |

பற்றாக்குறை திரவத்தன்மை நிலை காரணமாக, சந்தைக்கு திரவத் தன்மையை உட்செலுத்தும் விதமாக வங்கியின் நடவடிக்கைகளில் ரூ.(9,366.62) மில்லியன் (2015 - ரூ.4,354.36 மில்லியன் செலவு) தேறிய செலவு/(இலாபம்) காணப்பட்டது. பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கான செலவு/(இலாபம்) ஆனது கீழே காட்டப்பட்டுள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், முறிகளின் கடன்பாடு மற்றும் துணைநில் வசதி ஆகியவற்றின் மீதான வட்டிச்செலவுகளிலிருந்து, இலங்கை அரச பிணையங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டவாறான ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகளின் இலாபம் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்ட தேறிய தொகையை உள்ளடக்கிறது.

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மீது ஏற்பட்ட வட்டிச் செலவு | **345,835** | 4,067,059 |
| முறிக் கடன்பாட்டின் மீது செலுத்தப்பட்ட கட்டணம் | - | 82,711 |
| துணைநில் வைப்பு வசதி மீதான வட்டிச் செலவினம் | **1,519,585** | 4,582,318 |
| கழி: | | |
| மீள் விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம் | **(2,471,022)** | (16,317) |
| ஐ.அ.டொலர்/ இல.ரூபா பெறுமதிகள் இலாபம் | **(8,761,019)** | (4,361,415) |
| | **(9,366,621)** | 4,354,356 |

### 34. ஏனைய வருமானம்

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| பங்கிலாப வருமானம் - தொடர்புபட்ட நபர்கள் | **37,259** | 31,214 |
| - ஏனையோர் | **1,818** | 1,050 |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் அகற்றல் மீதான இலாபம் | **424** | 2 |
| பிற்போடப்பட்ட கொடைகளின் பதிவழிப்பு | **34** | 409 |
| நிதியியல் நிறுவனங்களின் உரிமக் கட்டணம் | **519,900** | 490,350 |
| வாடகை வருமானம் | **455,514** | 381,491 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் | **112,863** | 128,768 |
| பல்வகை வருமானம் | **380,449** | 544,158 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **1,508,261** | 1,577,442 |

பல்வகை வருமானம் ரூ.1.40 மில்லியன் (2015 - ரூ.1.24 மில்லியன்) கொண்ட இலங்கை சேமிப்பு வங்கி லிமிடட்டின் தொகுதிக் கடன் மீதான கடன் தீர்ப்பனவு இலாபம் மற்றும் எஞ்சிய 2 ஆண்டு காலப்பகுதியில் ப.நா. நிதியத்துடனான சிஎஉ ரூ.788,783 கொண்ட வறுமைக்குறைப்பு வளர்ச்சி வசதிப்படுத்தலின் பதிவளிப்பு இலாபமான ரூ.6.17 மில்லியனையும் (2015- ரூ.5.73 மில்லியன்) உள்ளடக்குகிறது (குறிப்பு 07).

### 35. ஆளணிச் செலவுகள்

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| கூலிகளும் சம்பளங்களும் | **4,258,884** | 4,201,583 |
| குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவுகள் | **629,786** | 629,357 |
| தொழில் நிலைக்குப் பிந்திய குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவு | **1,479,963** | 1,329,578 |
| **மொத்த ஆளணிச் செலவுகள்** | **6,368,633** | **6,160,518** |

### 36. நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள்

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| திருத்தங்களும் பேணல்களும் | **773,239** | 680,000 |
| ரொயிட்டர், புலூம்போக் சுவப்ற் மற்றும் ஏனையவற்றுக்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள் | **134,648** | 154,937 |
| பயணம் | **116,658** | 97,552 |
| வாடகைச் செலவுகள் | **4,994** | 5,106 |
| அச்சிடல் | **27,468** | 26,476 |
| கணக்காய்வுக் கட்டணம் | **7,846** | 7,768 |
| நாணயச் சபை உறுப்பினர்களுக்கான ஊதியங்கள் | **3,605** | 1,084 |
| இ.ம.வ சேம நிதியம் மீதான வட்டி உதவுதொகை | **47,877** | - |
| விளம்பரச் செலவு | **80,519** | 73,073 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் | **68,058** | 219,502 |
| பல்வகைச் செலவினம் | **203,097** | 346,038 |
| **மொத்த நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள்** | **1,468,009** | 1,611,537 |

### 37. பிடித்துவைத்தல் வரி

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 7b (xvi) இன் படி இலங்கை மத்திய வங்கி வருமான வரி செலுத்தப் பொறுப்புடையதல்ல என்பதுடன் வங்கியால் செலுத்தப்படும் பிடித்துவைத்தல் வரி உள்நாட்டரசிறைத் திணைக்களத்திற்கு வங்கி செலுத்தும் இறுதி வரியாகவும் கருதப்படுகிறது. 2013இலிருந்து வங்கி பொருளாதாரப் பணிகள் கட்டணத்தைச் செலுத்தப் பொறுப்புடையதல்ல.

2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) ஏற்பாடுகளின் பிரகாரம் பங்கிலாபம் அல்லது வட்டி செலுத்தப்படுகின்ற போது அல்லது செலவு வைக்கப்படுகின்ற போது 10 சதவீதம் பிடித்து வைத்தல் வரிக்கு உட்பட்டதாயிருக்கும். அரச பிணையங்களின் வட்டி வருமானத்தின் மீது பிடித்து வைத்தல் வரியானது, முதிர்ச்சித் திகதிக்குச் சீர்செய்யப்பட்ட அண்மிய முதனிலை ஏலத்தின் எடையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினை அடிப்படையாகக் கொண்டது.

இக் காலப்பகுதியில் அத்தகைய பிடித்துவைத்தல் வரி தொடர்பில் ரூ.1,834.35 மில்லியன் (2015 - ரூ.1,788.16 மில்லியன்) செலவிடப்பட்டதுடன், இது வட்டி வருமானம் ரூ.15,623.62 மில்லியன் (2015 - ரூ.8,859.71 மில்லியன்) மற்றும் பங்கிலாப வருமானம் ரூ.39.08 மில்லியன் (2015 - ரூ.6.21 மில்லியன்) மீதும் செலுத்தத்தக்கதாக விளங்கியது.

38. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப் பாய்ச்சலுடன் இணக்கப்படுத்தல்

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிக்கையிடப்பட்ட தேறிய இலாபம்/ (நட்டம்)** | **22,179,519** | (19,601,819) |
| **கூட்டுக /(கழிக்குக) காசல்லா விடயங்கள்** | | |
| தேய்மானம் மற்றும் பதிவழிப்பு | **520,961** | 557,158 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(20,333,567)** | (8,749,944) |
| மொத்தத் தேறாத வெளிநாட்டுச் செலாவணி (இலாபம்)/நட்டம் | **(12,107,722)** | (26,557,419) |
| நிலையான சொத்து விற்பனை மீதான இலாபம் | **(1,400)** | (1,236) |
| ஏனைய ஏற்பாடுகள் | **2,713,774** | (89,185) |
| பிற்போடப்பட்ட கொடைகள் | **(27)** | (409) |
| மீள் மதிப்பீட்டிலிருந்தான நட்டம் | **378,907** | - |
| வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பின் பதிவழிப்பு | **(6,165)** | (5,726) |
| நிலையான வருமானப் பிணையங்களின் பதிவழிப்புச் செலவினம் | **807,349** | 845,385 |
| **ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு கூட்டுக/ (கழிக்குக)** | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு)/குறைவு | **(2,694,897)** | 200,516 |
| பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு | **(4,576,657)** | 775,068 |
| பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/ (குறைவு) | **(723,637)** | (2,029,813) |
| கொடுபடத்தக்க வட்டியில் அதிகரிப்பு/ (குறைவு) | **32,460** | (2,165,490) |
| ஏனைய பெறத்தக்கவற்றின் (அதிகரிப்பு) / குறைவு | **(26,455)** | 59,130 |
| **கூட்டுக/ (கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| தேறிய தேறல்செய்யப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **(9,857,403)** | 36,983,579 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(23,694,960)** | (19,780,205) |

39. அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/(மீளப்பெறல்)

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | **246,320,577** | (21,450,406) |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - இலங்கை அரச பிணையங்கள் | **(18,094,641)** | (8,876,023) |
| இலங்கை அரசுக்கான முற்பணங்களின் அதிகரிப்பு/(குறைவு) | **(67,824,900)** | 7,233,700 |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | **(22,741)** | (116,192) |
| | **160,378,295** | (23,208,921) |

40. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/(மீளப்பெறல்)

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்களிலான (அதிகரிப்பு)/குறைவு | **(121,524,559)** | (20,944,825) |
| | **(121,524,559)** | (20,944,825) |

41. இறுதியிலுள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

| | 2016 ரூபா 000 | 2015 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்** | | |
| வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள் | **423,783,737** | 557,474,685 |
| | **423,783,737** | 557,474,685 |

## 42. நிதியிடலின் திரட்சி

ஆண்டின் இறுதியில் வங்கியின் முக்கியமான நிதியிடலின் திரட்சியானது பின்வருமாறு:

| 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு | மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 45,566,681 | - | - | - | 180,696 | 45,385,985 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 14,573,675 | - | - | 14,573,664 | 11 | - |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 79,863,615 | - | - | - | 79,863,615 | - |
| ப.நா.நிதியம் | 269,540,596 | - | - | - | 269,540,596 | - |
| ஏனையவை | 96,250,032 | 34,417,259 | - | 1,169,177 | 440,328 | 60,223,268 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 505,794,599 | 34,417,259 | - | 15,742,841 | 350,025,246 | 105,609,253 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 303,251,290 | - | - | 293,896,364 | - | 9,354,926 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 450,884 | 450,837 | 47 | - | - | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 70,054,436 | - | - | 67,552,907 | - | 2,501,529 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 51,744 | - | - | - | - | 51,744 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 552,777,865 | - | 552,777,865 | - | - | - |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 8,563,548 | 46,218 | - | 182,000 | - | 8,335,330 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | 935,149,767 | 497,055 | 552,777,912 | 361,631,271 | - | 20,243,529 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | 1,440,944,366 | 34,914,314 | 552,777,912 | 377,374,112 | 350,025,246 | 125,852,782 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 80 | - | - | - | - | 80 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 2,429,153 | - | - | - | - | 2,429,153 |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 193,297 | 62,449 | - | - | - | 130,848 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | 2,622,530 | 62,449 | - | - | - | 2,560,081 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,443,566,896 | 34,976,763 | 552,777,912 | 377,374,112 | 350,025,246 | 128,412,863 |

2015 திசெம்பர் 31இல் உள்ளவாறான ஒப்பீட்டுத் தொகைகள் பின்வருமாறு:

| 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு | மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 12,048,241 | - | - | - | 175,949 | 11,872,292 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 24,280,308 | - | - | 24,280,059 | - | 249 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 68,887,459 | - | - | - | 68,887,459 | - |
| ப.நா.நிதியம் | 251,644,344 | - | - | - | 251,644,344 | - |
| ஏனையவை | 217,924,142 | 49,479,048 | - | 1,124,395 | 643,303 | 166,677,396 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 574,784,494 | 49,479,048 | - | 25,404,454 | 321,351,055 | 178,549,937 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 181,726,732 | - | - | 181,720,741 | - | 5,991 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 428,142 | 428,041 | 101 | - | - | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 105,491,006 | - | - | 105,491,006 | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 7,212 | - | - | - | - | 7,212 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 491,699,948 | - | 491,699,948 | - | - | - |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 6,824,992 | 48,135 | - | 182,000 | - | 6,594,857 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 786,178,032 | 476,176 | 491,700,049 | 287,393,747 | - | 6,608,060 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | 1,360,962,526 | 49,955,224 | 491,700,049 | 312,798,201 | 321,351,055 | 185,157,997 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 106 | - | - | - | - | 106 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 10,942,541 | - | - | - | - | 10,942,541 |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 199,325 | 26,364 | - | - | - | 172,961 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | 11,141,972 | 26,364 | - | - | - | 11,115,608 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,372,104,498 | 49,981,588 | 491,700,049 | 312,798,201 | 321,351,055 | 196,273,605 |

## 43. இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கி, பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு ஆகிய இரு சட்ட நியதிக் குறிக்கோள்களை கொண்டிருக்கிறது. மத்திய வங்கியிடம் அதன் குறிக்கோள்களை எய்தும் விதத்தில் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பரந்தளவு சட்ட அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியினை ஆளும் சபையான நாணயச் சபை வங்கியின் முகாமைத்துவம், தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம் என்பன தொடர்பான அனைத்துக் கொள்கைத் தீர்மானங்களையும் மேற்கொள்ளுவதற்குப் பொறுப்பானதாகும். இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளும் கொள்கைகளும் இலாபத்தினை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. எனினும் வங்கி அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் காலப்பகுதியில் பல்வேறு இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை காணப்படுகின்றது. ஆகவே வலுவானதும் காத்திரமானதுமான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் இடம்பெற்றிருப்பதனை வங்கி முகாமைத்துவம் உறுதிப்படுத்துகின்றது. காத்திரமான முகாமைத்துவம் மற்றும் இடர்நேர்வுகளின் கட்டுப்படுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்தும் நோக்குடன் நாணயச் சபையானது இப்பணியினை பல்வேறு திணைக்களங்களுக்கும் குழுக்களுக்கும் வழங்கியது. ஆகவே இடர்நேர்வு முகாமைத்துவம் வங்கியிலுள்ள கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் அனைத்து மட்டங்களிலுள்ளவர்களினதும் பொறுப்பாகும்.

இலங்கை மத்திய வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம் "மூன்று மட்டப் பொறுப்பு" மாதிரியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்படி, "முதல் மட்டப் பாதுகாப்புப் பொறுப்பு தொடர்பான திணைக்களங்களிடம் விடப்பட்டிருக்கிறது. "முதல் மட்டப் பாதுகாப்பு" இன் கீழ்வரும் இடர்நேர்வுகள் தொழிற்பாட்டு ரீதியான தன்மையைக் கொண்டிருப்பதனால் அத்தகைய இடர்நேர்வுகள் அவை ஆரம்பிக்கப்படுகின்ற இடத்திலேயே திணைக்களங்களினால் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றன. "முதலாவது மட்டப் பாதுகாப்பு" பொருத்தமான உள்ளக இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளையும் கட்டுப்பாடுகள் நடைமுறையிலுள்ளமையினையும் உறுதிப்படுத்தும். "இரண்டாவது மட்டப் பாதுகாப்பாக" உள்ள இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் நிதியியல் இடர்நேர்வுகளை மதிப்பிடவும் கண்காணிப்பதற்கும் சுயாதீனமாக ஆளுநருக்கு அறிக்கையளிக்கவும் பொறுப்புடையதாகும். உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்திடம் "மூன்றாவது மட்டப் பாதுகாப்பு" இனை இடர்நேர்வு உத்தரவாதத் தொழிற்பாடாக மேற்கொள்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இடர்நேர்வுகளின் இரண்டு முக்கிய பரிமாணங்களாக நிதியியல் இடர்நேர்வு மற்றும் நிதியல்லா இடர்நேர்வு என்பன காணப்பட்டன. நிதியியல் இடர்நேர்வு சந்தை இடர்நேர்வு (வட்டி வீத இடர்நேர்வு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு), கொடுகடன் இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு என்பவற்றை உள்ளடக்குகிறது. இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வெளிநாட்டு ஒதுக்குச் சொத்துப் பட்டியலை முகாமை செய்கின்ற வேளையில், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குச் சொத்துப் பட்டியலுடன் தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பிடல், கண்காணித்தல் மற்றும் நிதியியல் இடர்நேர்வுகளை அறிக்கையிடலில் ஈடுபடுகின்றது. இடர் தணிப்புக் கொள்கைகளை உள்ளடக்கிய விரிவான வழிகாட்டல்களின் தொகுதியொன்று ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் போது பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தால் பின்பற்றப்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் தொடர்பான நிதியியல் இடர்நேர்வு மதிப்பிடல்கள் ஆளுநருக்கும் மற்றும் நதணயச் சபைக்கும் சுயாதீனமாக அறிக்கையிடப்படுகின்றன.

வட்டி வீத இடர்நேர்வு அல்லது வட்டி வீதங்களில் ஏற்படும் அசைவுகளுக்கான வங்கியின் வெளிநாட்டுச் சொத்துப்பட்டியலின் வெளிப்படுத்துகை சொத்துப்பட்டியலின் காலப்பகுதியில் செய்யப்படும் பொருத்தமான சீராக்கங்களின் மூலமாகவும் அதேபோன்று 10 நாட்களைக் கொண்ட நேர எல்லை மற்றும் 99 சதவீதமான தன்னம்பிக்கை என்பனவற்றிற்கான பொருத்தமான சீராக்கங்களினூடாக முகாமைப்படுத்தப்பட்டன. செலாவணி வீதத் தளம்பல்களின் விளைவாக ஏற்படுகின்ற செலாவணி வீத இடர்நேர்வு அல்லது மூலதன இழப்புக்கள் முதலீட்டு நாணயங்களை பன்முகப்படுத்துவதனூடாக முக்கியமாக முகாமைப்படுத்தப்படுகின்றன. திரவத்தன்மை இடர்நேர்வினைத் தணிக்கும் பொருட்டு, சொத்துக்களின் வகுப்புக்களை மட்டுப்படுத்துதல், பிணையங்களின் வழங்குநர்களினால் வழங்கப்பட்ட மொத்தத் தொகை தொடர்பில் உயர்ந்தபட்சக் கொள்வனவுகளை மட்டுப்படுத்தல் என்பன சொத்து ஒதுக்கீட்டுச் செயன்முறையில் பரிசீலனையில் கொள்ளப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்தில் திரவத்தன்மை இடர்நேர்வுகளைக் குறைப்பது காத்திரமான வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு இயலாற்றல் தன்மையொன்றைப் பேணுவதற்கு முக்கிய பரிசீலனையில் கொள்ளப்படுகிறது. கொடுகடன், வட்டி வீதங்கள் வெளிநாட்டுச் செலாவணி மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு என்பனவற்றை முகாமைப்படுத்துவதற்கான கொள்கைகள் முறையே 43.1, 43.2, 43.3 மற்றும் 43.4 ஆகிய பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளன.

முதலீடுகள் மற்றும் இணைத்தரப்பினர்களின் கொடுகடன் தரமிடலை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு சொத்துப்பட்டியலின் கொடுகடன் இடர்நேர்வினை முகாமைப்படுத்துவதற்கு இணைத்தரப்பு கொடுகடன் தரமிடல் முகாமை முறைமை பயன்படுத்தப்பட்டது. மேலும், பணச் சந்தை இணைத்தரப்பினர்களுடைய கடன் வழுவுதல் பரஸ்பர பரிமாற்றல்கள்/ பங்கு விலைகள் ஆகியன இடர்நேர்வு முகாமைத்தவத் திணைக்களத்தால் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டன.

வங்கியினுடைய உள்ளக முதலீட்டு நிதியங்களின் முதலீடுகளுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளினை மதிப்பிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகிய தொழிற்பாடுகளை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் மேற்கொள்கின்றது. நிதித் திணைக்களம் முன்னிலை அலுவலகமாக, வங்கியினுடைய உள்ளக முதலீட்டு நிதியங்களைத் தற்போது முகாமை செய்வதுடன், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் உள்ளக நிதியங்களின் முதலீடுகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை தொடர்ச்சியான முறையில் கண்காணிக்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் நிதியங்களின் நிலைமை அறிக்கையை சுயாதீனமாக தொடர்ச்சியான முறையில் ஆளுநருக்குச் சமர்ப்பிப்பதுடன், நிதியங்களின் மூலதனப் பாதுகாப்பு மற்றும் திரவத்தன்மை எந்நேரமும் உறுதி செய்வதற்காக முதலீட்டு செயன்முறை மற்றும் முதலீட்டு கொள்கைக் கூற்றினை மேம்படுத்துவதற்கு நிதித் திணைக்களத்திற்கு இடர்நேர்வு தொடர்பான உள்ளீடுகளை வழங்குகின்றது.

நிதியல்லா இடர்நேர்வுகளானவை சட்ட இடர்நேர்வு, இணங்குவிப்பு இடர்நேர்வு, மனித வள இடர்நேர்வு, மோசடி இடர்நேர்வு, உபாய மற்றும் கொள்கை இடர்நேர்வு மற்றும் ஏனைய செயற்பாட்டு இடர்நேர்வு என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. நிதியல்லா இடர்நேர்வுகளைக் கண்காணிப்பது வேலை நடைமுறைகள், விதிகள் மற்றும் வழிகாட்டல்கள் அதேபோன்று முழு வங்கியினதும் பொருத்தமான இடர்நேர்வு ஆளுகை என்பவற்றின் இடர்நேர்வு இணங்குவிப்பினை உறுதிப்படுத்தும். இதனைக் கருத்திற்கொண்டு, நிதியியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு அதனுடைய காலாண்டுக் கூட்டத்தில் வங்கியின் நிதியல்லா இடர்நேர்வுகளை மேற்பார்வை செய்கின்றது. குழுவானது ஆளுநரைத் தலைவராகக் கொண்டிருப்பதுடன் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த இடர்நேர்வுகளுக்குள்ளாகக்கூடிய தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய திணைக்களங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும். உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் பார்வையாளராகச் செயற்படுவார். நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் பிரதான நோக்கம் வங்கியின் கீர்த்தியினைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு ஏதேனும் இழப்புக்கள் மற்றும் சேதங்களை தணித்துக் கொள்ளும் பொருட்டு வங்கியின் நிதியியலல்லா இடர்நேர்வினை அடையாளங்கண்டு, மதிப்பீட்டு (தாக்கம் மற்றும் நிகழும் தன்மை போன்றவற்றினூடாக) கண்காணிக்கின்ற நாணயச் சபையின் பொறுப்புக்களை நிறைவேற்ற உதவியளிப்பதேயாகும். குழுவும் இடர்நேர்வு முகாமைத்துவத் திட்டம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு நடைமுறைகள் என்பனவற்றின் தரம், ஒருங்கிணைப்பு மற்றும் காத்திரமான தன்மை என்பவற்றை மீளாய்வு செய்து மதிப்பிடுகிறது.

உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகள் என்பன வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுகின்றன. இது நடைமுறைகளின் போதுமானதன்மையினையும் நடைமுறைகளுக்கு வங்கியின்

இணங்குவிப்புக்களையும் பரீட்சிக்கின்றது. அனைத்துத் திணைக்களங்களும் காலாந்தர உள்ளகக் கணக்காய்வு மீளாய்விற்கு உட்படுகின்றன. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் நிர்வாக ரீதியாக நாணயச் சபையின் தலைவரான ஆளுநருக்கும், செயற்பாட்டு ரீதியாக நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கும் அறிக்கையிடுகின்றது.

நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கு நாணயச் சபையின் நியமன உறுப்பினர் தலைமை தாங்குகின்றார். வருடாந்த மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடங்கிய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் நேர்மையான தன்மை, இடைக்கால முகாமைத்துவக் கூற்றுக்கள் மற்றும் வங்கியின் நிதியியல் செயலாற்றம் தொடர்பான ஏனைய உத்தியோக பூர்வ அறிவிப்புக்கள், முக்கியமான நிதியியல் அறிக்கையிடல் பிரச்சனைகள் மற்றும் தீர்ப்புக்களினை மீளாய்வு செய்தல், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள், வங்கியின் இணங்குவிப்புத் தொழிற்பாட்டின் போதுமான தன்மை மற்றும் செயற்றிறன், வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் வினைத்திறன் மற்றும் தொடர்பான விடயங்கள் மற்றும் வெளியகக் கணக்காய்வு தொடர்பான விடயங்கள் மற்றும் வெளியகக் கணக்காய்வு தொடர்பான விடயங்கள் தொடர்பாக நாணயச் சபையின் மதியுரை கணக்காய்வுக் குழு நாணயச் சபைக்கு மதியுரை வழங்குகிறது. நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழுவின் விதந்துரைப்புக்களும், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயலாற்றங்களும் காலாண்டு அடிப்படையில் நாணயச் சபைக்கு அறிக்கையிடப்படுகின்றன.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 மற்றும் 43இன் கீழ் வங்கி கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்விற்கு உட்படுதல் வேண்டும். அதன் காரணமாக கணக்காய்வாளர் நாயகம் ப.நி.அ நியமங்களுக்கிணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்துவதற்காக ப.க நியமங்களின் கீழ் கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பட்டயக் கணக்காளரான ஏனஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் பணியினைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

### 43.1 கொடுகடன் இடர்நேர்வு

வங்கியின் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி புவியியல் பிரதேசங்களுக்கேற்ப (நாணயக் கூறுக்குரிய நாட்டை அடிப்படையாகக் கொண்டு) பின்வருமாறு:

**(அ) புவியியல் பிரதேசங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி**

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை | **450,026,855** | 266,095,014 |
| ஐக்கிய அமெரிக்கா | **238,171,318** | 314,591,946 |
| யப்பான் | **42,458,692** | 47,722,367 |
| பிரித்தானியா | **53,470,592** | 170,829,879 |
| ஐரோப்பா | **130,405,122** | 101,096,757 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **373,327,138** | 336,791,479 |
| ஏனையவை | **98,710,669** | 57,917,502 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,386,570,386** | 1,295,044,944 |

**(ஆ) நிறுவனங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி**

வங்கியின் ஆண்டு இறுதியில் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி நிறுவனங்களுக்கேற்ப வருமாறு:

| | 2016<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|
| அரசு | **843,824,011** | 903,134,670 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **373,327,138** | 336,791,480 |
| வெளிநாட்டு வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **159,700,398** | 48,696,315 |
| இலங்கை வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **3,838,531** | 909,033 |
| ஏனையவை | **5,880,308** | 5,513,446 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,386,570,386** | 1,295,044,944 |

**(இ) கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை**

பின்வரும் அட்டவணை ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் மற்றும் பிச் ரேட்டிங்ஸ் கொடுகடன் தரமிடல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிதிச் சொத்துக்களின் அல்லது வெளியிடுபவர்களின் கொடுகடன் தரமிடல்களை காட்டுகின்றது. ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் தரமிடல்களுக்கும் பிச் ரேட்டிங்ஸ் தரமிடல்களுக்கும் ஏற்ப AAA குறியீடுகள் அதியுயர் கொடுகடன் தரத்தினைக் கொண்ட தரமிடுதல்களையும் மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினையும் காட்டுகின்றது. நிதிக் கடப்பாடுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய சிறப்பான பலம் பொருந்திய நிலை உள்ளதென்பதை இது காட்டுகிறது. AA குறியீட்டின் மூலம் உயர் தரமிடுதல் காட்டப்படுவதோடு மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகின்றது. A குறியீட்டின் மூலம் உயர் மத்திய தரம் காட்டப்படுவதோடு குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகிறது. BBB குறியீட்டின் மூலம் கீழ்மட்ட முதலீட்டுத் தரமிடுதலும் கொடுகடன் இடர்நேர்வு தொடர்பில் நடைமுறையில் குறைந்த எதிர்பார்ப்பு உள்ளதென்பதும் காட்டப்படுவதோடு, பாதுகாப்பு அளவீடுகளின் தேவையை வலியுறுத்துகிறது. AAA குறியீட்டுக்குக் குறைவான தரங்களை பிரதானமான வகைகளுக்கு இடையிலுள்ள நிலைகளைக் காட்டும் பொருட்டு + அல்லது - அடையாளத்தின் மூலம் வகைப்படுத்திக் காட்டலாம். NR குறியீட்டின் மூலம் நிறுவனம், ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ், பிச் ரேட்டிங்ஸ் மற்றும் மூடிஸ் தரமிடலுக்கு உள்ளாக்கப்படவில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

| கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | கொடுகடன் தரமிடல் | 2016 ரூபா 000 | % | 2015 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ரிசர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | 310,794,899 | 22.41% | 553,410,725 | 42.73% |
| | AAA | 53,182,289 | 3.84% | - | - |
| | AA | 7,536 | 0.00% | 3,435 | 0.00% |
| | AA- | 50,185,913 | 3.62% | - | 0.00% |
| | A+ | 8,002,830 | 0.58% | 2,127,405 | 0.16% |
| | A | 946,070 | 0.07% | 1,531,225 | 0.12% |
| | A- | 138,110 | 0.01% | 1,734 | 0.00% |
| | BBB+ | 37 | 0.00% | 202,837 | 0.02% |
| | BBB- | 29,187 | 0.00% | 1,325 | 0.00% |
| | NR | 496,866 | 0.04% | 195,999 | 0.02% |
| | | 423,783,737 | 30.56% | 557,474,685 | 43.05% |
| **வெளிநாட்டு நாணய விற்பனை/ விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள்** | | | | | |
| பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | 8,820,628 | 0.64% | 11,714,884 | 0.90% |
| | AAA | 123,208,858 | 8.89% | 180,207,061 | 13.92% |
| | AA+ | 185,264,513 | 13.36% | 117,813,693 | 9.10% |
| | AA | 4,523,696 | 0.33% | 922,677 | 0.07% |
| | AA- | 20,567,813 | 1.48% | 15,356,209 | 1.19% |
| | A+ | 22,509,922 | 1.62% | 22,574,134 | 1.74% |
| | A | 3,119,014 | 0.22% | - | 0.00% |
| | A- | (120,419) | -0.01% | - | 0.00% |
| | BBB+ | 542,589 | 0.04% | - | 0.00% |
| | NR | 9,990,623 | 0.72% | 27,452,563 | 2.12% |
| | | 378,427,237 | 27.29% | 376,041,221 | 29.04% |
| இலாப நட்டங்களினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | A | 13,396,168 | 0.97% | 11,792,926 | 0.91% |
| | | 13,396,168 | 0.97% | 11,792,926 | 0.91% |
| **பெறுதி நிதியியல் சாதனங்கள்** | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | - | 0.00% | 99 | 0.00% |
| | A | - | 0.00% | 49 | 0.00% |
| | A- | - | 0.00% | 1,886 | 0.00% |
| உள்நாட்டு ரீதியாகத் தரமிடப்பட்டவை | AA+ | 2,377 | 0.00% | 1,652 | 0.00% |
| | AA | 156,660 | 0.01% | 459 | 0.00% |
| | AA- | 39,843 | 0.00% | - | 0.00% |
| | | 198,880 | 0.01% | 4,145 | 0.00% |
| ப.நா.நி. தொடர்புடைய சொத்துக்கள் | AAA | 117,008,339 | 8.44% | 83,636,350 | 6.46% |
| | | 117,008,339 | 8.44% | 83,636,350 | 6.46% |
| ஏனைய பெறத்தக்கவைகள் | AAA | 532 | 0.00% | 344 | 0.00% |
| | AA- | 2,299,102 | 0.17% | - | 0.00% |
| | A+ | 224,742 | 0.02% | - | 0.00% |
| | A | 127 | 0.00% | 2,370 | 0.00% |
| | A- | 120,772 | 0.01% | - | 0.00% |
| | BBB+ | 237,320 | 0.02% | - | 0.00% |
| | BBB- | - | 0.00% | 4 | 0.00% |
| உள்நாட்டில் தரமிடப்பட்டவை | AAA | 2,247,000 | 0.16% | 2,357 | 0.00% |
| | NR | 1,045,455 | 0.08% | - | 0.00% |
| | | 6,175,050 | 0.45% | 5,075 | 0.00% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 938,989,411 | 67.72% | 1,028,954,402 | 79.45% |

43.1 கொடுகடன் இடர்நேர்வு (தொடர்ச்சி)

| | கொடுகடன் தரமிடல் | 2016 ரூபா 000 | % | 2015 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | B+ | 351,426,470 | 25.35% | 102,866,995 | 7.94% |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | B+ | 83,306,771 | 6.01% | 151,131,672 | 11.67% |
| வங்கிகளுக்கான கடன்கள் | AA+ | 244,284 | 0.02% | 503,989 | 0.04% |
| | AA | 4,040 | 0.00% | 6,328 | 0.00% |
| | AA- | 7,902 | 0.00% | 14,715 | 0.00% |
| | A+ | 17,775 | 0.00% | 32,314 | 0.00% |
| | A- | 25,195 | 0.00% | 33,101 | 0.00% |
| | BBB | 3,626 | 0.00% | 6,835 | 0.00% |
| | BB+ | 62,341 | 0.00% | 85,759 | 0.01% |
| | B+ | 515 | 0.00% | 1,422 | 0.00% |
| | B | 3,500 | 0.00% | 4,860 | 0.00% |
| | NR | 114,865 | 0.01% | 197,034 | 0.02% |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை முதலீடுகள் | NR | 41,095 | 0.00% | 41,095 | 0.00% |
| ஏனைய சொத்துக்கள் | AA+ | 533,300 | 0.04% | - | 0.00% |
| | AA | 167,600 | 0.01% | - | 0.00% |
| | A | 6,500 | 0.00% | - | 0.00% |
| | A- | 56,400 | 0.00% | - | 0.00% |
| | B+ | 5,697,917 | 0.41% | 5,671,508 | 0.44% |
| | B | 10,000 | 0.00% | 10,000 | 0.00% |
| | NR | 5,850,879 | 0.42% | 5,482,915 | 0.42% |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 447,580,975 | 32.28% | 266,090,542 | 20.55% |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | 1,386,570,386 | 100.00% | 1,295,044,944 | 100.00% |
| **(ஈ) பிரதானமான கொடுகடன் வகைப்படுத்தலின்படி சாராம்சம்** | | | | | |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசேர்வ் வங்கி, அவுஸ்திரேலியாவின் றிசேர்வ் வங்கி/ பன்னாட்டு தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | 319,615,527 | 23.05% | 565,125,708 | 43.64% |
| ப.நா. நிதியம் தொடர்பான சொத்துக்கள் | | 117,008,871 | 8.44% | 83,636,694 | 6.46% |
| | AAA | 176,391,148 | 12.72% | 180,207,061 | 13.92% |
| | AA+/- | 262,848,573 | 18.96% | 134,096,014 | 10.35% |
| | A+/- | 48,337,336 | 3.49% | 38,031,730 | 2.94% |
| | BBB+/- | 809,132 | 0.06% | 204,166 | 0.02% |
| | NR | 10,487,489 | 0.76% | 27,648,561 | 2.13% |
| உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை | AAA | 2,247,000 | 0.16% | 2,357 | 0.00% |
| | AA+ | 2,377 | 0.00% | 1,652 | 0.00% |
| | AA | 156,660 | 0.01% | 459 | 0.00% |
| | AA- | 39,843 | 0.00% | - | 0.00% |
| | NR | 1,045,455 | 0.08% | - | 0.00% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 938,989,411 | 67.72% | 1,028,954,402 | 79.45% |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | AA+ | 777,584 | 0.06% | 503,989 | 0.04% |
| | AA | 171,640 | 0.01% | 6,328 | 0.00% |
| | AA- | 7,902 | 0.00% | 14,715 | 0.00% |
| | A+ | 17,775 | 0.00% | 32,314 | 0.00% |
| | A | 6,500 | 0.00% | - | 0.00% |
| | A- | 81,595 | 0.01% | 33,101 | 0.00% |
| | BBB | 3,626 | 0.00% | 6,835 | 0.00% |
| | BB+ | 62,341 | 0.00% | 85,759 | 0.01% |
| | B+ | 440,431,674 | 31.76% | 259,671,597 | 20.05% |
| | B | 13,500 | 0.00% | 14,860 | 0.00% |
| | NR | 6,006,838 | 0.43% | 5,721,044 | 0.44% |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 447,580,975 | 32.28% | 266,090,542 | 20.55% |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | | 1,386,570,386 | 100.00% | 1,295,044,944 | 100.00% |

43.2 வட்டி வீத இடர்நேர்வு

(அ) வெளிநாட்டு நாணய வட்டி வீதக் கூருணர்திறன்

**வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற நட்டங்களின் இடர்நேர்வாகும்.**

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் தவிர்ந்த நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத கூருணர் திறனானது, வட்டி வீதம் 10 அடிப்படைப்புள்ளிகளினால் அதிகரிப்பதன் காரணமாக உருவாகக் கூடிய இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுவதோடு, கீழே தரப்பட்டுள்ள நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியல் கூறுகளைப் பயன்படுத்தி வங்கியானது இடர்நேர்வுக் கூருணர்திறனை அளவிடுகின்றது:

| பட்டியல் பிரிவு | நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2016 | 2015 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **5.16** | 8.35 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **0.03** | - |

பின்வரும் உபாய முறைகளைப் பயன்படுத்தி இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வினை முகாமை செய்கின்றது.

(i) வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வட்டி வீத மாற்றங்களின் தாக்கத்தினை வட்டி வீத கூருணர்திறன் அளவிடுகின்ற அதேவேளை, வட்டி வீதத்தினையும் அதேநேரம் முதலீட்டுக் காலவரையறையையும் கவனத்திலெடுக்கின்றதான மாற்றப்பட்ட காலவரையறையை வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுவதற்காக வங்கி பயன்படுத்துகின்றது. மாற்றப்பட்ட காலவரையானது வழங்கப்பட்டுள்ள வட்டி வீதத்திலான மாற்றத்திற்கான (விளைவு) பிணையங்களின் விலையிலான மாற்றத்தை அளவிடுகின்றது. உயர்ந்தளவு மாற்றப்பட்ட காலவரையறையானது உயர்ந்தளவு இடர்நேர்வினைக் குறிக்கின்றது. ஆதலால் வங்கியானது நிதிச் சந்தையிலான அபிவிருத்தி, சொத்துப் பட்டியலின் பண்புகள் மற்றும் வங்கியின் இடர்நேர்வு விருப்பினைக் கவனத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் பொருத்தமான மாற்றப்பட்ட காலவரையறையை விதிக்கின்றது. வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் மாற்றப்பட்ட காலவரையறை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மாற்றப்பட்ட காலவரையறை

| முதலீட்டுப் பிரிவு | மாற்றப்பட்ட காலவரையறை | |
|---|---|---|
| | 2016 | 2015 |
| மூலதனச் சந்தை (நிலையான வருமானப் பிணையங்கள்) | **2.26** | 3.28 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **1.42** | - |

(ii) மாற்றப்பட்ட காலவரையானது விலையிலான அதிகளவு மாற்றத்தினைக் கணிப்பிடாததால், வெளிநாட்டு ஒதுக்குப் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு புறக்குவிவான அளவீடொன்று பயன்படுத்தப்படுகின்றது. காலவரையறையை குறிக்கும் நேர்கோட்டிலிருந்து முறி விலை விளைவு வளையின் வேறுபாட்டினை புறக்குவிவு அளவிடுகின்றது. முறி விலையின் மாற்றத்திற்கான சராசரிக் காலவரையறையின் மேம்பாட்டினை இது அனுமதிக்கின்றது. புறக்குவிவு என்பது விளைவு மாற்றத்திற்கான காலப்பகுதி மாற்றமாகும். இது மாற்றப்பட்ட காலப்பகுதிக்கான ஊகத் தவறுகளை அளவிடுகின்றது. மறுசொல்லில் விளக்குவதாயின் இது, இதன் பிணைய விலைகளினால் வகுக்கப்பட்ட விளைவு தொடர்பான பிணைய விலைகளின் இரண்டாவது பெறுதியாகும்.

**கூறாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் புறக்குவிவு**

| பட்டியல் பிரிவு | எதிர்பார்க்கப்படும் நட்டம் (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2016 | 2015 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **0.99** | 0.19 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **0.04** | - |

(iii) இடர்நேர்வேற்புப் பெறுமதி

இடர்நேர்வேற்புப் பெறுமதியானது நிதியியல் சந்தை அசைவுகளிலிருந்தான சாதாரண சந்தை நிலைமைகளின் கீழ் சொத்துப்பட்டியலின் கீழ் நோக்கிய இடர்நேர்வை தனி இலக்கத்தில் சுருக்குகின்றது. எனவே, இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இலக்கிடப்பட்ட அசைவு மீதான உயர்ந்தபட்ச இழப்பாக இருப்பதனால், உண்மையான இழப்பு அதிகமாக இருப்பதற்குரிய முற்குறிப்பிடப்பட்ட நிகழ்தகவு குறைவாகும். இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இடர்நேர்வுகள் மற்றும் நிலைமைகளுக்கிடையில் கூட்டக்கூடிய, பணத்தின் நியதிகளிலான ஒரு இலக்கத்தை எமக்குத் தருகின்றது. வங்கியானது 99 சதவீத நம்பக இடைவெளியில் 10 நாட்களுக்கான இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு முறைமையைப் பயன்படுத்துகின்றது. இடர்நேர்வுப் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான வரலாற்று முறைமை சில சமயங்களில் வரலாற்று உருவகப்படுத்தல் உருவமைப்பாகக் குறிப்பிடப்படுகின்றது. வரலாற்று முறையினைப் பயன்படுத்தி 5 சதவீத நாளாந்த இடர்நேர்வுப் பெறுமதியினைக் கணிப்பதற்கான ஒரு உதாரணமாக கடந்த நாளாந்த வருவாய்கள், உயர்விலிருந்து தாழ்ந்தநிலைவரையில் வருவாய்களைத் தரப்படுத்தல் மற்றும் வருவாய்களில் ஆகக் குறைந்த 5 சதவீதத்தினை அடையாளம் காணல் என்பன கணிக்கப்படுகின்றன. வருவாய்களின் இம்மிகக் குறைந்த 5 சதவீத உயர்ந்த தொகை என்பது 1- நாள் 5 சதவீத இடர்நேர்வுப் பெறுமதியாகும்.

| பட்டியல் பிரிவு | இடர்நேர்வேற்புப் பெறுமதி (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2016 | 2015 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **36.02** | 69.82 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **0.65** | - |

(iv) வர்த்தகப்படுத்தல் மற்றும் திறந்த நிலைமை வரையறைகள்

தனிப்பட்ட வணிகர்களுக்காக "வணிகப்படுத்தல் அதிகாரம்" என்ற முறை மூலம் வங்கியானது ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓரிரவு நிலை வரையறை மீது குறிப்பிட்ட வணிக வரையறைகளை வழங்கியுள்ளது.

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தில் செய்யப்பட்ட முதலீடுகளுடன் தொடர்பான வட்டி வீத இடர்நேர்வு அளவீடுகளாவை கிரமமான முறையில் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துக் குழுவிற்கு அறிக்கையிடப்படுகின்றன.

(ஆ) உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன்

உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் கடன்களைக் குறிப்பதால் அவை இ.ம. வங்கியின் நிதி நிலைமை பற்றிய கூற்றில் கடன்தீர் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. வட்டி வருமானமொன்றை ஈட்டும் நோக்கத்துடன் வங்கி திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யாததால் இந்தப் பட்டியல் ஒரு முதலீட்டுப்பட்டியல் அல்ல. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் என்னும் அதன் மையக் கருப்பொருட்கள் தொடர்பாக நாணயத் தொழிற்பாட்டுக் கொள்கைகளை மேற்கொள்கையில் திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையில் ஏற்படுத்துவதற்காக அல்லது திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையிலிருந்து உள்ளீர்ப்பதற்காக வங்கி திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்கின்றது அல்லது விற்பனை செய்கின்றது. ஆதலால், வங்கியின் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்கள் அதன் நாணயச் கொள்கைத் தொழிற்பாடுகளினால்

நிர்ணயிக்கப்படுகின்றன. அத்துடன், பணச் சந்தையில் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகியவை வங்கியின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அதனால் நிர்ணயிக்கப்படும் கொள்கை வீதங்களாகும். மேலும், சந்தையிலிருந்து ரூபாய் திரவத்தன்மையை ஏற்படுத்துவதில் அல்லது திரவத்தன்மையை உள்ளீர்ப்பதில் வங்கியின் நடவடிக்கைகள் பொதுவான ரூபாய் சந்தை வட்டி வீதங்களில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதன்படி, வங்கியின் திறைசேரி உண்டியல்களின் பட்டியலில் இருந்தும் அவ்வாறே வட்டி வீதங்களின் மாற்றங்களிலிருந்தும் எழுகின்ற திறைசேரி உண்டியல் பட்டியலிலிருந்து ஈட்டப்படும் வட்டி வருமானத்தின் மாற்றங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக உருவாவதேயன்றி முதலீட்டுத் தீர்மானங்கள் காரணமாக அல்ல. எனவே, வங்கியானது உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வட்டி வீதக் கூருணர்திறனைக் கவனத்திற் கொள்வதில்லை.

**(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள் விலையிடப்படும்**

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2016 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.6352 | 423,783,737 | 423,783,737 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 1.1792 | 378,427,237 | 82,598,844 | 37,282,832 | 100,641,826 | 117,752,141 | 40,151,594 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.0228 | 9,940,219 | 9,940,219 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **812,151,193** | **516,322,800** | **37,282,832** | **100,641,826** | **117,752,141** | **40,151,594** |
| வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 107,068,121 | - | - | - | 145,906 | 106,922,215 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 198,880 | 198,880 | - | - | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 6,175,049 | 6,175,049 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | | 13,396,168 | 13,396,168 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **126,838,218** | **19,770,097** | **-** | **-** | **145,906** | **106,922,215** |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **938,989,411** | **536,092,897** | **37,282,832** | **100,641,826** | **117,898,047** | **147,073,809** |
| வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | | |
| ப.நா.நி. | 0.2440 | 82,976,654 | 27,750,312 | 6,937,578 | - | 18,108,285 | 30,180,479 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 0.5100 | 79,863,615 | 79,863,615 | - | - | - | - |
| இந்திய ஒதுக்குவங்கியின் பரஸ்பர பரிமாற்றம் | 2.9973 | 59,920,000 | 59,920,000 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **222,760,269** | **167,533,927** | **6,937,578** | **-** | **18,108,285** | **30,180,479** |
| வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | | |
| வங்கிகள், மற்றும் நிறுவனங்கள் | | 45,566,681 | 45,566,681 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 14,573,675 | 5,088,148 | 3,564,938 | 3,931,574 | 1,989,015 | - |
| ப.நா.நிதியம் | | 186,563,942 | - | - | - | - | 186,563,942 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கிகளின் மூலதனம் | | 1,169,177 | - | - | - | - | 1,169,177 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 35,160,855 | 35,160,855 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **283,034,330** | **85,815,684** | **3,564,938** | **3,931,574** | **1,989,015** | **187,733,119** |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **505,794,599** | **253,349,611** | **10,502,516** | **3,931,574** | **20,097,300** | **217,913,598** |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | **589,390,924** | **348,788,873** | **30,345,254** | **100,641,826** | **99,643,856** | **9,971,115** |

43.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2016 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 9.1639 | 320,605,082 | 233,255,698 | 87,349,384 | - | - | - |
| திறைசேரி உண்டியல் மற்றும் முறி நேர்மாற்று மீள்கொள்வனவு | 8.5000 | 30,821,388 | 30,821,388 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 8.4016 | 484,043 | 182,396 | 107,091 | 125,390 | 61,511 | 7,655 |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 3.5355 | 5,603,510 | 92,230 | 92,417 | 192,376 | 621,059 | 4,605,428 |
| - ஏனையவைகள் | 10.0070 | 5,081,970 | 653,033 | 179,925 | 818,650 | 2,066,410 | 1,363,952 |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 362,595,993 | 265,004,745 | 87,728,817 | 1,136,416 | 2,748,980 | 5,977,035 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 83,306,771 | 83,306,771 | - | - | - | - |
| ஏனைய சொத்துக்கள் | | 1,637,116 | 1,637,116 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய சொத்துக்கள்** | | 84,984,982 | 84,943,887 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | 447,580,975 | 349,948,632 | 87,728,817 | 1,136,416 | 2,748,980 | 6,018,130 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 7.4282 | 21,383,724 | 21,383,724 | - | - | - | - |
| துணைநில் வைப்பு வசதி | 7.0000 | 48,670,712 | 48,670,712 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 70,054,436 | 70,054,436 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 303,251,290 | 303,251,290 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 450,884 | 450,884 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | | 51,744 | 51,744 | - | - | - | - |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 552,777,865 | 552,777,865 | - | - | - | - |
| ஏனைய செலுத்ததக்கவைகள் | | 8,563,548 | 8,563,548 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | 865,095,331 | 865,095,331 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 935,149,767 | 935,149,767 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 292,541,557 | 194,950,309 | 87,728,817 | 1,136,416 | 2,748,980 | 5,977,035 |

43.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2015 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.31 | 557,474,685 | 557,474,685 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 1.54 | 376,041,221 | 51,900,181 | 50,000,041 | 51,436,286 | 138,190,639 | 84,514,074 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.04 | 10,523,672 | 10,523,672 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 944,039,578 | 619,898,538 | 50,000,041 | 51,436,286 | 138,190,639 | 84,514,074 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 73,112,678 | - | - | - | 138,622 | 72,974,056 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 4,145 | 2,259 | - | 1,886 | - | - |
| பெறத்தக்கவை | | 5,075 | 5,075 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | | 11,792,926 | 11,792,926 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 84,914,824 | 11,800,260 | - | 1,886 | 138,622 | 72,974,056 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,028,954,402 | 631,698,798 | 50,000,041 | 51,438,172 | 138,329,261 | 157,488,130 |
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 0.00 | 99,720,675 | 37,825,083 | 27,509,152 | 34,386,440 | - | - |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 0.23 | 68,887,459 | 68,887,459 | - | - | - | |
| இந்திய ஒதுக்கு வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றம் | 2.45 | 158,766,606 | 158,766,606 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 327,374,740 | 265,479,148 | 27,509,152 | 34,386,440 | - | - |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளும், ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | | 11,750,164 | 11,750,164 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 24,280,307 | 9,568,328 | 6,609,542 | 1,610,234 | 5,831,868 | 660,335 |
| ப.நா.நி. | | 151,923,669 | - | - | - | - | 151,923,669 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கி மூலதனம் | | 1,124,395 | - | - | - | - | 1,124,395 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 58,331,218 | 58,331,218 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 247,409,753 | 79,649,710 | 6,609,542 | 1,610,234 | 5,831,868 | 153,708,399 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 574,784,493 | 345,128,858 | 34,118,694 | 35,996,674 | 5,831,868 | 153,708,399 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 616,664,838 | 354,419,390 | 22,490,889 | 17,049,846 | 138,190,639 | 84,514,074 |

### 43.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2015 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 6.5802 | 102,731,967 | 58,490,040 | 44,241,927 | - | - | - |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் நேர்மாற்று மீள்கொள்வனவு | 7.5000 | 135,028 | 135,028 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 8.3863 | 886,357 | 215,559 | 190,756 | 285,486 | 183,562 | 10,994 |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 3.6405 | 5,133,899 | 39,486 | 40,127 | 80,721 | 260,253 | 4,713,312 |
| - ஏனையவைகள் | 8.4145 | 4,313,154 | 760,877 | 338,215 | 360,205 | 2,327,611 | 526,246 |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 113,200,405 | 59,640,990 | 44,811,025 | 726,412 | 2,771,426 | 5,250,552 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 151,131,671 | 151,131,671 | - | - | - | - |
| ஏனைய சொத்துக்கள் | | 1,717,370 | 1,717,370 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய சொத்துக்கள்** | | 152,890,136 | 152,849,041 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | 266,090,541 | 212,490,031 | 44,811,025 | 726,412 | 2,771,426 | 5,291,647 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 6.4233 | 23,650,000 | 23,650,000 | - | - | - | - |
| துணைநில் வைப்பு வசதி | 6.0000 | 81,815,000 | 81,815,000 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 105,465,000 | 105,465,000 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 181,726,732 | 181,726,732 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 428,142 | 428,142 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | | 7,212 | 7,212 | - | - | - | - |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 491,699,948 | 491,699,948 | - | - | - | - |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | | 6,850,998 | 6,850,998 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | 680,713,032 | 680,713,032 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 786,178,032 | 786,178,032 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 7,735,405 | (45,824,010) | 44,811,025 | 726,412 | 2,771,426 | 5,250,552 |

### 43.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு

வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மூலமாக வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் பிரதானமாக உருவாகின்றன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாற்றங்கள் உருவாகக்கூடிய போக்கின் காரணமாக வங்கியானது செலாவணி இடர்நேர்வுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு உள்ளது. நாணயச் சபையினாலும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினாலும் வங்கியின் பன்னாட்டு ஒதுக்கங்களில் பல்வேறு நாணய வகைகளும் வைத்திருக்கப்பட வேண்டிய வீதத் தொகைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. நாணயங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது அரச கடன்களை மீளச் செலுத்துவதன் தேவைப்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கிணங்க வங்கியானது பிரதானமான நாணய வகைகள் பலவற்றை, அதாவது ஐக்கிய அமெரிக்கா டொலர், ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர், யப்பான் யென், யூரோ மற்றும் நியூசிலாந்து டொலர் ஆகியவற்றை வைத்திருக்கின்றது. வெளிநாட்டு நாணய நிலைமைகளின் உருவாக்கப்பட்ட எல்லைகளுடனான இணங்குவிப்பு கண்காணிக்கப்படுகின்றது.

**43.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு (தொடர்ச்சி)**

**வெளிநாட்டு நாணயங்களுக்கான தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை**

2016 டிசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு:

| | நாணயம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ. அமெரிக்க டொலர் | யூரோ | யப்பானிய யென் | ஸ்ரேலிங் பவுண் | சிஎஉ | அவுஸ்திரேலிய டொலர் | கனேடியன் டொலர் | நியுசிலாந்து டொலர் | ஏனைய நாணயங்கள் | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் |
| **2015 டிசெம்பர் 31இல் உள்ளவாறு** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 60,672,511 | (52,620,544) | (44,196,304) | 92,331,449 | - | 134,790,117 | (9,651,058) | (5,876,338) | 248,333,904 | 423,783,737 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 243,152,847 | 44,267,349 | 21,813,382 | 11,527,275 | - | 21,471,379 | 9,797,465 | 9,687,691 | 30,106,017 | 391,823,405 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | - | - | - | - | - | - | 198,880 | 198,880 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 117,008,340 | - | - | - | - | 117,008,340 |
| ஏனைய பெறத்தக்கவை | 6,053,745 | 120,772 | - | - | 532 | - | - | - | - | 6,175,049 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 309,879,103 | (8,232,423) | (22,382,922) | 103,858,724 | 117,008,872 | 156,261,496 | 146,407 | 3,811,353 | 278,638,801 | 938,989,411 |
| விகிதம் | 33.00% | -0.88% | -2.38% | 11.06% | 12.46% | 16.64% | 0.02% | 0.41% | 29.67% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 45,566,531 | 10 | - | 139 | - | - | 1 | - | - | 45,566,681 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 11 | - | - | - | - | - | - | - | 14,573,664 | 14,573,675 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 79,863,615 | - | - | - | - | - | - | - | - | 79,863,615 |
| ப.நா. நிதியம் | - | - | - | - | 269,540,596 | - | - | - | - | 269,540,596 |
| ஏனையவை | 95,804,614 | - | - | - | - | - | - | - | 445,418 | 96,250,032 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 221,234,771 | 10 | - | 139 | 269,540,596 | - | 1 | - | 15,019,082 | 505,794,599 |
| விகிதம் | 43.74% | 0.00% | 0.00% | 0.00% | 53.29% | 0.00% | 0.00% | 0.00% | 2.97% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | 88,644,332 | (8,232,433) | (22,382,922) | 103,858,585 | (152,531,724) | 156,261,496 | 146,406 | 3,811,353 | 263,619,719 | 433,194,812 |

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

| | இலங்கை ரூபா ரூ.000 | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | ஸ்ரேலிங் பவுண் ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | அவுஸ்திரேலிய டொலர் ரூ.000 | சுவீடன் குரோனா ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **2016 டிசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | | |
| கொள்வனவு | 399,872,823 | (15,716,215) | (985) | (62,622) | (4,876) | (6,352,618) | - |
| விற்பனை | (26,858,576) | (377,765,524) | 5,375,438 | 19,321,868 | 4,876 | 30,444 | (960) |
| வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தக் கணக்கு - பிரிவிற்கு அணித்தாக | (1,667) | - | - | - | - | - | - |
| முன்னோக்கி ஒப்பந்தக் கணக்கு | 2,158,595 | - | - | - | - | - | - |

43.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு (தொடர்ச்சி)

2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு

| | நாணயம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ. அமெரிக்க டொலர் | யூரோ | யப்பானிய யென் | ஸ்ரேலிங் பவுண் | சிஎஉ | அவுஸ்திரேலிய டொலர் | கனேடியன் டொலர் | நியுசிலாந்து டொலர் | ஏனைய நாணயங்கள் | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் |
| 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 176,922,656 | (43,264,954) | (14,336,028) | 88,586,921 | - | 126,101,239 | (10,249,157) | (5,866,491) | 239,580,499 | 557,474,685 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 203,115,851 | 52,346,338 | 19,947,895 | 23,753,864 | - | 28,241,778 | 10,036,752 | 8,790,359 | 41,601,310 | 387,834,147 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,886 | - | 148 | - | - | - | - | - | 2,111 | 4,145 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 83,636,350 | - | - | - | - | 83,636,350 |
| ஏனைய வெளிநாட்டுப் பெறத்தக்கவை | 2,374 | 2,357 | - | - | 344 | - | - | - | - | 5,075 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 380,042,767 | 9,083,741 | 5,612,015 | 112,340,785 | 83,636,694 | 154,343,017 | (212,405) | 2,923,868 | 281,183,920 | 1,028,954,402 |
| விகிதம் | 36.93% | 0.88% | 0.55% | 10.92% | 8.13% | 15.00% | -0.02% | 0.28% | 27.33% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 12,046,056 | 376 | - | 1,766 | - | 43 | - | - | - | 12,048,241 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 249 | - | - | - | - | - | - | - | 24,280,059 | 24,280,308 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 68,613,251 | 274,208 | - | - | - | - | - | - | - | 68,887,459 |
| ப.நா.நிதியம் | - | - | - | - | 251,644,344 | - | - | - | - | 251,644,344 |
| ஏனையவை | 209,792,285 | 7,483,464 | - | - | - | - | - | - | 648,393 | 217,924,142 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 290,451,841 | 7,758,048 | - | 1,766 | 251,644,344 | 43 | - | - | 24,928,452 | 574,784,494 |
| விகிதம் | 50.53% | 1.35% | 0.00% | 0.00% | 43.78% | 0.00% | 0.00% | 0.00% | 4.27% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | 89,590,926 | 1,325,693 | 5,612,015 | 112,339,019 | (168,007,650) | 154,342,974 | (212,405) | 2,923,868 | 256,255,469 | 454,169,908 |

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

| | இலங்கை ரூபா | ஐ. அமெரிக்க டொலர் | யூரோ | ஸ்ரேலிங் பவுண் | யப்பானிய யென் | அவுஸ்திரேலிய டொலர் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| கொள்வனவு | 364,801,652 | 17,874,539 | (985) | (62,622) | 67,254 | (6,352,618) |
| விற்பனை | (60,385,247) | (351,208,306) | 5,375,438 | 19,321,868 | (67,106) | 30,444 |
| வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தக் கணக்கு - பிரிவிற்கு அணித்தாக | 7,732 | - | - | - | - | - |
| முன்னோக்கி ஒப்பந்தக் கணக்கு | 10,597,957 | - | - | - | - | - |

43.4 நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள்

2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள் பின்வருமாறு:

| | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு | | | | | | |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 423,783,737 | - | - | - | - | 423,783,737 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 18,588,564 | 5,033,982 | 12,151,636 | 8,087,248 | - | 43,861,430 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 54,001,291 | 39,271,443 | 104,459,788 | 120,422,348 | 38,708,398 | 356,863,268 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 9,940,219 | - | - | 145,906 | 106,922,214 | 117,008,339 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | 6,175,049 | - | - | - | - | 6,175,049 |
| மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள் | 512,488,860 | 44,305,425 | 116,611,424 | 128,655,502 | 145,630,612 | 947,691,823 |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 267,791,962 | 94,425,980 | - | - | - | 362,217,942 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 83,306,771 | - | - | - | - | 83,306,771 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 194,137 | 114,307 | 132,090 | 64,456 | 8,108 | 513,098 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 16,201,304 | 645,307 | 1,684,900 | 4,588,533 | 6,697,731 | 29,817,775 |
| மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள் | 367,494,174 | 95,185,594 | 1,816,990 | 4,652,989 | 6,746,934 | 475,896,681 |
| மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள் | 879,983,034 | 139,491,019 | 118,428,414 | 133,308,491 | 152,377,546 | 1,423,588,504 |
| வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 44,456,357 | 418,671 | 793,905 | 2,337,833 | 3,461,514 | 51,468,280 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 79,863,615 | - | - | - | - | 79,863,615 |
| ப.நா.நிதியம் | 27,750,312 | 6,937,578 | - | 10,060,159 | 224,792,547 | 269,540,596 |
| ஏனையவை | 95,125,637 | - | - | - | 1,124,395 | 96,250,032 |
| மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | 247,195,921 | 7,356,249 | 793,905 | 12,397,992 | 229,378,456 | 497,122,523 |
| உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 303,251,290 | - | - | - | - | 303,251,290 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 450,884 | - | - | - | - | 450,884 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 70,081,240 | - | - | - | - | 70,081,240 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 51,744 | - | - | - | - | 51,744 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 552,777,865 | - | - | - | - | 552,777,865 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 8,563,548 | - | - | - | - | 8,563,548 |
| மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள் | 935,176,571 | - | - | - | - | 935,176,571 |
| மொத்த கழிவுறப்படாத நிதியியல் பொறுப்புக்கள் | 1,182,372,492 | 7,356,249 | 793,905 | 12,397,992 | 229,378,456 | 1,432,299,094 |
| தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்) | (302,389,458) | 132,134,770 | 117,634,509 | 120,910,499 | (77,000,910) | (8,710,590) |

| | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|
| 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு | | |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 279,092,132 | 93,922,515 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 279,934,575 | 92,340,465 |

**வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்**

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய அனைத்து எதிர்கால காசுப்பாய்ச்சல்களும், அறிக்கையிடல் திகதியிலுள்ள செலாவணி வீதத்தை பயன்படுத்தி அறிக்கையிடும் நாணயத்திற்கு மாற்றப்பட்டன.

43.4. நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள் (தொடர்ச்சி)

**2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறபப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள் பின்வருமாறு:**

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டு களுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 557,474,685 | - | - | - | - | 557,474,685 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 43,171,272 | - | - | - | - | 43,171,272 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 29,321,065 | 52,530,133 | 56,153,333 | 145,590,515 | 85,886,120 | 369,481,166 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 10,523,672 | - | - | 138,622 | 72,974,056 | 83,636,350 |
| ஏனைய பெறத்தக்கவை | 5,075 | - | - | - | - | 5,075 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 640,495,769 | 52,530,133 | 56,153,333 | 145,729,137 | 158,860,176 | 1,053,768,548 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 104,889,169 | - | - | - | - | 104,889,169 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 151,131,671 | - | - | - | - | 151,131,671 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 237,733 | 207,777 | 304,647 | 194,165 | 11,852 | 956,174 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 2,675,835 | 524,731 | 709,055 | 3,125,543 | 5,270,055 | 12,305,219 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 258,934,408 | 732,508 | 1,013,702 | 3,319,708 | 5,323,002 | 269,323,328 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்** | 899,430,177 | 53,262,641 | 57,167,035 | 149,048,845 | 164,183,178 | 1,323,091,876 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 13,012,853 | 294,833 | 186,752 | 121,023 | 413,161 | 14,028,622 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 68,887,459 | - | - | - | - | 68,887,459 |
| ப.நா.நிதியம் | 44,702,372 | 20,631,864 | 34,386,440 | - | 151,923,668 | 251,644,344 |
| ஏனையவை | 216,799,748 | - | - | - | 1,124,394 | 217,924,142 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 343,402,432 | 20,926,697 | 34,573,192 | 121,023 | 153,461,223 | 552,484,567 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 181,726,732 | - | - | - | - | 181,726,732 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 428,142 | - | - | - | - | 428,142 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 105,607,860 | - | - | - | - | 105,607,860 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 7,212 | - | - | - | - | 7,212 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 491,699,948 | - | - | - | - | 491,699,948 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 6,910,166 | - | - | - | - | 6,910,166 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | 786,380,060 | - | - | - | - | 786,380,060 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் பொறுப்புக்கள்** | 1,129,782,492 | 20,926,697 | 34,573,192 | 121,023 | 153,461,223 | 1,338,864,627 |
| **தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | (230,352,315) | 32,335,944 | 22,593,843 | 148,927,822 | 10,721,955 | (15,772,751) |

| | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 181,916,705 | 122,504,814 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 189,611,926 | 122,520,743 |

### 43.5 திரவத்தன்மை இடர்நேர்வு

நிதியியல் சாதனங்களுக்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைக் குறுகிய கால அறிவித்தலின் மீது பெற்றுக் கொள்கின்ற போது நிறுவனமொன்று முகம் கொடுக்கின்ற இடர்ப்பாடு திரவத்தன்மை இடர்நேர்வாகும். நிறுவனம் தனது நிதிச் சொத்துக்களை விரைவாக, சந்தைப் பெறுமதியைவிட மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி நேரிடுவதும் திரவத்தன்மை இடர்நேர்வொன்றாகும்.

(அ) வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் உள்ளமைப்பைத் தீர்மானிக்கின்ற போது முக்கியமாக திரவத்தன்மை தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களில் தலையீடு செய்கின்ற போது மற்றும் அரச கடன்கள் மற்றும் ப.நா.நி. கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டு ஒதுக்கங்களை ஒழிக்கின்ற போது இது ஒரு உள்ளார்ந்த தேவைப்பாடாகும். நிதியங்களை விரைவாக அடைவதை உறுதி செய்து கொள்ளும் நோக்கத்துடன் வங்கியானது பின்வரும் அளவீடுகளை மேற்கொள்கிறது:

- வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் திரவத்தன்மை இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட திரவச் சொத்து வீதங்கள்.
- ஒரு இணைத்தரப்பினருடன் ஒரு நாணயத்தில் வைத்திருக்கப்படக்கூடிய ஒதுக்குகளின் உச்சமட்ட விகிதத்தின் மீதான வரையறை

(ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற சந்தைப்படுத்தக்கூடிய அதிக திரவத்தன்மையுடனான கருவிகளை மேலதிகப் பிணையங்களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, மீள்கொள்வனவு/நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கிப் பிணையங்கள் மற்றும் ஐ.அ.டொலர்/ரூபா பரஸ்பர பரிமாற்றல்கள் போன்ற நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி முறைமையினுள் நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப்பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலையைக் கட்டுப்படுத்துகிறது.

### 44. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாடு

2016 திசெம்பர் 31இலுள்ளவாறு

| | 12 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 12 மாதங்களுக்கு மேலானவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 423,783,737 | - | **423,783,737** |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 9,948,121 | 33,330,634 | **43,278,755** |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 88,536,415 | 260,008,235 | **348,544,650** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 198,880 | - | **198,880** |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 9,940,219 | 107,068,121 | **117,008,340** |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | 6,175,049 | - | **6,175,049** |
| இலங்கை அரச பிணையங்கள் | 351,426,470 | - | **351,426,470** |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 83,306,771 | - | **83,306,771** |
| வங்கிகளுக்கான கடன்கள் | 289,487 | 194,556 | **484,043** |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | 41,095 | **41,095** |
| ஏனைய சொத்துக்கள் | 2,781,887 | 9,540,709 | **12,322,596** |
| தங்கம் | - | 111,009,339 | **111,009,339** |
| இருப்புக்கள் | - | 6,114,861 | **6,114,861** |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | 6,830,387 | 396,414 | **7,226,801** |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | - | 18,132,390 | **18,132,390** |
| அருவச் சொத்துக்கள் | - | 156,320 | **156,320** |
| **மொத்தச் சொத்துக்கள்** | 983,217,423 | 545,992,674 | **1,529,210,097** |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 45,566,681 | - | **45,566,681** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 14,573,675 | - | **14,573,675** |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 79,863,615 | - | **79,863,615** |
| ப.நா. நிதியம் | 34,687,890 | 234,852,706 | **269,540,596** |
| ஏனையவை | 95,125,637 | 1,124,395 | **96,250,032** |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 303,251,290 | - | **303,251,290** |
| அரச, அரச நிறுவனங்களின் நிலுவைகள் | 450,884 | - | **450,884** |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 70,054,436 | - | **70,054,436** |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 51,744 | - | **51,744** |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 552,777,865 | - | **552,777,865** |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 8,563,548 | - | **8,563,548** |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 34 | 46 | **80** |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | - | 2,429,153 | **2,429,153** |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 182,544 | 10,753 | **193,297** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,205,149,843 | 238,417,053 | **1,443,566,896** |
| **தேறிய** | (221,932,420) | 307,575,621 | **85,643,201** |

**44. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாடு (தொடர்ச்சி)**

**2015 திசெம்பர் 31இலுள்ளவாறு**

| | 12 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 12 மாதங்களுக்கு மேலானவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 557,474,685 | - | 557,474,685 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 35,779,665 | - | 35,779,665 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 77,913,482 | 274,141,000 | 352,054,482 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 2,259 | 1,886 | 4,145 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 10,523,672 | 73,112,678 | 83,636,350 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | 5,075 | - | 5,075 |
| இலங்கை அரச பிணையங்கள் | 102,866,967 | - | 102,866,967 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 151,131,671 | - | 151,131,671 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 406,315 | 480,042 | 886,357 |
| ஏனைய சொத்துக்கள் | 2,896,103 | 8,268,349 | 11,164,452 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | 41,095 | 41,095 |
| தங்கம் | 97,723,836 | - | 97,723,836 |
| இருப்புக்கள் | - | 3,419,964 | 3,419,964 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | 9,487,315 | 4,860,496 | 14,347,811 |
| சொத்து, பொறி மற்றும் பொறிகள் | - | 15,422,315 | 15,422,315 |
| அருவச் சொத்துக்கள் | - | 240,610 | 240,610 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 1,046,211,045 | 379,988,435 | 1,426,199,480 |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 12,048,241 | - | 12,048,241 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 16,177,870 | 8,102,438 | 24,280,308 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 68,887,459 | - | 68,887,459 |
| ப.நா. நிதியம் | 65,334,235 | 186,310,109 | 251,644,344 |
| ஏனையவை | 217,924,142 | - | 217,924,142 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 181,726,732 | - | 181,726,732 |
| அரச, அரச நிறுவனங்களின் நிலுவைகள் | 428,142 | - | 428,142 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 105,465,000 | - | 105,465,000 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 7,212 | - | 7,212 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 491,699,948 | - | 491,699,948 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 6,850,998 | - | 6,850,998 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 34 | 72 | 106 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | - | 10,942,541 | 10,942,541 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 175,377 | 23,948 | 199,325 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,166,725,390 | 205,379,108 | 1,372,104,498 |
| **தேறிய** | (120,514,345) | 174,609,327 | 54,094,982 |

**45. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும்**

அனைத்து ஊழியர்களும் உள்ளடங்கக் கூடியவாறான குறித்துரைக்கப்பட்ட ஆறு நலவுரிமைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றன. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட பணிக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். புதிய ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு பின்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட பணிக்காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். ஊழியர் ஓய்வூதியத் திட்டங்களானது பங்களிப்பில்லாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதுடன் இதன் நன்மைக் கிரயச் செலவுகளை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. இத் திட்டத்திற்குத் தகுதி பெற்ற 1994 ஓகத்து 01இற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வதுடன் 1994 ஓகத்து 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தினை பங்களிப்புச் செய்வர்.

வங்கியில் ஐந்து ஆண்டு கால பணியைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெறாத ஊழியர்களுக்காக பணிக் கொடை நன்மைகள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப்பொறுப்புபைப் பூர்த்தி செய்வதற்காக காப்புறுதி மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட, அதற்குச் சமமானதொரு தொகை நிதி நிலைமைகள் பற்றிய கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

தொழில்நிலைக்குப் பிந்திய மருத்துவ நலத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற ஊழியர்களால் அவர்கள் பெயரில் அல்லது அவர்களது துணைவர் பெயரில் மற்றும் ஊழியர்களது விதவைகள்/விதுரர்களாலும் ஏற்கப்படுகின்ற ஒரு சில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டங்கள், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், பணிக் கொடைகள் திட்டம் மற்றும் மருத்துவ நலத் திட்டம் என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட நன்மைகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைப் பணிச் செலவுகள் தொடர்பான காப்புறுதி மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான காப்புறுதி மதிப்பீட்டாளரான கே.ஏ.பன்டிற், ஆலோசகர் மற்றும் காப்புறுதி மதிப்பீட்டாளர் (மும்பாய்) ஆண்டுக் காலத்தில் பணியின் பொருட்டு வங்கியினால் அமர்த்தப்பட்டார்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம்

என்பனவற்றின் நிதியங்கள் தனித்தனியாக முகாமைப்படுத்தப்படுவதுடன் தனித்தனியாக ஏடுகளும் பேணப்படுகின்றன. எனினும், பணிக்கொடைத் திட்டமும் மருத்துவ நன்மைகள் திட்டமும் வங்கியின் கணக்கேடுகளிலிருந்து வேறாக்கப்படவில்லை. மேலும் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் வங்கி ஏடுகளில் இந்நிதியத்திற்காக தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றதுடன், முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் பங்கிடப்படாமல் மீளமுதலிடப்படுகின்றன.

அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் மொத்தச் சந்தைப் பெறுமதி ரூ.36,145.06 மில்லியனாக (2015 - ரூ.36,912.71 மில்லியன்) அமைந்து ரூ.36,065.09 மில்லியன் (2015 - ரூ.45,682.71 மில்லியன்) கொண்ட தற்போதைய அனைத்து நன்மைகள் கடப்பாடுகளினதும் மொத்தத்திலும் பார்க்க கூடுதலாகக் காணப்பட்டதன் மூலம் ரூ.79.97 மில்லியன் (2015 - பற்றாக்குறை ரூ.8,770.00 மில்லியன்) மிகை தோன்றியது.

| 2016<br>நன்மைப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய<br>ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | பணிக் கொடைத் திட்டம்<br>ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம்<br>ரூ.000 | மொத்தம் 2016<br>ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மைக் கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதி | 27,484,329 | 609,976 | 4,957,084 | 825,792 | 131,774 | 2,056,133 | 36,065,088 |
| திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | (25,408,311) | (2,444,748) | (5,144,789) | (1,828,245) | (152,419) | (1,166,543) | (36,145,055) |
| **நன்மைப் பொறுப்பு/ (சொத்து) நடைமுறையல்லாதவை** | **2,076,018** | **(1,834,772)** | **(187,705)** | **(1,002,453)** | **(20,645)** | **889,590** | **(79,967)** |

ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்கள் பின்வரும் காரணங்களின் காரணமாக மதிப்பீட்டாளரின்படி தேறிய பொறுப்புக்களிலிருந்து வேறுபடுகின்றது.

அ) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் எஞ்சிய மீதியை வங்கிக்குப் பகிர்ந்தளிப்பதற்கான சாத்தியம் குறைவாக இருப்பதன் காரணமாக இந்நிதியத்தின் தேறிய சொத்து நிலைமை கணக்குகளில் பிரதிபலிக்கப்படவில்லை.

ஆ) வங்கியானது வெவ்வேறான நிதியத்தில் (உள்ளக ரீதியாக நிர்வகிக்கப்பட்ட) தொடர்பான சொத்துக்களை வைத்திருக்காததன் காரணமாக பணிக்கொடை மற்றும் மருத்துவ நன்மைத் திட்டம் இரண்டிற்குமாக ஏட்டுப் பெறுமதி மொத்தப் பெறுமதியினைக் காட்டுமேயன்றி, மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட தேறிய பொறுப்புக்களைக்காட்டாது.

ஓய்வூதியம், விதவைகள் அநாதைகள் நிதியம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் நிதியம், பணிக்கொடை மற்றும் மருத்துவ நலன்கள் திட்டம் போன்ற நிதியங்களின் கீழ் ரூ.445.53 மில்லியன் பெறுமதி கொண்ட பிணைகளற்ற முதலீடு காணப்படுவதுடன், அவற்றுக்கு 100% ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் விளைவாக திட்டச் சொத்துக்களில் உள்ளடக்கப்படவில்லை. அத்தகைய முதலீடுகளின் பெறுமதியை உள்ளடக்காத போதும், வங்கியானது காப்புறுதி மதிப்பீட்டின்படி அதன் ஓய்வூதியப் பொறுப்புக்களின் கீழ் தேறிய சொத்து நிலையைக் கொண்டுள்ளது.

| நன்மைப் பொறுப்பு/ (சொத்து)களிலான அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய<br>ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | பணிக் கொடைத் திட்டம்<br>ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம்<br>ரூ.000 | மொத்தம் 2016<br>ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| 2016 சனவரி 01இல் உள்ளவாறு | 9,055,520 | (1,245,041) | 819,399 | (612,924) | (33,574) | 786,620 | 8,770,000 |
| நன்மைகளுக்கான செலவு | 1,232,222 | (72,429) | 81,940 | (61,292) | 24,042 | 112,275 | 1,316,758 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | (7,765,143) | (345,098) | (1,055,189) | (316,344) | (11,113) | 7,038 | (9,485,849) |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (446,581) | (172,204) | (33,855) | (11,893) | - | (16,343) | (680,876) |
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான நடைமுறையல்லாதவை** | **2,076,018** | **(1,834,772)** | **(187,705)** | **(1,002,453)** | **(20,645)** | **889,590** | **(79,967)** |
| **நன்மைகளுக்கான செலவுகள்** | | | | | | | |
| நன்மைக் கடப்பாடுகளின் மீது வட்டிச் செலவினம் | 905,552 | (124,504) | 81,940 | (61,292) | (3,358) | 78,662 | 877,000 |
| கடந்த பணிகளுக்கான செலவு | 326,670 | 52,075 | - | - | 27,400 | 33,613 | 439,758 |
| **நன்மைகளுக்கான செலவுகள்** | **1,232,222** | **(72,429)** | **81,940** | **(61,292)** | **24,042** | **112,275** | **1,316,758** |
| **திட்டமிடப்பட்ட சொத்துக்கள் மீதான உண்மையான வருமானம்** | **877,139** | **12,576** | **268,269** | **89,924** | **(6,438)** | **(37,029)** | **1,204,441** |
| **சராசரி நிலுவையின் சதவீதமாக திட்டமிடப்பட்ட சொத்தின் உண்மையான வருவாய்** | **3.40%** | **0.53%** | **5.17%** | **5.03%** | **-3.89%** | **-2.91%** | **3.30%** |
| **செலுத்தப்பட்ட நன்மைகள் மீது ஈட்டிய மிகை வட்டி** | **(1,158,329)** | **12,576** | **(114,825)** | **69,041** | **(25,769)** | **(231,229)** | **(1,448,535)** |

45. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும் (தொடர்ச்சி)

| | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள்** | | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | **26,120,059** | **2,259,968** | **5,225,759** | **1,747,311** | **178,188** | **1,381,429** | **36,912,714** |
| திட்டச் சொத்துக்களின் உண்மை வருவாய் | **877,139** | **12,576** | **268,269** | **89,924** | **(6,438)** | **(37,029)** | **1,204,441** |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | **446,581** | **172,204** | **33,855** | **11,893** | **-** | **16,343** | **680,876** |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | **(2,035,468)** | **-** | **(383,094)** | **(20,883)** | **(19,331)** | **(194,200)** | **(2,652,976)** |
| **ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி** | **25,408,311** | **2,444,748** | **5,144,789** | **1,828,245** | **152,419** | **1,166,543** | **36,145,055** |

2015

| | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் 2015 |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **நன்மைப் பொறுப்புக்கள்/(சொத்து)** | | | | | | | |
| நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி | 35,175,579 | 1,014,927 | 6,045,158 | 1,134,387 | 144,614 | 2,168,049 | 45,682,714 |
| திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | (26,120,059) | (2,259,968) | (5,225,759) | (1,747,311) | (178,188) | (1,381,429) | (36,912,714) |
| **நன்மைப் பொறுப்புக்கள்/(சொத்துக்கள்) நடைமுறையல்லாதவை** | 9,055,520 | (1,245,041) | 819,399 | (612,924) | (33,574) | 786,620 | 8,770,000 |
| **நன்மைப் பெறுப்புக்களின்/(சொத்துகளின்) அசைவு** | | | | | | | |
| 2015 சனவரி 01இல் | 4,609,763 | - | (874,652) | (869,130) | 97,453 | 635,601 | 3,599,035 |
| நன்மைகளுக்கான செலவு | 852,981 | 1,014,927 | (87,465) | (86,913) | (200,806) | 115,379 | 1,608,103 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 4,922,631 | (103,601) | 1,815,056 | 356,027 | 105,625 | 161,340 | 7,257,078 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (1,329,855) | (2,156,367) | (33,540) | (12,908) | (35,846) | (125,700) | (3,694,216) |
| **2015 திசெம்பர் 31இல் நடைமுறையல்லாதவை** | 9,055,520 | (1,245,041) | 819,399 | (612,924) | (33,574) | 786,620 | 8,770,000 |
| **நன்மைகளுக்கான செலவுகள்** | | | | | | | |
| நன்மைக் கடப்பாடுகள் மீதான வட்டிச் செலவு | 460,977 | - | (87,465) | (86,913) | 9,746 | 63,561 | 359,906 |
| நடைமுறைப் பணிச் செலவு | 392,004 | - | - | - | 28,390 | 51,818 | 472,212 |
| கடந்த பணிகளுக்கான செலவு | - | 1,014,927 | - | - | - | - | 1,014,927 |
| கட்டுப்படுத்தல்கள் | - | - | - | - | (238,942) | - | (238,942) |
| **நன்மைச் செலவினம்** | 852,981 | 1,014,927 | (87,465) | (86,913) | (200,806) | 115,379 | 1,608,103 |
| **திட்டமிடப்பட்ட சொத்துக்கள் மீதான உண்மையான வருமானம்** | 2,116,753 | 103,601 | 431,654 | 156,161 | 18,660 | 125,149 | 2,951,978 |
| **சராசரி நிலுவையின் சதவீதமாக திட்டமிடப்பட்ட சொத்தின் உண்மையான வருவாய்** | 8.40% | 8.40% | 8.40% | 9.35% | 12.00% | 9.44% | 8.53% |
| **செலுத்தப்பட்ட நன்மைகள் மீது ஈட்டிய மிகை வட்டி** | 516,650 | 516,650 | 137,995 | 140,097 | 9,609 | (13,165) | 894,787 |
| **திட்டமிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்கள்** | | | | | | | |
| ஆண்டின் தொடக்கத்தில் திட்டமிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | 24,273,554 | - | 5,054,224 | 1,594,306 | 132,733 | 1,268,894 | 32,323,711 |
| திட்டமிட்ட சொத்துக்களின் மீதான உண்மை வருமானம் | 2,116,573 | 103,601 | 431,654 | 156,161 | 18,660 | 125,149 | 2,951,798 |
| பெறப்பட்ட பங்களிப்பு | 1,329,855 | 2,156,367 | 33,540 | 12,908 | 35,846 | 125,700 | 3,694,216 |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | (1,599,923) | - | (293,659) | (16,064) | (9,051) | (138,314) | (2,057,011) |
| **ஆண்டின் இறுதியில் திட்டமிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதி** | 26,120,059 | 2,259,968 | 5,225,759 | 1,747,311 | 178,188 | 1,381,429 | 36,912,714 |

அனைத்துத் திட்டங்களுக்குமான ஊழியர் நன்மைகளின் கடப்பாடுகளைத் தீர்மானிக்கின்ற போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான எடுகோள்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன:

| | 2016 | 2015 |
|---|---|---|
| கழிவு வீதம் | **13.00%** | 10.00% |
| சொத்துக்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் வீதம் | **13.00%** | 10.00% |
| எதிர்காலச் சம்பள அதிகரிப்பு | **8.50%** | 8.50% |
| சம்பள அதிகரிப்பு வீதம் - புதிய ஓய்வூதியத் திட்டம் | **6.50%** | 6.50% |
| எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு | **7.50%** | 7.50% |
| தேய்வு வீதம் | **2.00%** | 2.00% |
| மருத்துவச் செலவு அதிகரிப்பு வீதம் | **3.00%** | 3.00% |
| எஞ்சியுள்ள சராசரி பணி ஆண்டுகள் | | |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் - புதிய | **41 ஆண்டுகள்** | 41 ஆண்டுகள் |
| விதவை அனாதை ஓய்வூதியத் திட்டம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| விதுரர் அநாதை ஓய்வூதியத் திட்டம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| பணிக் கொடைத் திட்டம் | **20 ஆண்டுகள்** | 20 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி மருத்துவ நலத் திட்டம் | **32 ஆண்டுகள்** | 32 ஆண்டுகள் |
| ஓய்வுபெறும் வயது | **60 ஆண்டுகள்** | 60 ஆண்டுகள் |

| உணர்திறன் பகுப்பாய்வு 0.5% இல் (31.12.2016) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **நடைமுறை கருதுகோள்களின் மீது எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகள்** | **27,484,329** | **609,976** | **4,957,084** | **825,792** | **131,774** | **2,056,133** |
| கழிவிடல் வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,120,339) | (63,235) | (223,313) | (46,688) | (4,572) | (66,121) |
| கழிவிடல் வீதத்தில் “-” இன் மாற்றத்தின் தாக்கம் | 1,207,556 | 72,190 | 243,228 | 51,001 | 4,876 | 70,826 |
| தேய்வு வீதத்தில் “+” இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | 26,335 | 12,733 |
| தேய்வு வீதத்தில் “-” இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | (28,715) | (13,395) |
| சம்பள உயர்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 154,116 | 54,441 | 12,097 | 4,791 | 5,061 | - |
| சம்பள உயர்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (150,130) | (49,497) | (11,789) | (4,675) | (4,776) | - |
| மருத்துவச் செலவு அதிகரிப்பு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | 71,939 |
| மருத்துவச் செலவு அதிகரிப்பு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | (67,155) |
| ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 1,103,394 | - | 241,807 | 48,302 | - | - |
| ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,035,401) | - | (224,268) | (44,771) | - | - |

**46. சந்தைப் பெறுமதி வெளிப்படுத்தல்கள்**

**(அ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதி**

சந்தைப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சொத்தொன்றை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற விலை அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களுக்கேயான கொடுக்கல்வாங்களின் பொருட்டு பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். விற்பனை செய்பவருக்கு எதிராக விலை அசைவொன்று ஏற்படாத விதத்தில் குறிப்பிடத்தக்கதொரு கொடுக்கல்வாங்கலை உள்ளீர்த்துக் கொள்ள முடியுமானவாறு ஒழுங்கமையப் பெற்றதும் திரவத்தன்மையுடன் கூடியதுமான சந்தையில் நிதியியல் சாதனமொன்று விற்பனை செய்யப்படுகின்ற போது குறிப்பிடப்பட்ட நியாயப்பெறுமதி சந்தைப் பெறுமதியாகும்.

மதிப்பீட்டு நுட்பமாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமாக வங்கி பின்வரும் படிமுறையினைப் பயன்படுத்துகிறது:

மட்டம் 1: ஒத்த தன்மையான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்காக செயற்பாட்டு சந்தைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) விலைகள்.

மட்டம் 2: பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை செலுத்துகின்ற அனைத்து உள்ளீடுகளுக்குமான வேறு நுட்பத்தின்படி ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கப்படுகின்றன.

மட்டம் 3: பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைச் செலுத்துகின்ற உள்ளீடுகளைப் பயன்படுத்தும் நுட்பமாக அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

பின்வரும் அட்டவணை சந்தைப் பெறுமதிப் படிமுறையில் பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வொன்றினைத் தருகின்றது:

| | மட்டம் 1 ரூ.000 | மட்டம் 2 ரூ.000 | மட்டம் 3 ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|
| **2016 திசெம்பர் 31** | | | | |
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 43,278,755 | - | - | 43,278,755 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | 348,544,650 | - | - | 348,544,650 |
| பெறுதிகள் | - | 198,880 | - | 198,880 |
| | 391,823,405 | 198,880 | - | 392,022,285 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 111,009,339 | - | - | 111,009,339 |
| | 111,009,339 | - | - | 111,009,339 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | - | 320,640,852 | - | 320,640,852 |
| | - | 320,640,852 | - | 320,640,852 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 8,976,339 | 8,976,339 |
| கட்டடம் | - | - | 7,695,682 | 7,695,682 |
| | - | - | 16,672,021 | 16,672,021 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | - | - | 5,911,812 | 5,911,812 |
| பெறுதிகள் | - | 8,661,863 | - | 8,661,863 |
| | - | 8,661,863 | 5,911,812 | 14,573,675 |

| | மட்டம் 1 ரூ.000 | மட்டம் 2 ரூ.000 | மட்டம் 3 ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|
| **2015 திசெம்பர் 31** | | | | |
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 35,779,665 | - | - | 35,779,665 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | 352,054,482 | - | - | 352,054,482 |
| பெறுதிகள் | - | 4,145 | - | 4,145 |
| | 387,834,147 | 4,145 | - | 387,838,292 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 97,723,836 | - | - | 97,723,836 |
| | 97,723,836 | - | - | 97,723,836 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | - | 102,799,824 | - | 102,799,824 |
| | - | 102,799,824 | - | 102,799,824 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 5,879,064 | 5,879,064 |
| கட்டடம் | - | - | 7,930,666 | 7,930,666 |
| | - | - | 13,809,730 | 13,809,730 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | - | - | 10,290,162 | 10,290,162 |
| பெறுதிகள் | - | 13,990,146 | - | 13,990,146 |
| | - | 13,990,146 | 10,290,162 | 24,280,308 |

**காணி மற்றும் கட்டடம்**

**மதிப்பிடப்படும் முறை**

சந்தை அணுகுமுறையான நேரடி ஒப்பீட்டு முறையைப் பயன்படுத்தி நிலம் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இம்முறையில் சந்தைப் பெறுமதியியைப் பெறுவதற்கு சொத்துக்கள் புள்ளி வேறுபாடுகளுக்காக சீராக்கப்பட்ட, கூட்டிய அல்லது பெயரளவில் கூட்டி மேம்படுத்தப்பட்ட பெறுமதி அண்மைய விற்பனையுடன் ஒப்பிடப்படுகின்றன.

சென்றல் பொயின்ற், வைற் எவேய்ஸ் மற்றும் லொயிட்ஸ் கட்டடங்கள் தவிர்ந்த அனைத்துக் கட்டடங்களையும் பெறுமானத் தேய்விடப்பட்ட நடைமுறை பதிலீட்டுக் கிரயமுறையை பயன்படுத்தி மதிப்பிட்டதுடன், சமூகத்திற்குச் சேவை வழங்குகின்ற பொதுத்துறை நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் திறந்த திரவத்தன்மை சந்தையில் விற்பனை செய்யப்படுவதில்லை என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது.

ஏனைய கட்டடங்களை மதிப்பிடுவதற்கு வருமான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டதுடன் இம்முறையானது ஆதனங்களை எதிர்கால மதிப்பிடப்பட்ட வருமானம், இலாபம் அல்லது காசுப் பாய்ச்சலை தனியொரு நடைமுறைத் தொகைக்கு மாற்றுவதன் (கழிவிடப்படுவதன்) மூலம் மதிப்பிடுகின்றது.

**பெறுதிகள்**

பெறுமதி மதிப்பீட்டு மாதிரிகள் முன்னோக்கிய விலைகளை (சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முன்னோக்கிய புள்ளிகளுக்கு மேலதிக நிறைகளை அறிவிப்பதன் மூலம் கணக்கிடப்பட்டது) பயன்படுத்தியதுடன் பெறுமதித் திகதியிலுள்ளவாறு தொடர்பான நாணயங்களில் பூச்சிய நறுக்கு விளைவு வளைகோட்டினை அடிப்படையாகக் கொண்டு கழிவின் வீதம் கணிக்கப்பட்டது. சாதனமானது அளவின் உள்ளடக்கத்தினை மதிப்பிடுமிடத்து சீராக்கங்கள் முன்னோக்கிய விலைகளுக்கும்/ அல்லது அளவுவீதத்தின் தளத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டிவீதங்களுக்கும் செய்யப்படுகிறது.

**உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள்**

உள்ளடக்கப்பட்ட பெறுதிச் சாதனங்களின் சந்தைப் பெறுமதி பிளாக் ஷோல்ஸ் மாதிரியைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டது.

| | மட்டம் 3 | |
|---|---|---|
| | 2016<br>ரூ.000 | 2015<br>ரூ.000 |
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | 10,290,162 | 16,350,511 |
| பெறுதிப் பொறுப்புக்கள் | (4,378,349) | (6,060,349) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | 5,911,813 | 10,290,162 |
| வருவாய்களில் உள்ளடக்கப்பட்ட மொத்தத் தேறல் செய்யப்படாத இலாபங்கள் | 4,378,349 | 6,159,141 |

| பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்களவிற்கு அவதானிக்கப்படாத உள்ளீடு | |
|---|---|
| கழிவிடல் வீதம் | 10% |
| தளம்பல் | 5% |

| உணர்திறன் பகுப்பாய்வு | கழிவிடல் வீதம் | | தளம்பல்கள் | |
|---|---|---|---|---|
| | 9% | 11% | 4% | 6% |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | 6,016,743 | 5,811,071 | 5,910,742 | 5,940,987 |

| உள்ளடக்கப்பட்ட தேர்வுகளிலுள்ள பிற்போடப்பட்ட சொத்து | 2016<br>ரூ.000 | 2015<br>ரூ.000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | 13,292,126 | 25,832,842 |
| ஆண்டு காலப்பகுதியில் பதிவழிக்கப்பட்ட கட்டுப்பணம் | (8,666,461) | (12,540,716) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | 4,625,665 | 13,292,126 |

**(ஆ) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்**

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2016 திசெம்பர் 31இல் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி ரூ.21,383.72 மில்லியனாக இருந்ததுடன் (2015 - ரூ.23,662.52 மில்லியன்) துணைநில் வைப்பு வசதி ரூ.48,670.71 மில்லியனாக (2015 - ரூ. 81,828.49) காணப்பட்டது. மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி 2016 திசெம்பர் 31இல் ரூ.30,821.39 மில்லியனாக இருந்தது (2015 - ரூ.135.03 மில்லியன்).

**(இ) சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் சந்தைப் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

**(ஈ) வைப்புக்கள்**

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் ஏட்டுப் பெறுமதியானது சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

**(உ) சந்தைப் பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதி படிநிலைகளை நிர்ணயித்தல்**

கொண்டு செல்லும் பெறுமதியானது சந்தைப் பெறுமதிக்கு அண்மைய பெறுமதியைக் கொண்டிராத வங்கியின் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதிகளும், சந்தைப் பெறுமதிகளும் வகையின்படியான ஒரு ஒப்பீட்டுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | எடுத்துச் செல்லப்படும் தொகை | | சந்தைப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2016<br>ரூ.000 | 2015<br>ரூ.000 | 2016<br>ரூ.000 | 2015<br>ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| வெளிநாட்டு நாணய வர்த்தகம்/ விற்பனைக்கான பிணையங்கள் | **391,823,405** | 387,834,147 | **391,823,405** | 387,834,147 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **198,880** | 4,145 | **198,880** | 4,145 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **351,426,470** | 102,866,967 | **320,640,852** | 102,799,824 |
| வங்கிகளுக்கான கடன்கள் | **484,043** | 886,357 | **460,376** | 839,898 |
| ஏனைய சொத்துக்கள் | **12,322,596** | 11,164,452 | **9,573,218** | 7,973,781 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஒதுக்கப்பட்ட தங்கம் | **111,009,339** | 97,723,836 | **111,009,339** | 97,723,836 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **14,573,675** | 24,280,308 | **14,573,675** | 24,280,308 |

**47. ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்**

**அ) முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு:**

| | 2015 ரூ.000 |
|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | |
| இலங்கை அரச பிணையங்கள் | 102,866,967 |
| ஏனைய சொத்துக்கள் | 11,164,452 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | |
| மீள்கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 105,465,000 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 6,850,998 |

**தற்போதைய சமர்ப்பிப்பு:**

| | 2016 ரூ.000 | 2015 ரூ.000 |
|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **351,426,470** | 102,866,995 |
| ஏனைய சொத்துக்கள் | **12,322,596** | 11,164,424 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | |
| மீள்கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **70,054,436** | 105,491,006 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | **8,563,548** | 6,824,992 |

ஏனைய சொத்துக்களின் கீழ் 2015இல் வகைப்படுத்தப்பட்டிருந்த நேர்மாற்று மீள்கொள்வனவு முதலீடுகளின் பெறத்தக்க வட்டித் தொகையான ரூ. 0.03 மில்லியன், சிறந்த சமர்ப்பித்தலுக்காக தற்பொழுது இலங்கை அரச பிணைங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதேபோல், ஏனைய செலுத்தத்தக்கவைகளில் வகைப்படுத்தப்பட்டிருந்த மீள்கொள்வனவு உடன்படிக்கை மற்றும் துணைநில் வைப்பு வசதிகளின் மீதான செலுத்தத்தக்க வட்டித் தொகையான ரூ.26.01 மில்லியன் தற்பொழுது மீள்கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 48. தொடர்புடைய தரப்பினர்கள்

### 48.1 அரச மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

மத்திய வங்கியின் வழமையான வியாபாரத்தின் போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்பினரால் இலங்கை அரசாங்கம் (அரசு வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 24 - திருத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களுக்கமைய வங்கியினால் அரசுடனும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்ததும் தனித்தனியாக முக்கியத்துவமில்லாத ஏனைய ஒன்றுசேர்ந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏற்பாடுகளின் விபரங்கள் பின்வருமாறு:

| கொடுக்கல்வாங்கலின் இயல்பு | 2016 ரூ.000 | 2015 ரூ.000 |
|---|---|---|
| **கொடுக்கல்வாங்கல்கள்:** | | |
| அரச பிணையங்களின் உடனடி கொள்வனவு | **8,065,953** | - |
| அரச பிணையங்களின் உடனடி விற்பனை | **37,375,643** | 66,059,197 |
| மீள்கொள்வனவு/விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள் | **6,215,152,910** | 8,558,487,853 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவினம் (இ) | **3,162,625** | 1,954,763 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள்(ஈ) | **1,229,032** | 762,417 |
| இவ்வாண்டில் அரசிற்கு செலுத்தப்பட்ட மிகை (குறிப்பு 30) | **5,000,000** | - |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் (ஊ) | | |
| விற்பனை | **55,884,998** | 234,753,399 |
| கொள்வனவு | **68,112,483** | - |
| ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகள் | **737,197,729** | 836,162,191 |
| இவ்வாண்டுப்பகுதியில் கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் பெறப்பட்ட நிதியம் | **275,236** | 114,971 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் (எ) | **28,038** | 155,428 |
| **நிலுவைகள்:** | | |
| மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் (ஏ) | **320,605,082** | 102,731,967 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் (குறிப்பு 9) | **83,306,771** | 151,131,671 |
| சுசகன கட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம், சௌபாக்கிய கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தல் (கட்டம் II) மற்றும் வடக்கு மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் | **112,652** | 352,864 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | **5,208,837** | 4,292,385 |
| அ.நே.மொ.தீ. நிலுவைகள் - வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுடன் | **183,836,224** | 115,013,766 |
| இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள் | **168,790** | 195,999 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிடமிருந்து பெறத்தக்கவை | **1,401,497** | 1,378,695 |
| திறைசேரிக்கு கொடுபடத்தக்கவை (குறிப்பு 20) | **291,768** | 8,203,776 |
| தேசிய கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு கொடுபடத்தக்கவை (குறிப்பு 20) | **32,222,139** | 49,479,048 |
| அரச மற்றும் அரச முயற்சிகளுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள் திசெம்பர் 31இல் உள்ளவாறு | **198,936** | 176,637 |
| ஏனைய நிலுவைகள் (ஓ) | **1,121,491** | 1,124,350 |

**அ)** நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 4 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இந்தத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தன.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களமானது வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது அரசினால் நிதியிடப்பட்ட வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

**ஆ)** நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின் பிரகாரம் நாணயச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பணிகளையும் மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் கடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதித் தேவைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் அதனுடைய பணம் செலுத்துதல் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கக் கடனை இது முகாமைத்துவம் செய்கிறது.

**இ)** நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தையும் ஏக உரிமையையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஒரே அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டி லா றூ லங்கா கரண்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

**ஈ)** வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பண்டங்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

**உ)** மத்திய வங்கியானது, குறிப்பு 50 இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

**ஊ)** நாணய விதிச்சட்டத்தின் படி, வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறத்திலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

எ) இத்தொகையானது சனாதிபதி செயலகத்தால் நடாத்தப்பட்ட தொடர்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வங்கியால் செலுத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் விசாரணைகளுக்குச் செலுத்தப்பட்ட தொழில்சார் நிபுணத்துவக் கட்டணம் என்பவற்றை பிர திநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இச்செலவுகள் நிர்வாக செலவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**ஏ)** உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது வங்கியின் நிதிக் கொள்கையை அமுல்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 90 - 92ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நிதி ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் அமுல்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வணிக நிறுவனங்களினதும் வேறும் சில நிதி நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2016 திசெம்பர் 31ஆம் திகதியன்று இந்தத் தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 21 மற்றும் 22இல் தரப்பட்டுள்ளன. முதலீட்டுப் பட்டியலிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 31 இல் தரப்பட்டுள்ளது.

**ஐ)** வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

**ஒ)** வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான 10 சதவீதமான குறைந்தபட்ச முற்பண வரையறையினைப் பேணாத வங்கிகள், வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பற்றாக்குறையாகவுள்ள தொகையினை செலுத்துதல் வேண்டும். 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூ.64.48 மில்லியன் மீதியாகக் காணப்பட்டதுடன், மக்கள் வங்கி - ரூ.25.57 மில்லியன் (2015 - ரூ. 99.42 மில்லியன்), இலங்கை வங்கி - ரூ.7.71 மில்லியன் (2015 - ரூ 21.21 மில்லியன்), பிரதேச சங்வர்த்தன வங்கி - ரூ.23.42 மில்லியன் (2015 - ரூ.64.63 மில்லியன்) மற்றும் லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி ரூ.7.78 மில்லியன் (2015 - ரூ.15.19 மில்லியன்) தொகையைப் பெற்றதுடன், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ரூ.97.36 மில்லியன் வட்டியைப் பெற்றது.

**ஓ)** ஏனைய கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும் தனிப்பட்டவர்கள், அரசாங்கம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களையும் மீதிகளையும் உள்ளடக்குகிறது.

**48.2 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்**

ஆளுநர், துணை ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர் (அவ்வாறான அங்கத்தவர்கள் ஏதேனுமொரு வங்கித்தொழில் நிறுவனத்தில் பணிப்பாளராக, அலுவலராக, ஊழியராக அல்லது பங்குரிமையாளராயிருத்தலை நாணய விதிச் சட்டம் தடைசெய்கிறது) உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

48.3 பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு

| | 2016 ரூ.000 | 2015 ரூ.000 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நலன்கள் | **123,948** | 107,904 |

மேற்படி பணிக் கொடைகளுக்கு மேலதிகமாக பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய வங்கியினால் காசல்லாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

48.4 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்

| | 2016 ரூ.000 | 2015 ரூ.000 |
|---|---|---|
| பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான கடன்கள் | **57,793** | 46,600 |

அனைத்துக் கடன்களும் கடன் வகை மற்றும் மாதாந்த மீளச் செலுத்துகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 7 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பாதுகாப்பினைக் கொண்டுள்ளன.

48.5 தொழில் நிலைக்குப் பிந்திய நலவுரிமைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

| | 2016 ரூ.000 | 2015 ரூ.000 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **69,511** | 68,382 |

குறிப்பு 45 இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத் திட்டத்திற்கும் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளையும் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.559.67 மில்லியன் (2015இல் ரூ.559.38 மில்லியன்) பங்களிப்புச் செய்துள்ளது. வழமையான வியாபார காலப்பகுதியில் வங்கியானது அதன் தொழில்நிலைக்குப் பின்னய திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது. அத்தகைய திட்டங்களுடனான மீதிகளின் தொகை குறிப்பு 24 இல் தரப்பட்டுள்ளது.

## 49. எதிர்பாராப் பொறுப்புக்களும் மூலதனக் கடப்பாடுகளும்

### 49.1 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய தீர்க்கப்படாத பிணைகள் எதுவும் இருக்கவில்லை.

### 49.2 கொடுகடன் உத்தரவாதங்கள்

பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற வெளிவாரியான கடன் தொகைகளின் மூலம் சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகளுக்கு நிதியிடல், இத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கான உத்தரவாதப் பத்திரங்களை வெளியிடல், உத்தரவாதப் பத்திர தவணைப் பணங்களைச் சேகரித்தல், கடன் உத்தரவாதப் பத்திர நிதியத்தின் நிர்வாகம் மற்றும் செலுத்தத் தவறுதல்கள் நடைபெறாதென்பதை உறுதி செய்தல், கடன் நிதியம் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுகின்றதென்பதை உறுதி செய்வதற்காக கடன் வழங்கியதன் பின்னர் கடன் விசாரணைகளை நடத்துதல் ஆகிய மூலம் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மீள்நிதியிடல் கடன் வசதித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது. ஆண்டினுள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொடர்ந்து மீள்நிதியிடல் கடன் வசதிகள் வழங்கப்பட்டனவென்பதோடு, இத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குகின்ற பங்கேற்புக் கடன் நிறுவனங்களில் உருவாகின்ற நட்டங்கள் தொடர்பாக வங்கியானது கடன் உத்தரவாதப் பத்திரங்களை ஏற்பாடு செய்தது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுதல்களுக்கான ஒரு உத்தரவாதப்பத்திரமல்லவென்பதோடு நட்டங்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்புக் கடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற நட்டங்களுக்காக மாத்திரம் உரிமைகள் கோரப்படுதல் வேண்டும். இவ் ஏற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

**உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கடன் உத்தரவாதங்கள் தொடர்பானது:**

| | உத்தர வாத மளிக்கப் பட்ட நாணயம் | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை 2016 ரூ.000 | 2015 ரூ.000 |
|---|---|---|---|
| **தொடர்புடைய தரப்பினர்கள்** | ரூபா | | |
| - வங்கி நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **54,799** | 2,310,793 |
| - அரசாங்கம் நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **1,878,523** | 3,978,055 |
| **ஏனையோர்** | ரூபா | | |
| - வங்கி நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **5,311** | 220,609 |
| - அரசாங்கம் நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **213,748** | 315,680 |
| **மொத்தக் கடன் உத்தரவாதங்கள்** | | **2,152,381** | 6,825,138 |

### 49.3 நம்பகமான செயற்பாடுகள்

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது நம்பகமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ் வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது இடம்பெறச் செய்கின்றது. ஆனாலும் அச் செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

### 49.4 சட்ட ரீதியான உரிமைக் கோரல்கள்

சட்ட உரிமையுடன் ரூ.35 மில்லியன் கோரல் சம்மந்தப்பட்ட ஈடுபாடுடையோரின் நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் வங்கியொரு எதிர்த்தரப்பாகவுள்ளது. வங்கியினால் இவ்வழக்கு எதிர்த்து வாதாடப்படுவதுடன் நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்குகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வங்கி 02 வழக்குகளின் வழக்காளியாக இருந்ததுடன் சட்ட ரீதியாக ரூ.16.57 மில்லியன் நட்ட ஈடாகக் கோரியதுடன், இதற்கான நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை

மேலும் 2016 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஒதுக்குகளும் மேள்கொள்ளப்படவில்லை.

### 49.5 கடப்பாடுகள்

(அ) 2016 திசெம்பர் 31ஆம் திகதியுள்ளவாறு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் கையேற்புத் தொடர்பில் வங்கி ரூ.148.30 மில்லியன் (2015 - 405.53 மில்லியன்) இனை மூலதனக் கடப்பாடாகக் கொண்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31ஆம் நாளன்று வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள் | 2016 ரூ.000 | 2015 ரூ.000 |
|---|---|---|
| முன்னோக்கிய செலாவணி விற்பனை | | |
| ஐ.அ.டொலர் | **2,501,145** | 2,416,415 |
| சுவீடிஸ் குரோனா | **58** | - |
| முன்னோக்கிய செலாவணி கொள்வனவுகள் | | |
| ஐ.அ.டொலர் | **15,998** | 249,810 |

### 49.6 பிணையிடப்பட்ட சொத்துக்கள்

பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு அவுத்திரேலிய டொலர் 35 மில்லியன் - ஏட்டுப் பெறுமதி, அவுத்திரேலியா டொலர் 36.02 மில்லியன் (2015 - அவுத்திரேலிய டொலர் 35 மில்லியன் ஏட்டுப் பெறுமதி அவுத்திரேலிய டொலர் 36.29) வங்கியினால் யூரோ கிளியர் வங்கியினால் பிணையிடப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 30 மில்லியன் (2015 - ஐ.அ.டொலர் 30 மில்லியன்) கொண்ட கொடுகடன் வசதி பெறப்பட்டது. பிணையிடப்பட்ட பிணையங்கள் யூரோ கிளியரில் தனியான கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

அப்பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றுக்களில் "விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்கள்" என காட்டப்பட்டுள்ளன. வங்கி இக்கொடுக்கல்வாங்கல்களை "யூரோ முறைமையில் பங்கேற்கின்றவர்களினால் மேற்கொள்ளப்படும் பிணையிடப்பட்ட கடப்பாடுகளை நிருவகிக்கின்ற பிணைய உடன்படிக்கை" இனையும் "யூரோ கிளியர் முறைமையிலுள்ள பங்கேற்பாளர்களுக்கான கொடுகடன் வழங்கலை நிருவகிக்கின்ற பொது நிபந்தனைகள்" யும் அடிப்படையாகக் கொண்ட நியதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 50. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நம்பகத் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

**அ)** வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதி உதவியின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கடன் முறைகளின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைக்கிணை நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

**ஆ)** வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் ஆகும். சட்ட நியதிகளின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல், அங்கத்தவர்களுக்கு நலக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

**இ)** மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கியியல் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

**ஈ)** 2010 செத்தெம்பர் 28ம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி வங்கி 2010 ஒத்தோபர் 01 ஆம் நாள் தொடக்கம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரில் வைப்பாளர்களின் நிதியினைப் பாதுகாக்கும் தேசிய நல நடவடிக்கையொன்றாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்தியது.

அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும். இதன்படி 77 நிறுவனங்கள் இத்திட்டத்தின் உறுப்பினர்களாகவுள்ளனர். காப்புறுதி செய்யப்படவுள்ள வைப்புக்கள் மேலே சொல்லப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 5.2 இன்படி விசேட விலக்கல்களுடன் காப்புறுதி செய்யப்பட்ட அனைத்துக் கடன்பாட்டுக் கருவிகளும் நீங்கலான அங்கத்துவ நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களை உள்ளடக்கும். வைப்புக் காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீடான ரூ.350.20 மில்லியன் மாற்றல் மற்றும் கைவிடப்பட்ட சொத்தாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.1,168.31 மில்லியன் மாற்றல்களின் மூலமும் உருவாக்கப்பட்டது. 2016 திசெம்பர் 31இல் நிதியத்தின் அளவு ரூ.34.30 பில்லியனாகவும் (தற்காலிகமானவை) தற்பொழுது, வைப்பாளரொருவருக்கு, நிறுவனமொன்றுக்கு கொடுபடத்தக்க இழப்பீட்டுத்தொகை ரூ.0.3 மில்லியனுக்கு அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச்சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு நாணயச் சபையோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும். நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிக ஏதாவது பொறுப்பு காணப்படுமானால் நாணயச் சபையோ இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்க மாட்டாது.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள வைப்புக் காப்புறுதிப் பிரிவு நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான பணிப்புரைகள்/ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் நியதிகளுக்கிணங்க வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் இப்பிரிவு, இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருப்பதுடன் வங்கியின் நிதியியல் கூற்றுக்களிலிருந்தும் தனித்தனியாக ஏடுகளையும், கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் இப்பிரிவின் கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும்.

2013 நவெம்பர் 22 ஆம் திகதியிலிருந்து இத்திட்டம் "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்" என மீளப்பெயரிடப்பட்டதுடன் வைப்பு காப்புறுதி நிதி "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதி" என மீளப்பெயரிடப்பட்டது.

**உ)** நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களைக் மேற்கொள்கின்றது. இத் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறும் நிதிக் கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதுடன் கடன் தீராற்றலற்ற முறிவு

நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களை கையகப்படுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஊ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான குறைந்தபட்ச முற்பணமான 10 சதவீதம் வரையறையினைப் பேணாத வங்கிகள், மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பாற்றாக்குறையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச சங்வர்த்தன வங்கி மற்றும் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி என்பனவற்றினூடாகத் திரட்டப்பட்ட அத்தகைய தொகையை விஸ்கம் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வேளாண்மைக்கு மீள்நிதியிடலாக வழங்கியது. 2016 திசெம்பர் 31இல் வெளிநின்ற மொத்த சேகரிப்பு ரூ.554.26 மில்லியனாக (2015 - 40.11 மில்லியன்) காணப்பட்டது. 2016 திசெம்பர் 31இல் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ரூ.64.48 மில்லியனைக் கடனாக வழங்கியதுடன், (2015 - ரூ.200.45 மில்லியன்) வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டியாக ரூ.97.36 மில்லியனைப் பெற்றுக் கொண்டது. மேலும், முதலீட்டிலிருந்து ரூ.193.86 மில்லியனை (2015 - 188.18 மில்லியன்) உழைத்துக் கொண்டது.

## 50. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள் (தொடர்ச்சி)

எ) பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், வங்கியின் நாணயச் சபையின் சார்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் வெளிநாட்டுக் கொடையாளர்களின் நிதியிடல் செயற்றிட்டங்கள் தொடர்பாக, இலங்கை அரசாங்கத்தின் முகவராகத் தொழிற்படுகிறது. இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட செற்றிட்டங்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்துகிறது.

முடிவடைந்த செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனைகள் | சிறப்பு நிபந்தனைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 24.50 | தேயிலை சிறு உடமையாளர் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலை மேம்படுத்துதல் | 2,550.90 | | | | |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | நீண்ட கால பயிர் துறையினை வர்த்தகப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான கையாளல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் | 1,453.11 | | | | |
| பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 40.00 | உற்பத்தித்திறனையும் இலாபத் தன்மையினையும் அதிகரிப்பதற்காக பெருந்தோட்டத் துணைத் துறையில் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உதவியளித்தல் மற்றும் இலங்கையின் பெருந்தோட்டத் தொழில் துறையில் போட்டி அநுகூலங்களைப் பேணுதல் | 5,200.00 | | | | |
| சுசகன நிதி மற்றும் குத்தகைக் கம்பனி | இல.ரூ | 352.69 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 351.06 | | | | |
| சிறிய வியாபாரங்களை மீள எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | இல.ரூ | 2,656.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 2,663.40 | திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிட மிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | |
| சிறிய வியாபாரங்களை மீள் எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 150.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 122.72 | | | | |
| தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம் | இல.ரூ | 94.31 | உயர்தர தொழிற்படையை உருவாக்குவதற்காகவும் தேர்ச்சி பொருத்தப்பாடின்மையை நீக்குவதற்காகவும் தேர்ச்சிப் பயிற்சியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்தல் | 94.59 | | | | |
| நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 4.00 | நகரத்திலும் நகர்ப் புறங்களிலும் வசிக்கும் மக்களின் சூழல் வசதிகள், நலம் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துதல் | 369.15 | | | | |
| வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான வீடமைப்பு புகலிடச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 25.00 | நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளைக் கட்ட, புதுப்பிக்க, வாழிடங்களை விரிவாக்க உதவுதல் | 1,362.00 | | | | |
| நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் | சிஎஉ | 15.10 | வீடமைப்பினை முன்னேற்றுவதற்காக குறைந்த வருமான குடியிருப்பாளர்களுக்கு மூலதனத்தினை வழங்குதல் | 1,915.76 | | | | |
| வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 1.80 | செயற்றிட்டப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொருளாதார, சமூக, ஊட்டச்சத்து நலனோம்புகைகளை மேம்படுத்துதல் | 102.76 | | | | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.00 | சிறிய தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தினை நிரந்தரமாக உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்தல் | 249.06 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மத்திய மலைநாட்டு நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | மத்திய மலைநாட்டுப் பகுதியில் நீண்ட காலப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க கடன் வசதி வழங்குதல் | 642.00 | | | | |
| வேளாண்மை புத்தாக்க செயற்றிட்டம் | சிஎஉ | 17.05 | வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் ஐந்து எல்லை மாவட்டங்களிலுமுள்ள சிவில் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கும் சொத்துக்களின் புனரமைப்பிற்கும் உதவுதல் | 843.00 | | | | |
| சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 12.60 | சிறு உடமையாளர் தேயிலை துறையினை அபிவிருத்தி செய்யதல் மற்றும் தேயிலைக்கான வசதிகளை புனரமைத்தல் | 645.93 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | யென் | 1,368.00 | வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக வழமையான கொடுகடன் வழிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறை யொன்றினை ஏற்படுத்துதல் | 1,402.45 | | | | |
| சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 17.40 | குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே தொழில் உருவாக்கத்தினையும் சேமிப்புப் பழக்கத்தினையும் மேம்படுத்தலும் செலவுச் சிக்கனமானதும் உறுதியானதுமான நுண்பாக கொடுகடன் விநியோக முறைமையை நிறுவுதலும் | 345.69 | | | | |
| கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 1.50 | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழக்கை நிலைமைகளைத் தரமுயர்த்துதல் | 148.00 | | | | |
| தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 27.90 | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் | 564.00 | | | | |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் பீ | யூரோ | 10.00 | சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளக் கட்டியெழுப்புதல் | 1,553.27 | | | | |
| சுசகன | இல.ரு | 3,000.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,750.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | |
| சுசகன கட்டம் II | இல.ரு | 500.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 105.54 | | | | |
| வடக்கின் எழுச்சி | இல.ரு | 2,000.00 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,000.00 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | | | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் | இல.ரு | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவு துறைகளின் நடவடிக்கைகளுக்கு கடன்களை வழங்குதல் | 1,000.00 | | | | |
| வடக்கின் எழுச்சி - கட்டம் II | இல.ரு | 2,154.25 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில் முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,361.00 | | | | |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 1,200.00 | நாட்டின் நீண்ட காலப் பயிர்த் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 1,199,82 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 77.00 | மாத்தளை மாவட்டத்தில் கிராமிய மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துவதற்கும் பண்ணையல்லாத தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்காக நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியங்களை வழங்குவதற்கும் அத்துடன் ஏற்கனவேயிருக்கும் செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கும் | 77.00 | | | | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 100.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 100.00 | | | | |
| கட்டுமானத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | யூரோ | 9.00 | சுனாமிக்குப் பின்னைய மீள்கட்டுமானங்களில் கட்டுமானம் மற்றும் பொதுப் பணிகளில் வினைத்திறனுடன் பங்கேற்பதற்காக தனியார் உள்நாட்டு வியாபாரங்களின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப இயலுமைகளை உறுதிப்படுத்துதல் | 1,399.73 | | | | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் II | இல.ரு | 70.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 70.00 | | | | |
| சுனாமிக்குப் பின்னைய கரையோர மூலவள முகாமைத்துவச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.09 | சுனாமி அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அவர்களுடைய சொத்துக்களை மீளப்பெறுவதற்கும் அவர்களுடைய வழமையான பொருளாதார நடவடிக்கைகளுக்கான அடித்தளத்தை மீளக்கட்டியெழுப்பும் அதேநேரம் புதிய இலாபமுள்ள வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு பன்முகப்படுத்துவதற்கும் உதவி வழங்குதல் | 190.77 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) | யென் | 2,381.00 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 3,213.20 | | | | |
| சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டம் | இல.ரு | 250.00 | நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் சித்தியடைந்து பயிற்சிபெற்ற இளைஞர்களுக்கு சுயவேலை வாயப்புச் செயற்றிட்டங்களைத் தொடங்குவதற்கு நிதியியல் உதவிகளை வழங்குதல் | 232.39 | | | | |
| விஸ்கம் (வேளாண்மைத் துறை அபிவிருத்திக்கான சிறப்புக் கடன் திட்டம்) | இல.ரு | 1,325.60 | நாட்டில் வர்த்தக வேளாண் வியாபாரத்தின் முதலீடு, பன்முகப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்திற்கான கொடுகடனின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல் | 881.00 | பங்களிக்கும் வங்கிகளால் கட்டாய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் போது நிதியங்கள் திருப்பி அளிக்கப்படும் | | | |
| மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம் | இல.ரு | 2,900.00 | நாட்டில் சிறிய நடுத்தர தொழில்முயற்சியின் துறையில் நடுத்தர மற்றும் நீண்ட கால செயற்றிட்டங்களுக்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,900.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | |
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் | இல.ரு | 252.95 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்குதல் | 252.95 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் II | இல.ரூ | 1,078.27 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,000.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் III | இல.ரூ | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,428.47 | | | | |
| வடக்கு மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் | இல.ரூ | 600.00 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரின் போது சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 600.00 | | | | |
| தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஐ.அ.டொலர் | 32.90 | சந்தை/ பெறுமதிச் சங்கிலித் தொடர் அபிவிருத்தியில் நன்மை பெறுநர்களின் வருமானத்தினை அதிகரிப்பதன் மூலம் சிறு உடமை உற்பத்தியாளர்கள் மற்றும் நிலமற்றோரின் குறிப்பாக இளைஞர்களுக்கு உதவியளிப்பதற்கும் தமது வருமானத்தினை மேம்படுத்தும் விதத்தில் தொழில்பெறும் விதத்தில் நிதியினையும் பயிற்சியையும் வழங்குவதற்கும் | 113.13 | | | | |

## நடைபெற்று வரும் செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,100.00 | நாட்டின் தேயிலைத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 964.87 | | உத்தரவாதமோ காப்பீடோ இல்லை | நிதியில் கூற்றுக்கள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| சிறிய பெருந்தோட்டத் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம் | சிஎஉ | 2.60 | மொனராகலை, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 487.66 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) - சுழலும் நிதி II | இல.ரூ | 2,764.84 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 5,646.90 | | | | |
| தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - நுண்பாக நிதி | இல.ரூ | 743.00 | தெரிவுசெய்யப்பட்ட செயற்றிட்ட பிரதேசங்களின் வசதி குறைந்தோரின் வருமான மட்டம் மற்றும் சமூக நிலையை முன்னேற்றுதல் | 730.70 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடைகையில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | | | |
| தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி மூலதன வேளாண் கடன் திட்டம் | இல.ரூ | 469.00 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி, உற்பத்தித் திறன், தரம் மற்றும் பெறுமதியுயர்வை அதிகரித்தல் | - | | | | |
| தேசிய வேளாணமை வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி பருவகால வேளாண்மை கடன் திட்டம் | இல.ரூ | 154.10 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி, உற்பத்தித் திறன், தரம் மற்றும் பெறுமதியுயர்வை அதிகரித்தல் | - | | | | |
| தருண திரிய | இல.ரூ | 225.00 | முயற்சியாண்மையாளர்களை உருவாக்குவதற்கு சிறிய வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கும் மற்றும் ஏனைய வடிவங்களிலான சுய முயற்சி செயற்றிட்டங்களை ஆரம்பிக்கவும் கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் கிராம மட்டத்திலான வசதி குறைந்த இளையோரின் வாழ்வினை மேம்படுத்தல் | 19.60 | | | | |
| சிறிய வேளாண்மையாளர்கள், நிலமற்றோர் கொடுகடன் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 345.69 | சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் சிறு அளவு வேளாண்மையல்லா கிராமிய தொழில்முயற்சி நிறுவனங்களினாலும் வேளாண்மை உற்பத்தியை செறிவுபடுத்துவதற்கு ஊக்குவித்தல் | 1,542.69 | | | | |
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 252.90 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல் | 252.49 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,031.28 | குறைந்த வருமானக் குடும்பங்களின் பொருளாதார நிலைமைகளை உறுதிப்படுத்துதல் | 3,752.96 | | | | |
| சௌபாக்கிய | இல.ரூ | 18,890.89 | நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகள் மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வழங்குதல் | 18,890.89 | | | | |
| சுய தொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு - கட்டம் II | இல.ரூ | 75.00 | தேசிய தொழிற் பயிற்சி தகைமையின் சான்றிதழை அல்லது டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு நிதி உதவியை வழங்குதல் | 74.90 | | | | |

## 51. ஏனைய நிறுவனங்களிலுள்ள நலவுரித்துக்கள்

பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கடன் திட்டங்களான சுசகன, சுசகன கட்டம் II, மாகாண ரீதியான அபிவிருத்திக் கடன் திட்டம், சௌபாக்கியா கடன்திட்டம், வடக்கின் எழுச்சி கடன்திட்டம் (கட்டம் II), கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் (கட்டம் II) மற்றும் வடக்குக்கிழக்கிலுள்ள சேதமடைந்த வீடுகளை திருத்துதல் என்பனவற்றிற்கு வங்கியினால் நிதியிடப்பட்டதுடன் மீதி மூலதனமும் வரவேண்டிய வட்டியும் வங்கியின் சொத்துக்களாக பதியப்பட்டதுடன் வருமானம் வங்கியின் வருமானமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

வங்கியின் நிருவாகச் செலவுகளை ஈடுசெய்வதற்காக, இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் செயற்றிட்டங்களிலிருந்து குறிப்பிட்ட சதவீத வருமானத்தினை ஈட்டிக் கொண்டது.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற் படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களுக்காக வங்கியினால் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்களிலிருந்து தோன்றுகின்ற எதிர்பாராத பொறுப்புக்கள் குறிப்பு 49.2இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 52. நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களைச் சீர்செய்தல் அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதாயுள்ள திடமான நிகழ்வுகள் எதுவும் நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னர் நடைபெறவில்லை.

## 2. வங்கி மேற்பார்வை

வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வையினையும் பரீட்சிப்புக்களையும் மேற்கொள்வதற்கான குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகளுடன் கூடிய விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் கீழ் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நிறுவப்பட்டது. மேலும், வங்கித்தொழில் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை என்பன திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆளப்படுகின்றன. மேலும், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்ததன்மையை உறுதிப்படுத்துவதற்காக வங்கிகளின் வியாபாரத்தின் எந்தவொரு அம்சத்தினையும் கொண்டு நடத்தும் விதம் தொடர்பில் முன்மதியான பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றது. அனைத்து வங்கிகளும் நாணயச் சபையினால் விதிக்கப்படும் ஏனைய பல முன்மதியான ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகத் தேவைப்படுத்தப்படுகின்றன.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் உரிமம் பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வையினையும் காலாந்தரப் பரீட்சிப்புக்களையும் மேற்கொள்ளுவதும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தை நிருவகிப்பதுமாகும். மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வு மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்பும் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. 2016 இறுதியிலுள்ளவாறு நாணய விதிச் சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்டத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரவரம்பிற்குள் வருகின்ற வங்கிகள் 25 உரிமம் பெற்ற வங்கிகளையும் 7 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கியிருந்தன. இவ்வங்கிகளின் பட்டியலொன்று இணைப்பு II-1இல் தரப்பட்டுள்ளது.

2016இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளும் நடவடிக்கைகளும் கீழே சுருக்கித் தரப்பட்டுள்ளன.

### 2.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களை விடுத்தல்

விடுக்கப்பட்ட அனைத்து முன்மதியுடைய ஒழுங்குவிதிகளினதும் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன. முக்கிய முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

**(அ) சைபர் பாதுகாப்பு சம்பவங்களை அறிக்கையிடல்**

2016 சனவரி தொடக்கம் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் சைபர் பாதுகாப்புச் சம்பவங்களை ஒரு நாளுக்கிடையிலும் காலாண்டு அடிப்படையிலும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

**(ஆ) வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள், பணிக் கட்டணங்கள், கட்டணங்கள் மற்றும் தரகுகளைக் காட்சிப்படுத்தல்**

உரிமம் பெற்ற வங்கிகள் லங்கா செட்டில் முறைமை, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி என்பனவற்றின் ஊடான நிதிய மாற்றங்களுக்கு வாடிக்கையாளர்களிடம் இருந்து விதிக்கப்படுகின்ற கட்டணத்தினை உரிமம் பெற்ற வங்கிகளின் அனைத்துக் கிளைகளிலும் வெப்தளத்திலும் காட்சிப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. வைப்புக்களின் வட்டி வீதங்கள், கடன் வழங்கல் சாதனங்கள் மற்றும் செலாவணி வீதங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் மற்றும் தரகுகளுக்குப் புறம்பாக இத்தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டன.

**(இ) ஆண்டு உரிமக் கட்டணம்**

2017ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டணம் 2016 இறுதியிலுள்ளவாறான உரிமம் பெற்ற வங்கிகளின் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன.

**(ஈ) அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தல் மற்றும் அறிக்கையிடல்**

அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தையினை ஊக்குவிப்பதற்காக, இலங்கைக்கென வடிவமைக்கப்பட்ட புளும்போக் வர்த்தகப்படுத்தல் தளத்தினைப் பயன்படுத்துமாறு உரிமம் பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. பொதுப் படுகடன் திணைக்களத்துடன் இணைந்து சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

**(உ) பாசல் III இன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள்**

2017 யூலை 01ஆம் நாள் தொடக்கம், உரிமம் பெற்ற வங்கிகள், "பாசல் III - பெருமளவிற்கு தாக்குப்பிடிக்கக்கூடிய வங்கிகள் மற்றும் வங்கித்தொழில் முறைமைகளுக்கான ஒரு உலகளாவிய கட்டமைப்பு" என்பதன் அடிப்படையிலமைந்த வழிகாட்டல்களுக்கிணங்க இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. ரூ.500 பில்லியனுக்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்ட உரிமம் பெற்ற வங்கிகளுக்கான குறைந்தபட்ச விகிதம் 11.75 சதவீதத்திலிருந்து 2019 சனவரி 01இல் 14.00 சதவீதம் வரை அதிகரிக்கப்படும். ரூ.500 பில்லியனுக்கும் குறைவான சொத்துக்களைக் கொண்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான தேவைப்பாடு 11.25 சதவீதத்திலிருந்து 2019 சனவரி 01 அளவில் 12.50 சதவீதம் வரை அதிகரிக்கப்படும்.

### 2.2 நாணயச் சபையினால் வழங்கப்பட்ட ஒப்புதல்கள்

**(அ) கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள்**

இவ்வாண்டுப் பகுதியில் 67 புதிய கிளைகளையும் 51 மாணவர் சேமிப்புப் பிரிவுகளையும் 3 செல்லிட வங்கித்தொழில் பிரிவுகளையும் 97 கிளைகளை வேறு இடங்களில் அமைப்பதற்கும் 146 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை நிறுவுவதற்கும் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. இதன்படி, 2016 இறுதியில் 3,614 வங்கிக் கிளைகளும் 3,045 மாணவர் சேமிப்புப் பிரிவுகளும் 3,843 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் தொழிற்பாட்டிலிருந்தன. 2016இல் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கி மாலைதீவில் துணைக் கிளையொன்றினைத் திறக்கவும் இன்னொரு உரிமம் பெற்ற வங்கி வங்காளதேசத்தில் கிளையொன்றினைத் திறக்கவும் மியன்மாரில் நுண்பாக நிதிக்காக வங்கித்தொழில் துணை நிறுவனமொன்றினை ஆரம்பிக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டது.

**(ஆ) ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்**

மூலதனப் போதுமை நோக்கங்களுக்காக அடுக்கு II மூலதனத்தின் கீழ் தொகுதிக் கடன்களை உள்ளடக்குவதற்காக 7 வங்கிகளுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்ட வேளையில் வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்காக ஒழுங்குமுறைப்படுத்தல் வரையறையினை விஞ்சுவதற்கு 6

வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. மேலும், பங்குடமையில் பொருண்மிய ஈடுபாடுகளை விஞ்சுவதற்கு 3 வங்கிகளுக்கும் கடன்வழங்கல் தொடர்பான உயர்ந்தபட்சத் தொகையினை விஞ்சுவதற்கு 4 வங்கிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

2.3 தொடர்ச்சியாக மேற்பார்வையினை நடத்துதல்

(அ) தொடர்ச்சியான மேற்பார்வை என்பது தனிப்பட்ட வங்கிகளின் அலுவல்கள் மீது இடம்பெற்று வருகின்ற கண்காணிப்புப் பொறிமுறையாக இருப்பதுடன் இது முழு வங்கித்தொழில் தொழில்துறையினதும் தொழிற்பாட்டுக்கு வினைத்திறனையும் நீண்ட கால உறுதிப்பாட்டுத் தன்மையினையும் கண்டறிவதற்கானதொரு நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் முறைமையாகவும் பணியாற்றுவதுடன் தேவையானவிடத்து சரிசெய்யும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதனையும் இயலச் செய்கிறது.

(ஆ) குறித்துரைக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது பொறுப்புக் குமிழ்களையும் வங்கித்தொழில் துறையில் அல்லது குறிப்பிட்ட வங்கிகளில் காணப்படும் திரள்வுகளையும் கண்டறிவதற்காக முதல் 20 கம்பனி வாடிக்கையாளர்கள் தொடர்பிலான இடர்நேர்வுகளுக்குள்ளாகும்தன்மை, துணை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள், மற்றைய முதலீட்டு நிறுவனங்கள், முதல் 20 குழுமங்கள்/ வாடிக்கையாளர்களின் இடர்நேர்வுக்குள்ளாகும்தன்மை, கட்டுமானத் துறையின் இடர்நேர்வுக்குள்ளாகும்தன்மை மற்றும் போன்ற துறைகளுக்காக இவ்வாண்டுப் பகுதியில் தொடர்ச்சியான கண்காணிப்பும் அறிக்கைகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

(இ) வெப்பினைத் தளமாகக் கொண்ட பின்நெட் முறைமையினூடாக வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் மற்றும் செயலாற்றத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான மேற்பார்வை நடத்தப்பட்டது. பின்நெட் ஊடாக நிதியியல் மற்றும் முன்மதியுடைய தகவல்களை உள்ளடக்கிய விதத்தில் ஒவ்வொரு வங்கிக்காகவும் ஏறத்தாழ 30 நிதியியல் கூற்றுக்கள் மாதாந்த/காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டன. தனிப்பட்ட வங்கிக் கிளைகளின் பகிர்ந்தளிப்புக்களையும் செயலாற்றத்தினையும் அறிக்கையிடுவதற்காக திருத்தப்பட்ட பின்நெட் கூற்றொன்று இவ்வாண்டுப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறந்த அறிக்கையிடல் தயாரிப்பிற்கு வசதியளிப்பதற்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் ஆலோசனையுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் தரவுத் தளத்தினை திருத்தியமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், வங்கிகளின் நியதிப் பரீட்சிப்புக்களின் போது அடையாளம் காணப்பட்ட மேற்பார்வைக் கரிசனைகளைக் குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்குள் கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் காலாண்டு அடிப்படையில் கண்காணிக்கப்பட்டன.

(ஈ) 2014இலிருந்து 2016 வரையான வங்கித்தொழில் துறையின் செயலாற்றத்தின் சுருக்கம் கீழேயுள்ள அட்டவணையில் தரப்படுகிறது. விபரங்கள் அத்தியாயம் 8 - நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் முறைமை உறுதிப்பாட்டில் தரப்பட்டுள்ளன.

2.4 காலாந்தரப் பரீட்சிப்புக்களை நடத்துதல்

(அ) முன்னைய ஆண்டின் தொடர்ச்சியாக இடம்பெற்ற 12 பரீட்சிப்புக்கள் உட்பட 2016ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 44 பரீட்சிப்புக்களை நடத்தியதுடன் தொடர்பான வங்கிகளின் முகாமைத்துவத்துடன் இடம்பெற்ற வழமையான கலந்துரையாடல்களின் மூலமாக 2016இல் 38 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் நிறைவடைந்து நாணயச் சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் 06 பரீட்சிப்புக்கள் முற்றுப்பெறும் நிலையில் இருக்கின்றன. பரீட்சிப்புக்களின் போது எழுந்த முக்கிய கரிசனைகள் குறைந்த வினைத்திறன், கம்பனி ஆளுகை தொடர்பான பிரச்சனைகள், முறைமை மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள், செயற்படாக் கடன்கள் பற்றிய குறைவான மதிப்பீடுகள் மற்றும் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான குறைந்த ஏற்பாடுகள் மற்றும் சாத்தியமான கொடுகடன் இடர்நேர்வுகள் என்பனவற்றை உள்ளடக்கிக் காணப்பட்டன. மேலும், பல பரீட்சிப்புக்கள் ஆவணச் சரிபார்ப்புக்கள், அரச பிணையங்களிலான முதலீடுகள், கம்பனி ஆளுகை, வாடிக்கையாளர் முறைப்பாடுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் போன்ற துறைகளின் மீது மட்டுப்படுத்தப்பட்டளவில் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) பரீட்சிப்பு முறையியலானது நிதியியல் வினைத்திறன், வியாபார இடர்நேர்வு முகாமைத்துவக் குறிகாட்டிகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளின் போதுமாந்தன்மை என்பன தொடர்பில் கண்டறியப்பட்டவற்றின் அடிப்படையில் வங்கிகளின் உறுதிப்பாட்டு மதிப்பீடுகளின் மீது கவனத்தினைச் செலுத்துவதாக இருந்தது. மேற்பார்வைக் கரிசனைகள் தொடர்பாகப் பொருத்தமான வழிமுறைகளை எடுப்பதன் மூலம் அத்தகைய கரிசனைகள் தொடர்பான தீர்மானங்களை சபை எடுக்க வேண்டுமென்ற பொறுப்பாண்மையுடன் தொடர்பான சபையின் துணைக் குழுக்களுக்கு அறிவிக்கப்பட்டன. மேலும் பொருத்தமான மேற்பார்வை மற்றும் சீர்ப்படுத்தல் நடவடிக்கைகளை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு கண்டறியப்பட்ட குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் வங்கிகளின் பணிப்பாளர்கள் சபையுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

அட்டவணை II-1

வங்கித்தொழில் துறையின் முக்கிய அம்சங்கள்

| | 2014 | 2015(அ) | 2016 |
|---|---|---|---|
| துறை குறிகாட்டிகள் (ரூ. பில்) மொத்தச் சொத்துக்கள் | 6,972 | 8,077 | 9,047 |
| மொத்த மூலதனம் | 3,895 | 4,715 | 5,541 |
| மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 1,953 | 2,368 | 2, 291 |
| மொத்த வைப்புக்கள் | 4,686 | 5,403 | 6,296 |
| மொத்த முதலீடுகள் | 1,448 | 1,758 | 1,696 |
| மொத்தக் கடன்பாடுகள் | 568 | 637 | 707 |
| தேறிய இலாபம் (வரிக்குப் பின்னர்) | 88 | 97 | 116 |
| கிளைகளின் எண்ணிக்கை | 3,546 | 3,549 | 3,614 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் எண்ணிக்கை | 3,276 | 3,477 | 3,843 |
| முன்மதியுடைய விகிதம் (சதவீதத்தில்) | | | |
| மூலதனப் போதுமை விகிதம் | 16.6 | 15.4 | 14.3 |
| நியதி திரவச் சொத்து விகிதம் | 39.5 | 33.9 | 30.0 |
| செயற்படாக் கடன்களின் விகிதம் (மொத்தம்) | 4.2 | 3.2 | 2.6 |
| பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் | 16.6 | 16.2 | 17.3 |
| சொத்துக்கள் மீதான வருவாய் | 1.4 | 1.3 | 1.4 |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

### 2.5 இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினை நிருவகித்தல்

(அ) 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு, திட்டமானது 77 உறுப்பு நிறுவனங்களையும் ஏறத்தாழ ரூ.34 பில்லியன் பெறுமதியான மொத்த நிதியையும் (கணக்காய்வு செய்யப்படாதது) உள்ளடக்கியிருந்தது. 2016 திசெம்பர் 31இல் உற்றவாறு நிதியத்தினால் அரச பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மற்றும் 2014 ஆண்டு காலப்பகுதியில் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் கீழ் மீள்சீரமைப்பிற்காக ஒரு உறுப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் என்பவற்றின் ஏட்டுப்பெறுமதிகள் முறையே ரூ.26 பில்லியானவும் ரூ.6 பில்லியனாகவும் காணப்பட்டது.

(ஆ) உடனடியாக முற்போந்த நிதியாண்டின் இறுதியில் 14 சதவீதம் அல்லது அதற்கு மேலான மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணிய உரிமம் பெற்ற வங்கிகள் அனைத்துத் தகுதியான வைப்புக்களின் மொத்தத் தொகையின் மீதும் ஆண்டொன்றிற்கு 0.10 சதவீதமான கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்டதுடன் ஏனைய அனைத்து வங்கிகளுக்கும் ஆண்டொன்றிற்கு 0.125 சதவீதக் கட்டுப்பணம் விதிக்கப்பட்டது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான கட்டுப்பணம் ஆண்டொன்றிற்கு 0.15 சதவீதமாக இருந்தது. ஆண்டு காலப்பகுதியில் உறுப்பு நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டுப்பணம் மற்றும் தண்டப் பணத்தின் பெறுமதி ரூ.6.9 பில்லியனாக இருந்தது.

(இ) 2015 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் நிறுவனமொன்றுக்கு வைப்பாளர் ஒருவருக்கான வைப்புக் காப்புறுதிப் பாதுகாப்பின் அளவு ரூ.300,000 ஆகக் காணப்பட்டது.

அட்டவணை II-2

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் நிதியியல் தொடர்பான முக்கிய விடயங்கள்**

| விடயம் | தொகை (ரூ. மில்) | |
|---|---|---|
| | 31.12.2015 இல் உள்ளவாறு | 31.12.2016(அ) இல் உள்ளவாறு |
| நிதியத்தின் அளவு | 25,418 | 34,257 |
| மொத்த வருமானம் | 7,373 | 9,593 |
| மொத்தச் செலவு | 504 | 753 |
| ஆண்டுக்கான இலாபம் (வரிக்கு முன்னர்) | 6,869 | 8,840 |
| அரச பிணையங்களிலான முதலீடுகள் | 18,123 | 25,700 |
| கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | 6,227 | 6,179 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்க ஒதுக்குகள் | 259 | (665) |

(அ) தற்காலிகமானவை

### 2.6 வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வு மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல்

**(அ) இயலளவைக் கட்டியெழுப்புதல்**

கம்பனி ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம், வங்கித்தொழில் வியாபாரம் மற்றும் வங்கித்தொழில் மற்றும் நிதியுடன் தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்ற துறைகளில் அறிவாற்றலை உயர்த்துவதனூடாக தொழில் துறையின் இயலாற்றலைக் கட்டியெழுப்புவதற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்து பங்களித்து வருகின்றது. 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏனைய வெளிவாரி நிறுவனங்கள் போன்றவற்றின் வளவாளர்களாக கடமையாற்றியிருந்தனர்.

**(ஆ) வங்கிகளுடனான கூட்டங்கள்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான ஆளுநரின் கூட்டங்களுக்கான செயலகமாகத் தொடர்ந்தும் பணியாற்றியதுடன் இது இலங்கைப் பொருளாதாரம் மற்றும் வங்கிதொழில் துறை போன்றவற்றின் அபிவிருத்திகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை முன்னேற்றங்களுடன் தொடர்புபட்ட விடயங்களில் மத்திய வங்கியும் வங்கித்தொழில் துறையும் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதற்கான அரங்கமாக தொழிற்படுகின்றது. வங்கிகள் தீர்மானமெடுப்பதற்கு வசதியளிக்கும் விதத்தில் வங்கித்தொழில் துறையின் செயலாற்றம், உள்நாட்டு மற்றும் உலகளாவிய ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்பில் ஏற்படும் அபிவிருத்தி மற்றும் பொருளாதார, நாணய அபிவிருத்திகள் என்பனவற்றை உயர்த்தும் பொருட்டு வங்கித் தலைவர்களுடன் கூட்டமொன்று நடத்தப்பட்டது. பொருத்தமான மேற்பார்வை மற்றும் திருத்த நடவடிக்கைகள் சரியான நேரத்தில் நடைமுறைக்கிடப்படுவது என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களில் கலந்துரையாடுவதற்காக மூத்த முகாமைத்துவத்தினருடன் கிரமமான முறையில் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் மேற்பார்வைக் கட்டமைப்பினையும் முறைமையின் உறுதித்தன்மையினையும் வலுப்படுத்துவதற்காக துணை ஆளுநரைத் தலைவராகக் கொண்ட சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்களுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இணைப்பு I

உரிமம் பெற்ற வங்கிகளின் பட்டியல்

| உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | |
|---|---|
| 1. | அமானா பாங்க் பிஎல்சி |
| 2. | அக்சிஸ் பாங்க் லிமிடெட் |
| 3. | இலங்கை வங்கி |
| 4. | கார்கில்ஸ் பாங்க் லிமிடெட் |
| 5. | சிற்றி பாங்க் என்.ஏ |
| 6. | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி |
| 7. | டொயிஷ் பாங்க் ஏஜி |
| 8. | டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி |
| 9. | ஹபீப் பாங்க் லிமிடெட் |

| | |
|---|---|
| 10. | அட்டன் நஷனல் பாங்க் |
| 11. | ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட் |
| 12. | இந்தியன் பாங்க் |
| 13. | இந்தியன் ஓவசீஸ் பாங்க் |
| 14. | எம்சிபி பாங்க் லிமிடெட் |
| 15. | நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி |
| 16. | நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி |
| 17. | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி |
| 18. | மக்கள் வங்கி |
| 19. | பப்ளிக் பாங்க் பெர்காட் |
| 20. | சம்பத் பாங்க் பிஎல்சி |
| 21. | செலான் பாங்க் பிஎல்சி |
| 22. | ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க் |
| 23. | ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா |
| 24. | தஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் |
| 25. | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** | |
| 26. | இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி |
| 27. | லங்காபுத்ர டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட் |
| 28. | பிரதேசிய சங்வர்த்தன பாங்க் |
| 29. | தேசிய சேமிப்பு வங்கி |
| 30. | சணச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி |
| 31. | அரச ஈட்டு முதலீட்டு வங்கி |
| 32. | சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட் |

**(இ) பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

2016ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைந்து பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்களைக் கொண்ட நிறுவனங்களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதன் ஆபத்து என்பன தொடர்பில் 47 விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தியது. இதில் 5,600 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பொதுமக்களுக்கான அறிவித்தலொன்று அனைத்து மூன்று மொழிகளிலும் 16 செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டதுடன் சட்டத்திற்கு முரணான முதலீட்டுத் திட்டங்கள் தொடர்பில் வானொலி நிகழ்ச்சித்திட்டத்திற்காகத் திணைக்களம் வள ஆளணியினரையும் வழங்கிற்று.

**3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம்**

இலங்கை மத்திய வங்கியின் பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்திக்கான ஒரு மையமான வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது, 2016 ஆம் ஆண்டில் உள்ளூர் மற்றும் தெற்காசிய பிராந்தியத்தில் நிதித் துறை பணியாளர்கள் மத்தியில் பொருளியல், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் ஆகிய துறைகளில் அறிவுத் தளத்தை மேம்படுத்தும் நோக்கில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், பயிற்சி பட்டறைகள் ஆகியவற்றை வழங்கியது. 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், உள்ளூர் மற்றும் பிராந்திய கேள்விகளை நிறைவேற்றும் முகமாக பன்னாட்டு நிதி தொழிற்பாடுகள், முதலீடு மற்றும் திறைசேரி முகாமைத்துவம், இடர்நேர்வு முகாமைத்துவம், நிதியியல் முகாமைத்துவத்தின் சட்ட மற்றும் ஒழுங்குமுறை அம்சங்கள், தொழில்நுட்ப மற்றும் உடல்சார் திறன்கள் மற்றும் மனித வள முகாமைத்துவம் ஆகியன உள்ளடங்களான நிதித்துறை தொழிற்பாடுகளின் பரப்புக்களை உள்ளடக்கியிருந்தது. கற்கைநெறிகள், நீண்ட அனுபவம் மற்றும் வெளிப்பாடுடன் கூடிய கல்வி மற்றும் தொழில்முறைசார் தகுதிகள் கொண்ட நிபுணர்கள் குழு மூலம் வடிவமைக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன. மேலதிகமாக, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது, தென் கிழக்கு ஆசிய மத்திய வங்கிகள் நிலையம், இந்திய ரிசர்வ் வங்கி, டச் புண்டேஸ் வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் உட்பட சில புகழ்பெற்ற சர்வதேச நிதியியல் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பல எண்ணிக்கையிலான கற்கைநெறிகளை வடிவமைத்து வழங்கியுள்ளது.

2016 ஆண்டு காலப்பகுதியில், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது இயலாற்றலினை கட்டியெழுப்புதல் மற்றும் ஆதரவளித்தல் எனும் இலங்கை மத்திய வங்கியின் கம்பனி உபாயத்திட்டத்தின் நோக்கத்துடன் இசைந்து செல்லும் வகையில் நிதியியல் துறை தொடர்பான தலைப்புகளில் பரந்த அளவிலான ஏற்புடையதும் காலத்திற்கேற்ற பல எண்ணிக்கையிலான நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கியது. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் வழங்கப்படும் பயிற்சி சேவைகள் மத்திய வங்கிக்கு மட்டும் எல்லைப்படுத்தப்படாது பல்வேறு ஆர்வலர்களின் இயலளவினை கட்டியெழுப்புவதற்கான பல செயற்றிட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகள் ஆகியன உள்ளடக்கப்பட்டிருந்தன. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது பரந்தளவிலான கற்கைநெறிகளை வழங்குவது மட்டுமன்றி அதன் தரம் மேம்படுத்துதலின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு நடாத்தப்படும் நிகழ்ச்சிகள் பற்றி பரந்த, ஆழமான மதிப்பீடுகள் செய்யப்படுவதுடன் அதன் சேவை விநியோக தரத்தை மேம்படுத்துவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. அதன்படி, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது 2016 ஆண்டு காலப்பகுதியில் பயிற்சி திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் தரம் ஆகியவற்றை குறைந்தபட்சம் 75 சதவீத அளவில் இருக்குமாறு அதிகரிக்கும் நோக்கில் பேணியது. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் வழங்கப்பட்ட பயிற்சி பங்கேற்பாளர்களுக்கும் அதே போல் அவர்களது நிறுவனங்களுக்கும் உறுதுணையாக அமைந்ததுடன் அவர்களுடைய செலவு மற்றும் நேரம் நன்றாக செலவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டமையானது பெரும்பான்மையான பங்கேற்பாளர்களின் பின்னூட்டங்கள் உறுதி செய்ததன் மூலம் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் இந்த மட்டத்தை அடையக்கூடியதாக இருந்தது.

46 கலண்டர் நிகழ்ச்சித் திட்டங்கள், 49 சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், 4 சான்றிதழ் திட்டங்கள் மற்றும் 2 சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கிய 101 பயிற்சி திட்டங்கள் நடாத்த முடிந்தமையானது 2016 ஆம் ஆண்டு வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திற்கு ஒரு மிக அற்புதமான ஆண்டாக அமைய காரணமானது. மேலும், பொது மக்கள் மத்தியில் நிதியியல்சார் அறிவினை அதிகரிக்கும் நோக்கிலும் அறிவுவார் பொருளாதாரத்தை நோக்கிச் செல்ல அரசாங்கத்திற்கு

உதவும் நோக்கிலும், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது ஐந்து பகிரங்க விரிவுரைகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான மூன்று நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நான்கு பாடசாலை நிகழ்ச்சிகளை ஆண்டு காலப்பகுதியில் நடாத்தியது. இலங்கை முழுவதிலுமிருந்து 5,000 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் பங்குபற்றியதுடன் நேபாளம், பங்களாதேஸ், சீஸெல், பாகிஸ்தான், மாலைதீவு மற்றும் பப்புவா நியூ கினியா போன்ற நாடுகளில் இருந்தும் 150 பங்கேற்பாளர்கள் பங்குபற்றியிருந்தார்கள். மேலதிகமாக, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது 2016 இல் உயர்தரத்திற்கு தோற்றும் மாணவர்களை இலக்காகக் கொண்டு "தக்சிலாவ" மற்றும் "அறிவூற்று" என்ற தலைப்பில் இரண்டு தொலைக்காட்சி தொடர்களை வழங்கியது. பிராந்திய அபிவிருத்திக்கான நாட்டின் முக்கிய தேவையைக் கருத்தில் கொண்டு, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம், மத்திய வங்கியின் பிரதேச அலுவலகம், பிரதேச அலுவலக கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து பிராந்திய பகுதிகளில் வாழும் மக்களின் தரங்களின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு பதின்னான்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது, தொழில் வல்லுனர்களை, குறிப்பாக நிதி துறையில் திறமையாகவும், கடமையினை அறிவு மற்றும் திறன்களை கொண்டு வெளிப்படுத்தக் கூடியவர்களைப் பயன்படுத்தி பயிற்சிகளுக்கான தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளைக் கவனமாக ஆராய்ந்து "கலண்டர் நிகழ்ச்சித்திட்டம் 2017" இனை வெளியிட்டது. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது, நிறுவனங்கள் மற்றும் பங்கேற்பாளர்களுடைய அதிக அளவிலான ஏற்புதலுடன் கற்கைநெறிகளை வழங்குவது ஆண்டு காலப்பகுதியில் அதனுடைய வருமானம் அதிகரிக்க ஏதுவாக இருந்தது.

## 4. தொடர்பூட்டல்

வெளிவாரி தொடர்பூட்டல் மற்றும் உள்ளூர் தொடர்பூட்டல் அணுகுமுறைகள், பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மூலமான வினாவிடை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நூலகமும் தகவல் நிலையமும் போன்ற வழிகளில், மத்திய வங்கியின் ஆர்வலர்களுக்கு தகவல் பரப்புதலினூடாக 2016 காலப்பகுதியில் நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக, பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டை பேணுதல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டை பேணுதல் போன்ற மத்திய வங்கியின் பணியினை நிறைவுசெய்வதற்கு தொடர்பூட்டல் திணைக்களத்தின் வகிபாகம் பலப்படுத்தலினை தொடர்ச்சியாக ஆதரவளித்தது.

### வெளிவாரித் தொடர்பூட்டல்

தொடர்பூட்டல் திணைக்களமானது கலையம்சங்களுடன் கூடிய வெப்தளத்தினை உருவாக்கும் இலக்குடன், தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தினை சீரமைப்பதனை முன்னெடுத்திருந்ததுடன் இது ஆண்டுக்காலப்பகுதியில் திணைக்களத்தினால் எதிர்நோக்கிய மிகப்பெரிய சவாலாகவும் காணப்பட்டது. தொடர்பூட்டல் திணைக்களத்திற்கு பொறுப்பான பிரதி ஆளுநரின் தலைமையிலான செயலணிக் குழுவொன்று நிறுவப்பட்டு, தகவல் தொழில்நுட்ப திணைக்களத்துடன் இணைந்து தொடர்பூட்டல் திணைக்களமானது பல்வேறு சுற்று கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்தியதுடன் வெப்தளத்திற்கான உள்ளடக்கங்களை அபிவிருத்தி செய்வதற்காக தொடர்பான திணைக்களங்களுடன் நேருக்குநேர் திணைக்களம் சார் கூட்டங்களை நடத்தியது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற மூன்று மொழிகளிலுமான புதிய வெப்தளம் 2017இன் முதல் காலாண்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மத்திய வங்கியின் சகல பங்கேற்பாளர்களுக்கான பிரதான தொடர்பாடல் வழியாகவும் முக்கிய தகவல் மூலமானதுமான தற்போதுள்ள கூட்டாண்மை இணையத்தளமான www.cbsl.gov.lk என்பதன் பிரபல்யதன்மையானது அட்டவணை II-3இல் குறிப்பிட்டுள்ளவாறு 2015 உடன் ஒப்பிடுகையில் 2016 இல் வருகைகளின் எண்ணிக்கையின் 3.3 சதவீத அதிகரிப்பால் காணப்பட்டது. மின்னஞ்சல் அறிவுச் சேவை மற்றும் குறுந்தகவல் அறிவிப்புச் சேவைக்கான சந்தாகாரர்களும் அதிகரித்துள்ளனர்.

**அட்டவணை II-3**

**வெளியகத் தொடர்பூட்டல்களின் விபரங்கள்**

| ஊடக வகை | 2015 | 2016 |
|---|---|---|
| இலங்கை மத்திய வங்கி வெப்தள விஜயம் | 145 | 150 |
| யூ ரியூப் (இலங்கை மத்திய வங்கி காணொளி தரவேற்றம்) | 33 | 54 |
| மின்னஞ்சல் அலேட் முறைமை வாடிக்கையாளர்கள் | 2,392 | 2,406 |
| குறுஞ்செய்தி அலேட் முறைமை வாடிக்கையாளர்கள் | 1,073 | 1,003 |

2016 காலப்பகுதியில், தொடர்பூட்டல் திணைக்களமானது 1,185 பத்திரிகை வெளியீடுகள் (நாணயக் கொள்கை மீளாய்வு, வெளிநாட்டுத்துறை செயலாற்றம் மற்றும் பணவீக்கம் போன்ற 264 முக்கிய வெளியீடுகள் உள்ளடங்கலாக), 14 வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் 169 அறிவித்தல்கள் (விளம்பரங்கள் உள்ளடங்கலாக) போன்றவற்றை வழங்கியது.

மேலும், 2016 காலப்பகுதியில், வங்கியுடன் தொடர்புடைய பல்வேறு முக்கிய கொள்கை விடயங்கள் தொடர்பாக 20 ஊடக மாநாடுகள் நடத்தப்பட்டன. மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கி குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களின் 20ஆவது நினைவு, ஆண்டறிக்கை 2015 காட்சிப்படுத்தலுடனான விரிவுரை, ஸரேட் பாங்க் ஒப் இந்தியாவின் தலைவர் திருமதி அருந்ததி பத்தச்சார்யா அவர்களின் “இந்தியாவில் நிதியியல் துறையின் சீர்திருத்தங்கள்” எனும் தலைப்பிலான இலங்கை மத்திய வங்கியின் 66 ஆவது ஆண்டு நிறைவு சொற்பொழிவு போன்ற நிகழ்வுகளுக்கு வசதியளித்தது.

இலங்கை மத்திய வங்கி வெளியீடுகளின் விற்பனை மற்றும் விநியோகங்கள் மூலம் இலங்கை மத்திய வங்கியின் கொள்கைகள், செயற்பாடுகள், பிரதேச அபிவிருத்திகள் தொடர்பான செயற்றிட்டங்கள் மற்றும் ஏனைய தொடர்பான விடயங்கள் மீதான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடன் 16.09.2016 தொடக்கம் 25.09.2016 வரையான கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாடு மண்டபத்தில் நடைபெற்ற “கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி” எனும் தேசியமட்ட நிகழ்ச்சியில் தொடர்பூட்டல் திணைக்களமானது பங்குபற்றியது.

### உள்ளக தொடர்பூட்டல்

பொருளாதாரம் தொடர்பான நடப்பு விடயங்களில் மூத்த முகாமைத்துவத்தினர் நன்கு அறியப்பட்டவர்களாக இருப்பதனை இயலச்செய்வதற்காக, தொடர்பூட்டல் திணைக்களத்தால் நிதியியல் துறை மற்றும் வங்கி தொடர்பான விடயங்கள் பற்றி மூத்த முகாமைத்துவத்திற்கு மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட பதினைந்து தேசிய செய்தித் தாளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட 9,311 செய்தி நறுக்குகள், கட்டுரைகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் என்பனவற்றை சமர்ப்பித்தது.

ஆண்டுக் காலப்பகுதியில் அலுவல்சார் உள்ளக செய்திமடலான “கவுளுவ” (கருத்து “யன்னல்”)இன் இரண்டு தொகுதிகள் தொடர்ந்தும் தொடர்பூட்டல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன.

**பொதுமக்கள் விழிப்புணர்வு**

“ஈகோன் ஐகோன் கட்டம் III” தொலைக்காட்சி வினாவிடைப் போட்டியின் ஆரம்பச் சுற்றான போட்டி எழுத்துப் பரீட்சையை தொடர்பூட்டல் திணைக்களம் வெற்றிகரமாக நடத்தியிருந்ததுடன் இதில் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 420 சிங்கள மொழி பாடசாலைகளும் 204 தமிழ்மொழி பாடசாலைகளும் பங்குபற்றியிருந்தன. பிரபல்யமான தொலைக்காட்சியூடாக நடத்தப்பட்டும் பாடசாலைகளுக்கான தொலைக்காட்சி வினாவிடை நிகழ்ச்சித்திட்டத்தினை பங்குகொள்வதற்காக ஒவ்வொரு மொழி மூலத்திலிருந்தும் 16 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டன. முதலாம் சுற்று, இரண்டாம் சுற்று மற்றும் அரையிறுதிச் சுற்று போன்றவற்றின் தொலைக்காட்சி பதிவு செய்தலானது நிறைவுசெய்யப்பட்டதுடன், 2016 ஒத்தோபரிலிருந்து ஒளிபரப்பு செய்ய ஆரம்பிக்கப்பட்டது. மாபெரும் இறுதிச்சுற்று 2017இன் ஆரம்பத்தில் நடைபெற்றது.

அட்டவணை II-4 இல் காட்டப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களும் செயற்பாடுகளும், இலங்கைப் பொருளாதார நிலமை போன்ற பல்வேறு தலைப்புக்களில் 7,216 பங்குபற்றுநர்களுக்காக 128 கல்வி மற்றும் விழிப்புணர்வு செயற்றிட்டங்களை ஒருங்கிணைத்த வேளையில் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு அப்பால் 18 செயற்றிட்டங்களை ஒழுங்கிணைத்திருந்தது.

**அட்டவணை II-4**
**2016இல் நடாத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளின் விபரங்கள்**

| நிறுவனம் | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாடசாலைகள் | 91 | 5,909 |
| பல்கலைக்கழகங்கள் | 7 | 383 |
| இலங்கை ஆயுதப் படைகள்/ பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 6 | 190 |
| வெளிநாட்டு பங்கேற்பினர்கள் (தேசிய பாதுகாப்பு கல்லூரி) | 3 | 58 |
| தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டுச் சேவை அலுவலர்கள் | 3 | 51 |
| பாடசாலை ஆசிரியர்கள் | 18 | 625 |
| மொத்தம் | 128 | 7,216 |

இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட “அறிவூற்று” தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தில் தொடர்பூட்டல் திணைக்களத்தின் வளவாளர்கள் கலந்துகொண்டனர். மேலும், பிரதேச அலுவலகங்களினால் (கிழக்கு மற்றும் தெற்கு) முன்னெடுக்கப்பட்ட 04 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தொடர்பூட்டல் திணைக்களம் வளவாளர்கள் மற்றும் வெளியீடுகளை வழங்கியதன் மூலம் உதவியது.

ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்பூட்டல் திணைக்களமானது பொருளாதார வரலாற்று அருங்காட்சியகத்திலுள்ள விற்பனை நிலையம், இராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம், நூலகம் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் மற்றும் கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி போன்றவற்றினூடாக ரூ.6.07 மில்லியன் பெறுமதியான மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனையை மேற்கொண்டதுடன் 11,591 பல்வேறு வெளியீடுகளின் பிரதிகளை நாடு முழுவதிலுள்ள பாடசாலைகள் மற்றும் பொதுநூலகங்கள் போன்றவற்றிற்கு இலவசமாக வழங்கியது.

**தமிழ் மொழிபெயர்ப்பு பணிகள்**

தமிழ் மொழிபெயர்ப்பு பிரிவானது இலங்கை மத்திய வங்கியின் முக்கியமான வெளியீடுகளை தமிழ்மொழியிலும் வெளியிடுதல் உள்ளடங்கலான அனைத்து தொடர்பாடல்களை இயலச்செய்கின்ற அதன் மதிப்பற்ற சேவைகளைத் தொடர்ந்து வழங்கியதன் அனைத்து மூன்று மொழிகளிலும் தகவல்களை வழங்குதல் என்ற தொடர்பூட்டல் திணைக்களத்தின் பணிக்கு அதன் பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்கியது.

**வங்கியின் முக்கிய நிகழ்வுகளை புகைப்படமெடுக்கும் வசதிகள்**

புகைப்படம் எடுக்கும் பிரிவானது காணொளிப் புகைப்படம் இரண்டையும் கட்புல ஊடகங்களையும் வழங்கியது. இப்பிரிவினது வங்கியின் 379 நிகழ்ச்சிகளுக்கு பணிவழங்கியதுடன் தொகுத்தல், அச்சிடல் மற்றும் புகைப்படங்களுக்கு சட்டமிடுதல், காணொளிகள் தொகுப்பு, அல்பங்கள் மற்றும் இறுவட்டுக்களை தயாரித்தல் உள்ளிட்ட அனைத்துத் தொடர்பான பணிகளையும் வழங்கியதன் மூலம் உயர் தொழில்சார் நிபுணத்தவத்தரத்தினை பேணியது.


**அச்சகம்**

இலங்கை மத்திய வங்கியின் அச்சக தேவைப்பாடுகளை உயர்தர நியமத்துடன் நிறைவு செய்வதற்காக தொடர்பூட்டல் திணைக்களமானது வடிவமைத்தல், தட்டச்சு ஒழுங்கமைப்பு மற்றும் அச்சிடல் போன்ற பணிகளை வழங்கியது. இதன் தொடர்பில் 2016 காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் அச்சகத்தினால் 214 எண்ணிக்கையிலான வங்கியின் அச்சிடல் ஒப்படைகள் நிறைவுசெய்யப்பட்டன. இவ் ஒப்படைகள், சட்டகன (04 தொகுதிகள்), நியூ சேவை (03 தொகுதிகள்), குறிப்பேடு (02 தொகுதிகள்), புலட்டின் (வெப் தரவேற்றத்திற்கான தட்டச்சு ஒழுங்குபடுத்தல் மட்டும்), சென்தேவ, போன்ற காலாந்தர வெளியீடுகளையும் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் திரு.பி.சமரசிறி அவர்களின் “ஆர்திக வித்யா மூலதர்ம சகா பிரதிபட்டி” (மீள் அச்சு), இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திரு.சி.பி.ஏ.கருணாதிலக அவர்களின் “பொருளியல் கோட்பாட்டுக்கான ஓர் அறிமுகம்” சிங்களம் மற்றும் தமிழ் (மீள் அச்சு), தரவு சிறுபுத்தகம், இலங்கையில் வியாபாரம் செய்யுங்கள் படிமுறை வழிகாட்டி (மீள அச்சு), வங்கியின் 66வது ஆண்டு நிறைவு சொற்பொழிவு நூல், இலங்கை பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரம் போன்ற நூல்களையும் உள்ளடக்கியிருந்தன. மேலும், வங்கியின் பல்வேறு படிவங்கள், வங்கி அலுவலர்களின் வியாபார அட்டைகள், காகிதாதிகள் போன்றவையும் அச்சிட்டும் வழங்கியது.


**நூலகமும் தகவல் நிலையமும்**

நூலகமும் தகவல் நிலையமும், வங்கி அலுவலர்களுக்கும் அதேபோன்று பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் போன்ற அனுமதிக்கப்பட்ட வெளிவாரியான பாவனையாளர்களுக்கும் கிடைக்ககூடியளவில் அதன் பணிகளை வழங்கியது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் இது 570 நூல்கள், 100 அறிக்கைகள், 60 இறுவட்டுக்கள் மற்றும் 45,000ற்கும் அதிகமான சஞ்சிகை வெளியீடுகள் போன்றவற்றின் புதியபதிப்புக்கள் உள்ளடங்கலாக 30,000 நூல்கள், 19,000

வரைபடம் II-1
சுற்றோட்டத்திலுள்ள வங்கித்தாள்களின் பெறுமதி





வரைபடம் II-2
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்/மொ.உ.உ




அறிக்கைகள், 1,935 இறுவட்டுக்கள் போன்ற சேகரிப்புக்களுடன் அதன் பணிகளை வழங்கியது. குறிப்பாக, பொருளாதாரம், முகாமைத்துவம் மற்றும் நிதியியல் மீதான தகவல்களின் பரந்தளவான அறிவுவளத்தினை வழங்குகின்ற “சயன்ஸ் டிரெக்ட்” மற்றும் “ஈகோன்லிட்” போன்றவற்றிற்கான சந்தாத் தொகையை அதேநேர கணனிவழி தரவுத் தளங்களுக்கு நூலகம் மற்றும் தகவல் நிலையம் தொடர்ந்தும் செலுத்தியது. மேலும், மத்திய வங்கித்தொழில் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் பல்வேறு ஏனைய அதேநேரக் கணனிவழி மூல வளங்களுக்கு நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினால் சந்தா செலுத்தப்பட்டது. இவற்றிற்கிடையில், அணுகுமுறையானது www.centralbanking.com க்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதுடன், 2016இல் அணுகுமுறையானது இணையத்திற்கு அனுமதிக்கப்பட்ட அனைத்து அலுவலர்களுக்குமாக www.risk.net மற்றும் www.ft.com போன்றவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளது.

நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினால் சந்தாசெலுத்தப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சஞ்சிகைகளின் மொத்த எண்ணிக்கையானது முறையே 88 மற்றும் 16 ஆக காணப்பட்டது. நூலகம் மற்றும் தகவல்நிலையமானது அண்மையில் புதிதாக சேர்க்கப்பட்டவை (அதாவது புதிய நூல்கள்), நடைமுறைவிடயங்களின் உள்ளடக்கம், பன்னாட்டு செய்தி அலேட், உள்ளூர் அச்சகம் மற்றும் தொடர்புடைய விடயங்களிலான பொருளாதாரம், வங்கியியல் மற்றும் நிதியியல் மீதான குறிப்புக்கள் போன்ற இலத்திரனியல் வெளியீடுகளை தொகுப்பதனை தொடர்ந்து மேற்கொண்டதுடன் அவற்றை “மன்சல” எனும் உள்ளக இணையமூடாகப் பரப்பியது. மொழிக் கொள்கை சாத்தியமான இடங்களிலெல்லாம் தேவைப்படுத்தலுடன் தொகுப்பதற்காக ஆங்கில சிங்கள மற்றும் தமிழ் புதிய செய்தித்

வரைபடம் II-3
நாணய வெளியீடு - நாணயக் குத்திகள் மற்றும் நாணயத்தாள்களின் எண்ணிக்கை




தாள்களினை உள்ளடக்கி உள்ளூர் அச்சகம் தொகுக்கப்பட்டது. தெரிந்தெடுக்கப்பட்ட தகவல் பரப்பும் பணிகளும் வங்கியின் பொருத்தமான அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

நூலகம் மற்றும் தகவல் நிலையமானது மின்னஞ்சல் மற்றும் நூலகக் கடன்கள் ஊடாக பயனுள்ள தகவல்களை வழங்கியதன் மூலம் இலங்கையின் பொருளாதார மற்றும் வங்கித்தொழில் நூலகங்களுக்கு தனது பணியினை தொடர்ந்தும் வழங்கியது. மேலும், மூலவளங்களையும் அனுபவங்களையும் உலகளாவிய மத்திய வங்கிகள் மற்றும் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களுக்கிடையில் பகிர்ந்துகொண்டதனூடாக, நூலகம் மற்றும் தகவல் நிலையமானது உலகளாவிய மத்திய வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் நூலக மற்றும் தகவல் தொழில்சார் நிபுணத்துவ வலையமைப்பில் (CBFA பட்டியல்) ஒரு செயற்படும் அங்கத்தவர் என்ற நிலையைப் பெற்றுக்கொண்டது. நூலகத்தின் உள்ளக இணையத்தளத்தினூடாக வங்கி அலுவலர்கள் இலத்திரனியல் நூலகசேவையினை அணுகுவதற்கான வசதியை வழங்கியதன் மூலம் தொடர்ந்தும் பேணப்பட்டது.

## 5. நாணயம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம், இலங்கையில் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணயத்தினை வெளியிடுகின்ற ஏக உரிமையினையும் அதிகாரத்தினையும் நாணயச் சபையிடம் ஒப்படைத்திருக்கிறது. இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களம், நாணயச் சபையிடம் சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்ட இப்பொறுப்புக்கள் தொடர்பான தொழிற்பாடுகளைக் கையாள்கிறது. நாணயத் திணைக்களம் பொதுமக்களின் கேள்வியைப் பூர்த்திசெய்வதற்காக நாணயத் தாள்களை அச்சிடல், நாணயக் குத்திகளை வார்த்தல், நாணயத் தாள்களையும் குத்திகளையும் வெளியிடுதல், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், பொருத்தமற்ற நாணயத் தாள்களையும் குத்திகளையும் சுற்றோட்டத்திலிருந்து புறக்கீடு செய்தல், சட்ட ரீதியான நாணயம் என்ற ரீதியில் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் சந்தர்ப்பங்களில் அதனைக் கையாள சட்டத்தினை நடைமுறைப்படுத்துபவர்களுக்கு உதவுதல் மற்றும் தரத்தினைப் பேணும் விதத்தில் நாணயத்தினை சரியாகப் பயன்படுத்துவது தொடர்பில் பொதுமக்களின் அறிவினை உயர்த்துவதற்காக பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் ஆகியவற்றுடன் தொடர்பான முக்கியமான பணிகளை மேற்கொண்டது.

## 5.1 நாணய வெளியீடு (முகாமைத்துவம்)

### (அ) சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

தொழில்நுட்ப ரீதியாகத் தூண்டப்பட்ட காசற்ற முறையிலான கொடுப்பனவுகளின் பயன்பாட்டிற்குத் தொடர்ச்சியாக வசதியளிக்கப்பட்டு வருகின்ற போதும் கூட, பொருளாதார வளர்ச்சி மற்றும் இலங்கைப் பொருளாதாரத்தில் காணப்பட்ட பணவீக்கம் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2016இல் நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளுக்கான கேள்வி அதிகரித்தது. இதன்படி, சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தின் பெறுமதி அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு முன்னைய ஆண்டினைவிட 2016.12.31இல் ரூ.552.2 பில்லியனுக்கு 12.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை II-5
சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள் (ஆண்டு இறுதியிலுள்ளவாறு)

| விடயம் | பெறுமதி (ரூ. பில்.) | | | | | சதவீத மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| தாள்கள் | 311.2 | 332.4 | 408.8 | 482.0 | 541.5 | 8.4 | 6.8 | 23.0 | 17.9 | 12.3 |
| குத்திகள்* | 6.3 | 6.8 | 7.5 | 9.1 | 10.7 | 13.5 | 7.5 | 10.7 | 21.3 | 17.3 |
| மொத்தம் | **317.5** | **339.2** | **416.3** | **491.1** | **552.2** | **8.5** | **6.8** | **22.7** | **18.0** | **12.4** |

ஞாபகார்த்த நாணயக் குத்திகள் நீங்கலாக

இலங்கையில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் முக்கிய பகுதியாக (98 சதவீதம்) விளங்கும் சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்களின் பெறுமதி 2016இல் ரூ.541.5 பில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் அதிகரித்தது. வரைபடம் 1இல் தரப்பட்டவாறு, நாணயத் தாள்களிடையே ரூ.5,000, ரூ.1,000 ஆகிய இன நாணயத் தாள்கள் 2016.12.31இல் உள்ளவாறு சுற்றோட்டத்திலுள்ள நாணயயத் தாள்களின் மொத்தப் பெறுமதியில் ஏறத்தாழ 84 சதவீதத்திற்கு வகைகூறின. மொ.உ. உற்பத்திக்கான பொதுமக்கள் வசமிருந்த நாணயத்தின் விகிதம் (சுற்றோட்டத்தில்) 2010இன் 4 சதவீதத்திலிருந்து 2016 இறுதியில் ஏறத்தாழ 4.6 சதவீதத்திற்கு அதிகரித்து நாட்டின் கொடுப்பனவின் முக்கிய ஊடகமொன்றான நாணயத்திற்கான கேள்வி அதிகரித்துச் செல்வதனை எடுத்துக்காட்டியது.

### (ஆ) நாணய வெளியீடு

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் புறக்கோட்டையில் இலங்கை வங்கியில் நிறுவப்பட்டுள்ள பொதுமக்களுக்கான விசேட கருமபீடம் என்பனவற்றினூடான நாணயத் தொழிற்பாடுகள் மூலம் நாட்டின் நாணயத்திற்கான கேள்வியைப் பூர்த்திசெய்யும் விதத்தில் நாணயத் தாள்களையும் குத்திகளையும் கிரமமாக வழங்குவதனை நாணயத் திணைக்களம் தொடர்ந்தும் உறுதிப்படுத்தியது. 2016ஆம் ஆண்டுப்பகுதியில் நாட்டின் சுற்றோட்டத்திற்காக நாணயத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நாணயத் தாள்களும் குத்திகளும் முறையே ரூ.594.0 பில்லியனாகவும் ரூ.1.6 பில்லியனாகவும் காணப்பட்டன.

அட்டவணை II-6
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள்

| விடயம் | பெறுமதி (ரூ. பில்.) | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2014 | 2015 | 2016 |
| தாள்கள் | 431.8 | 503.4 | 594.0 | 7.4 | 16.6 | 18 |
| குத்திகள் | 0.8 | 1.6 | 1.6 | 41.1 | 112.8 | 0 |
| மொத்தம் | **432.6** | **505.0** | **595.6** | **7.5** | **16.7** | **17.9** |

2016ஆம் ஆண்டுப்பகுதியில் நாணயத் திணைக்களம் 2015ஆம் ஆண்டிலிருந்து (வரைபடம் II-3) கணிசமானளவு எண்ணிக்கையான நாணயக் குத்திகளை சுற்றோட்டத்திற்கு வழங்கியமையின் காரணமாக, பற்றாக்குறை எதுவுமில்லாமல் நாட்டில் நாணயக் குத்திகளுக்கான கேள்வியைத் தொடர்ச்சியாகப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. நாணயத் திணைக்களம் புறக்கோட்டை இலங்கை வங்கியிலுள்ள பொதுமக்களுக்கான கருமபீடத்தினூடாக நாணயக் குத்திகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

### (இ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்

நாணயத் தொழிற்பாடுகளில், நாணயத் திணைக்களம், நாணயக் கொள்கைக் கருவியொன்றாக இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினைப் பேணுவதற்காக முக்கியமாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்கிறது. வைப்புக்கள் அட்டவணை 3இல் தரப்பட்டுள்ளவாறு பயன்படுத்தத்தக்கவை (பொருத்தமானது) மற்றும் பயன்படுத்த முடியாதவை (பொருத்தமற்றவை) என இரண்டு வடிவங்களிலும் காணப்பட்டன. 2016இல் நாணயத் திணைக்களத்துடனான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நாணய வைப்புக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 24.2 சதவீதத்தினால் அதிகரித்தன.

அட்டவணை II-7
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயம்

| விடயம் | பெறுமதி (ரூ. பில்.) | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2014 | 2015 | 2016 |
| தாள்கள் | 354.7 | 429.6 | 534.5 | (6.9) | 21.1 | 24.2 |

குறிப்பு: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நாணயக் குத்திகளின் பெறுமதி குறிப்பிடத்தக்களவானவையல்ல.

### (ஈ) தூய நாணயத்தாள் கொள்கை

நாணயத் திணைக்களம் சிறந்தர (பொருத்தமான) நாணயத் தாள்களைக் கிரமமான முறையில் வழங்குவதனையும் அழுக்கடைந்த (பொருத்தமற்ற) நாணயத் தாள்களை அகற்றுவதற்குமான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2016இல் நாணயத் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட ரூ.57.4 பில்லியன் முகப்புப் பெறுமதியினைக் கொண்ட 179.2 மில்லியன் பயன்படுத்த முடியாத நாணயத் தாள்களை அழித்ததுடன் ரூ.455.6 பில்லியன் பெறுமதி கொண்ட 279.4 பில்லியன் எண்ணிக்கையான தாள்களைச் சுற்றோட்டத்திற்கு மீளவழங்கியது.

நாணயத் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இடையே வினைத்திறன் மிக்கதும் காத்திரமானதுமான நாணய முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதில் காணப்படும் பிரச்சனைகள் மற்றும் தடைகளைப் பற்றியும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் காசு முகாமையாளர்களுடன் கலந்துரையாடுவதற்காகவும் நாணயத் தாள்களின் பயனுறு ஆயுள் காலத்தினை நீடிப்பதற்காக நாணயங்களைத் தரம் பிரித்தல் மற்றும் கையாளல் நடைமுறைகளில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்காகவும் கூட்டங்களை நடத்தியது. மேலும், நாணயத் தாள்களை சேதப்படுத்துதல், மாற்றங்களைச் செய்தல் மற்றும் உருச்சிதைத்தல் என்பன தொடர்பாகச் சட்டத்தினைக் கடுமையாக நடைமுறைப்படுத்தும்படி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வேண்டுமென்றே நாணயத் தாள்களை சேதப்படுத்தல், மாற்றங்களைச் செய்தல்

அல்லது உருச்சிதைத்தல் தொடர்பில் அவற்றினை அடையாளம் காணும் விதத்தில் அவற்றின் அலுவலர்களுக்கு அறிவூட்டப்படல் வேண்டுமென அறிவுறுத்தியதுடன் வேண்டுமென்றே சேதப்படுத்துதல், உருமாற்றுதல் மற்றும் உருச்சிதைத்தல் என்பனவற்றைத் தவிர்க்கும்படி பொதுமக்களுக்கு அறிவூட்டவும் அறிவுறுத்தியது.

**(உ) ஞாபகார்த்த நாணயக் குத்திகளின் வெளியீடு மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஞாபகார்த்த நாணயக் குத்திகளின் விற்பனை**

2016ஆம் ஆண்டுப்பகுதியில், நாணயத் திணைக்களம் ஞாபகார்த்த நாணயக் குத்திகளை வெளியிடுவது தொடர்பில் ஐந்து கோரிக்கைகளைப் பெற்றது. இக்கோரிக்கைகளில் மூன்று கோரிக்கைகள் சாதகமான முறையில் பரிசீலிக்கப்பட்டதுடன் அவை தொடர்பான நாணயக் குத்திகளின் வெளியீடு 2017இல் இடம்பெறும். மேலும், ஞாபகார்த்த நாணயக் குத்திகள் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் மற்றும் கொழும்புக் கோட்டையிலுள்ள பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை என்பனவற்றினூடாக விற்பனை செய்யப்பட்டன.

## 5.2 நாணய அச்சிடல் மற்றும் வார்த்தல்

பொருளாதாரத்தில் நாணயத் தாள்களுக்கான கேள்வியை ஈடுசெய்யும் பொருட்டும் சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் விதத்திலும் போதுமானளவு எதிர்பாராத இருப்புக்களை உறுதிப்படுத்தும் பொருட்டும் நாணயத் திணைக்களம் 775 மில்லியன் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டது. இதற்குப் புறம்பாக, 2016இல் 575 மில்லியன் நாணயக் குத்திகளை வார்ப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

ரூபா 1 இன் உலோக வகையினை மாற்றுவதன் மூலமும் (2005இற்குப் பின்னர் வார்க்கப்பட்டது) ரூபா 5 நாணயக் குத்தியினை பித்தளை முலாமிடப்பட்ட உருக்கிலிருந்து துருப்பிடிக்காத உருக்கிற்கு மாற்றுவதன் மூலமும் நாணயக் குத்திகளின் வார்ப்புச் செலவினைக் குறைப்பதற்கு நாணயத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும், வார்ப்புச் செலவினைக் குறைக்கும் நோக்குடனும் இலகுவாக கையாள்வதற்காகவும் நாணயக் குத்திகளின் அளவினைக் குறைப்பதற்காகவும் ரூ.1, ரூ.2, ரூ.5 மற்றும் ரூ.10 இன் நாணயக் குத்திகளுக்கான உலோகத்தினை துருப்பிடிக்காத உருக்கிலிருந்து புதிய சுற்றோட்டத்தர நாணயக் குத்திகளாக வடிவமைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

## 5.3 முறைமை மேம்படுத்தல்கள்

2016இல் நாணயத் தாள்களை சிறு துகள்களாக்கிவிடும் பொறியொன்றினைக் கொள்வனவு செய்து நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய துகள்களாக்கும் பொறி பாதுகாப்பான விதத்திலும் சிநேகபூர்வ சூழல் தன்மையுடனும் பயன்படுத்த முடியாத நாணயத் தாள்களையும் சேதமடைந்த நாணயத் தாள்களையும் தொகை வடிவில் துகள்களாக்கும் வசதியைக் கொண்டிருக்கின்றது. மேலும், குறைந்தபட்சம் கையினால் இயக்கும் செயன்முறை மூலம் இரண்டு முழுமையாகத் தன்னியக்கப்படுத்தப்பட்ட நாணயத் தாள் செயன்முறைப்படுத்தலில் பாதுகாப்பான கையாளலுக்காகச் சுருக்கிச் சுற்றுகின்ற முறைமையொன்றினை நிறுவுகின்றதன் மூலம் நாணயப் பதனிடலுக்கு தன்னியக்கப்படுத்தல் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

## 5.4 சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட உதவி

போலி நாணயம் தொடர்பில் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பாக சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு உதவும் விதத்தில் நாணயத் திணைக்களம் 2016இல் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது;

(அ) நாணயத் திணைக்களம் போலி நாணயத் தாள்களைத் தயாரிக்கும் முயற்சி தொடர்பில் பொலிஸின் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயப் பணியகத்துடனும் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுடனும் நெருங்கிய விதத்தில் ஒத்துழைத்தது. 2016இல் கண்டுபிடிக்கப்பட்ட போலி நாணயத் தாள்களின் எண்ணிக்கை 2,612 ஆகும்.

(ஆ) நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் போலி நாணயத் தாள்களுக்கான முடிவுச் சான்றுகளாக ஆளுநரின் கையொப்பத்துடன் கூடிய 162 சான்றிதழ்கள் புறக்குறிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

(இ) போலி நாணயத் தாள் வழக்குகளில் சாட்சியமளிப்பதற்காக 12 நீதிமன்ற வழக்குகளில் கலந்து கொண்டது.


## 5.5 பொதுமக்கள் விழிப்புணர்வு

பொதுமக்கள், பொலிஸ் அலுவலர்கள், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரச அலுவலர்களுக்கு அறிவூட்டும் பொருட்டு பல்வேறு மட்டங்களிலும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நாணய அரும்பொருட்காட்சிச்சாலையின் காட்சிப்படுத்தலையும் நாணயத் திணைக்களம் தொடர்ந்து பின்வரும் விதத்தில் மேற்கொண்டது.

(அ) தூய நாணயத் தாள் கொள்கை மற்றும் நாணயத் தாள்களின் பாதுகாப்புப் பண்புகள், போலி நாணயத் தாள்களை அடையாளம் காணுதல், நாணயத் தாள்களையும் குத்திகளையும் சிறந்த முறையில் கையாளும் நடைமுறைகள் என்பன மீது வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம், பல்வேறுபட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், பொலிஸ் நிலையங்கள், தேசிய பாடசாலைகள் போன்ற இடங்களில் 42 ஆய்வரங்குகள்/ செயலமர்வுகள் நடைபெற்றன.

(ஆ) கொழும்பு 2, களுத்துறை மற்றும் காலியில் இடம்பெற்ற மூன்று கண்காட்சிகளில் நடமாடும் நாணய அரும்பொருட்காட்சிசாலை காட்சிப்படுத்தப்பட்டது,

**வரைபடம் II-4**
**சந்தை திரவத்தன்மை, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம்**



(இ) இலங்கை மத்திய வங்கியின் மூன்று நாணய அரும்பொருட்காட்சிச்சாலைகளும் முக்கியமாக பள்ளிக்கூடங்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை முக்கியமாக உள்ளடக்கிய 9,470 பேரின் விஜயத்திற்கு வசதியளித்ததுடன் தூய நாணயத் தாள் கொள்கை மற்றும் நாணயத் தாள்களை போலியாகத் தயாரிப்பதன் விளைவுகள் போன்றன தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக தகவல் விடயங்களும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

### 5.6 நாணயத் தாள்களை மீளத் தயாரிப்பதற்கான ஒப்புதல்கள்

2016ஆம் ஆண்டுப்பகுதியில், விளம்பரங்களில் நாணயத் தாள்கள் மீளத் தயாரிப்பதற்காக, அத்தகைய மீளத் தயாரிப்பதற்கான நாணயச் சபையின் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கை நியதிகளுக்கிணங்க நான்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

### 6.1 உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் நடவடிக்கைகள்

நாணய விதிச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் பல தொழிற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவையாவன (அ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துதல் (ஆ) வர்த்தக வங்கிகளின் ஒதுக்குகளை ஒழுங்குமுறைப்படுத்தல் (இ) அரசாங்கம், அரசாங்க முகவர்கள் மற்றும் அரசாங்கத்தின் சார்பில் தொழிற்படுகின்ற ஏனைய நிறுவனங்களின் அலுவல்சார் வைப்பகத்தின் வங்கியாளராகத் தொழிற்படுதல் (ஈ) அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களை நெறிப்படுத்தல் (உ) நேரடி வணிகர்கள் மற்றும் நேரடி பங்கேற்பாளர்களுக்கான கணக்குகளைப் பேணுதல் (ஊ) பங்கேற்பாளர்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான கொடுகடனினை வழங்குதல் மற்றும் (எ) தேவையான வேளைகளில் வங்கித்தொழில் நிறுவனங்களுடன் கொடுகடன் தொழிற்பாடுகளில் ஈடுபடுதல்.

### 6.2 நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

மத்திய வங்கியின் தற்பொழுது நிலவும் நாணயக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் குறுங்கால வட்டி வீதங்களைப் பேணும் குறிக்கோளுடன் திணைக்களம் நாணயக் கொள்கையைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இதற்கமைய துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பனவற்றினால் உருவாக்கப்பட்ட கொள்கை வீத வீச்சிற்குள், குறைந்தபட்ச தளம்பல்களுடன் பொருத்தமானதொரு மட்டத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் பேணப்பட்ட போதும் 2016இன் சில நாட்களில் இது கொள்கை வீத வீச்சின் மேலெல்லையை விஞ்சியிருக்கின்றது.

விரும்பத்தக்க மட்டமொன்றினை நோக்கிச் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை வழிப்படுத்தும் விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் முக்கிய நாணயத் தொழிற்பாட்டுக் கருவியொன்றான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் தங்கியிருந்த வேளையில், துணைநில் வசதிகளும் சந்தைப் பங்கேற்பாளர்களுக்குத் தொடர்ந்தும் கிடைக்கச் செய்யப்பட்டன. மேலும், நியதி ஒதுக்குத் தேவைப்பாடும் சந்தையின் திரவத்தன்மை நிலைமைக்கு நிரந்தர சீராக்கமொன்றினைச் செய்வதில் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றியது. 2016இல் வர்த்தக வங்கிகள் ஒதுக்குக் கணிப்பீடு மற்றும் பேணலுக்காக வழங்கப்பட்ட இரண்டு வார காலப்பகுதியில் அவற்றின் நாளாந்தத் திரவத்தன்மையினைக் காத்திரமான முறையில் முகாமைப்படுத்தியதுடன் அழைப்புப் பணச் சந்தையில் வட்டி வீதங்களின் தளம்பல்களும் குறைக்கப்பட்டன.

### 6.3 குறுங்கால வட்டி வீதங்களின் நடத்தை

மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்பட்டமையின் முக்கிய காரணமாக, முன்னைய ஆண்டின் தொடக்கத்தில் வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தை உயர்ந்த மட்ட மிகைத் திரவத்தன்மையினைக் கொண்டிருந்தது. இம்மிகையான திரவத்தன்மை குறுங்கால மற்றும் நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்களினூடாகத் தற்காலிக அடிப்படையிலும் திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகளின் மூலம் நிரந்தர அடிப்படையிலும் ஈர்த்துக் கொள்ளப்பட்டது. மேலும், வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களுக்கும் ஏற்புடைத்தான நியதி ஒதுக்கு விகிதம் 2016 சனவரி 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கியினால் 1.50 சதவீதப் புள்ளிகளினால் 7.50 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இதன் மூலம் ரூ.52 பில்லியன் ஈர்த்துக் கொள்ளப்பட்டது. அதேவேளை, மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களும் ரூபாத் திரவத்தன்மையினை வெளியேற்றியது. இதன் காரணமாக உள்நாட்டுப் பணச் சந்தையில் காணப்பட்ட மிகையான ரூபாத் திரவத்தன்மை படிப்படியாக வீழ்ச்சியடைந்ததுடன் 2016 மாச்சு இறுதியளவில் சந்தைத் திரவத்தன்மைப் பற்றாக்குறைக்கு மாறியது. பணச் சந்தைத் திரவத்தன்மையிலான பற்றாக்குறை திசெம்பர் இறுதிப்பகுதி வரை தொடர்ந்தது. இக்காலப்பகுதியில், மத்திய வங்கி பெரும்பாலான நாட்களில் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியது. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புக்கள் என்பனவற்றின் முக்கிய காரணமாக திசெம்பர் இறுதிப்பகுதியில் பணச் சந்தைத் திரவத்தன்மை நேர்க்கணிய நிலைமைக்கு மீண்டும் மாறியதுடன் 2016 திசெம்பர் இறுதியில் மிகையான சந்தைத் திரவத்தன்மை 2015 திசெம்பர் இறுதியின் ரூ.81.7 பில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் ரூ.39.2 பில்லியனாக விளங்கியது.

மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களை அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதங்கள் ஒவ்வொன்றையும் 2016 பெப்புருவரி 19ஆம் நாளன்றும் 2016 யூலை 28ஆம் நாளன்றும் முறையே 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.00 சதவீதத்திற்கும் 8.50 சதவீதத்திற்கும் அதிகரித்தது. 2015 இறுதியில் 6.40 சதவீதமாகக் காணப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் 2016இன் தொடக்கத்தில் மேல் நோக்கிய போக்கினைக் காட்டியது. ஆண்டின் ஆரம்பத்தில் கொள்கை வீதம் சீராக்கப்பட்டமையினைத் தொடர்ந்து, கொள்கை வீத வீச்சின் மேல் எல்லையினை நோக்கி விரைவாக இது அதிகரித்தது. அரச பிணையங்களின் இரண்டாந்தரக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வட்டி வருமானத்திற்குப் பிரயோகிக்கத்தக்க வட்டியின் மூலம் உருவாக்கப்பட்ட பிறழ்வுகளின் விளைவாக மாச்சு இறுதியிலிருந்து சந்தைத் திரவத்தன்மையில் மேலும் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் வீச்சின் மேல் எல்லையினை விஞ்சியதுடன், யூலையில் அடுத்த கொள்கை வட்டி வீத மாற்றம் வரை ஏறத்தாழ 8.20 சதவீதத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது. முன்னைய கொள்கை வீதத் திருத்தங்களுடன் குறிப்பிடத்தக்களவிற்கு பாரிய சந்தை வட்டி வீதச் சீராக்கம் அடையப்பட்டமையின் காரணமாக யூலையில் காணப்பட்ட கொள்கை வீத மாற்றங்களினைத் தொடர்ந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதங்களின் வீச்சிற்குள் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த சீராக்கங்கள் காணப்படக்கூடியதாக

இருந்தது. 2016 இறுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதங்கள் 8.42 சதவீதமாகக் காணப்பட்டன. சராசரி நாளாந்த அழைப்புப் பணச் சந்தை அளவு 2016இல் ரூ.14.5 பில்லியனாகக் காணப்பட்டதுடன் ரூ.2.99 பில்லியனுக்கும் ரூ.25.05 பில்லியனுக்குமிடையிலான வீச்சில் தளம்பலுற்றன. ஒரு சில வங்கிகள் அழைப்புப் பணச் சந்தையில் தொடர்ந்தும் கடன்பாடுகளை நாடின. அழைப்பு கடன்பாடுகளின் பங்கீட்டு நியதிகளில், மொத்தக் கடன்பாடுகளில் ஏறத்தாழ 77 சதவீதத்திற்கு 4 வங்கிகள் வகைகூறின.

சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தின் அசைவுகளை மிக நெருக்கமாகத் தொடர்ந்தது. இது, 2016இன் முதற் காலாண்டுப் பகுதியில் படிப்படியாக அதிகரித்து அதன் பின்னர் யூலையில் கொள்கை வட்டி வீதங்கள் அதிகரிக்கப்படும் வரை ஏறத்தாழ 8.00 சதவீதத்திற்கிடையில் ஊசலாடியது. நாணயக் கொள்கை நிலை இறுக்கமாக்கப்பட்டமைக்கு பதிலிறுத்தும் விதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக இது ஒத்தோபர் நடுப்பகுதியில் 9.15 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த மட்டத்தினைப் பதிவுசெய்தது. 2016 இறுதியில் இதுவும் சந்தைத் திரவத்தன்மை மட்டத்துடன் தளம்பலடைந்து 8.62 சதவீதத்தில் காணப்பட்டது. ஒரு முதனிலை வணிகரின் கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக (இது கடன் தீராற்றல் பிரச்சனைகளின் காரணமாக சந்தை வீதங்களுக்கு அப்பாலான வீதங்களில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டது) சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் 2016 திசெம்பர் பிற்பகுதியில் கொள்கை வீத வீச்சின் மேல் எல்லைக்கு மிக அணித்தாக அதாவது 8.50 சதவீதத்தில் காணப்பட்டது.

மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான பெயரளவு வரி வரவு காரணமாக குறுங்கால வட்டி வீதங்களில் உருவாக்கப்பட்ட பிரச்சனைகள் 2017இற்கான தேசிய வரவு செலவுத்திட்டத்தின் தொடர்பான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதுடன் 2017 ஏப்பிறல் 1 இலிருந்து நீக்கப்படும். இது, கொள்கை வீத வீச்சு சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்திற்குக் காத்திரமான மேல் மற்றும் கீழ் எல்லைகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தும்.

### 6.3.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

#### அ) திரவத்தன்மை எதிர்வுகூறல்

குறிப்பிட்ட நாளொன்றிற்குத் தேவைப்படும் நாணயத் தொழிற்பாட்டு வகையினை நிர்ணயிப்பதற்காக, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நாளாந்த அடிப்படையில் சந்தைத் திரவத்தன்மை எதிர்வுகூறலை மேற்கொண்டது. இவ்வெதிர்வுகூறலானது அரசாங்கம் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடனான மத்திய வங்கியின் கொடுக்கல்வாங்கல்கள், அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் பெறுகைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள், அரசாங்கத்தினால் வழங்கப்படும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட முறிகளின் பன்னாட்டு மற்றும் உள்நாட்டுப் பெறுகைகளின் மத்திய வங்கி கொள்வனவுகள், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மத்திய வங்கியுடனான நாணய எடுப்பனவுகள் மற்றும் வைப்புக்கள், மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல் உடைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் போன்ற பல காரணிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அத்தகைய நாளாந்த எதிர்வுகூறல்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் பின்வரும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் நடத்தப்பட்டன.


#### ஆ) ஓரிரவு ஏலங்கள்

**(i) மீள்கொள்வனவு ஏலங்கள்**

2016இல், ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்கள் 11 தடவைகள் நடத்தப்பட்டதுடன் ரூ.272.0 பில்லியன் கொண்ட தொகை முன்வைக்கப்பட்டது. இரண்டு ஏலங்கள் நிராகரிக்கப்பட்ட வேளையில் 7.42 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்குமிடப்பட்ட வீச்சிலான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் ஒன்பது ஏலங்களிலும் ரூ.151.82 பில்லியன் கொண்ட தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வரைபடம் II-5

2016இல் மேற்கொள்ளப்பட்ட நாளொன்றுக்கு இடையிலான திரவத்தன்மை வசதி




**(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

2016இன் பெரும்பாலான நாட்களில் ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்டன. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 136 நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியதுடன் ரூ.4,252 பில்லியன் கொண்ட தொகையினை முன்வைத்தது. இதில் 134 ஏலங்கள் 6.59 சதவீதத்திற்கும் 8.50 சதவீதத்திற்குமிடையிலான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீத வீச்சில் மொத்தமாக ரூ.3,949.72 பில்லியன் கொண்ட மொத்த அளவு ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், பங்கேற்கும் நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்ட உயர்ந்த வீதங்களின் காரணமாக 2 நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நிராகரிக்கப்பட்டன.

#### இ) குறுங்கால ஏலங்கள்

**(i) மீள்கொள்வனவு ஏலங்கள்**

குறுங்கால ஏலங்கள் அதேநாள் தீர்ப்பனவு அடிப்படையில் ஒரு வாரம் வரையிலான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்ளும் உபாயமொன்றாக நடத்தப்படுகிறது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 3 குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியதுடன் இதில் ரூ.80 பில்லியன் கொண்ட மொத்தத் தொகை முன்வைக்கப்பட்டது. இதில் 6.29 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்குமிடப்பட்ட வீச்சிலான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் ரூ.47.0 பில்லியன் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

இவ்வாண்டுப்பகுதியில், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களெதனையும் நடத்தவில்லை.

ஈ) நீண்ட கால ஏலங்கள்

(i) மீள்கொள்வனவு ஏலங்கள்

நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள் 2016 சனவரியில் மாத்திரமே நடத்தப்பட்டன. ரூ.165.0 பில்லியன் கொண்ட மொத்த முன்வைப்புக்களுடன் மொத்தமாக 14 நீண்டகால மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்ட வேளையில் 6.37 சதவீதத்திற்கும் 6.55 சதவீதத்திற்குமிடைப்பட்ட வீச்சிலமைந்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் ரூ.53.10 பில்லியன் கொண்ட 9 ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்களின் காலம் 11 நாட்களுக்கும் 28 நாட்களுக்குமிடையில் வேறுபட்டது.

(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

2016ஆம் ஆண்டுப்பகுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் எந்தவொரு நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தினையும் நடத்தவில்லை.

உ) உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் மிகையான திரவத்தன்மையினை நிரந்த அடிப்படையில் ஈர்த்துக் கொள்வதற்காக, 2016இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகளுக்காக ஏலங்களை நடத்தியது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் ரூ.60.0 பில்லியன் முன்வைக்கப்பட்ட 9 உடனடி விற்பனை ஏலங்களை நடத்தியவிடத்து 6.47 சதவீதத்திலிருந்து 6.77 சதவீதம் வரையிலான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் ரூ.39.60 பில்லியன் தொகை கொண்ட 6 ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனினும், பங்கேற்கும் நிறுவனங்கள் குறைந்த வீதங்களை முன்வைத்தமையின் காரணமாக 3 ஏலங்கள் நிராகரிக்கப்பட்டன.

சந்தையில் நிலவிய திரவத்தன்மை பற்றாக்குறையின் காரணமாக, 2016 நவெம்பரிலிருந்து நிரந்தர அடிப்படையில் சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக திறைசேரி உண்டியல்களின் உடனடிக் கொள்வனவுகளுக்காக ஏலங்கள் நடத்தப்பட்டன. உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் ரூ.165 பில்லியன் முன்வைக்கப்பட்ட 78 அளவுடன் உடனடிக் கொள்வனவு ஏலங்களை நடத்தியது. 8.65 சதவீதத்திற்கும் 9.95 சதவீதத்திற்குமிடையிலான வீச்சினைக் கொண்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் ரூ.15.8 பில்லியன் கொண்ட தொகையுடன் 15 ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனினும், பங்கேற்கும் நிறுவனங்கள் உயர்ந்த வீதங்களை முன்வைத்தமையின் காரணமாக 16 ஏலங்கள் நிராகரிக்கப்பட்டன. எஞ்சிய ஏலங்களுக்கு சந்தையிலிருந்து பிரதிபலிப்புக்கள் எதுவும் காணப்படவில்லை.

### 6.3.2 துணைநில் வசதிகள்

வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை மற்றும் நாளாந்த திறந்த சந்தை ஏலங்களினூடாக தமது குறுங்கால திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை முழுமையாக முகாமைத்துவப்படுத்த முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பனவற்றினூடாக ஆண்டு முழுவதும் துணைநில் வசதிகள் வழங்கப்பட்டன. 2016ஆம் ஆண்டுப்பகுதியில் துணைநில் வைப்பு வசதி கொடுக்கல்வாங்கல்கள் ஏறத்தாழ ரூ.23.1 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரியினையும் ரூ.5,572.7 பில்லியன் கொண்ட மொத்தத் தொகையினையும் கொண்டிருந்தன. 2016இல் துணைநில் கடன்வழங்கல் வசதியின் கீழான கடன் வழங்கலின் மொத்த அளவு ரூ.15.8 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரி அளவுடன் ரூ.3,208.3 பில்லியனாகக் காணப்பட்டது.

### 6.3.3 நியதி ஒதுக்குத் தேவைப்பாடு

**நியதி ஒதுக்குத் தேவைப்பாடு என்பது இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க, ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அவ்வொவ்வொரு வங்கியினதும் மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களில் ஒரு பகுதியினை மத்திய வங்கியுடனான ஒதுக்குக் கணக்கில் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்ற குறைந்தபட்ச ஒதுக்குத் தொகையொன்றாகும்.**

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நியதிஒதுக்குத் தேவைப்பாட்டின் பேணலை நிருவகித்தல் மற்றும் வர்த்தக வங்கிகளின் இணங்குவிப்புக்களை கண்காணித்தல் ஆகிய இரண்டிற்கும் பொறுப்பாக இருக்கிறது. நாணயக் கூட்டுக்களால் ஏற்படும் பொருளாதாரத்தின் எதிர்காலப் பணவீக்கத்திற்கு தூண்டுதலளிக்கக்கூடிய நியாயமற்ற விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துகின்ற நோக்குடன் நியதிஒதுக்குத் தேவைப்பாடு 2016 சனவரி 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2015 திசெம்பரில் 7.5 சதவீதத்திற்கு 150 அடிப்படைப் புள்ளிகளினால் மேல்நோக்கித் திருத்தப்பட்டது. இதன் விளைவாக, 2016இன் தொடக்கத்தில் ஏறத்தாழ ரூ.52.0 பில்லியன் கொண்ட மிகையான திரவத்தன்மை பணச் சந்தையிலிருந்து ஈர்த்துக்கொள்ளப்பட்டது.

### 6.3.4 வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ், குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) 15 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், இவ்வீதத்தில் கடன்படுவதற்கு மத்திய வங்கியை எவ்வங்கியும் நாடாமையினால், இவ்வட்டி வீதமானது கோட்பாட்டு ரீதியான வீதமாக மட்டுமே காணப்பட்டது.

## 6.4 வர்த்தக வங்கிகள் மற்றும் அரசிற்கான வங்கியாளர்

### 6.4.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

வினைத்திறன்மிக்க வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமையினை உறுதிப்படுத்துவதற்காக, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் நடைமுறைக் கணக்கு வசதிகளை தொடர்ச்சியாக வழங்கியதன் மூலம் வங்கிகளுக்கான வங்கியாளர் என்ற மத்திய வங்கியின் வகிபாகத்தினைச் செயற்படுத்துவதற்கு வசதியளித்தது. 2016இன் இறுதியில் இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக 25 கணக்குகளையும் முதனிலை வணிர்களுக்காக 8 கணக்குகளையும் பேணியது. இக்கணக்குகள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன.

### 6.4.2 அரச கணக்குகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், அரச திணைக்களங்கள், அரச முகவர்கள், நிறுவனங்கள் மற்றும் நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைப் பேணியதுடன் அவற்றிற்குத் தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் வழங்கியதன் மூலம் அரசிற்கான வங்கியாளர் என்ற அதன் வகிபாகத்தினையும் ஆற்றியது. 2016 இறுதியில் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்ட கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 61 ஆகக் காணப்பட்டது. இதன்படி, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், இவ்வாண்டுப் பகுதியில், அரசாங்கத்தின் சார்பில் ரூ.14,963.3 பில்லியன் கொண்ட 22,730 கொடுக்கல்வாங்கல்களைக் கையாண்டது. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவை திறைசேரிக் கணக்குகளுக்கான துணைச் செயலாளர், பொதுப்படுகடன் திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கு, உள்நாட்டரசிறை ஆணையாளர் பெறுமதிசேர் வரி மீளளிப்புக் கணக்கு மற்றும் சனாதிபதி நிதியக் கணக்கு என்பனவற்றுடன் தொடர்பானவையாகக் காணப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு இறையாண்டில், மதிப்பிடப்பட்ட அரச அரசிறையில் 10 சதவீதம் என்ற உச்சமட்ட வரையறைகளுக்குட்பட்டு, கட்டணங்களெதுவுமின்றி அரசாங்கத்திற்கு முற்பணங்களை வழங்குகின்றது. 2016இன் தொடக்கத்தில், 2016ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட அரச அரசிறையின் அடிப்படையில், தற்காலிக முற்பணங்களின் தொகை 2015ஆம் ஆண்டிற்கான ரூ.153.2 பில்லியன் கொண்ட தற்காலிக முற்பணங்களுடன் ஒப்பிடுகையில் ரூ.31.9 பில்லியனால் ரூ.185.1 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் நாடாளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

### 6.5 ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ஏற்பாடு

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ஏற்பாட்டினை வழங்குவதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமானதும் வினைத்திறன்மிக்கதுமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தியது. இவ்வசதியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பிணையங்களுக்கெதிராக கட்டணமெதுவுமின்றி வழங்கப்பட்டதுடன் இவை அதேநாளன்று சந்தை விலைகளில் ஏற்படக்கூடிய ஏதேனும் வேறுபாடுகளை ஈர்த்துக் கொள்வதற்கேதுவாகப் போதுமான இலாபத்துடன் அவற்றின் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்டன.

இவ்வாண்டுப் பகுதியில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் மொத்தப் பெறுமதியும் சராசரி நாளாந்தப் பெறுமதியும் முறையே ரூ.9,351 பில்லியனாகவும் ரூ.38.8 பில்லியனாகவும் காணப்பட்டன. இது ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் பயன்பாடு முன்னைய ஆண்டின் முறையே ரூ.5,594 கொண்ட பில்லியன் மொத்தப் பெறுமதி மற்றும் ரூ.23.3 பில்லியன் கொண்ட சராசரிப் பெறுமதி என்பனவற்றினைவிக் கூடுதலான அதிகரிப்பொன்றினைக் காட்டியது.

### 6.6 பணத் தரகர்களின் மேற்பார்வை

விலையினைக் கண்டறியும் செயன்முறையில் பணச் சந்தைகளில் (பணம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் அரச பிணையங்கள்) பணத் தரகர்களின் வகிபாகத்தின் முக்கியத்துவத்தினை பரிசீலனையில் கொண்டு, 2013 பெப்புருவரி 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் 10(இ) பிரிவின் கீழ் 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகர் ஒழுங்குவிதி விடுக்கப்பட்டது. இவ்வொழுங்குவிதியின் கீழ் மொத்தமாக ஒன்பது கம்பனிகள் "அதிகாரச் சான்றிதழ்" வழங்கப்பட்டு "அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள்" எனக் குறித்துரைக்கப்பட்டனர். பணச்சந்தை நடவடிக்கைகளின் கண்காணிப்பினை மேம்படுத்தும் பொருட்டு, 2016இன் 01ஆம் இலக்க பணத்தரகர் ஒழுங்கு விதியின் 20ஆவது ஒழுங்கு விதிக்கமைய உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் பணத்தரகர்கள் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களுடனும் தொடர்பான தரவுகளை அதேநேரக் கணனி வழி முறைமையில் அறிக்கையிடுவதனை அறிமுகப்படுத்தியது. இம்முறைமையின் கீழ் பணச்சந்தையின் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் பணத்தரகர்களினூடாக மேற்கொள்ளப்பட்டதுடன் இணைத்தரப்பினர்களின் பெயர்களுடன் சேர்ந்த குறிப்பீடுகள் அதேநேர அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 9 பணத்தரகுக் கம்பனிகளில் 9 தலத்திலான பரீட்சிப்புக்களை மேற்கொண்ட வேளையில் இக்கம்பனிகளின் பணிப்பாளர் சபையுடன் 6 கூட்டங்கள் நடத்தப்பட்டன. 2016ஆம் ஆண்டுப்பகுதியில் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களின் எண்ணிக்கை மாற்றமின்றிக் காணப்பட்டது.

**பணத் தரகர்களின் பட்டியல்**

1. பார்ட்லீட் மெக்லய் அன்ட் றோய் (பிறைவேற்) லிமிடட்
2. பெர்ஸ்ட் அலையன்ஸ் மணி புறோக்கர்ஸ் (பிறைவேற்) லிமிடட்
3. ஜோர்ச் ஸ்ருவர்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிறைவேற்) லிமிடட்
4. எம்விஎஸ் மணி புறோக்கர்ஸ் லிமிடட்
5. நவரா பொறெக்ஸ் அன்ட் மணி புறோக்கர்ஸ் லிமிடட்
6. பிக்கொட் சாப்மான் அன்ட் கம்பனி (பிறைவேற்) லிமிடட்
7. எஸ்எம்பி மணி புறோக்கர்ஸ் (பிறைவேற்) லிமிடட்
8. தப்றொபேன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேற்) லிமிடட்
9. விஷ்வின் மணி அன்ட் எக்ஸ்சேன்ஜ் புறோக்கர்ஸ் லிமிடட்

## 7. பொருளாதார ஆராய்ச்சி

1949ஆம் ஆண்டின் நாணய விதிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கி தாபிக்கப்பட்ட போது சட்டரீதியாக உருவாக்கப்பட்ட முக்கிய திணைக்களங்களிலொன்று பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமாகும். இதன்படி பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் என்பனவற்றில் நாணயச் சபைக்கும் ஆளுநருக்கும் வழிகாட்டுவதற்காகவும் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதற்காகவும், பணம், வங்கித் தொழில் மற்றும் பொதுவான ஈடுபாடுமிக்க ஏனைய பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்வதென நாணய விதிச்சட்டத்தின் 25ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான இலங்கை மத்திய வங்கியின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாணயக் கொள்கை மற்றும் வெளிநாட்டுத் துறைக் கொள்கைகளில் தனது கடைமைகளை மேற்கொண்டதுடன் அரசாங்கத்திற்கான ஆலோசகராக வங்கியின் தொழிற்பாட்டுக்கு வசதியளித்தது. முக்கியமான விடயங்களில் ஆராய்ச்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளுதல், மத்திய வங்கியின் சார்பில் நியதிச்சட்ட வெளியீடுகளை வெளிப்படுத்துவதற்கும், பொதுமக்கள் உள்ளடக்கிய சகல ஆர்வலர்களுக்கும் தகவல்கள் மற்றும் தரவுகளைப் பரப்புவதற்கும் அரசாங்கத்தின் சார்பில் பன்னாட்டு நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதற்குமான கடப்பாடுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டது.

### 7.1 பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணல்

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் இலங்கை மத்திய வங்கி பேணுவதை வசதியளிக்கும் பொறுப்பினை பூர்த்தி செய்யும் வகையில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளிநாட்டு, இறை, நாணய மற்றும் உண்மைத் துணைறகளில் உள்நாட்டு பொருளாதாரம் மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தில் ஏற்படும் போக்குகள் மற்றும் அபிவிருத்திகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்து உற்று அவதானித்தது. இந்த தொடர்ந்த அவதானிப்பு, பேரண்டப்பொருளாதார புள்ளிவிபரங்கள் மற்றும் பேரண்டப்பொருளாதார எறிவுகளின் அடிப்படையில் விசாலமான பகுப்பாய்வுகள் தொகுக்கப்பட்டு, கால வாய்ப்பான கொள்கை பரிந்துரைப்புக்களுடன் நாணயக் கொள்கை குழுவிற்கு சமர்ப்பித்து, குறைந்தளவிலான பணவீக்கச் சூழலில் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்கு உகந்த நாணயக் கொள்கைப் பாதை தொடர்பாக நாணயச்சபைக்கு முன்னோக்கிய வழிகாட்டலை நாணயக் கொள்கைக் குழு வழங்குவதை இயலச்செய்தது. இந்த தீர்மானமெடுக்கும் செயன்முறைக்கு முக்கிய உள்ளீடுகளாக முதன்மைப் பணவீக்கம் மற்றும் மையப் பணவீக்கம், வெளியீட்டு இடைவெளி மீதான மதிப்பீடு,

விரிந்த பணம் மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் அசைவு போன்றவையின் போக்கின் எறிவுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது. உளநாட்டு மற்றும் வெளிநாட்டு கிளர்ச்சிகளிலிருந்து ஏற்படும் எறிவு செய்யப்பட்ட பாதையை எய்துவதற்கான உள்ளார்ந்த இடர்நேர்வுகளின் தொடர்ச்சியான மதிப்பீடும் நாணயச் சபைக்கு வழங்கப்பட்டது. மேம்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை சட்டகத்தின் இலங்கை மத்திய வங்கியின் பின்தொடர்கை பற்றி ஆண்டறிக்கை 2015 இல் அறிவிக்கப்பட்டதற்குப் பின்னர், நடுத்தரக் காலத்தில் நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பை நோக்கி முன்மொழியப்பட்ட நிலைமாற்றத் திட்டம் பற்றியான உத்தியோகப்பூர்வ மதிப்பீடுகளில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் ஈடுபட்டது. இந்த நிலைமாற்றத்தின் முக்கயிவொரு தனிமமாக, எதிர்வுகூறல் மற்றும் கொள்கை பகுப்பாய்வு முறைமை ஒன்றை நிர்மாணிப்பதற்கு, 2016இல் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான ஓர் தொழிலநுட்ப குழுமத்துடன் இணைந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் செயற்பட்டது. இதற்கேற்ப, பொருளாதார ஆராயத்தித் திணைக்களம் மூன்று தொழில்நுட்ப உதவிப் பணிகளை ஒருங்கணித்ததுடன் இலங்கை மத்திய வங்கியின் பொருளாதாரக் கொள்கை மதிவுரை கொத்தணியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்கள் இதில் கலந்துகொண்டனர். பேரண்டப்பொருளாதார மாதிரியமைத்தல் மற்றும் எதிர்வுகூறல் தொடர்பான இலங்கை மத்திய வங்கிப் பணியாளர்களின் தொழில்நுட்ப திறைமைகளை வலுவூட்டுவதை இப் பணிகள் நோக்கமாகக் கொண்டன. இந்த முறைமையின் படிநிலை நடைமுறைப்படுத்தலை தொடர்வதற்கு, முக்கிய பொறுப்புக்களை பொருளாதார ஆராயச்சித் திணைக்கள பணியாளாகள் மேற்கொள்ளும் வகையிலான திணைக்களுங்கிடையிலான ஓர் மாதிரியமைத்தல் மற்றும் எதிர்வுகூறல் குழு 2016 மேயில் உருவாக்கப்பட்டது. எதிர்வுகூறல் மற்றும் கொள்கை ஆய்வு முறைமையின் நடைமுறைப்படுத்தலில் முக்கிய ஓர் அடிநிலையாக, மாதிரியமைத்தல் மற்றம் எதிர்வுகூறல் குழு பன்னாட்டு நாணய நிதியத்தின் அணியுடன் ஒன்றிணைந்து நடுத்தரக்கால எறிவுகளை தயாரித்து, கண்டறிந்த முடிவுகளையும் கொள்கை பரிந்துரைப்புக்களையும் ஓர் சிறப்பு நாணயக்கொள்கைக் குழுக் கூட்டமொன்றில் வழங்கியது. இவ்வாறான முயற்சிகளை தொடர்வதற்கு நிறுவன ரீதியான ஒப்பியபொறுப்பிற்கான தேவையை கருத்திற்கொண்டு, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் மாதிரியுருமைத்தல் மற்றும் எதிர்வுகூறல் பிரிவு நிரந்தரமாக அமைக்கப்பட்டது. எதிர்வுகூறல் மற்றும் கொள்கை பகுப்பாய்வு முறைமையை மேலும் அபிவிருத்திச்செய்தல் மற்றும் நடைமுறைபடுத்தல் தொடர்பான பொறுப்புக்கள், இலங்கையிற்கான நிதியியல் செயற்றிட்டத்தை அமைத்தல் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளுடன் மாதரியுரு அடிப்படையிலான கொள்கை பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சியை மேற்கொள்வது போன்ற பொறுப்புக்கள் மாதிரியுருமைத்தல் மற்றும் எறிவுகூறதல் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டன. பன்னாட்டு நாணய நிதியித்தின் சமீபத்திய நாணய மற்றும் நிதியியல் புள்ளிவிபரக் கையேடுக்கமைய நாணய புள்ளிவிபரங்களின் தொகுத்தலின் மேம்படுத்தலையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆண்டுக் காலப்பகுதியில் தொடங்கியது. இதற்கேற்ப, 2016 யூலையில் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து ஓர் தொழில்நுட்ப பணியை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒருங்கிணைத்து, இதில் மத்திய வங்கி மற்றும் ஏனைய வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் தரப்படுத்தப்பட்ட அறிக்கைவழங்கும் உருக்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, இலங்கை மத்திய வங்கியின் பகுப்பாய்வு தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யும் வகையிலான ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட நாணய தரவுத்தளத்தை விருத்திசெய்யும் வழிமுறைக்கு பணியாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தொழில்நுட்ப உதவி கிடைத்தபின்னர், பன்னாட்டு நாணய நிதியத்தின் தரப்படுத்தப்பட்ட அறிக்கைவழங்கும் உருக்களின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி அறிக்கைப்படுத்தலை தொடங்கியது.

### 7.2. வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பேணல்

பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பேணும் நோக்குடன், பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நிதி தொடர்பான பொருளியல் புள்ளிவிபரங்களை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்து திரட்டி, தொகுத்து, பகுப்பாய்வுசெய்த வேளையில் உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் உலகளாவிய பொருளியில் அபிவிருத்திகளின் விரிவான கணிப்பீடுகளை மேற்கொண்டு பொருத்தமான கொள்கை பரிந்துரைப்புக்களை வழங்கியது. வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்கள் மற்றும் பெயரளவு மற்றும் உண்மை செலாவணி வீதங்களின் அசைவுகளில் பிரதிபலிக்கப்பட்டவாறான வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளை ஏனைய துறைவாரியான அபிவிருத்திகளுடன் கருத்திற்கொள்வதற்காக நாணயக் கொள்கை குழு மற்றும் நாணயச் சபைக்கு மாதாந்த அடிப்படையில் அறிவிக்கப்பட்டது. பலதரப்பட்ட வெளிநாட்டுத் துறை தொடர்பான விடயங்களை பகுப்பாய்வு செய்து அவை தொடர்பான அவதானிப்புகளை வழங்குவதுடன், நாணயச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி அரசாங்கிதானால் பெறப்பட்ட பல வெளிநாட்டுக் கடன்கள் நாணயக் கொள்கை மீது கொண்டுள்ள தாக்கத்தை தொடர்ந்து பொருளாதார ஆராயச்சித் திணைக்களம் மதிப்பிட்டது.

மேலும், வெளிநாட்டுத் துறையிலுள்ள உள்ளார்ந்த இடர்நேர்வுகள் தொடர்பாக ஒழுங்கான மற்றும் தறுவாய்க்கான சபை பத்திரங்கள் மூலமாக நாணய சபைக்கு அறிவிப்பதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் முக்கிய ஒரு பாத்திரத்தை மேற்கொண்டது. சிறப்பு எடுப்பனவு உரிமை 1.1 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) பெறுமதி கொண்ட மூன்றாண்டு கால விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளைப் பன்னாட்டு நாணய நிதியம் 2016 யூன் மாதத்தில் பெறுவதற்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கிய பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், நிகழ்ச்சித்திட்டத்திற்கு கீழ் ஓப்புக்கொள்ளப்பட்ட செயலாக்கப் பிரமாணம், தெரிநிலையான இலக்குகள் மற்றும் கட்டமைப்புச்சார்ந்த அளவுகோல்கள் தொடர்பான முன்னேற்றம்பற்றி நாணயச்சபைக்கு உத்தியோகப்பூர்வமாக இற்றைப்படுத்தியது

வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களின் தொகுத்தல் மற்றும் பரப்பல் தொடர்பாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் கடந்த காலங்களில் பல முன்னெடுப்புகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மேற்கொண்டது. சென்மதி நிலுவை புள்ளிவிபரங்கள் மற்றும் பன்னாட்டு முதலீடு நிலை புள்ளிவிபரங்களை சென்மதி நிலுவை கையேடு 6 இன் வடிவமைப்பிற்குக் கீழ் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ச்சியாக காலாண்டு அடிப்படையில் வெளியீடு செய்த வேளையில், உலக வங்கிக்கு காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களையும் ஒருங்கிணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீடிற்கு நேரடி முதலீட்டுத் தரவுகளையும் குறித்த நேரத்தில் அனுப்பீடு செய்துசமர்ப்பித்து, பன்னாட்டு ஒதுக்குத் தரவுகள் வார்புருவை வெளியிட்டது. முன் வெளியீடு நாட்காட்டியிற்கேற்ப தரவுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆண்டுக்காலப்பகுதியில் வெற்றிகரமாக பரப்பியது. தரவுகளின் துள்ளியம் மற்றும் குறித்த காலந்தவறாமை என்பவையை நிச்சயப்படுத்தும் வகையில், வருடாந்த பன்னாட்டு முதலீடு அளவீட்டின் பகுதியாக பல அளவீடுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மேற்கொண்டு 2016இல் 1,600 கம்பனிகளை எய்தும் வகையில் தனது உள்ளடக்கத்தை

அகலச்செய்தது. தனியார் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய தரவுகளையும் பணிகள் துறை தொடர்பான புள்ளிவிபரங்களை இவ் அளவீடுகள் சேகரித்தது. வெளிநாட்டுச் செலாவணியில் உள்நோக்கிய பணவனுப்பல்கள் பற்றிய மாதாந்த அளவீடும் தொடரப்பட்டது.

### 7.3 முன்கூட்டிய கொள்கை மதியுரைகளை வழங்குதல்

முக்கியமாக நாணயக் கொள்கை, செலாவணிக் கொள்கை மற்றும் இறைத் துறை தொடர்பான விடயங்கள் பற்றி பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது 2016ஆம் ஆண்டில் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கும் அரசாங்கத்திற்கும் முன்கூட்டிய கொள்கை மதியுரைகளைத் தொடர்ந்தும் வழங்கியது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 116 (1)க்கேற்ப, சென்ற ஆண்டுகளைப்போல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மாண்புமிகு நிதியமைச்சருக்கு செத்தெம்பர் 15ஆம் திகதி அறிக்கையை சமர்ப்பித்தது. ஆண்டின் முதல் ஒன்பது மாதக் காலப்பகுதியில் பொருளாதாரத்தில் நடைபெற்ற அபிவிருத்திகளை எடுத்துக்காட்டிய அதே வேளையில், அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்டத்தின் தயாரித்தலில் ஓர் கொள்கை வழிகாட்டியாக பணி புரிவதற்கு இந்த மந்தண அறிக்கை பொருளாதாரத்திலுள்ள பிரச்சனைகளை இனங்கண்டு கொள்கைக் குறிப்புகளை வழங்கியது. மேலும், நாணய விதிச்சட்டத்தில் வேறுபட்ட பிரிவுகளின் சட்டரீதியான தேவைபாடிற்கேற்ப மாண்புமிகு நிதி அமைச்சருக்கு கொள்கை மதிப்பீடும் ஆலோசனையையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியது.

பல்வேறுப்பட்ட வெளிவாரியான நிறுவனங்களின் பல செயற்குழுக்களிலும் சபைகளிலும் உறுப்பினர்களாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணியாளர்களம் தொடர்ந்தும் ஆர்வமாக சேவையாற்றினார்கள். இது, ஹெக்டர் கொப்பேக்கடுவ வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கை மின்சார சபை, பன்னாட்டு நாட்டிற்கான முறி வழங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாண்ய பால நிதியிடல் வசதிகளை பெறுவதற்குமான ஒப்பந்தப்புள்ளி சபைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பிடுதல் செயற்குழு, அரச நிதிப் புள்ளிவிபரங்களின் ஒருங்கிணைத்தல் குழு, மரபுசாரா புதுப்பிக்கத்தக்க வலுத் தீர்வை செயற்குழு, நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் காப்பீடு செயற்குழு மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கிகளை ஆராய்வதற்கான அணி போன்ற பல தேசிய முக்கியத்துவம் கொண்ட செயற்குழுக்கள் மற்றும் சபைகளை உள்ளடக்கியன. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் குழுவில் சேவையாற்றுவதுடன், திணைக்களத்தின் சிரேஸ்ட அலுவலகர்கள் சந்தை தொழிற்பாடுகள் குழு, உள்நாட்டு படுகடன் முகாமைத்துவக் குழு, முதலீடு மேற்பார்வைக் குழு, வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழு, நூலக ஆலோசனைக் குழு மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள் குழு போன்ற பல உள்ளகக் குழுக்களிலும் சுறுசுறுப்புடன் ஈடுபட்டு தமது அறிவாற்றலையும் கருத்துக்களையும் பகிர்ந்துள்ளனர். தங்களுடைய தொழில்நுட்ப ஆற்றலையும் அனுபவத்தையும் வழங்கி தொடர்ந்தும் திணைக்களங்குக்கிடையிலான பல அணிகளில் தொடர்ந்தும் சேவையாற்றினர்.

### 7.4 நியதிச்சட்ட வெளியீடுகளும் தரவுகள் மற்றும் தகவல்களைப் பரப்புதலும்

இலங்கை மத்திய வங்கியின் முதன்மைப் பொறுப்பாக நியதிச்சட்ட வெளியீடுகளை வெளியிடுதல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தால் ஏனைய திணைக்களங்களின் பங்களிப்புடனும் ஆதரவுடனும் இரு பாரிய ஆண்டு வெளியீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 35 இன் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் இணைந்த பொருளாதாரத்தின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய பொருளாதார அபிவிருத்திகள் பிரச்சினைகளும் சவால்களும் மற்றும் கொள்கை முன்னெடுப்புக்கள், நாணயச் சபையால் எடுக்கப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள் மற்றும் மத்திய வங்கி மற்றும் புள்ளிவிபரவியலுடன் தொடர்புடைய முக்கிய சட்டவாக்கங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய பகுப்பாய்வுகளுடன் ஆண்டறிக்கை 2015 குறிக்கப்பட்ட காலவரையறைக்குள் மூன்று மொழிகளிலும் வெளியிட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது “அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் 2016 இன் முக்கிய பண்புகள் மற்றும் 2017இற்கான வாய்ப்புக்கள் என்ற பொருளாதாரத்தின் இடைக்கால மீளாய்வினை 2016 நவெம்பரில் மூன்று மொழிகளிலும் வெளியிட்டது. 2017இன் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்ட “வழிகாட்டல் 2017: 2017 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறை கொள்கைகளை” பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2016 திசெம்பரில் தயாரித்தது.

இதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களுக்கும் நன்மையளிக்கும் விதத்தில் தரவு மற்றும் தகவல்களை பரப்புவதில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது. பொருளாதாரத்தின் அனைத்து துறைகளினதும் தரவுகளை உள்ளடக்கிய மாதாந்த புள்ளிவிபரக் குறிப்பு, மாதாந்த மற்றும் வாராந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், இலங்கை மத்திய வங்கியின நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் மற்றும் ஏனைய கிரமமான இற்றைப்படுத்தல்களை இலங்கை மத்திய வங்கியின் இணையதளம் மூலமாக வெளியிட்டது. இதற்கு மேலாக பொதுமக்களின் ஈடுபாடு கொண்ட பொருளாதாரத்தில் நடைபெற்ற பல சம்பவங்கள் தொடர்பாகவும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பத்திரிகை வெளியீடுகளாக வழங்கியது.

### 7.5 கொள்கை ஆராய்ச்சிகளில் ஈடுபடுதலும் அறிக்கையாற்றலை பகிர்ந்து கொள்ளுதலும்

நாட்டின் ஒரு முதன்மைப் பொருளாதார நிறுவனமாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாணயக்கொள்கைக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் ஆலோசனை வழங்குவதற்காக தற்போதைய பொருளாதார சிக்கல்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பான பல கொள்கை ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டது. சிரேஸ்ட முகாமைத்துவமானது பொருளாதாரத்தின் நிலைப்பாடு, பொருளாதாரத்தில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் சவால்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட கொள்கைப் பணிப்புரைகள் தொடர்பில் தகவற்றொடர் நாணயச் சபை அறிக்கைகள், நாணயக் கொள்கை சபை அறிக்கைகள், கணிப்பீடு அறிக்கைகள மற்றும் முன்னிலைப்படுத்தல்கள் மூலமாகவும் கிரமமாக இற்றைப்படுத்தப்பட்டது.

அனைத்து ஆராய்ச்சி தொடர்பான வேலைகளுக்கும் பொறுப்பான உள்ளகக் குழுவான ஆராய்ச்சி மதியுரைக் குழுமம், திணைக்களத்தினுள்ளும் இலங்கை மத்திய வங்கி முழுவதிலும் தொடர்ந்தும் ஆராய்ச்சி கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கு வசதியளித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ ஆராய்ச்சி வெளியீடான அலுவலர் ஆய்வினைத் தொடர்ந்தும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்கள அலுவலகர்களின் ஆராய்ச்சி விளைவுகளை உள்ளடக்கி வெளியிட்டது.இதற்கு மேலதிகமாக, பொருளியல் துறையிலுள்ள

தொழில்நுட்ப மற்றும் சமகால அபிவிருத்திகள் தொடர்பான பகிர்வை ஊக்குவிப்பதற்காக திணைக்களத்திற்குள் துறைவாரியான நிபுணர்களால் பல பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள கருத்தரங்குகளாக திணைக்களத்திற்குள் நடத்தப்பட்டன. மேலும், பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து ஆறு குழுக்களைக் கொண்ட உள்ளகப் பயிற்சியாளர்கள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு வருகை தந்திருந்ததுடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளும் அவர்களுக்கு பொருளியல் மற்றும் மத்திய வங்கித்தொழில் தொடர்பான நடைமுறை விடயங்கள் பற்றிய அறிவூட்டுவதிலும் உற்சாகமாக ஈடுபட்டிருந்தன. மனித வளங்கள் திணைக்களத்திடனும் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்துடனும் இணைந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொருளாதார அரசாங்கத்தின் ஒரு தொடரினையும் மத்திய வங்கி அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் ஆர்வத்திற்கேற்றவாறான பல்வேறுபட்ட தலைப்புக்களில் பொருளியல் மன்றங்கள மற்றும் பகிரங்க விரிவுரைகளை ஒழுங்கு செய்ததுடன், இலங்கை மத்திய வங்கி கட்டமைப்பான உயர் நிலை பயிற்சித் திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு வசதியளித்தது.

ஆராய்ச்சி மதிப்புரைக் குழுமம் இலங்கை மத்திய வங்கியின் 9 ஆவது பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டை வெற்றிகரமாக ஒழுங்கு செய்ததுடன், இது மதிப்புக்குரிய ஆராய்ச்சியாளர் மற்றும் கல்வியாளர்கள் சமகால பேரண்டப் பொருளாதாரம் சிக்கல்கள் தொடர்பான தமது ஆய்வுகளை முன்னிலைப்படுத்துவதற்கான ஓர் அரங்கத்தை வழங்கியது. 2016 இன் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு “சவால் நிறைந்த பூகோளத்திலும் உள்நாட்டுச் சூழலிலும் நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் எனும் தொனிப்பொருளில் நடாத்தப்பட்டதுடன் அதன் பிரதான உரையினை இந்தியக் குடியரசின் திட்டமிடல் குழுவின் முன்னாள் துணைத்தலைவரான முனைவர் மொன்டெக் சிங் அளுவாலியா ஆற்றினார். சென்ற ஆண்டுகளைப் போலவே 2016 இன் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடும் முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம்பெற்று பொருளாதாரங்கள் மற்றும் இலங்கையிலிருந்தான கல்விசார் மற்றும் கொள்கை நடைமுறைபடுத்தும் நிறுவனங்களிலிருந்து பல எண்ணிக்கையான தரமிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கவர்ந்திருந்தது. ஒரு கடினமான மீளாய்வு செய்முறையின் பின்னர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திலிருந்து இரு ஆராய்ச்சிக் கட்டுரைகளை உள்ளடக்கி எட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் மாநாட்டில் முன்னிலைப்படுத்தல்படுபவர்களாக தெரிவுசெய்யப்பட்டன. 2016 பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டின் ஒரு விசேட அம்சமாக அழைப்பின் பேரிலான முன்னிலைப்படுத்தலானது “இலங்கை நிதியியல் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்ட அறிக்கை” பேராசிரியர் லலித் சமரகூனினால் வழங்கப்பட்டது. ஆராய்ச்சியிலான மேன்மையினை அங்கீகரிக்குமுகமாக மிகச்சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரையான *முனைவர் டி.எஸ்.விஜேசிங்க ஞாபகார்த்த விருது* பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலரான முனைவர் சுஜீதா ஜெகஜீவன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த மாநாட்டில் 2015இன் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டின் குறிப்பேடு வெளியிடப்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சஞ்சிகைகளில் தொடர்ந்தும் தங்களது ஆராய்ச்சியை வெளியிட்டார்கள். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள ஆலுவலகள்களான முனைவர் ரசிக்கா யடிகமன அவர்கள் *பொருளியலளவையின் காரணகாரிய அனுமானம்* (ஸ்பிறிங்கள் இன்டர்நேனல் பப்ளிசிங்) எனும் புத்தகத்தில் *விரிவாக்கப்பட்ட பங்களிப்புடனான பிற்செலவு நிபந்தனையில் அளவு மாதிரி* என்ற அத்தியாயத்தை சேர்ந்து எழுதியதுடன் முனைவர் ஆர்.ஏ. பெரேரா அவர்களால் வர்த்தக வங்கி சில்லறை வட்டி வீத சரிப்படுத்தல்களின் தீர்மானங்கள்: குழுத்தரவு மாதிரியிலிருந்தான சான்று என்ற தலைப்புடைய ஆராய்ச்சி சர்வதேச நிதிச்சந்தைகள், நிறுவனங்கள் மற்றும் பணம் நாளேடு என்பதில் பிரசுரிக்கப்பட்டதுடன் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் மற்றும் மேலதிக பணிப்பாளர்கள், ஆராய்ச்சி வழங்குனர்களாகவும் விவாதகாரர்களாகவும் பல ஆராய்ச்சி மன்றங்களில் சேவையாற்றினர். மேலும், மாலைதீவில் *பிரயோகப் பொருளியலளவையின்* மீதான நிகழ்ச்சி, தாய்லாந்தில் *நேரடி முதலீடு தொகுப்பு* பற்றிய பயிற்சிப்பட்டறை உள்ளடங்கிய இலங்கையிலும் வெளிநாடுகளில் நடைபெற்ற பயிற்சித் திட்டங்களுக்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் வள ஆட்களாக சேவையாற்றினர். மேலும், மலேசியாவின் தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையத்தின் தொடக்க ஆராய்ச்சி வாரத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் இரு அலுவர்கள் நாணயக் கொள்கை மற்றும் பேரண்டப் பொருளாதார மாதிரியிடலுடன் தொடர்புபட்ட தமது ஆராய்ச்சிகளை முன்னிலைப்படுத்திய வேளையில், தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையம் மற்றும் தெற்காசிய பிராந்திய ஒருங்கிணைப்பு சங்கம் நிதியினால் தொகுகப்படும் இணை ஆராய்ச்சி வெளியீடுகளுக்கு அலுவலர்கள் பங்களித்தனர்.

சென்மதி நிலுவை கையேடு 6ஆம் பதிப்பு தொடர்பான மாற்றங்கள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, ஆண்டுப்பகுதியில் சென்மதி நிலுவை கையேடு 6இலிருந்து விளையும் மாற்றங்கள் மற்றும் வெளிநாட்டுத் துறையான புள்ளிவிபரங்களை விளக்கும் ஏனைய முக்கிய விடயங்களை விவரிக்கும் ஓர் சிறு நூலை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களை தயாரித்தது. இச் சிறிய நூல் 2017இல் பிரசுரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களின் தொகுப்பில் பரந்த அனுபவம் கொண்ட அடிப்படையில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் அலுவலகர் திரு. ஏ. ஜே. விஜயவர்தன அவர்கள் ஏனைய மத்திய வங்கிகளில் குறுங்கால பயிற்சிகளை நடத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் சென்மதி நிலுவை நிபுணராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இலங்கையில் செலாவணி வீத நிர்ணயித்தலின் அடிப்படைகள் மற்றும் செலாவணி வீதத்தின் சந்தை அடிப்படையிலான நிர்ணயிப்பு தொடர்பில் பொதுமக்களிற்கு அறிவூட்டும் வகையில் ஆண்டுப்பகுதியில் *செலாவணி வீதம் மற்றும் தேய்மானத்தின் பொருளாதாரத் தாக்கம்* என்பதை பற்றிய ஓர் தகவல் தொடர் குறிப்பு மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தில் சிரேஸ்ட ஊழியர்களால் 2015 ஆண்டறிக்கை மீதான பகிரங்க விரிவுரை மும்மொழிகளிலும் நடாத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்களும் தொழிற்பாடுகளும், நாணயக் கொள்கை, இறைக்கொள்கை, வெளிநாட்டுத் துறைக் கொள்கைகள் மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பான பெரும் எண்ணிக்கையிலான கல்விசார் விரிவுரைகள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்களால் நடாத்தப்பட்டன. மேலும், இலங்கை மத்திய வங்கியின் பட்டபின் கற்கைகளுக்கான உயர்தர ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தயாரித்தல் மூலம் உள்ளக பட்டப்பின் கற்கைகளை நாடுபவர்களின் ஆராய்ச்சி செயற்திறனை அபிவிருத்தி செய்வதற்கும் பேரண்டப்பொருளியல், நுண்பாகப்பொருளியல் மற்றும் கணிதவியலில் குறுங்கால பாடத்திட்டங்களை நடத்தி புலமைப்பரிசில் திட்டத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக அனுபவம்வாயந்த மற்றும் முனைவர் மற்றும்

மேற்பட்டபடிப்பு தகைமைகள் கொண்ட பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் அலுவலர்கள் உதவிபுரிந்தார்கள். பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க 17 ஆராய்ச்சி முன்மொழிவுகளும் 11 பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளும் தென்கிழக்காசிய மத்திய வங்கியின் நிலையத்தினால் முன்வைக்கப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளுக்கு மேலதிகமாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்களால் மதிப்பீடு செய்யப்பட்டன. இந்த அலுவலர்கள் 2016 இன் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டிற்காக கிடைக்கப்பட்ட 80 ஆராய்ச்சி கட்டுரைகளையும் மதிப்பீடு செய்துள்ளனர்.

தொடர்பாடல் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட, சிங்களம் மற்றும் தமிழ் மொழிலகளில் முறையே,"தக்சிலாவ" மற்றும் "அறிவூற்று" என்ற தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்ட கல்வி விரிவுரை தொடரில் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் பல சிரேஸ்ட அலுவலர்கள் வள ஆட்களாக சேவையாற்றினர். மேலும், சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெற்ற இகோன் ஐகோன், பாடசாலைகளுக்கிடையிலான வினாவிடை போட்டியின் ஏற்பாட்டில், தொடர்பாடல் திணைக்களத்திற்கு திணைக்கள பணிப்பாளர்கள் துணைபுரிந்தனர். இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் வங்கிகளுக்கிடையிலான வினா விடை போட்டி ஏற்பாட்டிலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் செய்வினையாக பங்களித்தது.

### 7.6 பன்னாட்டு அமைப்புக்களுடனான தொடர்புகளைப் பேணுதல்

இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பன்னாட்டு நாணய நிதியம், தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையம், தென்கிழக்காசியா அவுத்திரேலியா நியூசீலாந்து முன்னெடுப்பு மற்றும் தெற்காசிய பிராந்திய ஒருங்கிணைப்பு சங்கம் நிதி போன்ற பன்னாட்டு பல்புடை நிதியியல் நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி தொடர்பாடல் மத்திய நிலையமாக பொருளாதார தொடர்ந்தும் செயலாற்றிய வேளையில், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய முக்கிய பன்னாட்டு முகவர்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு உதவியளித்தது.

இதேவேளையில், விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான நான்கு பன்னாட்டு நாணய நிதிய பணிகளையும் கிரமமான உருப்புரை IV ஆலோசனை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒருங்கிணைத்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர்கள் பிராந்தியத்திலுள்ள ஏனைய மத்திய வங்கிகளிலிருந்தான ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து சார்க் நிதிய நடவடிக்கைகளில் பணிபுரிந்தது. 2015இல் பெருவில் இடம்பெற்ற 31ஆவது சார்க் நிதியக் குழுமக் கூட்டத்தில் சார்க் நிதியத்தின் தலைமைப் பதவி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருக்கு அளிக்கப்பட்டு, அதற்கேற்ப, 23ஆவது சார்க் நிதிய ஒருங்கிணைப்பாளர்களுக்கான கூட்டத்தினையும் சார்க் நிதியத்தின் கூட்டிணைக்கப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகளின் கீழ் 2016 ஏப்பிறல் ஆராய்ச்சியாளர்களது கூட்டத்தையும் 2016 செத்தெம்பரில் 24ஆவது சார்க் நிதிய ஒருங்கிணைப்பாளர்களுக்கான கூட்டம், ஆகியவற்றிற்கு இலங்கை மத்திய வங்கி புரவலராக சேவையாற்றியதுடன், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது முக்கிய ஏற்பாட்டளராக செயற்பட்டது. இந்தக கூட்டங்களுக்கு மத்திய வங்கியிலிருந்து சார்க் நிதிய ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சார்க் பிராந்தியத்தின் நிதியமைச்சுக்களில் முக்கிய பதவிவகிப்பவர்கள் போன்றோர் பங்குபற்றினர். அதே நேரம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இந்தியாவின் நிசேர்வ் வங்கியில் 2016 மே மாதம் நடாத்தப்பட்ட சார்க் நிதிய ஆளுநர்களுக்கான ஆய்வரங்கில் சார்க்நிதிய தரவுத்தளத்தினை அறிமுகம் செய்வதற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வசதியளித்ததுடன், சார்க் பொருளாதாரங்கள் பற்றிய ஆராய்ச்சியினை மேம்படுத்துவதற்காக தரவுத்தளத்தினை விரிவுபடுத்துவதற்கான சாத்தியத்தன்மை மற்றும் வழிமுறைகளை ஆய்வு செய்வதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூன்று அலுவலர்களை உள்ளடக்கிய சார்க் நிதிய தரவுத் தளத்திற்கான செயல்முறைக்குழு உருவாக்கப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நாட்டிற்கான தரமிடல் முகவர்கள் போன்ற பல பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கும் பொருளாதார புதுப்பிப்பு மற்றும் பேரண்டப்பொருளாதார புள்ளிவிபரங்களை தெடர்ந்தும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியது. பொருளாதாரத்தின் அண்மைக்கால அபிவிருத்திகள், முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளின் போக்குகளும் அசைவுகளும் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடுகள் பற்றிய கவனயீர்ப்புச்செய்யும் வகையிலான அளிக்கைகளின் தயாரித்தலை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒருங்கிணைத்தது.

## 8. ஊழியர் சேம நிதியம்

அரசுசார் மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளை வழங்கும் பொருட்டு இலங்கையின் மிகப்பெரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேம நிதியம் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, நிதியத்தின் அனைத்து நிருவாக அதிகாரங்களும் செயற்பாடுகளும் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில் நிதிய முகாமைத்துவத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற முறையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாணயச் சபை அதன் செயற்பாட்டினை ஆற்றுவதில் ஒரு தொழிற்பாட்டு சக்தியாக தொழிற்படுவதற்காக ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திற்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது.

### 8.1 திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திடம் உறுப்பினர் பங்களிப்புக்களையும் மேலதிகக் கட்டணங்களையும் சேகரித்தல், பொதுக் கணக்குகளையும் உறுப்பினர் கணக்குகளையும் பேணுதல், உறுப்பினர் கணக்குகளுக்கு வட்டியை வரவு வைத்தல், நிதியத்தின் பயனாளிகளுக்கு நன்மைகளைக் கொடுப்பனவு செய்தல், மிகையான நிதியங்களை முதலீடு செய்தல் மற்றும் நாணயச் சபையும் தொழில் ஆணையாளரும் தமது கடமைகளையும் தொழிற்பாடுகளையும் மேற்கொள்ளும் வேளையில் ஏற்படும் செலவினங்களை விதித்தல் ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேம நிதியத் திணைக்களம் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் கொள்கைகளின் 2016ஆம் ஆண்டுப் பகுதியில் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன் தொழில் ஆணையாளருடன் நெருக்கமான விதத்தில் ஒத்துழைத்தது.

### 8.2 நடவடிக்கைகளின் செயலாற்றம்

#### அ) நிதியத்தின் பெறுமதி, உறுப்பினர் நிலுவைகள் மற்றும் மீளளிப்புக்கள்

2016 இறுதியில், நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2015 இறுதியின் ரூ.1,664.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,841.5 பில்லியனுக்கு 10.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முதலீடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருவாயும் பெறப்பட்ட தேறிய

பங்களிப்புக்களுமே (பங்களிப்புக்களிலிருந்து மீளளிப்புக்களைக் கழித்த பின்னர்) காரணங்களாகும். உறுப்பினர்களின் வட்டி உட்பட உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்புக்கள் 2016 இறுதியில் ரூ.1,810.6 பில்லியனாக விளங்கி 2015 இறுதியின் ரூ.1,625.5 பில்லியனிலிருந்து 11.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது (அட்டவணை II-8). பங்களிப்பு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.102.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.118.3 பில்லியனுக்கு 15.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் 2016இல் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட மொத்த மீளளிப்புக்கள் ரூ.108.4 பில்லியனாக விளங்கின. இது 2015இனை விட 39.3 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இதற்கு வீடமைப்பு மற்றும் மருத்துவ தேவைப்பாடுகளுக்கான 30 சதவீதம் கொண்ட மீள்எடுப்பனவு வசதியின் கீழ் செய்யப்பட்ட கொடுப்பனவுகளே காரணமாகும். இதற்கமைய, தேறிய பங்களிப்பு 2015இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.24.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.9.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. நிதியத்தின் தேறிய வருமானம் முன்னைய ஆண்டின் ரூ.156.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ரூ.175.9 பில்லியனுக்கு அதிகரித்து 12.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

**அட்டவணை II - 8**
**நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய தகவல்கள்**

| விடயம் | 2015 | 2016(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்) | 1,664.9 | 1,841.5 | 10.6 |
| உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு ரூ.பில்) | 1,625.5 | 1,810.6 | 11.4 |
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 16.9 | 17.1 | 1.2 |
| பங்களிப்புச் செலுத்தும் உறுப்பினர்கள் கணக்குகள் (மில்) | 2.6 | 2.4 | (7.7) |
| பங்களிப்புச் செலுத்தாத உறுப்பினர்கள் (மில்.) | 1.43 | 14.7 | 2.8 |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 102.5 | 118.3 | 15.4 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்.) | 77.8 | 108.4 | 39.3 |
| தேறிய பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 24.7 | 9.9 | (59.9) |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 136,815 | 187,147 | 36.8 |
| தேறிய வருமானம் (ரூ.பில்.) | 156.9 | 175.9 | 12.1 |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## ஆ) நிதியம் மற்றும் வருவாயின் முதலீடு

### (i) முதலீட்டுச் சொத்துப்பட்டியல்:

நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ஏட்டுப்பெறுமதி) 2015இன் ரூ.1,604.2 பில்லியனிலிருந்து 2016இல் ரூ.1,772.2 பில்லியனுக்கு 10.5 சதவீதத்தினால் அதிகரித்தது (அட்டவணை II-9). நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது உறுப்பினர்களுக்கு நீண்ட கால நேர்க்கணிய உண்மை வீத வருமானத்தினை வழங்குவதன் மீது தொடர்ந்தும் கவனத்தினைச் செலுத்திய வேளையில் நிதியத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதுடன் மீளளிப்புக் கொடுப்பனவுகளையும் நிதியத்தின் ஏனைய செலவுகளையும் ஈடுசெய்யக்கூடிய விதத்தில் திரவத்தன்மையும் போதுமான மட்டத்தில் பேணப்பட்டது.

முதலீட்டுச் சொத்துப்பட்டியல் அரச பிணையங்களில் 93.1 சதவீதத்தினையும் பங்குரிமை மூலதனங்களில் 4.6 சதவீதத்தினையும் கம்பனித் தொகுக்கடன்கள், மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்களில் 2.1 சதவீதத்தினையும் உள்ளடக்கியிருந்தது. எஞ்சிய 0.2 சதவீதம் நாளாந்த திரவத்தன்மை தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக அரச பிணையங்கள் தொடர்பான நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் போன்ற உயர்ந்த திரவத்தன்மை சொத்துக்களில் காணப்பட்டன. அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு விளைவு வீதங்களுடன் அட்டவணை II-10இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II - 9**
**முதலீட்டுச் சொத்துப்பட்டியல்**

| முதலீட்டின் வகை | 2015 | | 2016(அ) | |
|---|---|---|---|---|
| | தொகை ரூ. பில் | பங்கு (%) | தொகை ரூ. பில் | பங்கு (%) |
| திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் | 1,487.0 | 92.7 | 1,650.4 | 93.1 |
| பங்குரிமை மூலதனம் | 87.6 | 5.5 | 80.9 | 4.6 |
| கம்பனிப் படுகடன்கள் | 25.5 | 1.6 | 38.1 | 2.1 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகள் | 4.1 | 0.2 | 2.8 | 0.2 |
| **மொத்தம்** | **1,604.2** | **100.0** | **1,772.2** | **100** |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

**அட்டவணை II - 10**
**அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு (2016 இறுதியிலுள்ளவாறு)**

| முதிர்ச்சிக் காலம் | முதிர்ச்சிப் பெறுமதித் தொகை (ரூ.மில்) (அ) | பங்கு (%) | நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு (%) |
|---|---|---|---|
| 1 ஆண்டுக்குக் குறைந்தது | 99,049.7 | 5.57 | 9.78 |
| 1 - 2 ஆண்டுகள் | 195,613.1 | 11.00 | 10.71 |
| 3 - 4 ஆண்டுகள் | 136,011.2 | 7.65 | 10.58 |
| 5 ஆண்டுகளுக்கும் கூடியது | 1,347,602.0 | 75.78 | 11.46 |
| **மொத்தம்** | **1,778,276.0** | **100.0** | **11.22** |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

### (ii) முதலீட்டு வருமானம்:

2016இல் நிதியம் ஈட்டிய மொத்த முதலீட்டு வருமானம் ரூ.192.9 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.5 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது (அட்டவணை II-11). நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக (வருமானத்தின் 85.8 சதவீதம்) வட்டி வருமானம் காணப்பட்டது. வட்டி வருமானம் 2015இன் ரூ.143.1 பில்லியனிலிருந்து 2016இல் ரூ.165.5 பில்லியனுக்கு 15.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கழிவிடப்பட்ட திறைசேரி முறிகளிலிருந்தான கடன் தீர்ப்பனவு இலாபங்களும் 2015இல் ரூ.26.6 பில்லியனிலிருந்து 2016இல் ரூ.28.2 பில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், மூலதன இலாபங்கள் மற்றும் பங்கிலாபம் இரண்டினையும் உள்ளடக்கிய பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் 2015இல் உழைக்கப்பட்ட ரூ.4,065.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ரூ.4,714.6 மில்லியனுக்கு 16.0 சதவீதத்தினால் அதிகரித்தன. மோசமான சந்தை நிலைமைகளின் காரணமாக 2016இல் அரச பிணையங்கள் மீதான மூலதன இலாபம் ரூ.611.8 மில்லியனுக்கு 47.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் பெறுமதி இழப்பு ரூ.5,231.6 மில்லியனுக்கு 76.9 சதவீதத்தினால் அதிகரித்தது. பொதுவாக நிதியத்தின் முதலீடுகளிலிருந்தான வருமானம் 2015இன் 11.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 11.4 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

**அட்டவணை II - 11**
**முதலீடுகள் மீதான வருமானம்**

| வருமானத்தின் மூலம் | 2015 | | 2016(அ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ. மில்) | பங்கு (%) | தொகை (ரூ. மில்) | பங்கு (%) |
| வட்டி | 143,055.1 | 83.4 | 165,485.4 | 85.8 |
| கடன் தீர்ப்பனவு இலாபம் | 26,590.8 | 15.5 | 28,170.9 | 14.6 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம் | 1,172.0 | 0.7 | 611.8 | 0.3 |
| சந்தைப்படியான இலாபம் இழப்புக்கள் | (394.0) | (0.2) | (842.0) | (0.4) |
| பங்குரிமை மூலதனத்திலிருந்தான மூலதன இலாபம் | 553.0 | 0.3 | 452.0 | 0.2 |
| பங்கிலாபங்கள் | 3,512.0 | 2.0 | 4,262.6 | 2.2 |
| சொத்துக்களின் பெறுமதியிழப்பு | (2,957.0) | (1.7) | (5,231.6) | (2.7) |
| மொத்தம் | **171,531.9** | **100.0** | **192,909.1** | **100.0** |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

(iii) செலவினம்:

நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம் 2015இன் ரூ.1,190.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ரூ.1,487.2 மில்லியனுக்கு 24.9 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் மொத்த வருமானத்தின் விகிதமாக இது 2015இன் 0.69 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 0.77 சதவீதத்திற்கு அதிகரித்தது (அட்டவணை II-12). இவ்வாண்டுகளில், நிதியமானது அதன் தொழிற்பாட்டுச் செலவினத்தினை மொத்த வருமானத்தின் 1 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் பேணக்கூடியதாக இருந்தது.

**அட்டவணை II - 12**
**தொழிற்பாட்டுச் செலவினங்கள்**

| விடயம் | தொகை (ரூ.மில்.) | | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | 2015 | 2016(அ) | |
| ஆளணிச் செலவினங்கள் | 748.5 | 861.1 | 15.0 |
| நிர்வாகச் செலவினங்கள் | 397.2 | 402.8 | 1.4 |
| ஏனைய செலவினங்கள் | 44.9 | 223.3 | 397.3 |
| மொத்தம் | **1,190.6** | **1,487.2** | **24.9** |
| மொத்த வருமானத்தின் % ஆக மொத்தச் செலவினங்கள் | **0.69** | **0.77** | |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

**இ) உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவு**

2016ஆம் ஆண்டிறுதியில் உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவாக பகிர்ந்தளிப்பதற்கு கிடைக்கத்தக்கதாக இருந்த தொகை 2015இன் ரூ.154.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.171.5 பில்லியனாகக் காணப்பட்டது (அட்டவணை II-13).

**அட்டவணை II - 13**
**உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவு**

| விடயம் | தொகை (ரூ.மில்.) | | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | 2015 | 2016(அ) | |
| மொத்த வருமானம் | 171,855.3 | 193,071.4 | 12.3 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (1,190.6) | (1,487.2) | 24.9 |
| வருமான வரி | (13,727.4) | (15,657.2) | 14.1 |
| ஆண்டுக்கான தேறிய வருமானம் | 156,937.3 | 175,927.0 | 12.1 |
| முன்னைய ஆண்டு பிடித்துவைத்தல் இலாபம் | 311.3 | 215.6 | (30.7) |
| நடைமுறை ஆண்டு மீளளிப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவு | (2,833.0) | (4,645.8) | 64.0 |
| பகிர்ந்தளிப்புக்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் (நடைமுறை மீளளிப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளுக்குப் பின்) | 154,415.6 | 171,496.8 | 11.1 |
| ஒதுக்குகளில் இருந்து/ (இற்கு) மாற்றல்கள் | - | 250.0 | 100.0 |
| ஒதுக்குகளில் இருந்து/ (இற்கு) மாற்றல்களுக்குப் பின் பகிர்ந்தளிப்புக்காகக் கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் | 154,415.6 | 171,746.8 | 11.2 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி | (154,200.0) | (171,557.4) | 11.3 |
| பிடித்து வைத்தல் இலாபம் | 215.6 | 189.4 | (12.2) |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம் % | **10.5** | **10.5** | |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, ஊ.சே. நிதியம் அதன் சட்ட ரீதியான குறைந்தபட்ச வீதமான 2.5 சதவீதத்திற்கும் மிகக் கூடுதலாக அதன் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்தும் உயர்ந்த வட்டி வீதங்களை செலுத்தக்கூடியதாக இருந்தது.

**அட்டவணை II - 14**
**உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம்**

| ஆண்டு | வழங்கப்பட்ட வட்டிவீதம் (%) | பயனுறு வட்டிவீதம் (%)[1] |
|---|---|---|
| 2006 | 10.10 | 10.30 |
| 2007 | 11.20 | 11.40 |
| 2008 | 13.20 | 13.44 |
| 2009 | 13.75 | 13.92 |
| 2010 | 12.50 | 12.65 |
| 2011 | 11.50 | 11.58 |
| 2012 | 11.50 | 11.62 |
| 2013 | 11.00 | 11.14 |
| 2014 | 10.50 | 10.60 |
| 2015 | 10.50 | 10.57 |
| 2016 (அ) | 10.50 | 10.51 |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

[1] பயனுறுதி வட்டிவீதம் = (உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதம்)/ [ஆண்டுத் தொடக்கத்தில் உறுப்பினர் மீதிகள் = வட்டி சேர்க்க முன்னரான ஆண்டிறுதியில் உறுப்பினர் மீதிகள்)/2]

**8.3 உறுப்பினர் பணிகள்**

**அ) உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள்**

2015இன் 1ஆம் அரைப்பகுதி மற்றும் 2ஆம் அரைப்பகுதிக்கான உறுப்பினர் கணக்குகள் கூற்றுக்கள் தொடர்பான தொழில்தருநர்களுக்க 2016அம் ஆண்டுப்பகுதியில் அனுப்பி வைக்கப்பட்டன. 2016ஆம் ஆண்டின் முதலரைப் பகுதிக்கான செயற்படும் உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் அவர்களது தொழில்தருநர்களினூடாக வழங்கும் பணி 2017 பெப்புருவரி இறுதியிலிருந்து ஆரம்பமானது.

**அட்டவணை II - 15**
**வழங்கப்பட்ட உறுப்பினர் கூற்றுக்களின் எண்ணிக்கை**

| அரை | தொழில்தருநர்களின் எண்ணிக்கை | கூற்றுக்களின் எண்ணிக்கை (செயற்படும் உறுப்பினர்கள்) |
|---|---|---|
| 2015 1ஆம் அரை | 67,821 | 2,052,866 |
| 2015 2ஆம் அரை | 72,144 | 2,518,454 |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### ஆ) வீடமைப்புக் கடன் வசதி

வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஆகிய பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் குறிக்கோளுடன் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டத்தினை 2016இலும் தொடர்ந்ததுடன் ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு இன்றியமையாத பணிகளையும் வழங்குகின்றது. இத்திட்டத்தின் கீழ், ஊழியர் சேம நிதியம் ரூ.5,414 மில்லியன் கொண்ட வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கின்ற கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர்களின் ஊழியர் சேம நிதிய நிலுவைகளுக்கெதிராக அவர்களுக்கு 12,780 உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்கியது (அட்டவணை II-16). மேலும், 2016இல் தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து ஏறத்தாழ ரூ.2,541 மில்லியன் கழிக்கப்பட்டு, 2015ஆம் ஆண்டுப் பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களை தீர்ப்பனவு செய்வதற்காக பங்கேற்கின்ற கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அட்டவணை II - 16
வீடமைப்புக் கடன் வசதி

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் (ரூ.மில்) | கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 | 16,268 | 6,914 | 2,178 |
| 2014 | 17,786 | 8,021 | 2,394 |
| 2015 | 13,132 | 5,489 | 2,522 |
| 2016(அ) | 12,780 | 5,414 | 2,541 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊசேநி திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

### இ) இளைப்பாறுவதற்கு முன்னதான மீளளிப்புத்திட்டம்

2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகள் மற்றும் அதன் பின்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள் என்பனவற்றின் அடிப்படையில் 30 சதவீத ஊழியர் சேம நிதிய இளைப்பாறுவதற்கு முன்னதான மீளளிப்புத் திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் 2015 யூலை 1 இலிருந்து தொழிற்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் நன்மைபெறுநர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருப்பதுடன் 2016 இறுதியளவில் 70,000 இற்கு மேற்பட்ட நன்மைபெறுநர்களுக்கு ரூ.41 பில்லியன் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. 2016இன் இந்நன்மை 60,021 நன்மைபெறுநர்களினால் பெறப்பட்டிருப்பதுடன் ரூ.33.7 பில்லியன் விடுவிக்கப்பட்டிருக்கிறது.

### ஈ) பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம்

கிட்டத்தட்ட காகிதங்களற்ற தொழிற்பாட்டு முறைமையினை நிறுவுவதன் மூலம் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தினால் வழங்கப்படும் பணிகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2013இல் தொடங்கப்பட்ட செயற்றிட்டத்தின் கட்டம்-I, 2015ஆம் ஆண்டுப் பகுதியில் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. செயற்றிட்டத்தின் கட்டம்-I இல் முக்கிய ஆவணங்களான முதன்மைக் கோப்புக்கள், படிவம்-டி, மீளப் பதிவுசெய்யும் ஆவணங்கள் மற்றும் 2013ஆம் ஆண்டின் மீளளிப்புச் செய்முறை வேலைத்தாள் என்பன இலத்திரனியல் வடிவத்திற்கு மாற்றப்பட்டன. செயற்றிட்டத்தின் கட்டம்-I நிறைவடைந்தமையுடன் திணைக்களம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

- ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலை மேம்படுத்தல்
- ஊ.சே. நிதிய உறுப்பினர் விபரங்களில் திருத்தங்களை பரவலாக்கல்
- களஞ்சியப்படுத்தும் பரப்பைக் குறைத்தல்
- மனித வளங்கள், காகிதங்கள், வாடகைச் செலவு போன்றவற்றின் ஊடாக செலவினை சேமித்தல்.

பிம்பப்படுத்தல் ஸ்கானிங் செயற்றிட்டத்தின் கட்டம்-II 2017ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது. ஆவணங்களை அதேநேரம் ஸ்கானிங் பண்ணுவது 2017இன் 2ஆம் காலாண்டுப் பகுதியில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. திணைக்களத்தினால் பெறப்படும் தாள் ஆவணங்கள் பெறப்படும் இடத்திலேயே இலத்திரனியல் படிவத்திற்கு மாற்றப்படும்.

### உ) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

ஊ.சே.நிதியச் செயற்பாடுகள் மீதான விழிப்புணர்வினை மேம்படுத்துவது ஒருங்கிணைக்கப்பட்ட மாதிரியொன்றினை நோக்கி நகர்வதற்கு வசதியளிக்குமொன்றாக இருப்பதனால் இது திணைக்களத்தின் பிரதான இலக்காக கருதப்படுகிறது. இதன்படி, 2016ஆம் ஆண்டுப்பகுதியில் மேற்குறிப்பிட்ட இலக்கினை எய்துவதற்கான முக்கிய பொறிமுறையாக பல நடமாடும் பணிகள் பதுளை, மிறிஸ்ஸ, கஹவத்த மற்றும் பொலனறுவை உள்ளிட்ட பல்வேறுபட்ட பிரதேசங்களில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நடமாடும் பணிகள் தொழில் திணைக்களத்தினதும் ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத்தின் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் போன்ற மற்றைய அரச நிறுவனங்களினதும் தொடர்பான மாவட்ட/ பிரதேச செயலகங்களினதும் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டன. மேலும், ஊ.சே. நிதியம் இவ்வாண்டில் கொழும்பு உட்பட தேசிய சுகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட 8 நடமாடும் பணிகளில் பங்கேற்றது.

உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தலைமையத்தில் வழங்கப்படும் பெருமளவான சேவைகளையே இந்த நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டங்களில் வழங்கப்பட்டன, அதாவது ஊழியர் சேமலாப நிதி நிலுவைக் கூற்றுக்களின் வழங்கல், ஊழியர் சேமலாப நிதி உறுப்பினர் விபரங்கள் மற்றும் கணக்குகளின் திருத்தம், உறுப்பினர் விடயங்களின் மீள்ப்பதிவு இணையதள உறுப்பினர் மீத விசாரணைப் பணியை மேம்படுத்துவது இலத்திரனியல் ரிட்டர்ன் சேவை மற்றும் மொத்த ஊழியர் சேமலாப நிதிய வழிமுறைகள் பற்றிய ஆலோசனை வழங்குதல் ஆகும்.

சென்ற ஆண்டுகளைப் போல், நடமாடும்ட சேவையின் செயற்றிறனை மேம்படுத்தும் நோக்கில் நடமாடும் சேவையின் தேவைப்பாடுகளை இனங்காண்பதற்கு தொழில் வழங்குனர்களுடைய தொடர்புடைய ஊழியர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஏனைய நிர்வாக பணியாட்களுக்கு ஓர் சிறப்பு விழிப்புணர்ச்சி செயற்றிட்டம் நடாத்தப்பட்டது. மேலும் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், கானொளிகள் மற்றும் அறிக்கைகள் போன்ற பல தொடர்பாடல் ஊடகங்களின் கலவையைப் பயன்படுத்தி ஊழியர் சேமலாப

நிதியத்தினால் வழங்கப்படும் சேவைகள் பற்றி தொழில் வழங்குனர்கள், தொழிலாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களை இலக்காகக் கொண்டு நடமாடும் சேவைகளுடனான விழிப்புணர்வு நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன.

**ஊ) ஊழியர் சேம நிதியக் கொடுப்பனவுகளுக்கான இ-கூற்று முறைமை**

அறவே பத்திரங்களற்ற தீர்வான, இலத்திரனியல் சாதனமூடாக (இ-கூற்று) ஊ.சே.நிதியப் பங்களிப்புக்களைச் சமர்ப்பிப்பது செலவினையும் தாமதங்களையும் மிகக் குறைக்கின்ற வேளையில் உறுப்பினர் கணக்குகளை இற்றைப்படுத்துகின்ற செயன்முறையின் வினைத்திறனை அதிகரிக்கின்றது. இது உறுப்பினர்களுக்குச் சிறந்த பணிகளை வழங்க வழிவகுத்திருக்கிறது. 2016ஆம் ஆண்டுப்பகுதியில் இலக்கிடப்பட்ட குழுவினரை ஈர்த்துக் கொள்ளும் பொருட்டு, முக்கியமாக 50 அல்லது அதற்கும் கூடுதலான ஊழியர்களைக் கொண்ட தொழில்தருநர்களுக்காக ஊ.சே. நிதியம் இ-கூற்று முறைமையை வலுப்படுத்துவதற்கு பல வழிமுறைகளை மேற்கொண்டது. இது நாட்டிற்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்கின்ற வியாபாரங்களை மேற்கொள்வதற்கான வசதிகளை பிரதிபலிக்கும் வியாபாரம் செய்யுங்கள் சுட்டெண்ணினை இலகுபடுத்துவதன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை எய்துவதற்கான தேவைப்பாடுகளிலொன்றினை நிறைவேற்றுவதாக இருக்கிறது.

2016இன் தொடக்கத்தில், நஷனல் டெவலப்மென்ட் பாங்க் சேகரிப்பு முகவராக தற்பொழுதுள்ள குழுமத்துடன் இணைந்து கொண்டுள்ளதுடன், தரவு சரிபார்ப்பு வசதியுடன் ஊ.சே. நிதியத்திற்கான தனித்துவமான அதேநேரக் கணனிவழிக் கொடுப்பனவு முறைமையினையும் நடைமுறைப்படுத்தியது. இம்முறைமையானது அதேநேரக் கணனிவழிக் கொடுப்பனவு முறைமைக்கு இ-கூற்றினைத் தரவேற்றம் செய்யும் நேரத்தில் உறுப்பினாகளின் விபரங்களையும் செல்லுபடியானதாக்குகிறது. இது கைகளினால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளைத் தடைசெய்வதுடன் தரவு செய்முறைப்படுத்தல் மற்றும் உறுப்பினர் கணக்குகளை இற்றைப்படுத்தல் என்பனவற்றில் காணப்படும் காலதாமதங்களையும் தவிர்க்கிறது. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சியும் 2016 நடுப்பகுதியில் தற்போதுள்ள முறைமைகளுடன் தரவு சரிபார்ப்பு வசதிகளை இணைத்துக் கொண்டமையின் பின்னர் அதன் அதேநேரக் கணனிவழிக் கொடுப்பனவு முறைமையினை மீளஆரம்பித்தது.

மேலும், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியமையின் மூலமும் கடிதங்களை அனுப்பியமையின் வாயிலாகவும் இ-கூற்று முறைமைகள் தொடர்பான தொழில்தருநர்களின் அறிவினை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் பெறுபேறாக இ-கூற்று முறைமையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2015 இறுதியின் 6,093 இலிருந்து 2016 இறுதியில் 6,955 இற்கு அதிகரித்தது. இது 2.4 மில்லியன் கொண்ட செயற்படும் உறுப்பினர்களில் ஏறத்தாழ 76 சதவீதத்தினரை உள்ளடக்கியிருந்தது.

**எ) ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு**

ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு வினைத்திறன்மிக்க பணியினை வழங்கும் நோக்குடன் அவர்களின் பெயரினை அவர்களின் தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு மீள்பதிவு செய்து கொள்வதற்காகவும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை தனித்துவமான அடையாள இலக்கமாக அவர்களுக்கு வழங்குவதற்காகவும் ஊழியர் சேம திணைக்களமும் தொழில் திணைக்களமும் சிறப்புச் செயற்றிட்டமொன்றினை மேற்கொண்டன. இது இரண்டு நிறுவனங்களும் பொதுவான உறுப்பினர் மையத் தரவுத் தளமொன்றினைப் பயன்படுத்துவதனை இயலச்செய்யும்.

2016 இறுதியில் ஏறத்தாழ 1.8 மில்லியன் செயற்படும் ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களின் (பங்களிக்கும் உறுப்பினர்கள்) தேசிய அடையாள அட்டை விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இவற்றில் 82 சதவீதமான உறுப்பினர்களுக்கு (1.4 மில்லியன் கணக்குகள்) தனித்துவமான அடையாள அட்டை இலக்கங்கள் வழங்கப்பட்ட வேளையில் மீதி உறுப்பினர்கள் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கும் ஏற்கனவேயிருந்த தகவல்களுக்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையின் காரணமாக அவர்களின் தொழில்தருநர்களிடமிருந்து சரிபார்ப்புக்கள் பெறப்பட்டவுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. புதிதாக இணைகின்ற ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களை அதேநேர அடிப்படையில், தேசிய அடையாள அட்டை விபரங்களின் கீழ் பதிவுசெய்வது 2010 நவெம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கிணங்க ஒவ்வொரு மாதமும் முதல் தடவையாக ஊழியர் சேம நிதியத்தினால் பங்களிப்புக்கள் பெறப்படுகின்ற புதிய அனைத்து உறுப்பினர்களினதும் தேசிய அடையாள அட்டை விபரங்களைப் பதிவதற்கான மாதாந்த கண்காணிப்பு முறைமையொன்று செயற்பாட்டிற்கிடப்பட்டது. ஏற்கனவேயுள்ள உறுப்பினர்களின் பதிவும் புதிய உறுப்பினர்களின் பதிவும் 69,326 ஆகக் காணப்பட்டதுடன் 2016ஆம் ஆண்டுப்பகுதியில் உறுப்பினர் மையத் தரவுத் தளத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட பதிவுகளின் மொத்த எண்ணிக்கை 76,386 ஆகக் காணப்பட்டது.

## 9. செலாவணிக் கட்டுப்பாடு

1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 2இன் நியதிகளுக்கிணங்க, அரச முகவரான இலங்கை மத்திய வங்கி அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடத்துவதற்குப் பொறுப்பாக இருக்கின்றது. சட்டத்தின் 2ஆம் பிரிவு, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடத்தும் நோக்கங்களுக்காக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நிறுவுமாறு நாணயச் சபையினை மேலும் தேவைப்படுத்தியது. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவு, பணிப்புரைகளுக்கும் ஆளுநரின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளின் மூலம் இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது செயலாற்றப்படுவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அதிகாரங்களை, கடமைகள் அல்லது தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது ஆற்றுவதற்கென செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தலைவரென்ற ரீதியில் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது அவரின் சார்பில் குறித்துரைக்கப்பட்ட இன்னொரு அலுவலருக்கு அதிகாரங்களை வழங்குகின்றது. 3ஆம் பிரிவும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரை, அத்தகைய நடைமுறைகள் தொடர்பில் பணிப்புரைகளை விடுப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு அத்தகைய அனுமதியினைக் கையளிப்பதற்கு அனுமதிக்கிறது. எந்தவொரு வர்த்தக வங்கியும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகராகத் தொழிற்படுவதற்கு நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட முடியும்.

இதன்படி, செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக அரசாங்கத்தின் கொள்கைகளையும் பேரண்ட பொருளாதாரக் குறிக்கோள்களையும் நடைமுறைப்படுத்தும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் கொள்கை வடிவமைப்பு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பணிப்புரைகளை விடுத்தல், வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்கான வழங்கப்பட்ட பொதுவான அனுமதி தொடர்பில் பொதுமக்களுக்கு அரச வர்த்தமானி அறிவித்தல்களை விடுத்தல், குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்காக ஒப்புதல்களை வழங்குதல், நாணய மாற்று நடவடிக்கைகளுக்காக

அனுமதிகளை வழங்குதல், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணித்தல் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது தொடர்பில் புலனாய்வுகளை மேற்கொள்ளுதல் என்பவை காணப்படுகின்றன. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளும் நடவடிக்கைகளும் கீழே சுருக்கித் தரப்படுகின்றன.

### 9.1 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்களுக்காகப் பொதுவான அனுமதியினை வழங்குதல்

1994இல் எந்தவிதமான கட்டுப்பாடுகளுக்கும் உள்ளாகாமல் நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டமையினைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கி பன்னாட்டு நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை நடத்துவதில் பெருமளவு வினைத்திறனை எய்தும் குறிக்கோளுடன் மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களை படிப்படியாகத் தளர்த்தியது. 2016இலும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்தல், இலங்கையின் வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை வலுப்படுத்தல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை வலுப்படுத்தல் என்பனவற்றினைக் கருத்திற் கொண்டு, உலகளாவிய வியாபார நடவடிக்கைகளில் இலங்கையின் போட்டித்தன்மை வாய்ந்த அநுகூலங்களை மேம்படுத்துவதற்காக நடைமுறைப் பேரண்ட பொருளாதாரக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் பல கொள்கை வழிமுறைகளையும் நடைமுறைக்கிட்டது.

#### 9.1.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் பணிப்புரைகளை விடுத்தல்

2016இல் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளதுடன் அவை கீழே சுருக்கித் தரப்பட்டுள்ளன.

(அ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகள் என்பனவற்றின் உடமையாளர்கள் அத்தகைய கணக்குகளிலிருந்து இலங்கைக்கு வெளியே எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி நிதியினை அனுப்புவதற்கும் எந்தவொரு நோக்கத்திற்காகவும் ஐ.அ.டொலர் 10,000 அல்லது அதற்குச் சமனான வேறு இன நாணயங்களை வெளிநாட்டு நாணயத் தாள்களாக மீளப்பெறவும் அனுமதிக்கப்பட்டனர். (2016ஆம் ஆண்டின் 1, 2, 3 மற்றும் 4ஆம் இலக்கப் பணிப்புரைகள்)

(ஆ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளின் உடமையாளர்கள் இலங்கையில் அனுமதிக்கப்பட்ட முதலீடுகளில் அத்தகைய கணக்குகளிலுள்ள நிதியத்தினை வெளிநாட்டு நாணயத்தில் பயன்படுத்துவதற்கு மூலதனம், மூலதன இலாபம் மற்றும் அத்தகைய முதலீடுகளிலிருந்து எழுகின்ற பயன்படுத்தப்படாத ஏதேனும் வெளிநாட்டு நாணயங்களை அக்கணக்குகளில் வரவு வைப்பதற்கும் அனுமதிக்கப்பட்டனர். (2016ஆம் ஆண்டின் 5, 6, 7 மற்றும் 8ஆம் இலக்கப் பணிப்புரைகள்)

(இ) இலங்கை அபிவிருத்தி முறிகளின் குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களும் முதனிலை வணிகர்களும் இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கையேற்றல், வைத்திருத்தல் மற்றும் மாற்றல் செய்யும் நோக்கங்களுக்காக 'இலங்கை அபிவிருத்தி முறிகள் முதலீட்டுக் கணக்கு' மற்றும் 'முறி முதலீடுகளுக்கான டொலர் கணக்கு' என்ற பெயர்களில் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் தகைமையுடைய முதலீட்டாளர்கள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து ஐ.அ.டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டனர். (2016ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரை)

(ஈ) வெளிநாட்டு தூதரகங்களின் விசாக் கட்டணச் சேகரிப்புக்களையும் இராசதந்திர ஆளணியினருக்குச் சொந்தமான ஊர்திகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட பெறுகைகளையும் இராசதந்திர ரூபாக் கணக்குகளினூடாக அனுப்புவதற்கும் அதிகாரம்பெற்ற வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். மேலும், இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகளில் பேணப்படும் நிதியத்தினை பிணைய முதலீட்டுக் கணக்குகளினூடாக முதலீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டது. (2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரை)

(உ) 2013.06.12இற்கு முன்னதாக நிரந்தர வதிவிட விசாவில் புலம்பெயர்ந்த இலங்கையர்கள் ஓய்வுகால நன்மைகளையும் 2013.06.12 இற்குப் பின்னர் இலங்கையில் பெற்றுக்கொண்ட நடைமுறை வருமானங்களையும் அவர்களது தொடர்பான வதிவற்றோர் தடுத்துவைத்தல் கணக்கினூடாக, தகைமையுடைய புலம்பெயர் படிகளிலிருந்தான கழிவு இல்லாமலேயே அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டனர். (2016ஆம் ஆண்டின் 11ஆம் மற்றும் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள்)

(ஊ) 2013.06.12இற்குப் பின்னர் இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவிடத்தினைப் பெற்ற இலங்கையர்கள் அவர்களுக்கு உரித்துடைய புலம்பெயர் படிகளை இலங்கையில் முதலீடு செய்வதற்காக பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு மாற்றல் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். (2016ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கப் பணிப்புரை)

(எ) வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்படுவதற்காக இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வெளிவாரி வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்திற்குச் சமாந்தரமாக தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் பெயரில் "வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கு" ஒன்றினைத் திறந்து தொழிற்படுத்துவதற்கு அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. (2016ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கப் பணிப்புரை)

#### 9.1.2 வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுதல்

2016ஆம் ஆண்டுப்பகுதியில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கீழே சுருக்கித் தரப்பட்டவாறு பல புதிய வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டது. இவ்வர்த்தமானி அறிவித்தல்கள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன.

(அ) இலங்கையிலுள்ள எந்தவொரு தனிப்பட்டவரும் ஐ.அ.டொலர் 10,000 அல்லது அதற்குச் சமனான வேறு எந்தவொரு நாணயத்தினையும் அத்தகைய வெளிநாட்டு நாணயங்கள் வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கிணங்க கையேற்கப்பட்டிருக்குமிடத்து அவற்றை அவரின் உடமையில் வைத்திருப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. (2016.01.20ஆம் திகதி இடப்பட்ட இல.1950/29 கொண்ட வர்த்தமானி)

(ஆ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளிலுள்ள நிதியினைப் பயன்படுத்துவதற்கு தளர்த்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டமையினைத் தொடர்ந்து அத்தகைய கணக்குகளை வைத்திருப்போர் இலத்திரனியல் நிதியமாற்றல் அட்டையினைப் பயன்படுத்தி இலங்கைக்கு வெளியே வதியுமொருவருக்கு எந்தவொரு கொடுப்பனவினையும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். முன்னர் இருந்ததை இரத்துச் செய்வதற்காக வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டது (2016.01.20ஆம் திகதியிடப்பட்ட இல.1950/40 கொண்ட வர்த்தமானி).

(இ) வெளிநாட்டு நாணயத்தில் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு என்பனவற்றின் உடமையாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் இரட்டைப் பிரசா உரிமையைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகள் ஆகியோர் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டனர். (2016.03.11 திகதியிடப்பட்ட இல.1957/23 கொண்ட வர்த்தமானி)

(ஈ) ஏற்றுமதிப் பெறுகைகளைப் பிடித்துவைத்திருப்பதற்கு 1993இல் வழங்கப்பட்ட விதி விலக்கல்கள் புறக்கீடு செய்யப்பட்டதுடன் பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் பொருட்களின் ஏற்றுமதித் திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகள் தாய்நாட்டிற்கு அனுப்பப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். மேலும், ஏற்கனவே வெளிநாட்டில் வைத்திருக்கும் ஏதேனும் அத்தகை பெறுகைகளை 2016.05.01 இற்குப் பிந்தாமல் தாய்நாட்டிற்கு திருப்பி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இக்காலம் 2016.08.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 120 நாட்களுக்கு நீடிக்கப்பட்டதுடன் இவ்விதியினை மீறும் செயற்பாடுகளுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கி 30 நாள் சலுகைக் காலத்தினையும் வழங்க முடியும் (2016.04.01 திகதியிடப்பட்ட இல.1960/66 கொண்ட வர்த்தமானி, 2016.09.29 திகதியிடப்பட்ட இல.1986/42 மற்றும் 2016.09.29 திகதியிடப்பட்ட இல.1986/43 கொண்ட வர்த்தமானிகள்)

(உ) 2016 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பெறுபேறுகளுக்கிணங்க வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்படுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள், உத்தரவாதம் மூலமாக வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகள் தவிர்ந்த இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கு புதிய வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. (2016.06.07 திகதியிடப்பட்ட இல. 1970/8 கொண்ட வர்த்தமானி)

(ஊ) பணம் கடன்வழங்கல் மற்றும் பிணைய முகாமைத்துவம், மதிப்பீடு மற்றும் தனியார் நிறுவனங்களின் தனிப்பட்டவர்களுக்கு ஆலோசனைகள் உட்பட பிணைய பணிகளை வழங்குகின்ற துறைகளில் வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்வதில் காணப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. (2016.06.10 திகதியிடப்பட்ட இல. 1970/49 மற்றும் 2016.06.10 திகதியிடப்படட இல.1970/50 கொண்ட வர்த்தமானிகள்)

**9.2 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்களுக்கான சிறப்பு அனுமதியினை வழங்குதல்**

(அ) வெளிநாட்டில் ஐ.அ.டொலர் 37.48 மில்லியனை முதலீடு செய்வதற்கு 5 கம்பனிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(ஆ) வெளிநாட்டிலிருந்து ஐ.அ.டொலர் 204.3 மில்லியனை கடன்படுவதற்கு 21 கம்பனிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(இ) இலங்கையில் வதியாதவர்களின் பங்குகளை வழங்குவதற்கு/ பதிவு செய்வதற்கு/ மாற்றல் செய்வதற்கு கம்பனிகள்/ தனிப்பட்டவர்களுக்கு 100 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

(ஈ) அதிகாரம்பெற்ற வணிகர்களினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் உள்ளடக்கப்படாத குறிப்பிட்ட வெளிநாட்டுச் செலாவணியில் கொடுக்கல்வாங்கல்களைச் செயன்முறைப்படுத்துவதற்காக அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு 237 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

(உ) அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் தற்போதுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்பட முடியாதவிடத்து சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் 33 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

(ஊ) வங்கி/ கம்பனி உத்தரவாதங்களை வழங்குவதற்காக வதியும் கம்பனிகளுக்கு 11 ஒப்புதல்கள் வழங்கப்பட்டதுடன் வங்கி உத்தரவாதங்களை வழங்குவதற்கும் புதுப்பிப்பதற்குமாக கப்பற்படுத்தல் மற்றும் எயார்லையின் முகவர்கள் தொடர்பில் 6 ஒப்புதல்களும் வழங்கப்பட்டன.

(எ) நாணய மாற்றல் வியாபாரங்களில் ஈடுபடுவதற்கு உரிமங்களை வழங்குதல்

- 2016இல் 2 வரையறுக்கப்பட்ட பொறுப்பு நாணய மாற்றுக் கம்பனிகளுக்கும் 2 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சுற்றுலாவிடுதியொன்றிற்குமாக ஐந்து புதிய நாணய மாற்று உரிமங்கள் வழங்கப்பட்டன.
- இவ்வாண்டுப் பகுதியில், உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட வருடாந்த மொத்தப் புரள்வுத் தேவைப்பாடுகளுடன் இணங்கிக் கொள்ளாதமையின் காரணமாக 6 வரையறுக்கப்பட்ட பொறுப்பு நாணய மாற்றுக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் புறக்கீடு செய்யப்பட்டன. மேலும், ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு நாணய மாற்றுக் கம்பனியும் சிறப்பு அங்காடியும் 2016 காலப்பகுதியில் தமது நாணய மாற்று வியாபாரத்தினை இடைநிறுத்திக் கொண்டன.
- இதன்படி, 2016 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு, அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் மொத்த எண்ணிக்கை 75 ஆக அமைந்து, 8 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளையும் 2 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த கம்பனிகளையும் 2 சுற்றுலா விடுதிகளையும் 63 ஏனைய வரையறுக்கப்பட்ட

பொறுப்பு நாணய மாற்றுதல் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது. 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் பட்டியல் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளது.

- 2016இல் வெளிநாட்டு நாணயங்களை விற்பதற்கான புதிய உரிமங்கள் 2 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. மேலும், வெளிநாட்டு நாணயங்களை விற்பதற்கான வரையறுக்கப்பட்ட உரிமம் புறக்கீடு செய்யப்பட்டமைக்கு விற்பனைக்கான உரித்தினைப் பெறுவதற்கான உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட வருடாந்த புரள்வு தேவைப்பாட்டிற்கு இணங்கி நடக்காமையே காரணமாக இருந்த வேளையில் ஒரு சிறப்பு அங்காடி அதன் வியாபாரத்தினை இடைநிறுத்திக் கொண்டது.

- இதற்கமைய, 2016 இறுதியிலுள்ளவாறு, 61 அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்கள் வெளிநாட்டு நாணயங்களை வாங்குவதற்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்ட வேளையில் 8 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், 2 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் 4 வரையறுக்கப்பட்ட பொறுப்பு நாணய மாற்றுக் கம்பனிகளை உள்ளடக்கி 14 கம்பனிகள் வெளிநாட்டு நாணயங்களை விற்கவும் வாங்கவும் அனுமதிக்கப்பட்டன.

(ஏ) புலம்பெயர்ந்தோரின் நிதிய மாற்றல்

2013 யூன் 12ஆம் திகதிக்குப் பின்னர் இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவிடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ள 377 இலங்கையர்களுக்கு புலம்பெயர் படிகளை வழங்கும் பொருட்டு 221 புலம்பெயர்ந்தோர் தடுத்துவைத்தல் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். மேலும், 2013 யூன் 12 அன்றோ அல்லது அதற்கு முன்போ இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவிடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ள இலங்கைப் புலம்பெயர்ந்தோர் வதிவற்றோர் தடுத்துவைத்தல் கணக்கினூடாக இலங்கைக்கு வெளியே நிதிகளை அனுப்ப அனுதிக்கப்பட்டனர்.

### 9.3 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணித்தல் மற்றும் நுண்ணாய்வு செய்தல்/ புலனாய்வு செய்தல்

(அ) தலத்திற்கான விஜயங்கள் மற்றும் பரீட்சிப்புக்கள்

- வெளிநாட்டு நாணயங்களின் விற்பனை மற்றும் கொள்வனவு மற்றும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல் தொடர்பில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளுக்கும் ஏனைய தேவைப்பாடுகளுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணங்கியொழுகுவதனை மதிப்பிடும் பொருட்டு 34 தலத்திலான பரீட்சிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்திலுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கியொழுகின்றார்களா என்பதனைக் கண்டறிவதற்காக 19 தலத்திலான பரீட்சிப்புக்கள் நடத்தப்பட்டன.

- மேலும், அதிகாரமளிக்கப்படாத நாணய மாற்று வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பல்வேறு ஆட்களைக் கண்டறிவதற்கு இலங்கைப் பொலிசாரின் உதவியுடன் 15 சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குகளும் தொடரப்பட்டது.

ஆ) புலனாய்வுகள்

- 200 புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 91 புலனாய்வுகள் முடிவுற்றதன் பின்னர் தண்டப்பணமாக செலுத்தப்பட்ட ரூ.62.45 மில்லியன் திரட்டிய நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. பெரும்பாலான புலனாய்வுகள் வதிவோர் வதிவற்றோருக்குச் செய்த அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள், செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகாமை, அதிகாரம்பெற்ற நாணய மாற்றுநர்களுக்கு விடுக்கப்பட்ட உரிமங்களின் நிபந்தனைகள் மீறப்பட்டமை, அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டு நாணயங்களை உடமையில் வைத்திருத்தல் மற்றும் பொதுவான அனுமதிகளில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளுக்கு மாறாக பிணையங்களை மாற்றல் செய்தமை என்பனவற்றுடன் தொடர்பானவையாகக் காணப்பட்டன.

இ) செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் நிபுணத்துவச் சான்றுகளையும் சத்தியச் சான்றுகளையும் வழங்குவதன் மூலம் தேவையானவிடத்து வழக்காடல் நியாயாதிக்கங்களில் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு மேலும் உதவியது.

### 9.4 செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் மீது விழிப்புணர்வினை அதிகரித்தல்

அ) செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் நியமிக்கப்பட்ட இணங்குவிப்பு அலுவலர்களுடனும் வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடும் பொருட்டும் புதிய ஒழுங்குவிதிகள் தொடர்பான அவர்களின் அறிவினை இற்றைப்படுத்தும் பொருட்டும் வங்கிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களினால் நியமிக்கப்பட்ட அலுவலர்களுடனும் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன.

ஆ) நாளாந்த வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்களில் வினைத்திறனுடனும் காத்திரமான தன்மையுடனும் ஈடுபடுவதற்கு அவர்களை இயலுமைப்படுத்தும் விதத்தில் செலாவணிக் கட்டுப்பாடு தொடர்பான ஒழுங்குவிதிகளில் வங்கி அலுவலர்களின் அறிவினை உயர்த்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் மற்றும் இலங்கை வங்கியாளர் நிறுவகம் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் தற்போதைய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் தொடர்பில் அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு ஐந்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

இ) மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்கள் அண்மையில் தளர்த்தப்பட்டமை மீதான அறிவினை உயர்த்தும் பொருட்டு பொதுமக்களையும் ஏனைய ஈடுபாடுடைய தரப்பினரையும் இலக்காகக் கொண்டு வங்கித்தொழில் ஆய்வுகளுக்கான நிலையத்தில் மூன்று நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

ஈ) செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மீதான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் பொருட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அலுவல்சார் வெப்தளம் (www.ecd.lk) இற்றைப்படுத்தப்பட்டதுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மின்னஞ்சல், தொலைபேசி அழைப்பு என்பனவற்றினூடான விசாரணைகளுக்கும் திணைக்களத்திற்கு வருகைதருவோரின் விசாரணைகளுக்கும் தொடர்ந்தும் தெளிவுபடுத்தல்களை வழங்கியது.

### 9.5 புதிய வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவக் கட்டமைப்பின் நடைமுறைப்படுத்தலுக்கு வசதியளித்தல்

2016 வரவு செலவுத்திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டவாறு புதிய வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க வேலைகள் இவ்வாண்டுப் பகுதியில் நடைபெற்று வந்தன. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் உத்தேச மசோதாவின் மீது அவதானிப்புக்களைச் செலுத்தியதுடன் உத்தேச சட்டத்தின் சட்டவாக்கத்தினை நிறைவு செய்வதற்குத் தேவையான தொடர்ச்சியான வசதிகளையும் வழங்கியிருக்கும்.

**பின்னிணைப்பு II-2**

**2016.12.31இல் உள்ளவாறான அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| **வரையறுக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனிகள்** | |
| 1 | புஸ்பா மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 2 | ஜிவாஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 3 | றவீக் ஜெம்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 4 | கிறவுண் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 5 | டயா ஒதோரைஸ்ட் மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட் |
| 6 | சலாக்கா ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ற் (பிறைவேற்) லிமிடெட் |
| 7 | சலாக்கா ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ற் (பிறைவேற்) லிமிடெட் - கிளை |
| 8 | டேற்றா எக்ஸ்சேஞ் இன்ரநஷனல் (பிறைவேற்) லிமிடெட் |
| 9 | றோயல் மணி மார்ட் (பிறைவேற்) லிமிடெட் |
| 10 | பிரசன்னா மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 11 | பிரசன்னா மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கிளை |
| 12 | சுவிஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 13 | சுவிஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கிளை |
| 14 | கோல்டன் மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 15 | றோயல் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 16 | றோயல் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கிளை |
| 17 | மிட்னா மினி மார்க்கட் (பிறைவேற்) லிமிடெட் |
| 18 | மயூரி மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 19 | அப்டீன் மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 20 | ஜுவல் லங்கா மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 21 | டெடிகம குறூப் (பிறைவேற்) லிமிடெட் |
| 22 | மொன்ரி கார்லோ எக்சேஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 23 | கொழும்பு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 24 | நியு றீகல்ஸ் மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட் |
| 25 | டெவி பொறஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 26 | சிற்றி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 27 | எ. ஓ. லக்ஷ்மி ஜுவலஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 28 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் |
| 29 | ரவி பொறக்சி (பிறைவேற்) லிமிடெட் |
| 30 | இன்ரநஷனல் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 31 | ஆரியவன்ச என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 32 | எம்.பி. மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட் |
| 33 | வின்சோர் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 34 | மாறுதி மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 35 | பேர்ள் எக்சி (பிறைவேற்) லிமிடெட் |
| 36 | கப்பிட்டல் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 37 | கமல் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 38 | வசந்தாஸ் இன்ரநஷனல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 39 | றிம்ஹா ஜுவல்லறி (பிறைவேற்) லிமிடெட் |
| 40 | நியு நட்டாஷா (பிறைவேற்) லிமிடெட் |
| 41 | மெற்றோ பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 42 | கெயிசர் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 43 | அருஜுன ஜுவல்லறி (பிறைவேற்) லிமிடெட் |
| 44 | யுனிக் பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 45 | றெட் ரூபி ஜுவல்லர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 46 | புள்ளியன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 47 | ஜோர்ஜ் மைக்கல் ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 48 | சிற்றி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கிளை |
| 49 | அருணா பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 50 | அஸ்வின் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 51 | நர்மதா கோல்ட் சென்ரர் (பிறைவேற்) லிமிடெட் |
| 52 | சாரங்கா மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 53 | டெல்ரா சரத் ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 54 | மில்லானோ மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 55 | மஜஸ்ரிக் ஜுவல்லரி (பிறைவேற்) லிமிடெட் |
| 56 | குளோபல் விலேஜ் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 57 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கிளை II |
| 58 | குடாமடு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 59 | றிவின்டு என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 60 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கிளை III |
| 61 | வெஸ்ரேன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 62 | ஜேயஸ் இன்வெஸ்ட்மென்ற் லிமிடெட் |
| 63 | ஏசியன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| **உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்** | |
| 64 | லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி |
| 65 | சிற்றிசன்ஸ் டெவலப்மென்ற் பிசனஸ் பினான்ஸ் பிஎல்சி |
| 66 | செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி |
| 67 | பிம்புத் பினான்ஸ் பிஎல்சி |
| 68 | சிங்கபுத்திர பினான்ஸ் பிஎல்சி |
| 69 | சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி |

| | |
|---|---|
| 70 | ஏசியா அசற் பினான்ஸ் பிஎல்சி |
| 71 | எல்பீ பினான்ஸ் பிஎல்சி |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** | |
| 72 | தேசிய சேமிப்பு வங்கி |
| 73 | சனச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி |
| **சுற்றுலாவிடுதிகள்** | |
| 74 | பேர்ள் சிற்றி ஹோட்டல் (பிறைவேற்) லிமிடெட் |
| 75 | ஷங்கிறிலாஸ் அம்பாந்தோட்டை றிசோட்ஸ் அன்ட் ஸ்பா |

## 10. வசதிகள் முகாமைத்துவம்

2016இல் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது தடங்கலற்ற தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு வங்கியினை இயலச்செய்தல் மற்றும் வங்கியின் தொழில் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான இரம்மியமான சூழலை ஏற்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் கட்டடங்கள் மற்றும் சொத்துக்களின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு வேலைகள் மற்றும் வசதிகளையும் சேவைகளையும் ஏற்படுத்துதல் போன்றவற்றினை தொடர்ந்தது. வங்கி அலுவலர்கள், வாகனங்கள் மற்றும் மூன்றாம் தரப்பினர் போன்றவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்குடன் வங்கியின் வாகனங்களின் ஓடும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

2016இல் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது மின்வலு, குளிரூட்டல், நீர் வழங்கல் மற்றும் போக்குவரத்துப் பணிகள் போன்ற அனைத்து இன்றியமையாத பணிகளிலும் தொழிற்பாட்டு நம்பகத்தன்மையினை உயர்ந்த மட்டத்தில் பேணியது. திணைக்களமானது அத்தகைய பணிகளை வழங்குவதில் மிகவுயர்ந்த நம்பகத்தன்மையை அடையக்கூடியதாக இருந்தமையானது வங்கியின் தடங்கலற்ற தொழிற்பாடுகளை அடைவதற்கு பங்களித்தது.

அலுவலகர்களின் தொழில்சார் நிபுணத்துவக் குழுவால் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவம் செய்யப்பட்டமையானது செயற்றிட்டத்தை செலவுச் சிக்கனமாக்க வழிவகுத்த அதேவேளை நெருக்கமான கண்காணிப்புடன் புகழ்வாய்ந்த ஒப்பந்தக்காரர்களுக்கு செயற்றிட்டங்களைக் கையளித்தமையானது உரிய திகதியில் செயற்றிட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் தேவைப்பட்ட நியமங்களை அடைவதற்கும் இயலச் செய்தது.

2016இல், வைட்எவேய்ஸ் கட்டடத்தின் புனரமைப்பு நிறைவு செய்யப்பட்டது. கதிர்காமத்திலுள்ள விடுமுறை விடுதிகளுக்கான ஒன்பது மேலதிக அலகுகளுடனான மூன்று கட்டட பிரிவுகளின் நிர்மாணம் நிறைவு செய்யப்பட்டதுடன் 2016 நவெம்பர் 18இல் திறந்துவைக்கப்பட்டது. தலைமை அலுவலகத்தினுள் வாகன தரிப்பிட கட்டடத்தின் 10வது தளத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உடற்பயிற்சிக் கூடம் 2016 யூன் 28இல் திறந்து வைக்கப்பட்டது. இராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் புதிய கட்டடமொன்று 2016 ஓகத்து 19இல் திறந்து வைக்கப்பட்டது. மேலும், வசதிகள் முகாமைத்துவ திணைக்களமானது கிளிநொச்சியிலுள்ள வட மாகாண பிராந்திய அலுவலகக் கட்டடத்தொகுதியின் நிர்மாண வேலையின் கட்டம் III நிறைவு செய்தது.

மேலும், இலங்கை மத்திய வங்கியின் தலைமையலுவலகத்தின் அமைப்பு ஆற்றல்வாய்ந்த தன்மையினை பேணி பாதுகாப்பதற்கும், இலங்கை மத்திய வங்கியின் தலைமைக் கட்டடத்தின் பொறி மற்றும் கருவிகளின் நம்பகத்தன்மை மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறன் என்பனவற்றை அதிகரிப்பதற்கும் வசதிகள் முகாமைத்துவ திணைக்களத்தினால் அனைத்தையுமுள்ளடக்கிய மறுசீரமைப்பு செயற்றிட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

2016 காலப்பகுதியில் வசதிகள் முகாமைத்துவ திணைக்களமானது, இலங்கை மத்திய வங்கியின் தலைமையலுவலகக் கட்டடத்தினுள் அலுவலர் உணவகம், அனுராதபுரம் மற்றும் மாத்தறையிலுள்ள பிரதேச அலுவலகங்கள், இராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் மற்றும் தலைமையலுவலகத்தின் சில அவசர திருத்தங்கள் போன்றவை உள்ளடங்கலான புனரமைப்பு மற்றும் திருத்த வேலைகளிலும் ஈடுபட்டது. நுவரெலியா பிரதேச அலுவலகத்தில் தோட்டம் மற்றும் அழகுபடுத்தல் வேலைகளையும் நிறைவு செய்தது.

மேலும், வசதிகள் முகாமைத்துவ திணைக்களமானது இலங்கை மத்திய வங்கி தலைமை அலுவலகக் கட்டடத்தின் பாதுகாப்பு மற்றும் முறையான செயற்பாடுகளுக்கான அமைப்பு ஆற்றல்வாய்ந்த தன்மைகளுக்கான ஓர் மதிப்பீட்டினையும் செயற்படுத்தியுள்ளதுடன், இலங்கை மத்திய வங்கி வளாகத்தின் சக்திப் பயன்பாடுகளை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

வங்கியின் வழமையான போக்குவரத்து தொழிற்பாடுகளுக்கு புறம்பாக இலங்கை மத்திய வங்கியின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட பல்வேறு பன்னாட்டு மாநாடுகள் மற்றும் வங்கியால் ஒழுங்கமைக்கப்பட்ட சம்பிரதாய நிகழ்வுகளுக்கு தடங்கலற்ற போக்குவரத்து வசதிகளை திணைக்களம் வழங்கக்கூடியதாக இருந்தது.

## 11. நிதி

நிதித் திணைக்களம், பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள்/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் நாணய விதிச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாட்டு நியதிகள் என்பனவற்றிற்கிணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது. நிதித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், மத்திய வங்கியின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், மத்திய வங்கியின் உள்ளக மற்றும் வெளியக நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்காக கொடுப்பனவு முறைமையொன்றைப் பேணுதல், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளக அறிக்கையிடலுக்கான முறைமைகளைப் பேணுதல், 16 உள்ளக நிதியங்களைப் முகாமைப்படுத்தல், மத்திய வங்கியின் நிலையான சொத்துப் பதிவேட்டினைப் பேணுதல் மற்றும் அலுவலர் கடன்களின் தரவுத்தளத்தைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### 11.1 நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு

i. **மாதாந்த ஐந்தொகை:**

நாணய விதிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க, 2015 திசெம்பர் மற்றும் 2016 சனவரி - நவெம்பர் காலப்பகுதிக்கான மாதாந்த ஐந்தொகைகள் தயாரிக்கப்பட்டது.

ii. **காலாண்டு ரீதியான அறிக்கைகள்:**

காலாண்டு நிதியியல் செயலாற்றம் மற்றும் நிலைமை என்பன 2016இல் நாணயச் சபைக்கு அறிவிக்கப்பட்டன.

iii. **வருடாந்த நிதியியல் கணக்கு**

2002 தொடக்கம் இந்நோக்கத்திற்காக பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களும் பின்பற்றப்பட்டன. இக்கூற்றுக்கள் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டன. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் தொடர்பான கணக்கீட்டு நியமங்களுடனும் தேவைப்பாடுகளுடனும் இணங்கிச் செல்வதற்காக நிதித் திணைக்களம் கணக்கீட்டு முறைமைகளையும் நடவடிக்கை

முறைகளையும் தொடர்ச்சியான அடிப்படையில் இற்றைப்படுத்தி வருகின்றது. 2016ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஆண்டறிக்கையின் பகுதி II இன் தொடக்கத்தில்,

அட்டவணை II-17
நிதியியல் குறிகாட்டிகள் (ரூ.பில்.)

| | 2016 | 2015 |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 1,529.2 | 1,426.2 |
| வெளிநாட்டுச் சொத்துக்கள் (நிதியல்லா தங்கம் உட்பட) | 1,050.0 | 1,126.7 |
| உள்நாட்டுச் சொத்துக்கள் | 479.2 | 299.5 |
| வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 504.0 | 574.8 |
| உள்நாட்டுப் பொறுப்புக்கள் | 937.8 | 797.3 |
| பங்குரிமை | 85.6 | 54.1 |
| மொத்த வருமானம் | 42.1 | 6.4 |
| வட்டி வருமானம் | 36.7 | 22.4 |
| செலாவணி இலாபம்/ (நட்டம்) | -6.8 | 10.6 |
| சந்தைப்படியான இலாபம்/ (நட்டம்) - வெளிநாடு | 9.7 | -34.9 |
| ஏனைய வருமானம் | 2.4 | 8.3 |
| மொத்தச் செலவுகள் | 18.1 | 24.1 |
| வட்டிச் செலவுகள் | 6.2 | 12.5 |
| தொழிற்பாட்டுச் செலவு | 12.0 | 11.6 |
| தேறிய இலாபம்/ (நட்டம்) | 22.2 | -19.6 |
| உள்நாட்டு சொத்துக்களுக்கான பங்குரிமை வீதம் (%) | 17.9 | 18.1 |

2016இல் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சொத்துக்களுக்கிடையிலான மொத்தச் சொத்துக்களின் சொத்துக்கலவை மாற்றமானது குறிப்பிடப்பட்டுள்ளது. 2016இன் பிற்பகுதியில் நிலவிய பற்றாக்குறை பணச் சந்தை திரவத்தன்மை நிலைமையானது பிரதானமாக உள்நாட்டு சொத்துக்களின் அதிகரிப்பால் தோற்றுவிக்கப்பட்டது. நாட்டின் சென்மதி நிலுவை நிலைமைகளின் காரணமாக வெளிநாட்டு ஒதுக்குகளிலான குறைவானது வெளிநாட்டுச் சொத்துக்களின் குறைவால் பிரதிபலிக்கப்பட்டது. இதேபோல், பொறுப்பு பக்கத்தில், குறிப்பிடத்தக்க உள்நாட்டுப் பொறுப்புக்களானது 2016 சனவரியில் 1..5% ஆல் அதிகரிக்கப்பட்ட நியதி ஒதுக்கு தேவைப்பாட்டுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் நிலுவைகளின் அதிகரிப்பின் காரணமாக அதிகரித்தது. 2016இன் தேறிய இலாபங்களின் முன்னேற்றமானது தங்க சந்தை விலைகளின் மேல்நோக்கிய அசைவு மற்றும் திறந்த சந்தை தொழிற்பாடுகளின் நோக்கங்களுக்காக பேணப்பட்ட திறைசேரி உண்டியல்களின் இருப்புகளிலிருந்தான உயர்ந்த வட்டி வருமானம் போன்றவற்றின் காரணமாக ஏற்பட்ட சந்தை இலாபங்களின் விளைவாக ஏற்பட்டது. பெரிய பிரித்தானிய ஸ்ரேலிங் பவுணுக்கு எதிராக ரூபா பெறுமதி உயர்வடைந்தமையானது முக்கியமாக 2016இன் நடுப்பகுதியில் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏறத்தாழ 8% இற்கு வகைகூறும் பெரிய பிரித்தானியா ஸ்ரேலிங் பவுணில் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களின் பேரிலான செலாவணி நட்டத்திற்கும் 2016இல் ஐ.அ.டொலருக்கு எதிரான ரூபா பெறுமதி தேய்வு வீதத்தின் வீழ்ச்சிக்கும் வழிவகுத்தது. மத்திய வங்கியின் நிதியியல் பெறுபேறானது நாணயவிதிச் சட்டம் மற்றும் ஏனைய நியதிச் சட்டங்களின் கீழ் பொது விருப்பில் வங்கியின் நாணய மற்றும் நிதியியல் கொள்கைகளினால் தீர்மானிக்கப்படுகின்றது. எனவே, மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் வர்த்தக அடிப்படையிலான நிதியியல் பெறுபேறுக்காக உந்தப்படாது காணப்பட்டதுடன் இதனால் செலவுச் சிக்கனமானது வங்கியின் நிதியியல் முகாமைத்துவத்தின் பிரதான நோக்காக காணப்பட்டது. மத்திய வங்கியின் இலாபங்கள் நாணயக் கொள்கை சட்ட நியதிகள் மற்றும் சபை ஒப்புதல் கொள்கைகளின் நியதிகளின் படி பகிர்ந்தளிக்கப்பட்டன.

### 11.2 வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினை தயாரித்தல்

2017ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் வருடாந்த வருமானம் மற்றும் செலவின வரவு செலவுத்திட்டமும் மூலதன வரவு செலவுத்திட்டமும் மத்திய வங்கியின் ஒவ்வொரு திணைக்களத்தினதும் உபாயத் திட்டத்தின் கீழான நடவடிக்கைத் திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டன. இது தொடர்பான செயன்முறைகள் 2016 ஓகத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2016 நவெம்பரில் இறுதிப்படுத்தப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் வரவுசெலவுத் திட்டத்திற்கான நாணயச் சபையின் ஒப்புதல் 2016 நவெம்பரில் பெறப்பட்டதுடன் வரவுசெலவுத் திட்டம் 2017இன் முதல் நாளன்று திணைக்களங்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டது. வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாட்டின் காத்திரமான கண்காணிப்பினைக் கருத்திற்கொண்டு 2016ஆம் ஆண்டிற்கான காலாண்டு ரீதியான வரவுசெலவுத் திட்டச் செயலாற்றக் கூற்றுக்கள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### 11.3 உள்ளக மற்றும் வெளிவாரி நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவு முறைமை

i. ஊழியர் ஊதியங்கள், அலுவலர் கடன்கள், தொழிற்பாட்டுச் செலவினங்கள் போன்ற ஊழியர்களுக்கான அனைத்து உள்ளகக் கொடுப்பனவுகளும் 2016இல் நேர இலக்குகளுக்குள் செய்யப்பட்டன.

ii. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கான அனைத்து வெளிவாரிக் கொடுப்பனவுகளும் மத்திய வங்கியின் துணைநில் சட்டங்களின்கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் மொத்த கொடுப்பனவுகள் 4,457ஆகக் காணப்பட்டதுடன் இது 4,186 உள்நாட்டு வழங்குநர்களையும் 271 வெளிநாட்டு வழங்குநர்களையும் உள்ளடக்கியிருந்தது.

iii. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் பொதுத் திறைசேரி மற்றும் தொடர்பான செயற்றிட்டங்களுக்காக ஏறத்தாழ ரூ.692.8 பில்லியன் பெறுமதியான பகிர்ந்தளிப்புக்களும் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவு மீதான ரூ.688.8 ஏறத்தாழ 2,752 பில்லியன் பெறுமதியான 619 தவணைக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், செயற்றிட்டங்களுக்காக வெளிநாட்டு வங்கியொன்றுடன் 4 வங்கித்தொழில் ஒழுங்குபடுத்தல்களும் கையொப்பமிடப்பட்டன.

### 11.4 உள்ளக நிதியங்களின் முகாமைத்துவம்

நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி, இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களின் (ஊ.சே. நிதியம் தவிர்ந்த) முதலீடுகளை மத்திய ரீதியில் முகாமை செய்வதற்காக நிதித் திணைக்களத்தின் கீழ் ஒரு தனியலகு நிறுவப்பட்டதுடன் 2016 மார்ச்சில் தொழிற்பாடுகளை தொடங்கியது. இதன்படி, அனைத்து நிதியங்களும் நிதித் திணைக்களத்தினால் பொது முதலீட்டுக் கொள்கையொன்றின் கீழ் முதலிடப்பட்டதுடன் தொடர்பான உரிமைத் திணைக்களங்கள் அத்தகைய நிதியங்களின் நிர்வாகதாரராகவும் செயல்படுகின்றன. நிதிய

முகாமைத்துவ ஆளுகை முறைமையானது முன் அலுவலகம், சுயாதீனமாகத் தொழிற்படுகின்ற மத்திய அலுவலகம் மற்றும் பின் அலுவலகம் போன்றவற்றையும் சுயாதீனமான தீர்மானம் மேற்கொள்ளும் துணை ஆளுநரின் தலைமையிலான முதலீட்டுக் குழுவினையும் உள்ளடக்குகின்றது. முதலீட்டுக் குழுவானது நிதியங்களின் முதலீடுகளிற்கு ஆலோசனை மற்றும் கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக சந்தித்ததுடன் இது 2016ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 12 கூட்டங்களை மேற்கொண்டுள்ளதுடன் முதலீடுகளின் ஒப்புதலுக்காக நாணயச் சபைக்கு மாதாந்தம் அறிக்கையிட்டுள்ளது. இதன்படி, நிதித் திணைக்களம் அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்றவர்களின் 7 ஓய்வூதிய நிதியங்கள், நிதித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 4 ஏனைய நிதியங்கள், வங்கி மேற்பார்வை திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம், அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 3 நிதியங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் செயற்றிட்ட நிதியங்கள் என்பனவற்றை உள்ளடக்கி 16 உள்ளக நிதியங்களை முகாமை செய்கின்றது.

நிதியங்கள் முக்கியமாக அரச பிணையங்கள், அரச வங்கிகளின் (இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கி) நிலையான வைப்புக்கள், உயர் வட்டிவீதங்களைக் கொண்ட கம்பனித் தொகுதிக் கடன்கள் மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவுகள் என்பனவற்றில் முதலீடு செய்யப்பட்டன. 2015ஆம் ஆண்டிற்கான இந்நிதியங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இந்நிதியங்களின் விதிகளுக்கிணங்க நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 2016 இறுதியிலுள்ளவாறு, மொத்த நிதியமட்டம் ரூ.79.26 பில்லியனுக்கு அதிகரித்தது.

அட்டவணை II-18

நிதிய முகாமைத்துவத்தின் செயலாற்றம் - 2016 (ரூ. பில்லியன்)

| திணைக்களம் | 31 திசெம்பர் 2016இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி) | 31 திசெம்பர் 2015இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி) |
|---|---|---|
| நிதி | 48.90 | 45.80 |
| வங்கி மேற்பார்வை | 27.21 | 16.99 |
| பிரதேச அபிவிருத்தி | 3.09 | 3.04 |
| அலுவலர் பணிகள் முகாமைத்துவம் | 0.06 | 0.06 |
| மொத்தம் | 79.26 | 65.89 |

### 11.5 நிலையான சொத்துக்களின் பதிவேடுகளைப் பேணுதல்

நிதித் திணைக்களம் பொதுப் பேரேட்டு முறைமையின் நிலையான சொத்து மாதிரியிலுள்ள நிலையான சொத்து பதிவேட்டில் மத்திய வங்கியின் நிலையான சொத்துக்களின் அனைத்துப் பதிவுகளையும் பேணுகின்றது. 2016இல் புதிய கொள்வனவுகள் மற்றும் புதிய அமைவிடங்கள், அமைவிடங்களின் மாற்றங்கள், மீள்மதிப்பீடுகள், தேய்மானங்கள் மற்றும் அகற்றல்கள் போன்ற அனைத்து மாற்றங்களும் இப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன. 2016இல் இப்பதிவேடானது 1,187 விடயங்களின் கொள்வனவுடனும் 253 பொருட்களின் அகற்றல்களுடனும் இற்றைப்படுத்தப்பட்டது.

### 11.6 அலுவலர் கடன்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்

நிதித் திணைக்களம், 2016ஆம் ஆண்டுப்பகுதியில் கடன்களின் அறவிடல் பதிவு செயன்முறையினை வசதிப்படுத்துவதற்காகவும் ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் தகவல்களை வழங்குவதற்காகவும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் கடன் தரவுத் தளத்தை தொடர்ச்சியாகப் பேணியது. 2016 காலப்பகுதியில் ரூ.1.69 பில்லியன் பெறுமதியான 2,173 கடன்கள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 11.7 ஏனைய தொழிற்பாடுகள் - கொள்வனவுச் செயன்முறை

மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின்படி, நிதித் திணைக்களத்தின் அலுவலர்கள், பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலைக்கோரல் சபைகளிலும் அளவீட்டுச் சபைகளிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இக்கொள்வனவுகள் தொடர்பாக, 2016ஆம் ஆண்டுப்பகுதியில் ஏறத்தாழ 259 விலைக்கோரல் சபைகளிலும் 57 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிலும் கலந்து கொண்டனர்.

## 12. நிதியியல் உளவறிதல் பிரிவு

நிதியியல் உளவறிதல் பிரிவு, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், சுயாதீனமான நியதிச்சட்ட ரீதியான அதிகாரபூர்வமான நிறுவனமாக 2006இல் நிறுவப்பட்டது. நிருவாக நோக்கங்களுக்காக, நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், நிதி அமைச்சரினால் செய்யப்பட்ட கட்டளையொன்றின் நியதிகளின்படி, 2007 மாச்சிலிருந்து இலங்கை மத்திய வங்கிக்குள்ளே ஒரு திணைக்களமாகத் தொழிற்பட்டு வருகின்றது. நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகள் பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள சட்டத்திற்கு மாறான ஏனைய நடவடிக்கைகளுடன் சாத்தியமான தொடர்புகளைக் கொண்டுள்ள விடயங்களைக் கண்டறியும் நோக்குடன் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல், மேற்குறிப்பிடப்பட்டவற்றுடன் தொடர்பான சந்தேகத்திற்குரிய நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய புலனாய்வுகளையும் அத்தகைய புலனாய்வுகளின் தகவல்களையும் விபரங்களையும் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அத்துடன் அல்லது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளிடம் பரப்புதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவின் தொழிற்பாடுகள் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் என்பனவற்றின் கீழும் நடைமுறைக்கிடப்படுகின்றது.

### 12.1 தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல், புலனாய்வு செய்தல் மற்றும் பரப்புதல்

நிதியியல் உளவறிதல் பிரிவு, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மீதான அறிக்கையிடலுக்கு உதவுவதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட வெப்தள முறைமையான “லங்கா பின்” ஊடாக அறிக்கையிடும் நிறுவனங்களிடமிருந்து சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் உட்பட, நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைப் பெற்றுக்கொள்கிறது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், பங்குத்தரகர்கள்

மற்றும் பணம் அல்லது பெறுமதியான மாற்றல் பணிகளை வழங்குவோர் ரூ.1.0 மில்லியன் மற்றும் அதற்கு மேற்பட்ட அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களிலான காசுக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்களை (உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டும்) நிதியியல் உளவறிதல் பிரிவிற்குத் தொடர்ந்தும் அறிக்கையிடுகின்றன. மேலும், சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 7இன் நியதிகளில் அறிக்கையிடும் நிறுவனங்களினால் நிதியியல் உளவறிதல் பிரிவில் கோவைப்படுத்தப்படுகின்றன. இதற்கமைய, 2016ஆம் ஆண்டில் ரூ.9.07 மில்லியனுக்கு மேற்பட்ட காசு/ நிதிய மாற்றல்களும் 759 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்கள் அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர் துறையினைக் கண்காணித்து ஒழுங்குமுறைப்படுத்துபவரான செலாவணிக் கட்டுப்பாட்டாளரினூடாக கீழ்மட்ட தொகையினை விஞ்சுகின்ற அவர்களின் காசுக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றி அறிவிக்கின்றனர். 2016இல் நிதியியல் உளவறிதல் பிரிவு, சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு 436 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிட்டது.

### 12.2 அறிக்கையிடும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தல்

2016 சனவரி 27ஆம் நாளன்று 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல்) விதிகள் விடுக்கப்பட்டதுடன், நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் வாடிக்கையாளர், உற்பத்திகள் மற்றும் பணிகள், மற்றும் விநியோக வழிப்படுத்தல் போன்றவற்றினால் விளைவிக்கப்படும் இடர்நேர்வுகள் பற்றி பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல்களை அடையாளங்கண்டு, மதிப்பிட்டு மற்றும் முகாமைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதுடன், 'இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கிணங்க' தற்போதைய வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2016இல் நிதியியல் உளவறிதல் பிரிவு, ஒவ்வொரு நிறுவனத்திலும் இயல்பாகவே காணப்படும் இடர்நேர்வுகளையும் இடர்நேர்வுகளைத் தணிக்கும் செயன்முறைகளையும் பரிசீலனையில் கொண்டு இடர்நேர்வுகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் நியதிகளில், நிதியியல் நிறுவனங்களின் ஆரம்ப இடர்நேர்வு மதிப்பீடொன்றினை நடத்தியது. இம்மதிப்பீட்டினூடாக அடையாளம் காணப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வு மட்டங்களின் அடிப்படையில் அவை மூன்று குழுக்களாக வகைப்படுத்தப்பட்டன. இதற்கிணங்க, 2016இல் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை யின் கீழ் 13 பரீட்சிப்புக்கள் நடத்தப்பட்டன.

### 12.3 உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பு

#### புரிந்துணர்வு ஒப்பந்தம்

2016இல் நிதியியல் உளவறிதல் பிரிவு, உள்நாட்டு ரீதியாக உள்நாட்டரசிறைத் திணைக்களம் மற்றும் குடியகல்வு மற்றும் குடிவரவுத் திணைக்களம் ஆகியவற்றுடன் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் பன்னாட்டு ரீதியாக பனாமாக் குடியரசின் நிதியியல் பகுப்பாய்வுப் பிரிவு, உக்ரேனின் அரச நிதியியல் கண்காணிப்புச் சேவை, இஸ்ரேல் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலைத் தடுக்கும் அதிகாரசபை மற்றும் சிங்கப்பூரின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கலை அறிக்கையிடல் அலுவலகம் என்பனவற்றுடன் நிதியியல் உளவறிதல் நோக்கங்களுக்கான தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும்/ பெற்றுக் கொள்வதற்குமாக நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் செய்து கொண்டது. இதன்படி, வெளிநாட்டு இணைத்தரப்பினருடனும் உள்நாட்டு முகவர்களுடனும் நிதியியல் உளவறிதல் பிரிவு கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மொத்த எண்ணிக்கை 2016 இறுதியில் முறையே 32 இற்கும் 03 இற்கும் அதிகரித்தது.

#### எக்மன்ட் குழுமம்

நிதியியல் உளவறிதல் பிரிவு, புலனாய்வுகளை மேற்கொள்வதற்காகவும் அவர்களின் புலனாய்வுகள் மீதான சான்றுகளைத் திரட்டிக் கொள்வதற்காகவும், உறுப்பு நாடுகளுடன் ஒத்துழைப்பினை மேற்கொள்ளும் பொருட்டு உலகளாவிய ரீதியில் 152 உறுப்பினர் நாடுகளை உள்ளடக்கிய நிதியியல் உளவறிதல் சங்கமான எக்மன்ட் குழுமத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொண்டது. 2016இல் எக்மன்ட் உறுப்பினர்களுடன் நிதியியல் உளவறிதல் பிரிவு பரிமாறிக் கொண்ட தகவல் நிகழ்வுகளின் மொத்த எண்ணிக்கை 62ஆகக் காணப்பட்டது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள், 2016 பெப்புருவரியில் மொனாகோவில் நடைபெற்ற நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் எக்மன்ட் குழுமத்தின் கூட்டத்திலும் 2016 செத்தெம்பரில் கட்டாரில் நடைபெற்ற எக்மன்ட் கொள்கை நடவடிக்கை முறை தொழிற்பாட்டுக் குழுவின் உள்ளகத் தொடர் கூட்டத்திலும் கலந்து கொண்டனர்.

#### பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுமம்

இலங்கை, ஆசிய பசுபிக் குழுமத்தின் நிறுவன உறுப்பினராகும். இலங்கை 2016 செத்தெம்பரில் ஐக்கிய அமெரிக்காவின் சான் டிகோவில் நடைபெற்ற 19ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் மற்றும் 2016 19ஆவது நவெம்பரில் சவூதி அரேபியாவின் ஜெட்டாவில் நடைபெற்ற வருடாந்த வரைமுறைசார்ந்த கோட்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப ஆய்வரங்குகளில் நிதியியல் உளவறிதல் பிரிவினாலும் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் நாட்டின் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றின் மற்றைய முக்கிய ஆர்வலர்களினாலும் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது.

#### பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தொடர்பான பிம்ஸ்டெக் துணைக் குழுமம்

2016 மாச்சு 16 - 17 காலப்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற பல்துறைவாரியான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காளவிரிகுடாவின் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான துணைக் குழுமத்தின் 8ஆவது கூட்டத்திற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு அனுசரணை வழங்கியதுடன் இணைத் தலைமையினையும் ஏற்றுக்கொண்டது. கூட்டத்தில் பிம்ஸ்டெக் நாடுகளிலிருந்தான 35 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### 12.4 நிறுவன ரீதியான இயலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களைக் கண்டுபிடித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல் மீதான விழிப்புணர்வினை அதிகரிக்கும் தொடர்ச்சியான முயற்சியாக இவ்வாண்டுப் பகுதியில் 28 விழிப்புணர்வு/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் பணம் அல்லது பெறுமதிமிக்க மாற்றல் சேவைகளை வழங்குவோர் ஆகியவற்றிலிருந்து 1,600 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். மேலும், 2016இல் நிதியியல் உளவறிதல் பிரிவு வங்காளதேசம் மற்றும் மாலைதீவிலிருந்து வருகைதந்த

அலுவலர்களின் இயலளவினைக் கட்டியெழுப்புவதற்காகவும் அவர்களுக்கு உதவும் விதத்திலும் தற்போதையதும் தோற்றம் பெற்று வருகின்றதுமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிதியியல் உளவறிதல் பிரச்சனைகள் தொடர்பில் அவர்களது அறிவினைக் கட்டியெழுப்புவதற்கும் அறிவினைப் பகிர்ந்து கொள்வதற்குமாக இரண்டு விசேட ஆய்வு விஜய நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பனவற்றின் இணங்குவிப்புத் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட 123 அலுவலர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வள ஆளணியினரின் உதவியுடன் 2016 திசெம்பரில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான வருடாந்த மாநாடும் நடத்தப்பட்டது.

### 12.5 பரஸ்பர மதிப்பீடு மற்றும் பின்தொடர் வேலைகள்

நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் திருத்தப்பட்ட விதந்துரைப்புக்களுக்கு இசைவான விதத்தில், இலங்கையின் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான நடவடிக்கைகளுடனும் பன்னாட்டுப் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் நியமங்களுடனும் இணங்கிச் செல்வதனை மதிப்பிடும் நோக்குடன் இலங்கை மீதான மூன்றாவது சுற்று பரஸ்பர மதிப்பீடு ஆசிய பசுபிக் குழுமத்தினால் 2014/15 காலப்பகுதியில் நடத்தப்பட்டது. 2015 செத்தெம்பரில் பின்பற்றப்பட்ட பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கை, ஆசிய பசுபிக் குழுமத்தின் 'விரைந்து அதிகரிக்கப்பட்ட பின்தொடர்' செயன்முறைகளின் கீழ் இலங்கையினால் நடைமுறைப்படுத்துவதற்கென ஒரு தொகுதி நடவடிக்கைகளை விதந்துரைத்தது. பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்திக்கும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு பின்வரும் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.

(அ) அமைச்சரவையின் ஒப்புதலுடன் 2015 - 2020 இற்கான தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கொள்கையினைப் பின்பற்றுதல்.

(ஆ) பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கையிலுள்ள விதந்துரைப்புக்களின் அடிப்படையில் தொடர்பான ஆர்வலர்களின் ஆலோசனையுடன் நிறுவன ரீதியான திட்டமொன்றினை உருவாக்குதல் மற்றும் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல்.

(இ) மீளமைக்கப்பட்ட சட்ட மீளாய்வுக் குழுவினால் செய்யப்பட்ட நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான சட்டங்களின் திருத்தங்களுக்கு விதந்துரைத்தல்.

(ஈ) நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு நிதியியல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நிறுவனத்தையுமுள்ளடக்கும் விதத்தில் 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் விதியினை விடுத்தல்.

(உ) குறித்துரைக்கப்பட்ட நிதியல்லாத வியாபாரம் மற்றும் தொழில்சார் நடவடிக்கைக்கான வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் விதியினை இறுதிப்படுத்தல்.

(ஊ) துறைவாரியான இடர்நேர்வினை மதிப்பிடல் மற்றும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பணம் தூயதாக்கலுக்கெதிராக/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மேற்பார்வையினை அறிமுகப்படுத்தல்.

## 13. மனித வளங்கள்


இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களை எய்துவதற்குப் பங்களிக்கக்கூடிய உயர்ந்த உற்பத்தித்திறனும் செயலூக்கமும் போட்டித்தன்மையும் கொண்ட ஊழியர் குழுக்களின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் மனித வளங்கள் திணைக்களம் ஏற்கனவேயுள்ள அலுவலர்களின் செயலூக்கம், புதிய அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், செயலாற்ற முகாமைத்துவம், பதவி உயர்வு, வேலைச் சுழற்சி, மனக் குறைபாடுகளைக் கையாளுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் 2016இல் மனித வளங்கள் திணைக்களம் மேற்கொண்டது. வங்கியின் தொழில்துறை நல்லிணக்கத்தினைப் பேணுவதற்கு உதவும் இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவம், அனைத்து வகை ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் சுமுகமான உறவுமுறைகளை மனித வளங்கள் திணைக்களம் தொடர்ந்தும் பேணியதுடன் அதனூடாக ஆண்டுகாலப்பகுதியில் வங்கியின் ஒட்டுமொத்த பணி வினைத்திறனையும் மேம்படுத்தியது. இவ்வாண்டுப் பகுதியில் மனித வள திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் மூலம் வங்கியின் மனித வள அமைப்பு கீழே தரப்படுகிறது.

### 13.1 மனித வளங்கள் அமைப்பு

2016 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1,471 ஆக விளங்கி 671 உயர் பதவி அலுவலர்களையும் 640 உயர் பதவியல்லாத அலுவலர்களையும் 160 சிற்றூழியர்களையும் உள்ளடக்கியுள்ளது. வகுப்பு அடிப்படையிலான, பால் அடிப்படையிலான மற்றும் வயது அடிப்படையிலான அலுவலர் உள்ளமைப்பு பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

**வரைபடம் - II-6**

**2016.12.31 இல் உள்ளவாறு அலுவலர்களின் உள்ளமைப்பு**





**(அ) ஊழியர்களின் உள்ளமைப்பு: வகுப்பு ரீதியாக**


**(ஆ) ஊழியர்களின் உள்ளமைப்பு: பால் ரீதியாக**

**(இ) ஊழியர்களின் உள்ளமைப்பு: வயது ரீதியாக**

### 13.2 ஊழியர்களின் கல்வி மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள்

2016இல் வங்கி பெரும்பாலும் உயர் பதவி மற்றும் உயர் பதவியல்லா வகுப்புக்களில் பன்முகத்தன்மையும் திறனும் வாய்ந்த ஊழியர் குழுவொன்றினைக் கொண்டிருந்தது. 2016 திசெம்பர் இறுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள் கொண்டிருந்த கல்விசார் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகளின் விபரங்கள் அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ளது.




## 13.3 மனித வள முகாமைத்துவம்

### (அ) ஆட்சேர்ப்பு

இவ்வாண்டுப் பகுதியில் மனித வளங்கள் திணைக்களம் ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு பணிப்பாளரொருவர். 79 வங்கித்தொழில் உதவியாளர்கள் (பயிலுநர்கள்) மற்றும் 53 முகாமைத்துவப் பயிலுநர்கள் ஆகியோர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டன. 53 முகாமைத்துவப் பயிலுநர்களில் 42 பேர் வெளிவாரியான விண்ணப்பதாரிகளாகவும் 11 பேர் உள்வாரியான விண்ணப்பதாரிகளாகவும் காணப்பட்டனர்.

### (ஆ) செயலாற்ற முகாமைத்துவம்

வங்கியின் செயலாற்ற முகாமைத்துவ முறைமை 4 படிமுறைகளை அதாவது ஊழியர்களின் வேலை விபரணங்களைத் தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல், தனிப்பட்ட ஊழியர்களுக்கான இலக்குகளை நிர்ணயித்தல், ஊழியர்களின் செயலாற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் செயலாற்றத்தினை மதிப்பிடல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறையின் கீழ், ஒவ்வொரு ஊழியரினதும் செயலாற்றமட்டமானது மதிப்பீட்டு பிரமாணத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பொதுவான மற்றும் தொழில்நுட்பத் தகைமைகளின் அடிப்படையில் எய்தப்பட்ட செயலாற்றத்திற்குத் தரமிடல்களை வழங்குவதன் மூலம் மதிப்பிடப்படுகிறது. ஊழியர்களின் இறுதிச் செயலாற்றம் பதவி உயர்வுப் பிரமாணத்தின் தேவைப்பாடுகளில் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது.

மனித வளத் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் திட்டமிட்டவாறு ஊழியர்களின் செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறைகளை மேற்கொண்டது. மேலும், மனித வளத் திணைக்களம், திணைக்களங்களினது நடுவாண்டு செயலாற்ற மீளாய்வுச் செயன்முறைகளையும் 2016இற்காக திணைக்களங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஊழியர்களின் இலக்குகளையும் மீளாய்வு செய்தது.

### (இ) பதவி உயர்வுகள்

2016ஆம் ஆண்டு ஒரு உதவி ஆளுநரை துணை ஆளுநராகவும் 5 திணைக்கள தலைவர்களை உதவி ஆளுநர்களாகவும் 20 துணை திணைக்களத் தலைவர்களை மேலதிக திணைக்கள தலைவர்களாகவும் பதவியுயர்த்தப்பட்டனர். மேலும், இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் பதவி உயர்வு திட்டத்தின் கீழ், 2016இல் 50 ஊழியர்களுக்குத் தர பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. இதன்படி, பிரயோகிக்கத்தக்க பதவி உயர்வு பிரமாணங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் உயர்பதவி வகுப்பிலுள்ள 19 அலுவலர்களுக்கும் உயர் பதவி அல்லா வகுப்பிலுள்ள 31 அலுவலர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டது. உயர் பதவி அல்லா வகுப்பிலுள்ள 32 அலுவலர்களுக்கும் வகுப்பு ரீதியான பதவி உயர்வு 2016இல் வழங்கப்பட்டது.

### (ஈ) வேலைச் சுழற்சி

அலுவலர்கள் வங்கியின் வேறுபட்ட துறைகளிலும் அனுபவத்தினைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்கும் குறிக்கோளுடன் இலங்கை மத்திய வங்கி வருடாந்த வேலைச் சுழற்சி முறைமையினை நடைமுறைப்படுத்தியது. இதற்கமைய, 2016இல் மனித வளத் திணைக்களம் வருடாந்த வேலைச் சுழற்சித் திட்டத்தின் கீழ் 19 உயர் பதவி அலுவலர்களுக்கும் 31 உயர் பதவி அல்லாத அலுவலர்களுக்கும் 2017 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மாற்றல்களை வழங்கியது.

### (உ) தொழில்துறை சௌகரியம்

2016இல் மனித வளத் திணைக்களம் முகாமைத்துவத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் நெருக்கமான கலந்துரையாடல்களைப் பேணுவதற்கான வசதி ஏற்பாட்டாளர் என்ற அதன் வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றியது. இதற்கமைய, இவ்வாண்டுப் பகுதியில் தொழிற்சங்க விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் பல கலந்துரையாடல்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

### (ஊ) மனக்குறைகளைக் கையாளுதல்

2016ஆம் ஆண்டுப் பகுதியில் மனித வளத் திணைக்களம் ஊழியர்களினதும் ஓய்வூதியம் பெறுவோரினதும் மனக்குறை தொடர்பில் ஈடுபட்டிருந்ததுடன் அவற்றை தீர்த்து வைப்பதற்கான வழிமுறைகளையும் மேற்கொண்டது.

## 13.4 புதிய திணைக்களங்கள்/ பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டமை

1. பிராந்திய அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் ஊழியர் சேம நிதிய தொழிற்பாடுகள் போன்றவற்றை மேம்படுத்தும் நோக்குடன் நுவரெலியாவில் பிரதேச அலுவலகம் நிறுவப்பட்டது.

2. பிரதேச அலுவலகங்களின் செயற்பாடுகள் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் பிராந்திய மட்ட பொருளாதார அபிவிருத்திகளை உந்துதலுக்கு வசதியளிக்கும் நோக்குடன் மேல் மாகாணம், தென் மாகாணம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலைநாடு வட மத்தி மற்றும் வட மேல் மாகாணம் போன்ற திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்களை ஒன்றினைப்பதனூடாக 2016 நவெம்பர் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பிரதேச அலுவலகங்களை ஒன்றினைப்பதனூடாக 2016

நவெம்பர் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பிரதேச அலுவலக முகாமைத்துவத் திணைக்களம் நிறுவப்பட்டது.

**13.5 திணைக்களங்களின் பெயர் மாற்றம்**

நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம் 2016 ஒத்தோபர் 14 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு திணைக்களம் என பெயர் மாற்றப்பட்டது.

**13.6 2016ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆளுநர் வெளிநாட்டில் பங்குபற்றிய கூட்டங்கள்**

**திரு. லக்ஸ்மன் அர்ஜுன மகேந்திரன் (2016 சனவரி 1 முதல் யூன் 30 வரை):**

1. 2016 சனவரியில் சுவிஸ்லாந்து டாவேஸ் இல் நடைபெற்ற உலக பொருளாதார அரங்கத்தில் 46வது ஆண்டுக் கூட்டம் 2016இல் கௌரவ பிரதம மந்திரியின் தூதுக்குழுவின் உறுப்பினர் ஒருவராக கலந்து கொண்டார்.
2. 2016 பெப்புருவரியில் பிரான்ஸ் பாரிசில் இடம்பெற்ற பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் செயலாளர் நாயகம் திரு.ஏஞ்சல் குரியாவுடனான சந்திப்பில் பங்குபற்றினார்.
3. 2016 பெப்புருவரி காலப்பகுதியில் சீன மக்கள் குடியரசின் சீன மக்கள் வங்கியின் அலுவலர்கள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களின் அலுவலர்களுடனான சீன மக்கள் குடியரசுக் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் இலங்கை வங்கிகளின் பிரதம நிறைவேற்று அலுவலர்களின் தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கினார். அத்துடன் சிங்கப்பூரிலுள்ள தரப்படுத்தல் முகவர்களுடனான சந்திப்புக்களிலும் கலந்து கொண்டார்.
4. 2016 மார்ச்சில், டெல்லியில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடு முன்னேற்றம் காணும் ஆசிய மாநாடு போன்றவற்றில் கலந்து கொண்டதுடன் சிங்கப்பூரில் நடைபெற்ற இலங்கை முதலீட்டு உச்சி மாநாடு, பினான்ஸ் ஆசியா போன்றவற்றிலும் கலந்து கொண்டார்.
5. 2016 ஏப்பிறலில் சீன மக்கள் குடியரசின் கூட்டங்களில் பிரதம மந்திரியின் தூதுக்குழுவின் ஒரு உறுப்பினராக கலந்து கொண்டார்.
6. 2016 காலப்பகுதியில் வாசிங்டனில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கியில் இளவேனில் கால கூட்டம் மற்றும் நீயூயோர்க்கின் பெஸ்ரன், சன் பிரான்சிக்கோ மற்றும் லோஸ் ஏன்சல்ஸில் 2016 ஏப்பிறல் மாத காலப்பகுதியில் இடம்பெற்ற முதலீட்டாளர் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.
7. 2016 ஏப்பிறல் - மே காலப்பகுதியில் கொங்கொங் மற்றும் சிங்கப்பூர் முதலீட்டாளர்களுடனான கூட்டங்களில் கலந்து கொண்டார்.
8. 2016 ஏப்பிறல் மற்றும் மே காலப்பகுதியில் சிங்கப்பூரில் முதலீட்டாளர்களுடனான கூட்டங்களில் கலந்து கொண்டார்.
9. 2016 மேயில் மும்பையில் நடைபெற்ற சார்க் நிதிய ஆளுநர்களின் 32வது குழு கூட்டம் மற்றும் சார்க் நிதிய ஆளுநர்களின் கருத்தரங்கு போன்றவற்றில் கலந்து கொண்டார்.

**முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி (2016 யூலை 03 இலிருந்து திசெம்பர் 31 வரை)**

1. 2016 ஓகத்தில் பாகிஸ்தான் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் நிதி அமைச்சர்களின் 8வது கூட்டத்தில் கலந்து கொண்டார்.
2. 2016 ஒத்தோபர் காலப்பகுதியில் வாசிங்டனில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆண்டுக் கூட்டம் 2016இல் கலந்து கொண்டார்.

**13.7. பதவி உயர்வுகள்/ நியமனங்கள்**

1. திரு. எஸ். லங்காதிலக, உதவி ஆளுநர், 2016 சனவரி 24ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
2. பதவி உயர்வுகள் மற்றும் நியமனங்கள் உயர்அலுவலர் வகுப்பு சிறப்புத் தரங்களின் விபரங்கள்:-

   I. செல்வி. கே. சரவணமுத்து, 2016 ஏப்பிறல் 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   II. திரு. ஈ. ஏ. ஹெட்டியாராய்ச்சி, 2016 ஏப்பிறல் 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   III. திரு. ஆர். ஏ. ஏ. ஜயலத், 2016 ஏப்பிறல் 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   IV. திரு. கே. எம். எம். சிறிவர்தன, 2016 யூன் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   V. திரு. எஸ். ஜே. ஏ. கந்தகம, 2016 யூன் 18ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

3. 2016 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பதவி உயர்வுகள் மற்றும் நியமனங்கள் உயர்அலுவலர் வகுப்பு சிறப்புத் தரங்களின் விபரங்கள்:-

   I. திரு. எஸ். ஆர் சுமனசேகர, பதவி உயர்த்தப்பட்டு கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

   II. திரு. எம் வித்தான, பதவி உயர்த்தப்பட்டு ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

   III. திரு. யூ. எல். திலகரத்தன, பதவி உயர்த்தப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

   IV. திரு. ஏ ஏ சந்திரசேன, பதவி உயர்த்தப்பட்டு உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

   V. திரு. எம். ஆர். எம் அபயரத்ன, பதவி உயர்த்தப்பட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

   VI. திரு. சி. ஏ. அபயசிங்க, பதவி உயர்த்தப்பட்டு பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

   VII. திரு. டீ. எம். டீ. பீ திசாநாயக்க, பதவி உயர்த்தப்பட்டு வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

VIII. திரு. ஆர். டீ. டபிள்யூ பல்லேகம, பதவி உயர்த்தப்பட்டு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

IX. திரு. டபிள்யூ. ரணவீர, பதவி உயர்த்தப்பட்டு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

X. செல்வி. கே. ஜி. ஆர். கே. தீரசிங்க, பதவிஉயர்த்தப்பட்டு அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

XI. திரு. ஜே பி கமலத், பதவி உயர்த்தப்பட்டு உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

XII. திரு. சி. பி. எஸ் பண்டார, பதவி உயர்த்தப்பட்டு பொதுப் படுகடன் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

XIII. திரு. ஏ. எம். குணதிலக, பதவி உயர்த்தப்பட்டு ஊழிய சேம நிதியத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

XIV. திருமதி. டபிள்யூ. ஏ. தில்ருக்சினி, பதவி உயர்த்தப்பட்டு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

XV. திருமதி. டி. எஸ். டபிள்யூ. சமரதுங்க நிதி அமைச்சிற்குப் பதில் மேலதிகப் பணிப்பாளராக கடமையாற்றுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.

XVI. திரு. ஜே. டீ. எஸ். ஜே. நாணயக்கார, பதவி உயர்த்தப்பட்டு ஊழிய சேம நிதியத் திணைக்களத்தின் பதில் மேலதிக கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

XVII. திரு. ஆர். டீ. டி. குணசேகர, பதவி உயர்த்தப்பட்டு பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் மேலதிக கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

XVIII. திரு. கே. ஜி. பி. சிறிகுமார, பதவி உயர்த்தப்பட்டு சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

XIX. முனைவர். சி. அமரசேகர, பதவி உயர்த்தப்பட்டு பொருளாதர ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

XX. முனைவர். பி. கே. ஜி. ஹரிச்சந்திர, நிதி அமைச்சிற்குப் பதில் மேலதிகப் பணிப்பாளராக கடமையாற்றுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.

4. திரு. ஏ. ஏ. எம். தசீம், பணிப்பாளர், தொடர்பூட்டல் திணைக்களம், 2016 சனவரி 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

5. செல்வி. எஸ். எச்.குணவர்த்தன, பதில் பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம், 2016 சனவரி 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தொடர்பூட்டல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

6. திரு. ஈ. ஏ. கெட்டியாராச்சி, பணிப்பாளர், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம், 2016 பெப்புருவரி 03ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் அவரது கடமைகளுக்கு மேலதிகமாக பாதுகாப்பு பணிகள் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

7. திரு. பி. வீ. எல் நந்தசிறி, பணிப்பாளர், சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் 2016 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் அவரது கடமைகளுக்கு மேலதிகமாக பாதுகாப்பு பணிகள் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

8. திரு. டி. குமாரதுங்க, மேலதிகப் பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2016 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

9. திரு. என். டபிள்யூ. ஜீ. ஆர். டி நாணயக்கார, பணிப்பாளர், நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம் 2016 ஏப்பிறல் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களத்தின் அவரது கடமைகளுக்கு மேலதிகமாக கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

10. திரு. எச். பீ. டி. கருணாரத்தன, மேலதிகப் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 2016 ஏப்பிறல் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

11. திருமதி. கே. என். என். எம். பண்டார, மேலதிகப் பணிப்பாளர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், 2016 ஏப்பிறல் 27ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

12. திரு. ஏ. எம். என். குணவர்த்தன, பணிப்பாளர், மனிதவள திணைக்களம் 2016 யூன் 23ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

13. திரு. கே. எம். அபயகோன், பணிப்பாளர், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் 2016 யூன் 23ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மனிதவள திணைக்களத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

14. திருமதி டி. வீ. எஸ். தயாவன்ச, மேலதிகப் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2016 யூன் 23ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

15. திரு. எஸ். கே. ரணசிங்க, மேலதிகப் பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 2016 யூன் 23ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

16. திருமதி. கே. எம். ஏ. என். டவுளகல, நாணயச் சபையின் துணைச் செயலாளர், 2016 யூன் 28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வட மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களின் திணைக்கள மட்ட பிரதேச அலுவலகங்களின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் 2016 யூலை 7ஆம் திகதி நடைமுறைக்குவரும் வகையில் நாணயச் சபையின் துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

17. திருமதி. டீ. எம். ரூபசிங்க, திணைக்கள மட்ட பிரதேச அலுவலகங்கம் - மலைநாட்டின் பணிப்பாளர், அவரது கடமைகளுக்கு மேலதிகமாக 2016 யூலை 07ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வட மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களுக்கான திணைக்கள மட்ட பிரதேச அலுவலகங்கத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நியமிக்கப்பட்ட அவர் 2016 ஓகத்து 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தென் மாகாணத்திற்கான திணைக்கள மட்ட பிரதேச அலுவலகத்தின் பணிப்பாளராகவும் 2016 செத்தெம்பர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான திணைக்கள பிரதேச மட்ட பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

18. திரு. எம். ஐ. சுபியான், பணிப்பாளர், வட மற்றும் கிழக்கு மாகாணங்களின் திணைக்கள மட்ட பிரதேச அலுவலகம், 2016 செத்தெம்பர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதித் திணைக்களத்தின் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

19. திரு. பி. டபிள்யூ. ஜினசேன, பணிப்பாளர், அலுவலர் பணிகள் முகாமைத்துவம் திணைக்களம், 2016 ஒத்தோபர் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அலுவலர் பணிகள் முகாமைத்துவம் திணைக்களத்தின் அவரது கடமைகளுக்கு மேலதிகமாக செயலகத் திணைக்களத்தின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.

**13.8. விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்**

1. திரு. எஸ். ஆர். ஆட்டிகல, உதவி ஆளுநர், நிதி அமைச்சிற்குப் பிரதி செயலாளராக கடமையாற்றுவதற்கு

2. திருமதி. எஸ் குணரத்ன, உயர் பதவி அலுவலர் தரம் IV, பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக

3. முனைவர். ஆர். ஏ. பெரேரா, உயர் பதவி அலுவலர் தரம் IV, அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சிற்கு

4. திருமதி டி. எஸ். டபிள்யு. சமரதுங்க, உயர் பதவி அலுவலர் தரம் IV, பொருளாதார அலுவல்கள் பணிப்பாளராக நிதி அமைச்சிற்கு

5. முனைவர் பி. கே. ஜி. ஹரிச்சந்திரா, உயர் பதவி அலுவலர் தரம் IV, பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளராக நிதி அமைச்சிற்கு

6. திரு. யூ. கெட்டியாராச்சி, உயர் பதவி அலுவலர் தரம் III (2), பிரதம நிறைவேற்று அலுவலர் பொது முகாமையாளராக எச்டீஎவ்சி வங்கிக்கு

7. திருமதி. ஏ. எதிரிசிங்க, உயர் பதவி அலுவலர் தரம் II, நிதி அமைச்சிற்கு

8. திருமதி. எஸ். ரத்நாயக்க , உயர் பதவி அலுவலர் தரம் II, நிருவாக உதவியாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

9. திரு. என். பீ. ஜனகன், உயர் பதவி அலுவலர் தரம் I, நிதி அமைச்சிற்கு

10. திரு. எஸ். என். டபிள்யூ. கருணதாஸ, ஓட்டுநர், வலு மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி அமைச்சிற்கு

**13.9. ஓய்வுபெறல்கள்**

1. திரு. பீ. டி. டபிள்யூ. ஏ. சில்வா, பிரதி ஆளுநர் 2016 சனவரி 24ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

2. திரு. சி. பி. ஏ. கருணாதிலக, உதவி ஆளுநர், 2016 ஏப்பிறல் 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

3. திரு. ஈ. ஏ கெட்டியாராச்சி, உதவி ஆளுநர், 2016 மே 26ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

4. திருமதி. ஆர். வீரசிங்க, உதவி ஆளுநர், 2016 யூன் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

5. திரு. டி. வசந்த, உதவி ஆளுநர், 2016 யூன் 18ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

6. திரு. எச். எம். ஏக்கநாயக்க, பணிப்பாளர், பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் 2016 மே 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

7. திருமதி. ஆர். ஏ. எஸ். எம். டயாரத்ன, பணிப்பாளர், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் 2016 யூலை 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

8. திரு. எம். ஜே. எஸ். அபயசிங்க, பணிப்பாளர், தென் மாகாண திணைக்கள மட்ட பிரதேச அலுவலகம், 2016 நவெம்பர் 2ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

9. திரு. பி. ஏ விஜயரத்தன, முதன்மைக் கணக்காளர், நிதித் திணைக்களம் 2016 திசெம்பர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

10. திரு. எம். விதான, பதில் மேலதிக கண்காணிப்பாளர், ஊழிய சேம நிதியத் திணைக்களம் 2016 ஒத்தோபர் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

**14. தகவல் தொழில்நுட்பம்**

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளினால் ஆதரவளிக்கப்பட்ட செயற்திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, இலங்கை மத்தியவங்கியின் செயற்பாடுகளை வசதிப்படுத்துவற்காக, தகவல் தொழில்நுட்பச் சேவைகளைத் தொடர்ந்து வழங்கியது.

ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது ஐந்து பரந்துபட்ட துறைகளில் தனது செயற்பாடுகளை நடத்தியது, அவையாவன, (அ) செலவு சிக்கனமான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குதல் (ஆ) தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்தல் (இ) தேசியக் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பினைப் பேணுவதற்கு ஆதரவளிக்கும் சேவைகளை

வழங்குதல் (ஈ) தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு மற்றும் விரிதிறனை வலுப்படுத்துதல் (உ) ஊழியர் மத்தியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறமைகளை மேம்படுத்தல்.

**(அ) செலவு சிக்கனமான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குதல்**

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, நடைமுறையிலுள்ள அனைத்துப் பயன்பாடுகளுக்காக, ஆதரவு மற்றும் பராமரிப்பை வழங்கி, வங்கியிலுள்ள வர்த்தக செயன்முறைகளை மேம்படுத்துவதற்கு, 25 தகவல் தொழில்நுட்பச் செயற்திட்டங்களை மேற்கொண்டது. இவற்றிற்கும் மேலாக, வங்கியின் பொருளாதாரக் கொள்கை ஆலோசனைக் கொத்தணிக்காக 6 செயற்றிட்டங்கள் மற்றும் நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கொத்தணிக்காக 12 செயற்றிட்டங்கள் மற்றும் வங்கியின் திறனாற்றல்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் துணை கொத்தணிக்காக 7 செயற்றிட்டங்களும் செய்யப்பட்டன. இவ்வாண்டுக் காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்றிட்டங்கள் பின்வருமாறு.

i. பொதுவான இலத்திரனியல் ஆராய்ச்சித் தரவுத் தளமானது, பல்வேறு திணைக்களங்களிலிருந்து தகவலைச் சேகரித்து, அதன்மூலம், பாரிய அளவிலான சமூக மற்றும் பொருளாதாரத் தரவினை உள்ளக மற்றும் வெளியக ஆராய்ச்சியாளர்களின் தேவைகளுக்கு வழங்குவதற்காக செயற்படுத்தப்பட்டது

ii. ஒரு பட்டைக்குறியீடு இயலுமைப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமையானது, வர்த்தக வங்கிகள் மற்றும் நாணய-உள்- செலுத்தும் (சி ஐ டி) கம்பனிகளிடமிருந்து சேகரிக்கப்படும் நாணய வைப்புகளின் செயற்பாட்டினைத் துரிதப்படுத்துவதற்கு, நாணயத் திணைக்களத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

iii. இலத்திரனியல் விடுப்பு முகாமைத்துவ முறைமையானது, விடுப்பு விண்ணப்பச் செயன்முறையை எளிதாக்குவதற்கு மற்றும் ஊழியர்களின் விடுப்புத் தரவினை ஒருமுகப்படுத்துவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டது

iv. தன்னியக்கப்பட்ட பங்களிப்பு சேகரித்தலுடனான, ஊழியர் சேம நிதிய முறைமையானது, தற்போதய முறையில் உள்ளடங்கியுள்ள சம்பந்தப்பட்ட கொடுப்பனவு நீக்கல் செலவுகளுடன் இணைந்து அதேநேர சரிபார்த்தலுடன், உறுப்பினர்களின் பங்களிப்பை, உறுப்பினர்களின் கணக்குக்கு அதே நாள் அதே நேரத்தில் வைப்பிலிடுவதை இயலுமைப்படுத்துவதற்காக மேம்படுத்தப்பட்டது.

v. இலங்கை மத்திய வங்கி சேம நிதிய மற்றும் இலங்கை மத்திய வங்கி ஊழியர் நம்பிக்கை நிதிய முறைமையானது, பொறுப்பான திணைக்களங்கள் பரிமாற்றங்களைச் செயன்முறைப்படுத்துதல் மற்றும் தேவையான அறிக்கைகளை அவர்களே உருவாக்குவதனை அனுமதிப்பதற்கு, மீள்வடிவமைக்கப்பட்டது

**(ஆ) தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் தொடர்ச்சியான மேம்படுத்தல்கள்**

ஆண்டு காலப்பகுதியில் இது குறித்துப் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

i. தனிநபர் கணணிகளில் வரும் சந்தேகத்துக்கிடமான பாதுகாப்பு இடையூறுகளை கண்டுபிடிப்பதற்கு, மைக்ரோசொப்ட் முன்னேற்றம்கண்ட அச்சுறுத்தல்களின் பகுப்பாய்வு அம்சமானது பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

ii. உத்தியோகபூர்வ ஆவணங்களைப் பிரதிக்காப்பு செய்வதற்கு, மையப்படுத்தப்பட்ட இலக்க தரவு சேமிப்பு ஒன்று வழங்கப்பட்டது.

iii. மின்னஞ்சல்களை நீண்ட காலத்துக்கு தக்கவைத்தல் மற்றும் மின்னஞ்சல்களை மையரீதியாகக் காப்பதன் பொருட்டு, மின்னஞ்சல் சேமிப்பியானது, மைக்ரோசொப்ட் பரிமாற்றம் 2016 க்கு இடம்பெயர்க்கப்பட்டது

iv. ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தை இலங்கை மத்திய வங்கியின் தலைமையகத்தில் இடமளிப்பதற்கு, வங்கியின் குறும்பரப்பு வலையமைப்பானது (லான்) மீள்கட்டமைக்கப்பட்டது

**(இ) தேசியக் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பினைப் பேணுவதற்கு ஆதரவளிக்கும் சேவைகளை வழங்குதல்**

ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, பின்வரும் தேசிய செயற்திட்டங்களுக்கு ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைத் தொடர்ந்து வழங்கியது.

i. மேம்படுத்தப்பட்ட வர்த்தக தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் புதிய தேசிய அடையாள இலக்கத்திற்கு இடமளித்தலுக்காக, லங்கா செட்டில்/ லங்கா செக்கியோர் பயன்பாட்டு மென்பொருளானது பதிப்பு 3.7 இலிருந்து 3.8 இற்கு தரமுயர்த்தப்பட்டது.

ii. மத்திய இணைத்தரப்புத் தீர்வு ஒன்றுடன், இலத்திரனியல் விற்பனைத் தளம் ஒன்றையும், முறித் தீர்வகம் ஒன்றையும் நிறுவுவதற்காகத் தொழில்நுட்ப ஆய்வுக் குழுவில் பங்காற்றியது.

iii. ஈசீ-பணம், எம்-பணம் மற்றும் ஒற்றை நோக்கத்துடன் சேமிக்கப்பட்ட பிரயாண அட்டை முறைமைகள் மேல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பரீட்சைகளில் பங்குபற்றியது.

**(ஈ) தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு மற்றும் விரிதிறனன் வலுப்படுத்துதல்**

ஆண்டு காலப்பகுதியில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, அச்சுறுத்தல்களைக் குறைத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பை வலுப்படுத்தலுக்குமாகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது.

i. செயற்பாட்டுத் திணைக்களங்களின் முழுமையான வர்த்தக நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்கு, புதிய அனர்த்த மீட்புத் தளமானது நிறுவப்பட்டது.

ii. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ மேம்படுத்தலுக்கு, தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு சோதனை ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்பட்டது.

iii. வங்கித் தகவலின் இரகசியத் தன்மையை உறுதி செய்வதற்கு, தகவல் வகைப்படுத்தல் மற்றும் இலக்க உரிமைகள் முகாமைத்துவத்துக்காக மென்பொருள் தீர்வு ஒன்று நிறுவப்பட்டது, இது 2017, 2ம் காலாண்டில் தொழிற்பாட்டுக்கு விடப்படும்.

மேலுள்ளவற்றுடன் சேர்த்து, தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, இலங்கை மத்திய வங்கியின் இன்றியமையாத தகவல் முறைமைகளின் பாதுகாப்பினை வழக்கமாகத் தொடர்ந்து செய்தது, அவையாவன்

i. பாதிக்கும் தன்மையினை மதிப்பீடு செய்தல் மற்றும் ஊடுருவல் சோதனைகள் போன்றவற்றை நடத்துதல், மற்றும் கண்டறியப்பட்ட பாதிப்புகளுக்காக அதற்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

ii. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மற்றும் வெளியகக் கணக்காய்வாளர்களின் வேண்டுகோளின்படி தகவல் முறைமைக் கணக்காய்வுகளை வசதிப்படுத்துதல்

**(உ) ஊழியர் மத்தியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறமைகளை மேம்படுத்தல்**

i. அறிவு மற்றும் திறன்களைத் தரமுயர்த்தும் பொருட்டு, தகவல் தொழில் நுட்ப அலுவலர்களுக்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டுப் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டன. அதற்கேற்ப, தகவல், சைபர் மற்றும் வலையமைப்பு பாதுகாப்பு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள், நல்லாட்சி மற்றும் தலைமைத்துவம் மற்றும், வின்டோஸ் சேமிப்பி கட்டமைப்பு மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில், 47 அலுவலர்கள், குறுகிய கால உள்நாட்டுப் பயிற்சிகளிலும், 14 அலுவலர்கள், குறுகிய கால வெளிநாட்டுப் பயிற்சிகளிலும் பங்குபற்றினர்.

ii. வங்கியின் அனைத்து ஊழியர்களினது தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கான ஒரு குறிக்கோளுடன், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, மன்சல வில் விழிப்புணர்வுப் பதாதைகளை வெளியிடுதல், மற்றும் மின்னஞ்சல் ஊடாக தீங்கிழைக்கும் மென்பொருள் "றன்சம்வெயர்" எச்சரிக்கைகளை சுற்றோட்டதிலிடுதலைத் தொடர்ந்து செய்தது.

## 15. உள்ளகக் கணக்காய்வு

தொடர்புடைய தொழிற்பாடுகளின் கட்டுப்பாட்டு சூழலின் பெறுமதி கூட்டல் மற்றும் மேம்பாட்டிற்கான சுதந்திரமான நோக்க காப்பீடு மற்றும் சிபாரிசுகளை வழங்கும் நோக்கத்துடன் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் 1951ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மத்திய வங்கியில் தொழிற்பாட்டிலிருந்து வருகின்றன. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணி மற்றும் வேலையின் செயற்பரப்பு, பொறுப்புக்கூறும் தன்மை, சுயாதீனம் மற்றும் பணிப்பாளர் மற்றும் அலுவலர்களின் பொறுப்பாண்மை மற்றும் அதிகாரம் என்பன 2016 காலப்பகுதியில் இற்றைப்படுத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. உலகளாவிய நியமங்கள் மற்றும் தொழில்துறையின் மிகச் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் கணக்காய்வுகளை மேற்கொண்டது. 2016ஆம் ஆண்டுக் காலத்தில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

### 15.1 கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்ளுதல்

**அ. 2016இற்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டம்**

ஆண்டுக்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது இலங்கை மத்திய வங்கியின் இற்றைப்படுத்தப்பட்ட அனைத்தையுமுள்ளடக்கிய கணக்காய்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. இது தொடர்பில், ஒவ்வொரு திணைக்களங்களினாலும் இற்றைப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு கைநூலில் குறிப்பிட்டவாறு அத்திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பட்டியல் தொகுக்கப்பட்டு மதிப்பிடப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்கள், மையக் குறிக்கோள்களுக்கான துணைக் குறிக்கோள்கள், முகவர் தொழிற்பாடுகள் மற்றும் ஏனைய தொழிற்பாடுகள் போன்றவையும் மையக் குறிக்கோள்கள் மற்றும் மையக் குறிக்கோள்களுக்கான துணைக் குறிக்கோள்கள் தொடர்பான முன்னுரிமைச் செயற்பாடுகள் போன்றவை உள்ளடங்கலான உயர் இடர்நேர்வினைக் கொண்ட நடவடிக்கைகள் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டன. தகவல் முறைமைக் கணக்காய்வுகளும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது நாணயச் சபையின் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் பாதுகாப்புக்கள் குழுவின் சிபாரிசுகளின் படியான மூன்று வருட உபாய கணக்காய்வு திட்டத்தினை தயார்செய்வதற்கான முன்னெடுப்புக்கள் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, 2018-2020 காலப்பகுதிக்கான உபாய கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டது.

**ஆ. உள்ளகக் கணக்காய்வு நடைமுறை**

ஒவ்வொரு கணக்காய்வு ஒப்படைகளும் திட்டமிடல், செயற்படுத்தல், தொடர்பூட்டல் மற்றும் தீர்மானம் எடுத்தல் நடவடிக்கைகள் போன்ற நான்கு தொடர்ச்சியான படிமுறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. செயற்படுத்தல் நிலையில், கணக்காய்வுச் சான்றுகள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டன. உலகளாவிய நியமங்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில், கணக்காய்வு பெறுபேறுகளைத் தொடர்பூட்டுவதற்காக நான்கு படிச் செயன்முறை பின்பற்றப்பட்டது. இந்நான்கு படிமுறைகளும் கணக்காய்வு அவதானிப்புக்களினை செல்லுபடியாக்குவதற்காக முடிவுறுத்தல் கூட்டங்களை நடாத்துதல், கணக்காய்வு அவதானிப்புக்களினை எழுத்து வடிவில் தொடர்பூட்டல், வரைபு கணக்காய்வு அறிக்கையினை வழங்கல் மற்றும் இறுதி அறிக்கையினை வழங்கல் போன்றனவாகும். உடன்படப்பட்ட கணக்காய்வு விதந்துரைப்புக்கள் செய்முறை உரிமையாளரால் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக கிரமமான அடிப்படையில் பின்தொடர்தல் கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. உள்ளக கணக்காய்வாளர்கள் நிறுவனத்தின் பன்னாட்டு தொழில்சார் நடைமுறைக்கட்டமைப்பு நியமங்கள் மற்றும் பன்னாட்டு முறைமைகள் கணக்காய்வுகள் மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு போன்றவற்றிடன் இணங்கிச்செல்லும் நோக்கில் அனைத்து கணக்காய்வு ஒப்படைகளும் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது முறைமைகள் (தகவல் முறைமைகள் உள்ளடங்கலாக) மற்றும் திணைக்களங்களின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கைநூல்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு அவை இணங்கியொழுகுதல் தொடர்பாக மீளாய்வு செய்தது. மேலும், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின் நிபந்தனைகளின் படி, பல திணைக்களங்களின் ஒழுங்குமுறையிலான உடன் கணக்காய்வுகளை மேற்கொண்டது. இதன்படி, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது பல திணைக்களங்களுக்கான கணக்காய்வினை மேற்கொண்டதுடன் உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள், முறைமைக் குறைபாடுகள் போன்றவற்றை குறித்துக் காட்டிய வேளையில் அத்தகைய அவதானிப்புக்களுடன் இணைந்துள்ள இடர்நேர்வுகளை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் விதந்துரைத்தது. இதன்படி, அத்தகைய விதந்துரைப்புக்கள் திணைக்களங்களால் செயற்படுத்தப்படும் வேலைகளின் வினைத்திறனை மேம்படுத்த வழிவகுப்பதுடன், வங்கியின்

சாத்தியமான மோசடி இடர்நேர்வுகள், விரயம் மற்றும் ஏனைய மூலப்பொருள் இழப்புக்கள் போன்றவற்றை குறைக்கும்.

**இ. விசேட ஒப்படைகள்**

ஆளுநர், நாணயச்சபை அல்லது ஆலோசனைக்குழு போன்றோரினது வேண்டுகோளின்படி, இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் முதலீட்டு நடவடிக்கைகள், நிதிய முகாமைத்துவ செயற்பாடுகள், பாதுகாப்பு நடைமுறைகள், ஏனைய உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கைந்நூல்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடனான இணக்கப்பாடு போன்றவற்றை கவனத்தில் கொண்ட விசேட மீளாய்வுகள் நடாத்தப்பட்டன. இத்தகைய மீளாய்வுகளில் அநேக திணைக்களங்களின் நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆய்வில் கண்டறியப்படட விடயங்களின் படி, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விதந்துரைப்புக்களை, தொடர்பான திணைக்களங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளன

**ஈ. கணக்காய்வுகளை மேற்கொள்வதில் அடையப்பட்ட முன்னேற்றங்களை அறிக்கையிடல்**

கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்வதில் காணப்படும் முன்னேற்றம் மதியுரைக் கணக்காய்வுக் குழு மற்றும் நாணயச் சபைக்கு காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடப்பட்டது. நடவடிக்கை அறிக்கைகள் அரையாண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**15.2 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளித்தல் ஏற்பாடுகள்**

2016 காலப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது தகவல் முறைமைகள் கணக்காய்வு தொழில்துறை நிபுணர் ஒருவரின் உதவியுடன் தகவல் முறைமைகள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வு அலுவலர்களுக்கான காட்சிப்படுத்துலுடன் கூடிய விரிவுரையொன்று ஒழுங்குபடுத்தப்பட்டது. மேலும், உள்ளகக் கணக்காய்வு திணைக்கள அலுவலர்களின் நன்மைக்காக காட்சிப்படுத்தலுடன் கூடிய உள்ளக விரிவுரைகள் மற்றும் அறிவினைப் பகிரும் கூட்டத்தொடர்கள் கிரமமாக மேற்கொள்ளப்பட்டன. மனிதவளத் திணைக்களத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டமைக்கமைவாக 2016இல் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் உள்ளகக் கணக்காய்வு மற்றும் தொடர்புடைய விடயங்களில் பட்டதாரிகள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கியது.

**15.3 நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழு**

மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது நாணயச் சபையின் உப குழுவாக காணப்படுவதுடன் இது வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் அதிலுள்ள ஏதாவது இடைக்கால திருத்தங்கள், வெளியக கணக்காண்வாளர்களால் வழங்கப்பட்ட முகாமைத்துவ கடிதங்களுக்கான முகாமைத்துவ பதிலிறுப்புக்கள் போன்ற விடையங்களில் வங்கியின் கணக்காய்வுடன் தொடர்பான சபைக்கொள்கைகள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குகிறது. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உதவிச் செயலாளராக இருப்பதுடன் ஆண்டுக் காலப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கான செயலகப் பணி வசதிப்படுத்தல்களை தொடர்ந்தும் வழங்கியது.

**15.4 வெளிவாரிக் கணக்காய்விற்கு வசதியளித்தல்**

கணக்காய்வாளர் நாயகம் இலங்கை மத்திய வங்கியில் வெளிவாரிக் கணக்காய்வினை மேற்கொள்வதுடன் வெளிவாரிக் கணக்காய்விற்கான வசதிப்படுத்துனராக நாணயச் சபையின் செயலாளரூடாக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் தொழிற்படுகிறது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் நியதிகளுக்கிணங்க, நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு நோக்கத்திற்காக கணக்காளர் நாயகத்தினால் பட்டயக் கணக்காளர்களான ஏர்னஸ்ட் அன்ட் யங் கணக்காய்வில் ஈடுபடுத்தப்பட்டது. இதற்கிணங்க தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்கும் கண்டறியப்பட்ட விடயங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும் கடிதத் தொடர்புகளைக் கையாள்வதற்கும் நாணயச் சபையின் செயலாளருக்கு உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியது.

**15.5 வெளிவாரித் தர மதிப்பீட்டு மீளாய்வு**

கவனத்தில் கொள்ளப்பட்ட ஆண்டுக்காலப்பகுதியில், உள்ளக கணக்காய்வாளர்கள் நிறுவனத்தின் பன்னாட்டு தொழில்சார் நடைமுறைக்கட்டமைப்பு நியமங்களுக்கு ஏற்ப உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளனவா என்பதனை ஆராய்து அறிந்து கொள்வதற்காக புகழ்பெற்ற உள்நாட்டு கணக்காண்வு நிறுவனமொன்றியால் இரண்டாவது தடவையாக வெளிவாரிக் தர மதிப்பீட்டு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. 2016 மேயில் இலங்கைக்கு விஜயம் செய்த பன்னாட்டு நாணய நிதிய பாதுகாப்பு குழுவும் இலங்கை மத்திய வங்கி அத்தகைய மதிப்பீடுகளை மேற்கொள்ள விதந்துரை செய்தது. உள்ளக கணக்காய்வுத் திணைக்களமானது உள்ளக கணக்காய்வாளர்கள் நிறுவனத்தின் நியமங்களுக்கு அமைய “பகுதியளவில் உறுதிப்படுத்தப்படுகின்றது” என்ற அடிப்படையில் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது என்ற மதிப்பீட்டை நிறுவியுள்ளது.

**16. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்**

நாணய விதிச்சட்டத்தின் நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கி நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளினை முகாமைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்கிறது. நாணய விதிச்சட்டத்திற்கு இணங்க, நாணயச் சபையானது பன்னாட்டு ஒதுக்குகளினை முகாமைத்துவம் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளின் கண்காணிப்பு ஆகிய பொறுப்புக்களை பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு கையளித்தது.

நாணய விதிச்சட்டமானது, பன்னாட்டு ஒதுக்குகளின் பேணல் மற்றும் உள்ளமைப்பு, ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான நடவடிக்கைகள், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகளின் செயற்பரப்பு மற்றும் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம் தொடர்பான நாணயச் சபையின் அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பினை வழங்குகின்றது. இவ்விடயத்தில் சொத்துவகைகள், இணைத்தரப்பினர்கள், சாதனங்கள் மற்றும் வழங்குநர்கள் என்பன தொடர்பான அம்சங்களை நாணய விதிச்சட்டத்தின் 67ஆவது பிரிவு கையாள்கிறது. ஒதுக்கு முகாமைத்துவத்தின் பாதுகாப்பு,

திரவத்தன்மை மற்றும் வருமானக் குறிக்கோள்கள் என்பனவற்றை அதிகரிப்பதற்காக, நாணயச் சபை ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கை தொடர்பில் பணிப்புரைகளை விடுக்கலாம்.

### 16.1 பன்னாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவம்

பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் குறிக்கோள்களின் பெறுபேறு என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு, வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ வழிகாட்டல்களுக்கு இணங்க பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பன்னாட்டு ஒதுக்குகள் பல முக்கிய நாணயங்களில் குறிந்துரைக்கப்படுவதுடன் அவை முக்கியமாக நிலையான வருமானப் பிணையங்கள், பணச்சந்தை சாதனங்கள் மற்றும் தங்கம் என்பனவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. நிலையான வருமான பிணையங்களின் சொத்துப்பட்டியல் உயர்ந்த வீதங்களைக் கொண்ட அரச பிணையங்கள், அரச உத்தரவாதப் பிணையங்கள், அரச முகவர்கள் மற்றும் உயர் தேசிய நிறுவனங்களின் பிணையங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. ஒதுக்கு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கிகள், உயர் வீதத்தினைக் கொண்ட வர்த்தக வங்கிகள் மற்றும் முதலீட்டு இல்லங்கள் என்பனவற்றுடன் மேற்கொள்ளப்பட்டதுடன், இவை வலுவான தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பனவற்றினை பரிசீலனையில் கொண்டு முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட இணைத்தரப்பினர்களாக காணப்பட்டனர். வெளிநாட்டு ஒதுக்கு சொத்துப்பட்டியலின் சொத்துக்கள் மற்றும் நாணய உள்ளமைப்பினை தீர்மானிப்பதற்கு பரிசீலனையில் கொள்ளப்பட்ட முக்கிய காரணங்களாக திரவத் தேவைப்பாடுகள், படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், இடர்நேர்வு முகாமைத்துவ அளவுகள், வருமான உருவாக்க இயலாற்றல்கள் மற்றும் நாணயச் சபையின் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள் என்பன உள்ளடங்கியிருந்தன.

2016ஆம் ஆண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கி, ஒதுக்கு முகாமைத்துவத்தில் அதிகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிபுணத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் உலக வங்கியின் ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து கொண்டது. ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் உலக வங்கியின் திறைசேரியினால் நடத்தப்பட்டதுடன் இது, வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் மற்றும் ஏனைய முதலீட்டு சொத்துப்பட்டியல் முகாமைத்துவம் தொடர்பில் வினைத்திறனை இயலுமைப்படுத்தும் விதத்தில் அரச துறை முதலீட்டு முகாமையாளர்களுக்கு மதியுரைப் பணிகளையும் பயிற்சிகளையும் வழங்கியது. ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் முதன்மைக் குறிக்கோள் யாதெனில் உலக வங்கி உறுப்பினர் நிறுவனங்கள் அவற்றின் சொத்து முகாமைத்துவ இயலாற்றல்களையும் தொழிற்பாட்டு உட்கட்டமைப்பினையும் மனிதவள இயலாற்றலையும் தரமுயர்த்துவதற்கு உதவுவதேயாகும்.

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்ட முயற்சியின் கீழ் உலக வங்கியின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைகளின் கீழ் அதன் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்துவதுடன் இது சொத்துக்கள் பொறுப்புக்களுக்கிணங்க உபாய ரீதியாக ஒதுக்கீடு செய்யப்படுவதனையும் அனுமதிக்கிறது. இச்செயன்முறையானது உபாயச் சொத்து ஒதுக்கங்கள் என அழைக்கப்படுவதுடன் இது இலங்கை மத்திய வங்கி அதன் நீண்ட கால முதலீட்டுக் குறிக்கோள்களை எய்தும் விதத்தில் எந்தவொரு நேரத்திலும் பொருத்தமான சொத்து ஒதுக்கங்களைத் தீர்மானிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியை இயலச் செய்கிறது. உபாயச் சொத்து ஒதுக்கக் குறிக்கோள்கள் நீண்ட காலத்தினைக் கொண்டனவாக இருப்பதுடன் இக்குறிக்கோள்கள் எதிர்காலக் கொடுப்பனவுக் கடப்பாடுகள், மூலதனத்தினைப் பாதுகாத்தல் மற்றும் அதிகரித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீத உயர்வுடன் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வருமானத்திற்காக தோற்றம்பெற்றுவரும் சந்தைகளிலிருந்து அபிவிருத்தியடைந்த சந்தைகளை நோக்கி நகர்த்த எதிர்பார்க்கின்றனர். எனினும், பிரித்தானிய வெளியேற்றத்திற்குப் பின்னரான சந்தையின் நிச்சயமற்ற தன்மைகளிலிருந்து தோன்றிய சாத்தியமான கசிவுகள் தொடர்பான கரிசனைகள் மற்றும் பன்னாட்டு வர்த்தகம் மற்றும் இறைத் துறைகள் புதிய ஐக்கிய அமெரிக்க சனாதிபதியினால் முன்மொழியப்பட்டுள்ள கொள்கை மாற்றங்கள் என்பனவற்றினால் நிதியியல் சந்தை தளம்பல்கள் உத்வேகமடைந்ததுடன் பாதுகாப்பான முதலீடுகளுக்கான கேள்வியும் அதிகரித்து ஆசிய பொருளாதாரங்களிலிருந்து மூலதனம் வெளிப்பாய்வதற்கும் வழிவகுத்தது. இத்தகைய சவால் நிறைந்த உலகளாவிய அமைப்பொன்றில், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் வெளிநாட்டு நாணய வர்த்தகப்படுத்தல், பணச் சந்தை முதலீடுகள் மற்றும் மூலதன இலாபங்கள் மற்றும் நிலையான வருமானப் பிணையங்களிலிருந்து பெறப்பட்ட கூப்பன் வருமானம் என்பனவற்றினூடாக 2016ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 53 மில்லியன் கொண்ட வருமானத்தினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

2015இல் இலங்கை மத்திய வங்கியும் இந்திய றிசேர்வ் வங்கியும் கையொப்பமிட்ட நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கைகள் ஐ.அ.டொலர் 1,500 மில்லியனை மத்திய வங்கி எடுப்பனவு செய்ய இயலுமைப்படுத்தியது. இவ்வுடன்படிக்கைகளின் கீழ் 2016 மாச்சில் சிறப்பு நாணயப் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கைகளின் கீழ் மூன்று மாதங்களுக்கு ஐ.அ.டொலர் 700 மில்லியன் கிடைக்கத்தக்கதாக இருந்தது. 2015 ஏப்பிறல், மேற்குறிப்பிட்ட பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையிலிருந்து ஐ.அ.டொலர் 400 மில்லியன் மத்திய வங்கிக்குக் கிடைக்கச்செய்யப்பட்டதுடன், பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய அமைப்பின் உறுப்பு நாடுகளின் மத்திய வங்கிகளுக்கான நிதியிடல் வசதியின் கீழ் 2016ஆம் ஆண்டில் இதனை நான்கு தடவைகள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. இவ்வசதிகள், மத்திய வங்கி நிதியியல் சந்தையின் நிலைமையினை மேலும் பலப்படுத்திக் கொள்ள உதவியதுடன் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளுடனும் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் மற்றைய நாணயங்களின் அசைவுகளுடனும் இசைந்து செல்லும் விதத்தில் செலாவணி வீதத்திற்குப் பெருமளவிற்கு உறுதிப்பாட்டினைக் கொண்டு வருவதற்கும் உதவின.

### 16.2 முதலீட்டு நடவடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் வசதிப்படுத்தல்

முதலீட்டுப் பகுப்பாய்வு மற்றும் வசதிப்படுத்தல் நடவடிக்கைகளின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவத்துடன் தொடர்பான பின்வரும் முக்கிய தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) செயலாற்ற அளவுமுறை

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், மொத்த வருமானம், சொத்து மற்றும் நாணய பகிர்ந்தளிப்பு என்பனவற்றை முக்கியமாக வலியுறுத்துகின்ற விதத்தில் ஒதுக்குமுகாமைத்துவ நடவடிக்கைகளின் செயலாற்றத்தினை மாதாந்த, காலாண்டு மற்றும்

ஆண்டு ரீதியாக மதிப்பிடுவதுடன் அதனை வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுவிற்கும் நாணயச் சபைக்கும் ஒதுக்கு நிலைமை மற்றும் அதன் போக்கு என்பனவற்றின் பகுப்பாய்வுடன் சேர்த்து சமர்ப்பிக்கின்றது. மேலும், நாணயச் சபையினால் ஒப்புதளிக்கப்பட்ட உபாய சொத்து ஒதுக்கீட்டின்படி, நிலையான வருமான பிணைகளின் முதலீடுகள் ஊடாக உருவாக்கப்பட்ட வருமானம் நிறையேற்றப்பட்ட செயற்படாத முகாமைத்துவ சொத்துப்பட்டியலுக்கெதிரான அடிப்படை அளவீட்டுக்குறியீடாக விளங்குகிறது. வருமான ஒப்பீடுகளுக்குப் புறம்பாக, வணிகர்களினால் எடுகோள் கொள்ளப்படுகின்ற மேலதிக இடர்நேர்வு மேலதிக வருமானத்தினை போதுமானளவிற்கு எதிரீடு செய்கின்றதா என்பதனைக் காட்டுவதன் மூலம் அடிப்படை அளவுக்குறியீடு செயற்படும் ஒதுக்குகள் முகாமைத்துவ உபாயத்தின் காத்திரமான தன்மையினை நிர்ணயிக்க உதவுகிறது.

**(ஆ) திறைசேரி முகாமைத்துவ முறைமையின் நிருவாகம்**

திறைசேரி முகாமைத்துவ முறைமையின் பிரதான பயன்படுத்துநர் என்ற நிலைக்குப் புறம்பாக, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி முகாமைத்துவ முறைமையுடன் தொடர்பான பணிமனைகளைப் பேணும் நடவடிக்கைகள் மற்றும் பயன்படுத்துநர்கள் திணைக்களங்கள், மென்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் உள்ளூர் பங்காளர் என்போரிடையே பொருத்தமான இணைப்புக்களை உருவாக்குதல் என்பன உள்ளிட்ட நிருவாக தொழிற்பாடுகளுக்கு பொறுப்பாக இருக்கிறது. மேலும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் திறைசேரி முகாமைத்துவ முறைமையானது சுவிப்ற், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் பொதுப்பேரேடு போன்ற உள்ளக முறைமைகளுடனும் திறைசேரி முகாமைத்துவ முறைமையின் வினைத்திறன்மிக்க தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக புளும்பேர்க் மற்றும் றொயிட்டர் போன்ற வெளிவாரி இடைமுகங்களுடனும் முழுமையாக இணைக்கப்பட்டிருப்பதனையும் உறுதிப்படுத்துகிறது.

**(இ) நிதியல்லா இடர்நேர்வுகளைக் கண்காணித்தல் மற்றும் இணங்குவிப்புக்கள்**

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், ஒதுக்குகள் முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்பான நிதியல்லா இடர்நேர்வு தோற்றப்பாட்டினையும் நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினர்கள் இடர்நேர்வு நடவடிக்கைகளுடன் தொடர்பான அறிக்கைகளையும் காலாண்டு அடிப்படையில் தயாரிப்பதுடன் கண்காணித்தும் வருகிறது.

**(ஈ) பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பன தொடர்பில் தற்போதைய இணைத்தரப்பினர்கள் அதனைப் பின்பற்றியமை/ இணங்கிக் கொண்டமை பற்றி வருடாந்தம் மீளாய்வுகளை மேற்கொள்ளல்**

இலங்கை மத்திய வங்கியின் அனைத்து இணைத்தரப்பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தொடர்பில் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக, 2016இல் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் “இலங்கை மத்திய வங்கி மற்றும் வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுக்காக உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் விதிகள்” தொடர்பில் புதிய வழிகாட்டல்களை வடிவமைத்தது.

## 16.3 உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச்சந்தை அபிவிருத்திகள்

செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கண்காணித்தமையின் மூலம் 2016இல் அதன் நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்தியது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான பிரித்தானியாவின் வெளியேற்றத்திலிருந்து தோன்றிய நிச்சயமற்ற தன்மைகள் இவ்வாண்டுப் பகுதியில் பெடரல் றிசேர்வின் வட்டி வீத உயர்வின் உயர்ந்த எதிர்பார்க்கைகள் என்பன டொலர் உயர்வடைய வழிவகுத்ததுடன் இதன் விளைவாக மூலதன வெளிப்பாய்ச்சல்கள் அதிகரித்தமையும் திறைசேரிப் பிணையங்களில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் வெளியே அனுப்பப்பட்டமையும் இலங்கை ரூபா தேய்வடைவதற்கான அழுத்தத்தினை ஏற்படுத்தின. 2016இல் மொத்த வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2015இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 13.6 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 14.8 பில்லியனுக்கு அதிகரித்தது. நாளய, காசு மற்றும் முன்னோக்கிய அடிப்படையில் கொடுக்கல்வாங்கல்களின் அளவு வீழ்ச்சியடைந்த வேளையில் உடன் அடிப்படை மீதான கொடுக்கல்வாங்கல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலைமை மீது மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட மொத்த வரையறை ஆண்டின் இறுதியில் ஐ.அ.டொலர் 197 மில்லியனுக்கு உயர்வடைந்தது. அதேவேளை, 2016 திசெம்பர் 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தேசிய சேமிப்பு வங்கிக்கும் புதிய ஆரம்ப நிலைமையொன்று வழங்கப்பட்டது. மேலும், இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் தலையீடுகள் 2015இல் ஐ.அ.டொலர் 3,249.53 மில்லியன் கொண்ட தேறிய விற்பனைகளுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 768.16 மில்லியன் கொண்ட தேறிய விற்பனை நிலைமையினை எடுத்துக்காட்டியது.

**அட்டவணை II-20**

**வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு - 2016**

ஐ.அ.டொலர் மில்லியன்

| மாதம் | உடன் | நாளை | காசு | முன்னோக்கிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 393.00 | 101.00 | 80.90 | 575.76 | **1,150.66** |
| பெப்புருவரி | 301.13 | 101.50 | 76.40 | 696.16 | **1,175.19** |
| மாச்சு | 226.00 | 239.20 | 143.35 | 829.63 | **1,438.18** |
| ஏப்பிறல் | 138.80 | 149.50 | 188.50 | 701.41 | **1,178.21** |
| மே | 98.75 | 98.75 | 153.95 | 781.83 | **1,133.28** |
| யூன் | 316.45 | 150.55 | 142.75 | 794.22 | **1,403.97** |
| யூலை | 144.75 | 108.50 | 73.20 | 794.88 | **1,121.33** |
| ஒகத்து | 112.75 | 199.85 | 261.55 | 614.79 | **1,188.94** |
| செத்தெம்பர் | 234.75 | 185.70 | 357.70 | 661.45 | **1,439.60** |
| ஒத்தோபர் | 210.90 | 220.60 | 165.95 | 709.03 | **1,306.48** |
| நவெம்பர் | 102.00 | 91.00 | 87.40 | 716.21 | **996.61** |
| திசெம்பர் | 177.22 | 78.50 | 159.68 | 821.63 | **1,237.03** |
| மொத்தம் | **2,456.50** | **1,724.65** | **1,891.33** | **8,696.04** | **14,769.50** |

மூலம்: பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II-21**

**மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனை - 2016**

ஐ.அ. டொலர் மில்லியன்

| மாதம் | கொள்வனவு | விற்பனை | தேறிய கொள்வனவு/ (விற்பனை) |
|---|---|---|---|
| சனவரி | - | 303.50 | -303.50 |
| பெப்புருவரி | - | 189.05 | -189.05 |
| மாச்சு | 10.95 | 432.06 | -421.11 |
| ஏப்பிறல் | 14.94 | 266.45 | -251.51 |
| மே | 123.83 | 36.20 | 87.63 |
| யூன் | 178.78 | 194.02 | -15.24 |
| யூலை | 204.55 | 53.90 | 150.65 |
| ஓகத்து | 190.77 | 57.58 | 133.19 |
| செத்தெம்பர் | 131.29 | 15.20 | 116.09 |
| ஒத்தோபர் | 88.33 | 163.78 | -75.45 |
| நவெம்பர் | 9.45 | 116.91 | -107.46 |
| திசெம்பர் | 179.31 | 71.73 | 107.58 |
| மொத்தம் | **1,132.22** | **1,900.38** | **-768.16** |

மூலம்: பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## 17. சட்டம் மற்றும் இணங்குவிப்பு

இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களை எய்துவதில் சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களத்தின் வகிபாகம் கடந்த அண்மைக் காலத்தில் உபாய நிகழ்ச்சித்திட்டத்தில் முக்கியமானதொரு இடத்தினைப் பிடித்திருக்கிறது. சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் அதன் குறிக்கோள்களை, அதாவது, இலங்கை மத்திய வங்கியின் சட்ட நலவுரித்துக்களைப் பாதுகாத்தல், சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் சமகாலத்தன்மைகளை உறுதிப்படுத்தல் தொடர்பில், தேசிய முகாமைத்துவம் வாய்ந்த விடயங்களின் மீதான கொள்கை வடிவமைப்பு மட்டங்களில் இலங்கை மத்திய வங்கிக்கு சட்ட உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் குறிப்பிடத்தக்க வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது. 2015 யூனில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் நிறுவப்பட்டதன் பின்னர் சட்டத்தினை விளங்கிக் கொள்ளுதல் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, நிதியியல் சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் கொடுப்பனவு முறைமை என்பன தொடர்பான பிரச்சனைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நாட்டின் நிதியியல் முறைமைக்கு ஏற்புடைத்தான சட்டங்களை நடைமுறைக்கிடல் தொடர்பில் அரச திணைக்களம் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகள் மற்றும் வங்கியின் ஏனைய திணைக்களங்கள் என்பனவற்றின் இணைப்பில் காணப்படும் அனைத்துச் சட்ட மற்றும் நடைமுறை அம்சங்களில் இலங்கை மத்திய வங்கியின் நேர்மையினை உறுதிப்படுத்தக்கூடியதாக இருந்தது.

சட்ட இணங்குவிப்புத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் சட்ட மற்றும் அதன் கீர்த்தி தொடர்பான இடர்நேர்வுகளைத் தணிப்பதில் மிக முக்கியமான வகிபாகமொன்றினைக் கொண்டிருக்கின்ற வேளையில் இலங்கை மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு நிகராக இருப்பதனையும் உறுதிப்படுத்துகின்றது.

இந்நடவடிக்கைகளைத் தொடரும் விதத்தில் திணைக்களம் காலத்திற்குக் காலம் தோன்றுகின்ற இலங்கை மத்திய வங்கியின் பெரும்பாலும் அனைத்து வழக்காடல் மற்றும் ஏனைய சட்டப் பிரச்சனைகளைக் காத்திரமான விதத்திலும் வினைத்திறனுடனும் கையாளக்கூடியதாக இருந்தது. இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் மற்றைய அனைத்து இணைந்த திணைக்களங்களுக்கும் அத்தகைய திணைக்களங்களினால் எதிர்நோக்கப்பட்ட சட்டப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் தொடர்ச்சியாக அதன் உதவியை வழங்கி வந்தது. அத்தகைய திணைக்களங்களினால் நிறைவேற்றப்பட்ட அனைத்து ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய முக்கிய சட்டச் சாதனங்கள் வரையப்பட்டன. அத்துடன்/ அல்லது சட்ட இணங்குவிப்புத் திணைக்களத்தின் மீளாய்விற்குட்பட்டிருந்தன. அனைத்து நொத்தாரிசு வேலைகளும் கையாளப்பட்டன. குறிப்பாக, மத்திய வங்கி அலுவலர் கடன் திட்டம் (ஈடு) சட்ட இணங்குவிப்புத் திணைக்களத்தினால் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தொழிற்பாடாகும்.

சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம், மத்திய வங்கியின் நிதியியல் துறை மேற்பார்வைத் திணைக்களங்களுக்கு, குறிப்பாக, அத்தகைய திணைக்களங்களின் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் இணங்கியொழுகாமைக்கு எதிராகப் பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவை எழும் பொழுது அதன் அவதானிப்புக்களையும் விதந்துரைப்புக்களையும் அத்துடன்/ அல்லது மதியுரைகளையும் வழங்குகிறது. மேலும், இது நிறுவப்பட்ட பின்னரான இக்குறுகிய காலப்பகுதியில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் நாணயச் சபையின் தீர்மானங்களினால் எழக்கூடிய சட்ட மற்றும் ஏனைய இடர்நேர்வுகளைத் தணிக்கும் நோக்குடன் நாணயச் சபை எதிர்பார்க்கும் மதியுரைகள், விளக்கங்கள் மற்றும் விதந்துரைப்புக்களை வழங்குகின்றமையின் மூலம் சட்ட இணங்குவிப்புத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உதவுகிறது.

சட்ட மற்றும் இணங்குவிப்புதத் திணைக்களத்தின் அலுவலர்கள் பல்வேறுபட்ட சட்ட அரங்கங்கள் மற்றும் மேல்நிலை நீதிமன்றங்கள் போன்ற நியாயச் சபைகள் இலங்கை ஆணைக்குழு போன்றவற்றில் இலங்கை மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் சட்ட விடயங்களைக் கையாள்வதில் சட்டமா அதிபர் திணைக்களத்தினையும் தொடர்பு கொண்டிருந்தது. சட்ட இணங்குவிப்புத் திணைக்களம் சட்டத்திற்கு மாறான நிதியியல் திட்டங்கள், அதிகாரமளிக்கப்படாத நிதியியல் வியாபாரம் போன்ற விடயங்களில் பொதுமக்களின் நிதியியல் வசதிகளின் கிடைப்பனவு தொடர்பான அறிவினை உயர்த்துவதற்காக நடத்தப்பட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களிலும் வள ஆளணியினராகக் கலந்து கொண்டனர். அவ்வாறாந நடவடிக்கைகளின் மூலம் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளும் நடவடிக்கைகளும் ஏற்புடைத்தான சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பெருமளவிற்கு வசதியளித்தது.

மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படுகின்ற நியதிச் சட்டங்களுக்குப் பொருத்தமான திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான செயற்றிட்டமொன்று கடந்த ஆண்டு சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. அச்செயற்றிட்டமானது அத்தகைய நியதிச் சட்டத் தேவைப்பாடுகளை உயர்த்துதல், உலகளாவிய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் சிறந்த நடைமுறைகளையும் காலத்திற்கேற்றவாறு பேணுதல் போன்ற நோக்கங்களுடன்

தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இக்குறிக்கோளுடன் இசைந்த விதத்தில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் இலங்கையின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும் விதத்தில் சகவாழ்வு ஒழுங்குமுறைப்படுத்தல் அணுகுமுறையின் அபிவிருத்தியினைப் பேணி வளர்க்கும் நோக்கில் மற்றைய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரசபைகளுடன் வினைத்திறன்மிக்க கலந்துரையாடலையும் இணைப்புக்களையும் மேற்கொண்டது.

## 18. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

2007இல் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டதுடன் இத்திணைக்களம் நிதியியல் உறுதிப்பாட்டு ஆய்வுகள் திணைக்களமெனவும் (2011) அதன் பின்னர் (2014) நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களமெனவும் 2016 நவெம்பரில் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமெனவும் மீளப்பெயரிடப்பட்டது. தேவையான தொழில்நுட்ப இயலளவு மற்றும் மனித வளங்களின் நியதிகளில் இத்திணைக்களம் இன்னமும் ஆரம்பக் கட்டத்திலேயே காணப்படுகின்றது.

பேரண்ட முன்மதியுடைய திணைக்களத்தின் நோக்கம் யாதெனில், இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களிலொன்றான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை எய்தும் பொருட்டு நிதியியல் துறையின் முறையியல் சார்ந்த இடர்நேர்வினைச் சுயாதீனமான முறையில் மதிப்பீடு செய்வதேயாகும். பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பினை நடத்துதல், நிதியியல் உறுதிப்பாட்டின் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய முக்கிய மாறிகளின் தரவுத் தளத்தினது அபிவிருத்தி, வருடாந்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வினைத் தயாரித்தல் மற்றும் நியதிச்சட்ட ரீதியான மற்றும் ஏனைய காலாந்தர அறிக்கைகளுக்கு பங்களித்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் அதன் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புக் கட்டமைப்பினைத் தொடர்ந்தும் மேம்படுத்தியதுடன், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை அபிவிருத்தி செய்தல் மற்றும் வலுப்படுத்துதல் தொடர்பான விடயங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டதுடன் கீழே சுருக்கித் தரப்பட்டுள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் காலாந்தர நியதிச்சட்டம் மற்றும் ஏனைய அறிக்கைகளுக்கும் பங்களித்தது.

### அ. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

இதன் பணியுடன் இசைந்து செல்லும் விதத்தில், இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்களினால் வழங்கப்பட்ட தரவுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கு வெளியேயுள்ள நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் என்பனவற்றின் அடிப்படையில், பேரண்ட முன்மதியுடை கண்காணிப்புத் திணைக்களம் காலாந்தர ரீதியில் நிதியியல் நிறுவனங்கள் நிதியியல் சந்தைகள், கம்பனித் துறை மற்றும் பேரண்ட பொருளாதாரம் என்பனவற்றிற்காக நிதியியல் ஆற்றல்வாய்ந்த குறிகாட்டித் தொடர்களைத் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்தது. அத்தகைய மதிப்பீடுகள் நிதியியல் முறைமையின் மேற்கூறப்பட்ட துணைத் துறைகளின் ஆரோக்கியத்தினை மதிப்பிடுகின்ற சாதனமாக இருந்ததுடன் முறையியல் ரீதியாக பாதிக்கப்படக்கூடிய தன்மைகளுக்கான சமிக்ஞைகள் ஏதுமிருப்பின் அவற்றை நேரகாலத்துடன் அடையாளம் காணக்கூடிய தன்மையினையும் உருவாக்குகிறது. மேலும், திணைக்களம் நிதியியல் சந்தைகள், உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கம்பனித் துறை மற்றும் பேரண்டப் பொருளாதாரம் போன்றவற்றை உள்ளடக்கிய பேரண்ட முன்மதியுடைய பல குறிகாட்டிகளை திணைக்களம் திரட்டிய வேளையில், செலாவணி வீதத்தின் நடத்தை, கம்பனித் துறையின் கொடுகடன் நம்கபத்தன்மை, மற்றும் நிதியியல் துறையின் கொடுகடன் பாய்ச்சல் என்பனவற்றை மதிப்பிடுவதற்கு அதன் நேரகாலத்துடனான எச்சரிக்கைவிடும் குறிகாட்டி மாதிரிகளைத் தொடர்ந்தும் மேம்படுத்தியது. மேற்கூறப்பட்ட பேரண்ட முன்மதியுடை கண்காணிப்புக்கள் எடுத்துக்காட்டியவாறு நிதியியல் துறையின் போக்குகளையும் அபிவிருத்திகளையும் எடுத்துக்காட்டும் நிதியியல் துறை இடர்நேர்வு மதிப்பீட்டு மாதாந்த அறிக்கைகள் நாணயக் கொள்கைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

### ஆ. குறித்துரைக்கப்பட்ட நிதியியல் துறை தலைப்புக்களிலான ஆராய்ச்சி

2016 காலப்பகுதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் துறை தலைப்புக்களிலான நான்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாராய்ச்சிகள் கட்டுப்படுத்தல்களை அடையாளம் காணுதல் ஏதுமிருப்பின், அவை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கடன்வழங்கல் நடவடிக்கைகளின் பன்முகப்படுத்தல், சொத்துக்களின் பிணைய மயப்படுத்தல், பெறுமதியிழக்கப்பட்ட சொத்துக்களை வணிகப்படுத்தல் உட்பட பலவீனமான நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் தீர்மானங்கள் மற்றும் பிராந்திய மத்திய வங்கிகளின் நிதியியல் துறை திணைக்களங்களின் நிறுவன ரீதியான அமைப்பியல் என்பனவற்றின் மீது கவனத்தினைச் செலுத்தியிருந்தன.

### இ. இலங்கை மத்திய வங்கியின் நியதிச்சட்ட மற்றும் ஏனைய அறிக்கைகளுக்கான பங்களிப்பு

பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2015இன் "நிதியியல் துறை அபிவிருத்திகளும் உறுதிப்பாடும்" என்ற அத்தியாயத்தினதும் 2016இல் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தியிலுள்ள "நிதியியல் துறை அபிவிருத்திகளும் உறுதிப்பாடும்" என்ற அத்தியாயத்தினது தயாரிப்பிற்கும் இணைப்பிற்கும் பங்களித்தது. மேலும், 2016 செத்தெம்பரில் நிதி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செத்தெம்பர் 15 அறிக்கையின் "நிதியியல் துறை அபிவிருத்திகள் மற்றும் உறுதிப்பாடு என்ற அத்தியாயத்திற்கும் திணைக்களம் மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்களினாலும் வெளியிலுள்ள நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட அறிக்கைகளை ஒப்பீடு செய்தமையின் மூலம் பங்களித்தது. இவ்வறிக்கைகள் செயலாற்றங்கள், இடர்நேர்வு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் மூலவளக் கிடைப்பனவு மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான ஒவ்வொரு துறையினதும் சாத்தியமான தாக்கங்களின் மீதான மதிப்பீட்டுடன் சேர்த்து, ஒவ்வொரு மூன்று துறைகள் தொடர்பிலுமான ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்தி என்பன மீதான குறிப்பிட்ட வலியுறுத்தல்களுடன் கூடிய விலையில் நிதியியல் நிறுவனங்கள், நிதியியல் சந்தைகள் மற்றும் நாட்டின் நிதியியல் உட்கட்டமைப்பு என்பன மீதான அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வொன்றினை வழங்குகிறது. திணைக்களமும் நிதியியல் துறைத் தரவுகளைத் திரட்டல், கிரமமான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் வெளியீடுகளுக்குப் பங்களித்தல் போன்றன மூலம் மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களின் இதே போன்ற நடவடிக்கைகளுக்கும் பங்களித்தது.

### ஈ. ஏனைய நடவடிக்கைகள்

பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பிரச்சனையான சொத்துக்களின் அறவிடல், நிதியியல் துறை ஒழுங்குவிதிகள் தொடர்பான சட்ட நியதிகளை இற்றைப்படுத்தல்

மற்றும் நிதியியல் துறை அபிவிருத்திகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்களுடனான தொழில்நுட்ப உதவிகளுக்காகவும் ப.நா.நிதியம் மற்றும் உலக வங்கியுடனான ஆரம்ப இணைப்புக்களுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது.

**19. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

நிதிகளின் மாற்றல்களுக்கான முறைமைகளை நிறுவுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் கொடுப்பனவுக் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கும் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முறைமை விதிகளை விடுப்பதற்கும் மத்திய வங்கிக்கு அதிகாரங்களை வழங்குகின்ற நாணய விதிச் சட்டத்தின் 62அ பிரிவின் கீழ் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2002இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் நிறுவப்பட்டது. மேலும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம் இயற்றப்பட்டதுடன் இச்சட்டத்தின் கீழும் மத்திய வங்கியின் பொறுப்புக்களை ஆற்றுகின்ற கடப்பாடு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் முக்கிய தொழிற்பாடுகளாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடு, நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்காக பின்னரங்க அலுவலகப் பணிகளை வழங்குதல், சுவிப்ற் தொடர்பூட்டல் முறைமையின் முகாமைத்துவம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தல், தேசிய கொடுப்பனவு ஆழியின் அபிவிருத்திக்கு வசதியளித்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை என்பன காணப்படுகின்றன. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகள் அத்தியாயம் 8இல் தரப்படுகிறது.

**19.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடு**

(அ) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகவும் நேர முக்கியத்துவம் வாய்ந்த பாரிய பெறுமதியினைக் கொண்ட பங்கேற்பாளர்களுக்கிடையேயான கொடுப்பனவுகளை அதேநேர மொத்த அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதுடன் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினைத் தொழிற்படுத்துகிறது. திரவ வசதி ஏற்பாடுகளுக்கும் வசதியளிப்பதற்காகவும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களாக மத்திய வங்கி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், வங்கியல்லா முதனிலை வணிகர் கம்பனிகள், ஊழியர் சேம நிதியம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை காணப்படுகின்றன. அதேநேர மொத்தத் தீர்ப்பணவு முறைமையும் லங்கா சேகியோ (Lanka Secure) முறைமையும் கொண்டுள்ள லங்கா செடில் (டுயமெய ளநவவடந) முறைமை, திசெம்பர் 2016ஆம் ஆண்டில் 3.7ஆம் பதிப்பிலிருந்து 3.8 பதிப்பிற்கு மேம்படுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது.

(ஆ) 2016இன் இறுதியிலுள்ளவாறான பங்கேற்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 36ஆகக் காணப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை ரூ.93,378 பில்லியன் மொத்தப் பெறுமதிகொண்ட 365,991 ஆகக் காணப்பட்டது. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையினால் சராசரியாக ஒரு நாளைக்கு 378 பில்லியன் பெறுமதி கொண்ட 1519 பரிவர்த்தனைகள் விடுவிக்கப்பட்டன. சராசரியாக நாளொன்றிற்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியாக பங்கேற்பாளர்களுக்கு ரூ.38.8 பில்லியன் விடுவிக்கப்பட்டது. பன்னாட்டு ரீதியான சிறந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டமையின் காரணமாக இவ்வாண்டுப் பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கிடைப்பனவு 99.90 சதவீத மட்டத்தில் பேணப்பட்டது.

**19.2 மத்திய வங்கியின் நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்**

**(அ) வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்**

2016ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்காக வழங்கப்பட்ட பின்னரங்க அலுவலகப் பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

i. வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகப்படுத்தல் மற்றும் நிதியிடல், பணச் சந்தை நடவடிக்கைகள், நிலையான வருமானப் பிணையங்கள், தங்க வர்த்தகம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் மற்றும் மீள்கொள்வனவு / நேர்மாற்று மீள்கொள்வனவு என்பனவற்றுடன் தொடர்பான ஐ.அ.டொலர் 343.4 பில்லியன் தொகை கொண்ட 12,621 கொடுக்கல்வாங்கல்கள் 2016இல் தீர்ப்பனவு செய்யப்பட்டமை.

ii. நீடிக்கப்பட்ட வணிகப்படுத்தல் அறை நடவடிக்கைகளின் காரணமாக பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தில் இருந்து உருவாக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு வசதியளிக்கும் பொருட்டு 2016ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களுக்கு முறைமாற்று அடிப்படையில் பணியாற்றுகின்றமை இடம்பெற்றது. எனினும் தனியுரிமையுடைய அந்நிய செலாவணி வர்த்தக நடவடிக்கைகள் (Proprietary FX trading activities) சர்வதேச நடவடிக்கைகள் துறையால் நிறுத்தப்பட்டமை காரணமாக 2016ஆம் ஆண்டின் ஓகத்து 10இலிருந்து முறைமாற்று அடிப்படையில் பணியாற்றுகின்ற முறை இடைநிறுத்தப்பட்டமை.

**(ஆ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்**

திறந்த சந்தைப் பங்கேற்பாளர்களின் திரவத்தன்மை தேவைப்பாடுகளின் முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடனான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ரூ.252 பில்லியன் பெறுமதியான 120 மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.5,573 பில்லியன் பெறுமதியான 3,813 துணைநில் வைப்பு வசதி கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.3,208 பில்லியன் பெறுமதியான 2,555 துணைநில் கடன் வசதி கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.3,938 பில்லியன் பெறுமதியான 4,119 நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும் ரூ. 39.60 பில்லியன் பெறுமதியான 22 உடனடி விற்பனைகளும் ரூ. 15.77 பில்லியன் பெறுமதியான 21 உடனடி கொள்வனவுகளும் மேற்கொண்டதன் மூலம் வசதியளித்தது.

### 19.3 சுவிப்ற் தொடர்பூட்டல் முறைமையின் முகாமைத்துவம்

உலகளாவிய ரீதியில் வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத் தொடர்பூட்டல்களுக்கான சங்கம் என்பது, பாதுகாப்பானதும் பத்திரமானதுமான சூழ்நிலையொன்றில் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் கொடுப்பனவு அறிவுறுத்தல்களையும் தொடர்பான மற்றைய தகவல்களையும் பரிமாறிக் கொள்வதற்கான தொடர்பூட்டல் தளமொன்றாகும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களமானது மத்திய வங்கியின் சுவிப்ற் அமைப்பினை பேணுகின்றது, அது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடான இலங்கை மத்திய வங்கியின் சுவிப்ற் தொடர்பினை சுவிப்ற் தலைமையகத்தினால் வரையறுக்கப்பட்ட மென்பொருள் வன்பொருள், படிமுறை, செயல்முறை மற்றும் இடர் முகாமைத்துவ கட்டுப்பாடுகளுக்கு அமைவாக கையாளுகின்றது.

2016ஆம் ஆண்டுப் பகுதியில், மத்திய வங்கியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட மொத்த சுவிப்ற் செய்திகள் முறையே 1,649,068 ஆகவும் 876,294 ஆகவும் காணப்பட்டன. சுவிப்ற் முறைமையானது அதன் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட வசதிகளுடன் கூடியளவு வினைத்திறன்மிக்க பணிகளை வழங்குவதற்காக புதிய பதிப்புடன் (பதிப்பு 7.1.21) பணிகள் வழங்குவோரினால் தரமுயர்த்தப்பட்டது. இதற்கமைய, சுவிப்ற்றினால் அறிமுகப்படுத்தப்பட்ட பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்வதற்காக மத்திய வங்கியும் புதிய பதிப்பினை வெற்றிகரமாக நிறுவியது.

### 19.4 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தல்

2016ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் 9 உறுப்பினர் நாடுகளிடையேயான பன்னாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவிற்குத் தொடர்ந்தும் வசதியளித்தது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 6,510 ஆகவும் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூ.478.1 பில்லியனாகவும் காணப்பட்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழ் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் பெறுமதி ரூ.409.4 பில்லியனாகக் காணப்பட்டது.

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பணிப்பாளர் சபையின் 45ஆவது கூட்டம் 2016 யூனில் வங்காளதேசத்தில் நடைபெற்றதுடன் துணை ஆளுநரும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளரும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்பு அதிகாரியும் முறையே பணிப்பாளர் சபையின் பணிப்பாளரொருவராகவும் மாற்றுப் பணிப்பாளராகவும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்பு அதிகாரியாகவும் ஆளுநரைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

### 19.5 தேசிய கொடுப்பனவு ஆழியின் அபிவிருத்தியினை வசதிப்படுத்தல்

“லங்கா பே” என்ற முத்திரைப் பெயரிற்கு கீழ் லங்கா கிளியர் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் நிறுவுதலுக்கு மத்திய வங்கி தொடர்ந்து வசதியளித்தது. நாட்டின் தேசியக் கொடுப்பனவு ஆழியாக நியமனம் செய்யப்பட்ட பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழி ஐந்து ஆழிகளை கொண்டுள்ளது, அதாவது பொது தன்னியக்க கூற்றுப் பொறி ஆழி, பொது இலத்திரனியல் நிதி மாற்றல் ஆழி, பகிரப்பட்ட தன்னியக்க கூற்றுப் பொறி, பொதுவான விற்பனை மைய ஆழி மற்றும் பொதுவான செல்லிட ஆழி அதன் தேசிய முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தை கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் கண்காணித்து கொடுப்பனவுகள் மற்றும் தீபனவுகள் திணைக்களம் 2015இன் 07ஆம் சுற்றறிக்கை மூலம் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியில் சேர்வதற்கு கால வரையறைகளை விதித்தது. 2016 இறுதியில் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டது.

(அ) பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் முதலாவது கட்டமான பொது தன்னியக்க கூற்றுப் பொறி ஆழியானது 2013 ஆடி மாதத்தில் நேரடி நடவடிக்கைகளை தொடங்கியது. 2016ஆண்டு இறுதியில், பொது தன்னியக்க கூற்றுப் பொறி ஆழியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 23ஆக அதிகரித்து 3800 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை இணைத்தது. உறுப்பினராகவுள்ள நிதியியல் நிறுவனங்களின் எந்தவொரு தன்னியக்க கூற்றுப் பொறியிலிருந்து வாடிக்கையாளர்கள் பண மீட்டுப் பெறுதல் வசதி மற்றும் மீதி விசாரணையை பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழி செய்து கொடுக்கிறது. 2016ஆம் ஆண்டில் பொது தன்னியக்க கூற்றுப் பொறி ஆழியானது ரூ.174 பில்லியன் பெறுமதியான 31.3 மில்லியன் நடவடிக்கைகளை தீர்ப்பனவு செய்தது.

(ஆ) பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் இரண்டாவது கட்டமான பொது இலத்திரனியல் நிதி மாற்றல் ஆழியானது 2015 ஆவணி மாதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இணையத்தள வங்கியியல், செல்லிட வங்கியியல், தன்னியக்க கூற்றுப் பொறி மற்றும் கணிப்பகம், மற்றும் முகப்பு வழியாக பெறுதல் போன்ற பல கொடுப்பனவுகள் வழிமுறைகள் மூலமாக உடனடியான நிதி மாற்றல் வசதியை வாடிக்கையாளர்களுக்கு பொது இலத்திரனியல் நிதி மாற்றல் ஆழியில் சேர்ந்திருந்தன. 2016இல் ரூ.69.4 பில்லியன் பெறுமதியான 894,674 நடவடிக்கைகளுக்கு பொது இலத்திரனியல் நிதி மாற்றல் ஆழியானது வசதியளித்தது.

(இ) தன்னியக்க கூற்றுப் பொறி சேவைகளை தருவிப்பதற்கு சொந்த ஆழியில்லாத நிதியியல் நிறுவனங்களுக்கு ஆழி வசதிகளை தருவிக்கும் பகிரப்பட்ட தன்னியக்க கூற்றுப் பொறி ஆழியானது ஒரு உறுப்பினர் நிறுவனத்துடன் 2015 ஆவணி மாதத்தில் தொடங்கப்பட்டது.

### 19.6 கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்புத் தன்மை மற்றும் செயற்றிறனை உறுதிப்படுத்துவதற்காக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் தனது ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. இதற்கேற்ப, 2016இல் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு,

(அ) கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிட கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குபடுத்தல் 2013இன் இலக்கம் 01இன் அடிப்படையில், 2016 மத்திய வங்கி இரண்டு நிறுவனங்களுக்கு உரிமைகளை வழங்கியது ஒன்று கொடுப்பனவு அட்டைகள் வழங்குநராகவும் இன்னொன்று கொடுப்பனவு அட்டைகள் வழங்குநராகவும் வாடிக்கையாளர் விவரம் அடைப்படையிலான கொடுப்பனவு முறைமை நடத்துனருக்காகவும். இதற்கேற்ப, உரிமம்பெற்ற சேவை வழங்குநர்களின் எண்ணிக்கை 2016இல் 35ஆக அதிகரித்தது.

(ஆ) செல்லிட தொலைபேசிகள் அடிப்படையிலான இலத்திரணியல் பண முறைமைகள் தொடர்பிலான இடர் நேர்வுகளை கருத்திற்கொண்டு, உரிமம் பெற்ற சேவை வழங்குநர்களினால் நடத்தப்படும் செல்லிட தொலைபேசிகள் அடிப்படையிலான இலத்திரணியல் பண முறைமைகள் மீது தளத்திலான மேற்பார்வையை கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் நடத்தி தொடர்பான முறைமைகளின் நம்பிக்கையான மற்றும் சீரான நடைமுறையை உறுதிப்படுத்துவதற்கு தொடர்பான சேவை வழங்குநர்களுக்கு பரிந்துரைகளை செய்தது.

(இ) அன்றாட சில்லறை கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நம்பகத் தன்மையான கொடுப்பனவு முறைமைகளின் நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கு கொடுகடன் அட்டைகளுக்கான வழிகாட்டுதல், செல்லிட கொடுப்பனவுகளுக்கான வழிகாட்டுதல், மற்றும் ஏனைய ஒழுங்குமுறை விதிகளுடன் சேவை வழங்குநர்களின் இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு தொடர்ச்சியான தளத்திலில்லாத மேற்பார்வை.

(ஈ) ஓர் அவசரகாலத்தில் வர்த்தக நடவடிக்கைகளை தொடர்வதற்கான ஆயத்தத்தை உறுதிப் படுத்துவதற்கு லங்கா செட்டில் பங்கேற்பாளர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட தனியார் லங்கா கிளியரின் வர்த்தக இடைவிடாமைத் திட்டங்கள் மதிப்பிடப்பட்டது.

### 19.7 தேசிய கொடுப்பனவுச் சபை

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் 2006இல் ஏற்படுத்தப்பட்ட தேசிய கொடுப்பனவுச் சபையின் நிறைவேற்று அலகொன்றாகத் தொழிற்படுகின்றது. தேசிய கொடுப்பனவுச் சபையானது கொடுப்பனவு முறைமைகள் மீதான தொழிற்துறை ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழுவாகும். தொடர்பான மத்திய வங்கியின் திணைக்களங்கள், உரிமம் பெற்ற வங்கிகள், நிதியியல் துறை நிறுவனங்கள் மற்றும் செல்லிட கொடுப்பனவுச் சேவைகள் வழங்குநர்கள் ஆகியவற்றிலிருந்து அங்கத்துவர்களை தேசிய கொடுப்பனவுகள் ஆலோசனைச் சபை கொண்டுள்ளது. ஆண்டுப்பகுதியில், 3 தேசிய கொடுப்பனவுகள் செயற்குழு குழுமங்கள் நடத்தப்பட்டதுடன் புதிய தொழில்நுட்பம், புதிய கொடுப்பனவு உற்பத்திப் பொருள்கள் மற்றும் முறைமை உறுதித்தன்மை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பை மையப்படுத்தும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆகியவற்றை கருத்திற்கொண்டான கொடுப்பனவு முறைமைகளின் நடுத்தரகால அபிவிருத்திக்கான வழிகாட்டலின் தயார்செய்தலுக்கான கலந்தாய்வு வழிமுறையும் தொடரப்பட்டது.

### 19.8 பொதுமக்கள் விழிப்புணர்வு

நாட்டில் தொழிற்படுகின்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் மீதான தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் பரப்புவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் "கொடுப்பனவுச் செய்தித்திரட்டு" என்ற காலாண்டு வெளியீட்டினை வெளியிட்டு வருகின்றது. மேலும், கொடுப்பனவு முறைமைகள் மற்றும் ஏனைய தொடர்பான விடயங்கள் பற்றி பொதுமக்கள் மற்றும் வங்கித்தொழில் சமூகத்திற்கு அறிவூட்டுவதற்காக, தேவையின் அடிப்படையில், 11 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. இலத்திரனியல் பணப் பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும் முகமாக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது, மக்களின் நாளாந்த பணக் கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக்கும் வணிகப் பண செலுத்துகைகளை விளக்கும் பத்திரிகை விளம்பரங்களை வெளியிட்டது.

## 20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டம் தயாரிக்கப்படுவதனை ஒருங்கிணைத்தல், அதன் செயற்பாட்டின் முன்னேற்றத்தினை கண்காணித்தல் மற்றும் சீரான இடைவெளிகளில் அதன் விளைவுகளை முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடல் ஆகிய பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. 2016இல் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

### 20.1 உபாயத்திட்டத்தினைத் தயாரித்தல், செயற்பாட்டின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடல்

2016 சனவரி 01ஆம் நாளன்று நடைபெற்ற வேலை தொடக்கி வைத்தல் நிகழ்வில் 'மனித மூலதன அபிவிருத்தி மற்றும் இயலளவினைக் கட்டியெழுப்புதல்' எனும் தொனிப்பொருளின் கீழ் 2016 - 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் திணைக்களங்களின் குறிக்கோள்கள் மற்றும் உபாயங்கள், குறிக்கோள்களை அடைவதற்குப் பின்பற்ற வேண்டிய பொறிமுறைகளுடன் சேர்த்து உபாயத்திட்டத்தின் நடைமுறைக்கிடலின் முன்னேற்றத்தை அளவிடப் பயன்படுத்தப்படும் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் போன்றவை தொடர்பில் அனைத்து ஊழியர்களுக்கும் விழிப்புணர்வினை உருவாக்குவதற்காக 2016 - 2018 உபாயத்திட்ட வெளியீட்டின் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. உபாயத்திட்டத்தின் நடைமுறைக்கிடலின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கு சீரான இடைவெளிகளில் திணைக்களங்களுடன் செயலாற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு அதன் முன்னேற்ற அறிக்கைகள் முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

2017 - 2021 இற்கான இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டத்தினைத் தயாரிக்கும் வேலைகள் 2016இன் பின்னரைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. புதிய உபாயத் திட்டம் தொடர்பான கலந்துரையாடப்படும் முகாமைத்துவக் கருத்தரங்கான உபாயத் திட்டமிடல் ஆய்வுக்கூட்டமானது ஆளுநர், நாணயச் சபை உறுப்பினர்கள், நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழு உறுப்பினர்கள், இலங்கை மத்திய வங்கியின் கம்பனி முகாமைத்துவம், திணைக்களத்தின் தலைவர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய அலுவலர்கள் போன்றோரின் பங்கேற்புடன் 2016 நவெம்பரில் நடைபெற்றது. நாட்டின் தற்போதைய இறையையும் படுகடன் இயக்கவாற்றலையும் தீர்ப்பதற்கு கொள்கை அளவீடுகளுக்கான தேவையை சிறப்பாக எடுத்துக்காட்டும் முகமாக 2017 - 2021 உபாயத்திட்டத்தின் தொனிப்பொருளாக 'விஷ சுழற்சி வட்டத்தினை உடைத்துவிடுதல்' நிர்ணயிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டமானது விஷ சுழற்சி வட்டத்தினை உடைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் புதிய முன்னெடுப்புக்கள், செயற்றிட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. இவ் 2017 - 2021திட்டமானது அலுவலகங்களுக்கு கிடைக்கக் கூடியதாகச் செய்யப்பட்டது.

### 20.2 தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு அறிக்கைகளினை சமர்ப்பித்தல்

பெற்றுக்கொண்ட வேண்டுகோள்களின் படி, கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், தொடர்புடைய இலங்கை மத்திய வங்கி திணைக்களங்களிடமிருந்து பெறப்பட்ட உபாயத் திட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கி நடவடிக்கைகளின்

செயலாற்ற அறிக்கைகள் போன்றவற்றை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு சரியான முறையில் தொடர்பூட்டியது.

## 21. பொதுப்படுகடன்

நாணயவிதிச் சட்டத்தின் 113 ஆவது பிரிவின் நியதிகளில் பொதுப்படுகடனின் முகாமைத்துவத்திற்கான அரசின் முகவராக இலங்கை மத்திய வங்கியின் சட்ட ரீதியான பொறுப்புக்களை ஆற்றுவதற்கு பொறுப்பாகப் பொதுப்படுகடன் திணைக்களம் உள்ளது. எனவே இத்தகைய பொறுப்புக்களை நிறைவேற்றும் நோக்குடன் மத்திய வங்கி தொடங்கப்பட்ட 1950 ஓகத்து 28 நாளன்று பொதுப்படுகடன் திணைக்களம் நிறுவப்பட்டது. முக்கிய தொழிற்பாடுகள் ஒதுக்குச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு அரசாங்கத்தின் மொத்த கடன்பாட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியங்களை திரட்டுதல், அரச படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுதல், அரச பிணையங்களின் தீர்ப்பனவுகள் சுமூகமாக தொழிற்படுவதனை வசதிப்படுத்தும் நோக்கில் லங்கா செகுயர் முறைமையினைப் பேணுதல் மற்றும் மத்திய வைப்பக முறைமையின் அரச பிணையங்களின் உரித்துப் பதிவினை பேணுதல் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. மேலும், பொதுப்படுகடன் திணைக்களமானது படுகடன் சந்தை அபிவிருத்திகளிலும் ஈடுபட்டது.

### 21.1 ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு அரசின் மொத்தக் கடன்பாட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு நிதிகளைத் திரட்டுதல்

(அ) திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் போன்றவை 2016இல் அரசாங்கத்தின் மொத்த கடன்பாட்டுத் தேவைப்பாடுகளை நிதியிடுவதற்கான பிரதான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களாக காணப்பட்டன.

(ஆ) கீழ்வரும் சுருக்கமான பகுப்பாய்வு நிதியங்களின் ஒவ்வொரு மூலங்களின் பங்களிப்பு மற்றும் நோக்கங்களைச் சுட்டிக்காட்டுகின்றது.

அட்டவணை II-22

முதிர்ச்சிகள் மற்றும் ஏலச்செயலாற்றம்

2015 மற்றும் 2016

| கருவி | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|
| | வழங்கல்கள் ரூ. பில்லியன் | ஏலங்களின் எண்ணிக்கை | வழங்கல்கள் ரூ. பில்லியன் | ஏலங்களின் எண்ணிக்கை |
| திறைசேரி உண்டியல்கள் | 1,589.5 | 52 | 1,635.4 | 52 |
| திறைசேரி முறிகள் | 869.9 | 36 | 663.6 | 23 |
| | வழங்கல்கள் ரூ. பில்லியன் | ஏலங்களின் எண்ணிக்கை | வழங்கல்கள் ரூ. பில்லியன் | ஏலங்களின் எண்ணிக்கை |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 2,491.4 | 5 | 1,365.9 | 6 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 2,150.0 | 2 | 1,500.0 | 1 |

(இ) திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களான முதலீடுகளின் மொத்த தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலானது ஐ.அ.டொலர் 324.3 மில்லியனுக்கு வகைகூறியது. இது ஆண்டுக் காலப்பகுதியில் திறைசேரி முறிகளுக்கான ஐ.அ.டொலர் 369.6 மில்லியனான வெளிப்பாய்ச்சல் ஒன்றினையும் உள்ளடக்கியுள்ளது.

(ஈ) இலங்கை மத்திய வங்கியின் இறுக்கமடைந்த நாணயக் கொள்கை நிலை மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் கொள்கை வீத உயர்வு போன்றவை 2016இல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகள் இரண்டிலும் அதிகரித்த வட்டி வீதங்களைத் தோற்றுவித்தன. இச்சூழ்நிலையில், 2015இன் நீண்ட கால வழங்கலுக்கெதிராக உள்நாட்டுச் சந்தையில் குறுங்காலத்திலிருந்து நடுத்தரக் காலத் துக்கான அரச பிணையங்களின் வழங்கலின் மூலம் வெளிநிற்கும் உள்நாட்டு படுகடன் இருப்புக்களின் முதிர்ச்சிக்கான சராசரிக்காலம் 2015 இறுதியின் 6.28 வருடங்களிலிருந்து 2016 இறுதியளவில் 5.98 வருடங்களாகக் குறைவடைதலினை தோற்றுவித்தது. மேலும், 2016 காலப்பகுதியில், சந்தைக்கான அனைத்து அரச பிணையங்கள் வழங்கலின் ஏல அடிப்படையில் அமைந்தது.

### 21.2 பொதுப்படுகடன்களைத் தீர்ப்பனவு செய்தல்

இவ்வாண்டு காலப்பகுதியில் ரூ. 1,042.72 பில்லியனான உள்நாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும், ரூ. 292.01 பில்லியன் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளையும் கொண்ட ரூ. 1,334.73 பில்லியன் மொத்தப்படுகடன் தீர்ப்பனவினை மேற்கொண்டது.

### 21.3 அரச பிணையங்களுக்கான தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்

லங்கா செக்குயர் முறையானது அரச பிணையங்களின் முதனிலை மற்றும் இரண்டாம்தர சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவுக்காக பயன்படுத்தப்படுகிறது. இம் முறையானது தங்கள் சார்பில் அல்லது தங்களது வாடிக்கையாளர்களாக இருக்கக்கூடிய ஏனைய முதலீட்டாளர்கள் சார்பில் கணக்குகளை வைத்துள்ள 33 முகவர் நேரடி பங்குபற்றுனர்களையும் (25 பட்டியலிடப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் 8 முதனிலை வணிகர் கம்பனிகள்) தங்களது சார்பில் மட்டும் கணக்குகளை கொண்டுள்ள 3 நேரடி பங்குபற்றுனர்களையும் (ஊ.சே.நிதி உட்பட) கொண்டுள்ளது. பொதுப்படுகடன் திணைக்களமானது லங்கா செக்குயரின் இடைவிடாத அதேநேர தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதன் மூலம் தீர்ப்பனவுகளுக்கு வசதியளித்தல் அதன் பிரதான பங்கினை ஆற்றுகின்றது. 2016 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு பத்திரங்களற்ற பிணையங்களினது உடமைகளின் மொத்த முகப்பெறுமதியானது ரூ.4,846.0 பில்லியனுக்கு வகைகூறியது. இது திறைசேரி உண்டியல்களின் ரூ.792.4 பில்லியனையும் திறைசேரி முறிகளின் ரூ.4,053.6 பில்லியனையும் கொண்டுள்ளது.

### 21.4 அரச பிணையங்களின் உரித்துப் பதிவினைப் பேணுதல்

பொதுப்படுகடன் திணைக்களத்தில் பேணப்படும் மத்திய வைப்பக முறைமையிலுள்ள அரச பிணையங்களின் உரித்துப் பதிவின் அதேநேர இற்றைப்படுத்தலுக்கான வசதியானது அரச பிணையங்களின் இரண்டாம் தரச் சந்தை நடவடிக்கைகளை சுமூகமாக கொண்டு நடத்துவதினை உறுதிசெய்துள்ளது. 2013 ஓகத்து 01 இல் வழங்கப்பட்ட லங்கா செற்றில் முறைமை ஒழுங்குவிதிகளின் (பதிப்பு 2.1) திருத்தங்களுடன் இணங்கிச் செல்வதற்காக பொதுப்படுகடன் திணைக்களம் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமைக்கு புதிய கணக்கு வகைகளையும் அறிமுகப்படுத்தியது. ஆண்டு முழுவதும், மத்திய வைப்பக முறையில் கணக்குகளை வைத்திருப்போருக்கு

அவர்களது உடமைகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பிலான காலாந்தரக்கூற்றுக்களை தொடர்ச்சியாக வழங்கிவருகின்றது. 2016 காலப்பகுதியில் பொதுபடுகடன் திணைக்களம் மத்திய வைப்பக முறையில் கணக்கு வைத்திருப்போருக்கு இலத்திரனியல் வடிவில் 1,506 கூற்றுக்களையும் 23,161 உடமைகளின் அரையாண்டு கூற்றுக்கள் 63,177 கொடுக்கல்வாங்கல் மாதாந்த கூற்றுக்கள் 40,065 கொடுப்பனவு கூற்றுக்கள் போன்றவற்றை அஞ்சல் மூலமாகவும் அனுப்பிவைத்துள்ளது. மேலும், மத்திய வைப்பக முறைமையின் கணக்கு உடமையாளர்கள் இணையத்தளமூடாக அதேநேர கணனிவழி அடிப்படையில் அவர்களது கணக்குவிபரங்களைப் பார்வையிடுவதற்கான வசதியும் வழங்கப்பட்டது. 2016 திசெம்பர் இறுதியில் மத்திய வைப்பக முறையில் பதிவுசெய்யப்பட்ட கணக்கு உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 92,065 ஆக காணப்பட்டது.

## 21.5 முறைமை சீர்திருத்தங்கள்

ஆண்டுகாலப்பகுதியில் திணைக்களத்தின் பணியினை உச்சப்படுத்தும் நோக்குடன் கீழ்வரும் முறைமை சீர்திருத்தங்கள் பொதுப்படுகடன் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரச பிணையங்களின் முதலீட்டாளர்கள் பாதுகாப்பு மற்றும் முதனிலை வணிகர்கள் முறைமையின் உறுதிப்பாடு போன்றவற்றை உறுதிசெய்வதற்காக உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட இருப்புக்கள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் படி, முதனிலை வணிகர்களுக்கான ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வையானது ஆண்டு காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்திற்கு மாற்றப்பட்டது.

(ஆ) கிடைத்தக்கதாகவுள்ள ஒத்ததன்மையான சந்தை தகவல்கள் வெளிப்படைத் தன்மையினை அதிகரிக்கும் எனும் எதிர்பார்கையுடன் பொதுப்படுகடன் திணைக்களமானது அனைத்து முதனிலை வணிகர்களுடன் அடுத்துவரும் ஏலங்கள் தொடர்பான முன் விலைக் கோரல் கூட்டங்களை நடத்துதலினை 2016 யூலையிலிருந்து ஆரம்பித்திருந்தது. வெளிப்படைத் தன்மையினை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு ஏலத்திலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த தொகையானது திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி ஏலங்களுக்கான மொத்த வழங்கப்பட்ட தொகையில் மட்டுப்படுத்தல்.

(இ) அதேநேரம், ஆளுகையினை மேம்படுத்தும் நோக்குடன், 2016 ஓகத்திலிருந்து இரண்டு திறைசேரி அலுவலர்கள் திறைசேரி உண்டியல், திறைசேரி முறி மற்றும் இலங்கை அபிவிருத்தி முறி போன்றவற்றின் விலைக்கோரல் சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(ஈ) ஆண்டு காலப்பகுதியில், பொதுப்படுகடன் திணைக்களம் ஏலத்திகதி மற்றும் சர்வதேச பிணைய அடையாள இலக்கம் போன்றவற்றை ஒன்றிணைத்ததன் மூலம் ஏல நாட்காட்டியில் அதிக தகவல்களை வழங்கியது. இது நிதி அமைச்சின் ஒத்துழைப்புடன் வெளியிடப்படவுள்ளதுடன் முதனிலை ஏல செயன்முறையின் ஊகத்தன்மையினை அதிகரித்து கிடைக்கக்கூடிய தகவல்களை முன்கூட்டியே உறுதிசெய்யும்.

(உ) பொதுப்படுகடன் திணைக்களத்தின் படுகடன் முகாமைத்துவ உபாயங்களை முன்னேற்றுவதற்காக ஐக்கிய அமெரிக்க திறைசேரி ஆலோசகரின் தொழிநுட்ப உதவியை பொதுப்படுகடன் திணைக்களம் பெறக்கூடியதாகவிருந்தது.

## 21.6 படுகடன் சந்தை அபிவிருத்தி

படுகடன் முகாமைத்துவத்தின் நோக்கமானது முன்மதியுடைய இடர்நேர்வு மட்டங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் அரச நிதியிடலின் செலவினை சாத்தியமானளவிற்கு மிகக்குறைந்த மட்டத்திற்கு கொண்டுவருதலினை உறுதிசெய்வதாகும். எனவே, பொதுப்படுகடன் திணைக்களம் வெளிப்படைத்தன்மையினை மேலும் மேம்படையச் செய்வதன் மூலம் சந்தை வினைத்திறனை அதிகரித்து அரசபிணையங்கள் சந்தையின் போட்டித்தன்மையினை அதிகரிக்க முயற்சிக்கின்றது. படுகடன் சந்தையின் அண்மைக்கால அபிவிருத்திகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அரச பிணையங்களுக்கான புளும்போர்க் வர்த்தகப்படுத்தல் தள அறிமுகமானது சிறந்த விலைகளைக் கண்டறிதல் உயர்ந்தளவான வெளிப்படைத் தன்மை மற்றும் அதிகரித்ததொரு நம்பிக்கை போன்றவற்றை தோற்றுவித்துள்ளதுடன் இது இரண்டாம்தர சந்தையில் வர்த்தகப்படுத்தல் அளவுகளின் ஓர் குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் மூலம் பிரதிபலிக்கப்பட்டது. (வர்த்தகப்படுத்தல் அளவு ரூ.690.77 பில்லியன், கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை-4,681) மேலும், புளும்போர்க் இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளமானது மீள்கொடுப்பனவு கொடுக்கல்வாங்களுக்காக விரிவாக்கப்படவுள்ளதுடன் இருவழிக் கோரல்கள் கட்டாயமாக்கப்படும்.

(ஆ) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான அரச பிணையங்களின் தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் போன்றவற்றினை மேம்படுத்தும் நோக்கில் பொதுப்படுகடன் திணைக்களம் அரசபிணையங்களின் யூரோ கொடுத்துத்தீர்த்தல் முறையினை மதிப்பிடும் தொழிற்பாட்டில் உள்ளது. இது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தளத்தின் பன்முகப்படுத்தலினை இயலச்செய்வதுடன் அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான மதிப்பீட்டினை இலகுபடுத்தலினை அதிகரிக்கிறது.

(இ) இலங்கை மத்திய வங்கியானது தேவையான ஒழுங்கமைப்பு கட்டமைப்புக்களுடன் இணைந்து அரச பிணையங்களுக்கான ஐக்கிய அமெரிக்க திறைசேரி திணைக்களம் மற்றும் மத்திய இணைந்தரப்பு தீர்ப்பனவு இல்லம் போன்றவற்றின் தொழிநுட்ப உதவி மூலம் ஓர் இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் வசதியினை நிறுவும் செயற்பாட்டிலுள்ளது.

(ஈ) முன்னோக்கிய வழிமுறையொன்றாக, இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழிநுட்ப திணைக்களம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான இணையத்தள அடிப்படையிலான ஏல முறையினை உருவாக்கியுள்ளது. இம்மேம்படுத்திய பதிப்பு சுயதீனமான கணக்காய்வு பூர்த்திசெய்யப்பட்டதும் நடைமுறைக்கிடப்படும் ஏலச் செயற்பாட்டின் வெளிப்படைத் தன்மையினை மேலும் முன்னேற்றும் நோக்குடன் பொதுப்படுகடன் திணைக்களமானது ஏல ஒழுங்குவிதிகளை தயாரித்துள்ளதுடன் 2017 இல் வெளியிடப்படும். அத்துடன் விலைகண்டறிதல் செயற்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மை போன்றவற்றை முன்னேற்றுவதற்காக ஐக்கிய அமெரிக்க திறைசேரி உதவிகளுடன் ஏல செயல்முறையினை மீளாய்வு செய்கின்றது.

### 21.7 நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடல் மீளாய்வுப் பணியினை ஒருங்கிணைத்தல்

நாட்டிற்கான பன்னாட்டு தரமிடல் கிடைப்பனவு உறுதிப்படுத்தும் நோக்கில் பொதுப்படுகடன் திணைக்களமானது பன்னாட்டு தரமிடல் முகவர்களின் (பிட்ஜ் றேட்டிங் லிமிடெட், மூடிஸ் இன்வெஸ்டர் சேவிஸ்கஸ், ஸ்டாண்டட் அன்ட் புவர்) 2016 ற்கான வருடாந்த தரமிடல் மீளாய்வுகளுடன் இலங்கைக்கான அவற்றின் தரமிடல் பணிகளை மதிப்பிடுவதில் வசதியளித்தது.

## 22. பிரதேச அபிவிருத்தி

அனைத்தையும் உள்ளடக்கியதும் சமச்சீரானதுமான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு ஆதரவளிக்கும் நோக்குடனும் நாட்டில் குறைந்த செலவில் மக்கள் அனைவருக்கும் நிதியியல் வசதிகள் கிடைப்பதனை ஊக்குவிப்பதற்குமாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2016இல் அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கி, இலங்கை அரசாங்கம், கொடை முகவர்கள் மற்றும் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட பல்வேறு மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களைத் தொடர்ந்தும் இணைத்து, வசதியளித்து மற்றும் நடைமுறைப்படுத்தி வருவதுடன் கொடுகடன் துணை நிரப்புப் பணிகளையும் வழங்கி வருகிறது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வழிகளை மேம்படுத்தல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வினை உருவாக்குதல் என்பனவற்றின் இரண்டு பரந்த துறைகளின் கீழ் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

இதன்படி, பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவுத் தொழில்முயற்சிகளிலுள்ள தேவையான தனிப்பட்ட மற்றும் வியாபாரத் தொழில்முயற்சிகளுக்காக கடன் மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களினூடாக தாங்கக்கூடிய விதத்திலான நிதிகளை வழங்கியமையானது கடன் திட்டத்தின் நன்மைபெறுநர்கள் தாம் எதிர்நோக்கும் சவால்களைப் பெருமளவிற்குத் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்வதனை இயலச்செய்தது. மேலும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் விசேடமாக முறைசார்ந்த நிதியியல் துறைக்கு வெளியேயுள்ளவர்களை கவனத்தில் கொண்டு ஆண்டு முழுவதும் விழிப்புணர்வுத் திட்டங்களைத் தொடர்ச்சியாகக் கட்டியெழுப்புதல் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியதுடன் திணைக்களத்தினால் நடைமுறைக்கிடப்பட்ட பல்வேறு கடன் திட்டங்கள் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வினை உயர்த்துவதற்காக அச்சு, இலத்திரனியல் மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களையும் பயன்படுத்தியது.

2016இல் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் துறையினை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்குடன், மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மீள்நிதியிடல் திட்டங்களை பிரபல்யப்படுத்துவதற்காக, கொள்கை நோக்கில் பல முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டன. மற்றையவர்களிடையே இவ்வழிமுறைகள் வர்த்தகளவிலான பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவுக் காலத்தினை அதிகரித்தல் மற்றும் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான குறைந்தபட்சக் கடன் வரையறையினைத் திருத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

### 22.1 கடன்கள் மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களினை நடைமுறைப்படுத்தல்

2016இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 13 கடன் மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை முக்கியமாகத் தொழிற்படுத்துவதனூடாக (அட்டவணை II 23) நிதியியல் பாரிய செயல் விளைவினைத் தொடர்ந்தும் விரிவுபடுத்தியது. இத்திட்டங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட சுயவேலைவாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டம் II இன் கட்டம் II மற்றும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மேலும் இரண்டு கடன் திட்டங்களையும் உள்ளடக்கியிருந்தன.

2016இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களினூடாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் 136,503 நன்மைபெறுநர்களுக்கு ரூ.20,809.1 மில்லியன் கொண்ட பெறுமதி மொத்தக் கடன் தொகையாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இப்பகிர்ந்தளிப்புக்களில் 63.3 சதவீதம் பெரும்பாலான கடன்கள் வட்டி உதவுதொகைத் திட்டங்களினூடாக வழங்கப்பட்ட வேளையில் 36.7 சதவீதம் மீள்நிதியிடல் கொடுகடன் திட்டங்களினூடாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. 2016இல் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் 46.4 சதவீதக் கடன்கள் வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட வேளையில் 40.6 சதவீதமும் 13.0 சதவீதமும் முறையே நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறைக்கும் நுண்பாக நிதி நிறுவனத் துறைக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

2016இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் நிலை கீழே தரப்படுகிறது.

### 22.2 வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறை

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறையினால் செய்யப்பட்ட பங்களிப்பினை அங்கீகரிக்கின்ற விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2016இல் மூன்று கடன்கள் மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களூடாக சலுகை ரீதியான கடன்களை வழங்கியதன் மூலம் இத்துறைக்குத் தொடர்ந்தும் உதவியது. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் இத்துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூ.9,660.5 மில்லியனாக விளங்கியதுடன் மொத்தக் கடன் பகிர்ந்தளிப்பில் 46.4 சதவீதத்திற்கும் வகைகூறியது.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதங்கள் இரண்டினையும் வழங்குவதன் மூலம் 33 குறுங்கால பயிர் வகைகளைப் பயிரிடும் சிறு அளவு வேளாண்மையாளர்களுக்குப் பணியாற்றுகின்ற "சறுசறா" அல்லது புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டமானது இத்துறைக்கு கடன்களை வழங்குகின்ற முதன்மைத் திட்டமாகும்.

- புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தினூடாக வழங்கப்பட்ட ரூ.8,009.2 மில்லியன் கொண்ட பகிர்ந்தளிப்பு வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறைக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடனில் 82.9 சதவீதத்திற்கு வகைகூறியது. இது 2015இல் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையினைவிட ரூ.871.2 மில்லியன் அல்லது 12.2 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். முக்கிய பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளுக்கிடையிலும் இவ்வதிகரிப்பு அடையப்பட்டது. கொள்கை அடிப்படையில் கரும்பு செய்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைக்குப் பதிலிறுத்தும் விதத்தில் 2016 செத்தெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் கரும்பு தகுதியுடைய ஒரு பயிராக உள்ளடக்கப்பட்டுள்ளது.

- கடந்த ஒரு சில ஆண்டுகளாக நிலவிய போக்கின் தொடர்ச்சியாக, புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் அநுராதபுர மாவட்டம் கடன் பகிர்ந்தளிப்பின் மிக உயர்ந்த தொகையினையும் பகிர்ந்தளிப்பில் (கடன் பகிர்ந்தளிப்பின் 17 சதவீதம்) அதனைத் தொடர்ந்து பொலனறுவை (12.9 சதவீதம்) மற்றும் அம்பாறை (10.3 சதவீதம்) மாவட்டங்கள் உயர்ந்த தொகையினைப் பெற்றிருந்தன. 2016இல் மாகாணங்களிடையே வடமத்திய மாகாணத்திலுள்ள நன்மைபெறுநர்கள் (31,526) மிக உயர்ந்த கடன் தொகையில் 29.9 சதவீதம் பெற்றிருந்தனர்.

- வட்டி உதவுதொகைத் திட்டமொன்றாகத் தொழிற்படுகின்ற வர்த்தகளவிலான பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழான கடன் பகிர்ந்தளிப்பு 2016 காலப்பகுதியில் 2.2 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்தது. 2016இல் இத்திட்டம் 2,667 நன்மைபெறுநர்களிடையே ரூ.1,633.5 மில்லியனைப் பகிர்ந்தளித்ததுடன் 2015இல் பகிர்ந்தளிக்கப்பட்ட 14.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்தப் பகிர்ந்தளிப்பில் 16.9 சதவீதமாகக் காணப்பட்டது.

- 2016 சனவரியில், பண்ணை வேளாண்மையாளர்கள்/ தொழில்முயற்சியாண்மையாளர்களில் வருமான உருவாக்க மாதிரியினைப் பரிசீலனையில் கொள்கையில், வர்த்தகளவிலான பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் உயர்ந்தபட்ச சலுகைக்காலம் செயற்றிட்டத்தின் தேவையைப் பொறுத்து 06 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்கு அதிகரித்தது. மேலும், வேளாண்மையாளர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலிறுத்தும் விதத்திலும் பயன்பெறுவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய தன்மையினையும் வர்த்தகளவிலான பண்ணை அபிவிருத்தித் திட்டமே இணைந்த சிறு வேளாண்மையாளர்கள் வர்த்தக அளவுகளுக்கு மாறிக் கொள்வதற்கு எடுக்கின்ற நீண்ட பரிமாற்றல் காலத்தினையும் பரிசீலனையில் கொண்டு வர்த்தகளவிலான பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் மீள்கொடுப்பனவுக் காலம் ஓராண்டு உயர்ந்தபட்ச சலுகைக் காலம் உட்பட 2017 பெப்புருவரியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 5 ஆண்டுகளிலிருந்து 6 ஆண்டுகளுக்கு அதிகரிக்கப்பட்டது.

### 22.3 நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறை

தேசிய உற்பத்தி, தொழில் உருவாக்கம் மற்றும் புத்தாக்கம் என்பனவற்றிற்கு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறை வழங்கும் பங்களிப்பினை அங்கீகரிக்கும் விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2016இல் தொடர்ந்தும் இத்துறைக்கு வசதியளித்ததுடன் சலுகை வீதங்களின் கீழ் தற்போதுள்ள மற்றும் சாத்தியமான தொழில்முயற்சியாளர் உயர்ந்த மூலதனச் செலவின் சுமையிலிருந்தும் முக்கியமாக நிவாரணமளிக்கும் விதத்தில் கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. 2016இல் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையில் வேளாண்மை, தயாரிப்பு மற்றும் பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 13,810 தொழில்முயற்சியாளர்களிடையே ரூ.8,477.2 மில்லியன் கொண்ட மொத்தக் கடன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டன.

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் துறைக்கான கடன்கள் சௌபாக்கிய கடன் திட்டம், சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டம் கட்டம் II, சில உடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம் மற்றும் வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் ஆகிய ஐந்து கொடுகடன் திட்டங்களினூடாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- முன்னணி நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மீள்நிதியிடல் திட்டமாகக் கருதப்படுகின்ற சௌபாக்கியா கடன் திட்டம் ரூ.4,767.1 மில்லியன் கொண்ட பெருந்தொகையான கடன்களை அல்லது மொத்தக் கடன்களில் 56.4 சதவீதத்தினை 13,018 தொழில்முயற்சியாளர்களுக்குப் பகிர்ந்தளித்தது.

- அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட வட்டி உதவுதொகைத் திட்டமான தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம் பதிவுசெய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகள் அவற்றின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவுவதற்காக 2015இல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2016ஆம் ஆண்டுப் பகுதியில் 115 தொழில்முயற்சியாளர்களிடையே ரூ.3,539.8 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் முழுத் துறைக்குமாக பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களில் 41.9 சதவீதத்திற்கு வகைகூறியது.

- பயிற்சி பெற்ற இளைஞர்கள் அவர்களது சொந்த சுயதொழில் வாய்ப்பு செயற்றிட்டங்களை நிறுவுவதற்காக நிதியியல் உதவிகளை வழங்கும் குறிக்கோளுடன் 2016 ஏப்பிறலில் சுய தொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டம் கட்டம் II ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் விசேட இணைந்த தொழில்நுட்ப நிறுவனங்களிலிருந்து தொழில்பயிற்சித் தகுதிகளைப் பெற்ற இளைஞர்கள் சிறியளவு தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ரூ.74.9 மில்லியன் கொண்ட கடன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. எஞ்சியுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கடன் திட்டங்களான சிறுஉடமையாளர் பெருந்தோட்டத் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் இணைந்து இவ்வாண்டுப் பகுதியில் 505 கடன்பாட்டாளர்களிடையே ரூ.65.3 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.

- பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்பு உருவாக்கம் என்பனவற்றிற்காக “ஒரு மில்லியன் தொழில் வாய்ப்பினை நோக்கிய சுயசக்தி” என்ற பெயரிலான புதிய கடன் திட்டமொன்றினை வடிவமைத்தது. இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்படுகின்ற இத்திட்டமானது வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு, கைத்தொழில் மற்றும் பணிகள் துறையிலுள்ள வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபடும் கிராம மட்டத்தில் புதிதாக நுழைபவர்கள் மற்றும் ஏற்கனவேயுள்ள தொழில்முயற்சியாளர்கள் ஆகிய இரு சாராரும் நிதியியல் உதவிகளை வழங்குகின்றன. இப்புதிய கொடுகடனை கூட்டிய திட்டம் நாடளாவிய ரீதியில் தொழிற்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது சாத்தியமான தொழில்முயற்சியாளர்களின் தற்போதைய தேர்ச்சி மற்றும் திறமைகளையும் கிராமங்களிலுள்ள மூலவளங்களையும் அடையாளம் காண்பதுடன் சுயவலுவூட்டப்பட்ட நுண்பாக தொழில்முயற்சியாண்மையாளர்களாக உருவாகும் விதத்தில் சந்தைப்படுத்தல் ஆதரவுடன் சேர்த்து தேவையான பயிற்சியையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கியது.

திட்டத்தின் தனித்துவமான பண்பு யாதெனில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக ஆண்டொன்றிற்கு 5.5 சதவீத வட்டி வீதத்தில் வழங்கப்பட்ட கடன்களுக்குப் புறம்பாக புதிய தொழில்முயற்சியாளர்களுக்காக ஆரம்பச் செலவினை ஈடுசெய்வதற்காக விசேட கொடை வழங்கப்பட்டமையேயாகும்.

### 22.4 நுண்பாக நிதித் துறை

பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்குடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் நுண்பாகக் கடன் திட்டங்கள், குறைந்த வருமானம் ஈட்டுவோர் வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை இயலச் செய்யும் விதத்தில் தொடர்ந்தும் வசதியளித்தது. முறைசார்ந்த நிதியியல் துறைக்கு வெளியேயுள்ளவர்களுக்குச் சென்றடைவதனை இத்திட்டங்கள் கவனத்தில் கொண்டிருந்தன. பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நிதியியல் முகாமைத்துவத்தினால் ஆற்றப்படும் வகிபாகத்தினைப் பரிசீலனையில் கொள்கையில், சமூகத்திலுள்ள இப்பிரிவினரின் நிதியியல் அறிவாற்றல் அதிகரிப்பதற்கு இத்திட்டங்கள் விசேட கவனத்தினைச் செலுத்தின. இத்துறைக்கான நிதி வசதிகள் முக்கியமாக வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதி, வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம், இது வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் - சுழலும் நிதியம், மற்றும் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றினூடாக வழங்கப்படுகின்றன. 2016இல் இக்கடன் திட்டங்களினூடாக நுண்பாக நிதித் துறையிலுள்ள 32,963 நன்மைபெறுநர்களிடையே ரூ.2,701.4 மில்லியன் கொண்ட மொத்தக் கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் இது மொத்தப் பகிர்ந்தளிப்பில் 13.0 சதவீதத்திற்குப் பங்களித்தது.

நுண்பாக நிதித் துறையின் மொத்தக் கடன் பகிர்ந்தளிப்பில் 58 சதவீதத்திற்கு வகைகூறும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் 2016இல் 19,268 நன்மைபெறுநர்களுக்கு வசதியளித்தது. 2015இல் ஒப்பிடத்தக்க பங்கு 64.9 சதவீதமாகக் காணப்பட்டது. நுண்பாக நிதித் துறையின் கடன் பகிர்ந்தளிப்பில் 27 சதவீதத்திற்கு வகைகூறிய தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தித் திட்டத்தில் புதிதாக மீள ஆரம்பிக்கப்பட்ட நுண்பாக நிதிக் கூற்றின் கடன் திட்டத்தில் செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புக்கள் 2016இல் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியின் தொடர்பான பங்கு வீழ்ச்சியடையக் காரணமாகியது. இவ்வீழ்ச்சி காணப்பட்ட போதும் செயற்றிட்டத்தின் தனிப்பட்ட செயலாற்றம் மேம்பட்டு 2016இல் 17.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

- 2016 சனவரியில், வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திலான - நுண்பாக நிதிக் கடன் திட்டமானது முக்கியமாக வறிய சமூகத்தினரின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக மீள ஆரம்பிக்கப்பட்டது. தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - நுண்பாக நிதி முக்கியமாகப் பெண்கள், நிலமற்ற குடியிருப்பாளர்கள் மற்றும் ஏனைய வசதி குறைந்த குழுவினர் உள்ளிட்டோரைக் கவனத்தில் கொண்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டமானது வேளாண் வியாபாரம், வேளாண்மை, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, வர்த்தகம் மற்றும் பணிகள் மற்றும் சிறுகைத்தொழில்கள் போன்றவற்றில் சுய தொழில் வாய்ப்புக்கள் போன்ற வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக நுண்பாக கொடுகடன்களை வழங்கியது. 2016இல் இத்திட்டத்தின் கீழ் 5,839 நன்மைபெறுநர்களுக்கு மொத்தக் கடனாக ரூ.730.7 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.

- தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - நுண்பாக நிதிக் கடன் திட்டத்தின் கீழான கடன் திட்டத்தின் குறைந்தபட்சக் கடன் தொகையினை குறைக்குமாறு தனிப்பட்டவர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலிறுத்தும் விதத்தில் கடன் வரையறையின் கீழ்மட்ட எல்லை அது சென்றடையும் பரப்பினை விரிவாக்கும் நோக்குடன் 2016 ஏப்பிறலில் ரூ.30,000 இலிருந்து ரூ.10,000 இற்கு இது கீழ் நோக்கிக் குறைக்கப்பட்டது. இதன்படி, இத்திட்டத்தின் கீழ் நன்மைபெறுநர்கள் ரூ.10,000 - ரூ.300,000 வீச்சிலான கடனைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர்.

- 2016 ஓகத்தில் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - இளைஞர் வலுவூட்டல் மற்றும் தொழில் வாய்ப்புச் செயற்றிட்ட (தருண திரிய) கடன் திட்டம் அபிவிருத்திச் செயன்முறையில் இளைஞர்களுக்கு வலுவூட்டல் மற்றும் இளைஞர்களை ஈடுபடுத்துதல் என்பனவற்றினை இலக்காகக் கொண்டு ரூ.225 மில்லியன் கொண்ட நிதிய ஒதுக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. இக்கடன் திட்டத்தின் பிரதான குறிக்கோள் யாதெனில் கிராம மட்டத்திலுள்ள வறிய இளைஞர்களுக்கு இதனைச் சென்றடையச் செய்வதும் சிறிய வியாபாரங்களைத் தொடங்குவதற்கும் மற்றைய வடிவங்களிலான சுய வேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களுக்கும் கொடுகடன் வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த உதவுவதுமேயாகும். 2016 ஓகத்து - திசெம்பர் காலப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் 5,839 இளைஞர்களிடையே ரூ.19.7 மில்லியன் கொண்ட மொத்தக் கடன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

- உற்பத்தி, உற்பத்தியாக்கம், தரம் மற்றும் வேளாண்மை உற்பத்திகளின் பெறுமதிகூட்டல் என்பனவற்றை அதிகரிக்கும் குறிக்கோளுடன் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிப் பயிர்ச்செய்கையாளர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழ் "பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி மூலதன வேளாண்மைக் கடன் திட்டம்" மற்றும் "பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி பருவகால வேளாண்மைக் கடன் திட்டம்" என்பன 2016 ஒத்தோபரில் ஆரம்பிக்கப்பட்டன. இக்குறிக்கோளினை அடைவதற்காக இவ்விரு கடன் திட்டங்களுக்குமான வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டுத் திட்டம் ரூ.623.2 மில்லியனை ஒதுக்கியிருக்கிறது.

### 22.5 ஏனைய முன்னெடுப்புக்கள்

#### அ. நிதியியல் வசதிகளை வழங்குவது தொடர்பான அளவீடொன்றினை நடத்தியமை

நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் கிடைப்பனவினையும் அதனை பெறக்கூடிய தன்மையினையும் மேம்படுத்துவதற்கான மார்க்கமொன்றினை உருவாக்கும் நோக்குடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2016இல் இலங்கையில் முதற்றடவையாக நாடளாவிய ரீதியில் நிதியியல் வசதிகளை வழங்குவது தொடர்பான அளவீடொன்றினை நடத்தியது.

இவ்வளவீட்டில் கண்டறியப்பட்டவற்றின் அடிப்படையிலும் அயல் நாடுகளில் சமகாலத்திலுள்ள நிதியியல் வசதிகளின் கிடைப்பனவு தொடர்பான உபாயங்களையும் பரிசீலனையில் கொண்டு குறைந்த செலவில் வறிய மக்களுக்கு நிதியியல் வசதிகளை வழங்குவதற்கான

தேசிய உபாயம் தொடர்பான அனைத்தையுமுள்ளடக்கிய வரைவு ஒன்று 2017இல் உருவாக்கப்படும். பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பின் கீழ் தேசிய கொள்கைத் தலையீட்டு உபாயம் - "நிதியினைப் பெறுவதற்கான வழி" மேற்பார்வை செய்யும்.

**ஆ. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வேளாண் வியாபாரத்திற்கான நிதிகளின் கிடைப்பனவினை அதிகரித்தல்**

சேதன வேளாண்மை பற்றி அதிகரித்துவரும் பொதுமக்கள் மற்றும் அரசாங்கத்தின் கரிசனைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் முறைசார்ந்த வேளாண் வியாபாரச் சங்கங்களையும் பல்நோக்கு ஆர்வலர் தொழில்முயற்சிகளையும் நிறுவுவதனூடாக வர்த்தக அளவில் சேதன வேளாண்மை மற்றும் பண்ணைத் தொழில்முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்கு அத்திவாரமொன்று இடப்பட்டிருக்கிறது. இச்செயன் முறையில் நிதியியல் மற்றும் கொடுகடனுடன் கூடிய வசதிகளை வழங்க எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் வேளாண்மையாளர்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்குமிடையே சந்தை வழிப்படுத்தல்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த வசதிகள் வழங்கப்படுவதுடன் அடையாளம் காணப்பட்ட வேளாண்மையாளர்களின் தரத்தினை உயர்த்துவதற்கும் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும்.

**இ. சூரிய வலு உருவாக்கத்திற்கான கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்துவது மீதான கலந்துரையாடல்களை ஆரம்பித்தல்**

நாட்டில் வீட்டின் கூரையில் வலு உருவாக்கத்தினை ஊக்குவிக்கும் நோக்குடன் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஏனைய ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்படும் புதிய கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கடன் திட்டத்தின் முக்கிய நோக்கம் 2020ஆம் ஆண்டளவில் சூரிய வலுவின் மூலம் 200 கிலோவாற்று மின்வலுவின் உருவாக்கம் அரசாங்கத்தின் கொள்கை முன்னெடுப்பிற்கு ஆதரவளிப்பதேயாகும்.

**ஈ. வேளாண்மையை நவீனமயப்படுத்துவதற்காக பகுதியளவிலான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல்**

இடையேற்பாட்டு நிதிப் பணிகளை வழங்குபவர்களின் தோற்றம் பெற்றுவருகின்றதும் மாற்றமடைந்து வருகின்றதுமான தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் உலக வங்கியினால் நிதியிடப்பட்ட உத்தேச வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் பகுதியளவிலான கொடுகடன் உத்தரவாதச் சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய வங்கி முன்னெடுத்துள்ளது. பகுதியளவிலான கொடுகடன் உத்தரவாதத் திட்டமானது, வேளாண்மை உற்பத்தியாக்கம் மற்றும் வினைத்திறனுக்கு ஆதரவளித்தல், சந்தைகளை அணுகும் தன்மையினை மேம்படுத்தல் மற்றும் பெறுமதிகூட்டல்களை அதிகரித்தல் என்பனவற்றிற்கு உதவும் நோக்குடன் தொழிற்படுகின்ற வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் புத்தாக்க இடர்நேர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு சாதனமாகும். மேலும், வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் பொருத்தப்பாட்டுக் கொடை கூறு செயற்றிட்டச் செலவில் 50 சதவீதத்தினை பகிர்ந்து கொள்வது நிதியினைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளை மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**22.6 தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல்**

அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் பயணத்தில் இயக்கவாற்றல் வாய்ந்த பகுதியாக விளங்கும் நிதியியல் அறிவு மற்றும் விழிப்புணர்வின் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கும் விதத்தில் 2016இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 172 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதுடன் இவை முக்கியமாக நன்மைபெறுநர்களுக்கும் மற்றைய ஆர்வலர்களுக்கும் கல்வியூட்டும் விதத்தில் நிதியியல் அறிவு, தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சியாளர்களின் பயிற்சி, என்பனவற்றின் மீது முக்கிய கவனத்தில் கொண்டிருந்தன.

நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்கள் நிதியியல் பணிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையாக இருக்கும் காரணங்களை அகற்றும் விதத்தில் விழிப்புணர்வினை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருந்தன. மேலும், இந்நிகழ்ச்சித்திட்டங்கள் முறைசார்ந்த நிதியியல் துறைக்குள் நுழைதல் மற்றும் அவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல் என்பனவற்றில் முக்கிய கவனத்தினைச் செலுத்தின. கவனத்திற்குரிய குழுமங்களுக்கு சிறந்த வங்கித்தொழில் பழக்கவழக்கங்கள், நிதியியல் ஒழுக்காற்றுக்கள் அதேபோன்று புதிய நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகள் என்பன தொடர்பில் அறிவூட்டப்பட்டன. மேலும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இக்கல்வி சார்ந்த செயன்முறையினை, நிதியியல் முகாமைத்துவம் மற்றும் சிறந்த நிதியியல் பழக்கவழக்கங்களை மேம்படுத்துவதற்கான சுய உதவிக் குழுக்களை உருவாக்குவதன் மூலம் கூடியளவிற்குச் செயன்முறை அம்சங்களுக்கு மாற்றுவதனைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் கீழே அட்டவணை II-24இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II - 24**

**பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2016ஆம் ஆண்டுப்பகுதியில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

| நிகழ்ச்சித்திட்டத்தின் வகை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் அறிவு | 82 |
| தேர்ச்சி அபிவிருத்தி | 60 |
| இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் | 26 |
| ஊடகப் பிரச்சாரம் | 04 |
| மொத்தம் | 172 |

**23. பிரதேச அலுவலக முகாமைத்துவம்**

2015 செத்தெம்பரில் நிறுவப்பட்ட ஐந்து திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்களுக்கு பதிலாக 2016 நவெம்பரில் பிரதேச அலுவலக அபிவிருத்தித் திணைக்களம் நிறுவப்பட்டது. பிரதேச

அலுவலக அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒட்டுமொத்த நோக்கமானது நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் வேலைகளினைக் கண்காணித்து மேற்பார்வை செய்வதாகும்.

நாணய விதிச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளில், நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் பிராந்திய அபிவிருத்தியை ஊக்கிவிக்கும் நோக்குடன் புதிய பிரதேச அலுவலகமொன்று நுவரெலியாவில் 2016 சனவரியில் நிறுவப்பட்டது. குறிப்பாக இரண்டு மாவட்டங்களிலுள்ள பெருந்தோட்டத் துறைகளில் வேலை செய்யும் ஊழியரிற்கு கடன் விநியோகம் அதேபோன்று ஊழியர் சேமநிதியத்துடன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதனை நுவரெலியா பிரதேச அலுவலகம் நோக்ககாகக் கொண்டிருந்தது. தற்போது, இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை ஏழாக காணப்படுகின்றது. அவையாவன மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் நுவரெலியா ஆகும்.

### 23.1 அபிவிருத்தியுடன் தொடர்பான நடவடிக்கைகள்

2016 இல் ஏழு பிரதேச அலுவலகங்களும் தொடர்பான பிராந்தியங்களில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் குறிப்பாக வேளாண்மை, விலங்குவளர்ப்பு, கடற்றொழில் போன்ற கிராமியத் துறைகள் மற்றும் பல்வேறு துறைகளில் அடையாளம் காணப்பட்ட ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை மேம்படுத்துவதன் கொடுகடன் வழங்கும் பொறிமுறையின் வினைத்திறனை அதிகரிப்பதன் மீது கவனம் செலுத்தப்பட்டது. வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிகள், ஏனைய பதிவுசெய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச முகவர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து நிகழ்ச்சித்திட்டதனூடாக கடன் நன்மை பெறுநர்கள் மற்றும் “அபிவிருத்திக் கொடுகடனின்” சாத்தியமான கடன்பாட்டாளர்கள் தமது செயற்றிட்டங்களை செயற்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவியளித்தது. இவ்வாண்டுப் பகுதியில், பல்வேறு வசதிப்படுத்தல் பணிகளை வழங்குகின்ற 66 கொடுகடன் பயிற்சிப்பட்டறைகள் 7,327 தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன் சாத்தியமான கடன்பாட்டாளர்கள் மூலம் 3,121கொடுகடன் தொடர்புகள் நிறுவப்பட்டன.

நிதியியல் அறிவு, தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப அறிவு ஆகிய துறைகள் தொடர்பிலான அவசியமான அறிவு கடன்பாட்டாளர்களுக்கும் அதேபோன்று அடிமட்ட சனசமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாகவும் செயலமர்வுகளினூடாகவும் வழங்கப்பட்டன. நிதியியல் உள்ளடக்கம், புதிய தொழிநுட்ப பிரயோகம் மற்றும் திறன் அபிவிலுத்தி போன்ற விடயங்களில் ஏறத்தாழ 13,570 பங்குபற்றுனர்களை உள்ளடக்கி 145 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. பிரதேச அலுவலகங்கள் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் பல்வேறு துறைகளிலான தொழிநுட்பமாற்றல் வெளிப்பாட்டு விஜயங்களையும் மேற்கொண்டது. இதன்படி, 55 தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், 34 வெளிப்பாட்டு விஜயம்/ தொழிநுட்பமாற்றல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 44 சிறந்த நடைமுறைகள் போன்ற விடயங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்நிகழ்ச்சித் திட்டங்களினூடாக 4,806, 1,292 மற்றும் 1,971 பங்குபற்றுனர்கள் பயன் பெற்றிருந்தனர். வேளாண்மை, கடற்றொழில் மற்றும் தோட்டக்கலை போன்றவை தொழிநுட்ப மாற்றங்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட துறைகளாக காணப்பட்ட வேளையில், ஒளிவீச்சு டயோடுகள் (எல்இடி), கலப்பு மற்றும் கண்ணாடி இழைய தொழிநுட்பம் போன்ற துறைகளில் சில விசேட செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 597 பயனாளிகளுக்காக 12 நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டதன் மூலம் கலப்பு தொழிநுட்பம் தொடர்பான மாற்றல்கள் மற்றும் இயற்கைப் பண்ணை போன்றவற்றின் மீது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு காரணிகளின் காரணமாக தவணைக்கடன்களை மீளச் செலுத்துவதில் இடர்பாடுகளை எதிர்நோக்கிய கடன்பாட்டாளர்களுக்கு கொடுகடன் ஆலோசனைப் பணிகளும் வழங்கப்பட்டன. மொத்தமாக 1,763 பேர் கொடுகடன் நன்மைகளைப் பெற்றுக் கொண்டனர். பிரதேச அலுவலகங்கள் சந்தை இணைப்புக்களை ஒழுங்கு செய்தல், வாங்குநர் விற்பவர் கலந்துரையாடல்கள் பண்டிகைக்கால வர்த்தக கண்காட்சிகள் என்பனவற்றினூடாக இக்கடன்பாட்டாளர்களின் சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்கு உதவின.

மாகாண ஆளுநர்கள், மூத்த அரச அலுவலர்கள், தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களிலுள்ள நிதியியல் நிறுவனங்களின் அலுவலர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் முறையே காலியிலும் கொழும்பிலும் இரண்டு விசேட கூட்டங்களை நடத்தின. இக்கூட்டங்களின் நோக்கம் யாதெனில் மாகாணங்களின் நிதியியல் மற்றும் வங்கித் தொழில் தேவைகள், நிதியியல் மற்றும் நிதியியல் உள்ளடக்க மட்டம் தொடர்பான பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடுதல் மற்றும் அவற்றை அடையாளம் காணுதல் என்பனவாகும்.

### 23.2 மத்திய வங்கியின் பிரதேச பிரசன்னத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தல்

2016 இல், ஏழு பிரதேச அலுவலகங்களும் இலங்கை மத்திய வங்கியின் மைய வியாபார செயற்பாடுகளை விரிவாக்குவதற்கு அதன் பல்வேறு திணைக்களங்களினூடாக வசதிப்படுத்தியது. இவ்வாண்டுப் பகுதியில் பிரதேச அலுவலகங்கள் தூய நாணயத்தாள் தொடர்பான நாடளாவிய விழிப்புணர்வினைக் கட்டியெழுப்புதல், போலி நாணயத்தாள்களை அடையாளம் காணுதல், அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள், தடைசெய்யப்பட்ட திட்டங்கள், நிதியியல் உளவறிதல் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குகள், மற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றினை உள்ளடக்கி 107 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தின. மொத்தமாக 9,347 ஆட்கள் இந்நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்டனர். இவ் 107 நிகழ்ச்சித்திட்டத்தில் தூய நாணயத்தாள் கொள்கை மற்றும் போலி நாணயத்தாள்களை அடையாளம் காணுதல் தொடர்பில் 39 நிகழ்ச்சித் திட்டங்களும், அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் 50 நிகழ்ச்சித்திட்டங்களும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கல்விசார் 08 நிகழ்ச்சித்திட்டங்களும் உள்ளடங்கும். மேலும், தொழில்தருநர்கள் மற்றும் 95 பெருந்தோட்டத் துறை அலுவலர்களின் நன்மை கருதி ஊ.சே. நிதியம் தொடர்பான தெளிவுபடுத்தல்களுக்காக ஒரு நிகழ்ச்சித் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் பணிகளை வழங்குவதில் சிறப்புக்கவனம் செலுத்தப்பட்டதுடன் இப்பணிகளிலிருந்து 49,495 உறுப்பினர்கள் நன்மையடைந்தனர். பிரதேச அலுவலகங்கள் இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் இப்பிராந்தியத்தில் 9 பிராந்திய நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு உதவியளித்ததுடன் மேல்மாகாணத்திற்கு வெளியேயுள்ள வங்கிக் கிளைகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 671 அலுவலக உறுப்பினர்கள் இந்நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து நன்மையடைந்தனர்.

## 24. இடர்நேர்வு முகாமைத்துவம்

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு ஆளுகை அமைப்பொன்றிற்குள் வங்கியின் இடர்நேர்வுத் தொழிற்பாட்டினை பலப்படுத்தும் நோக்குடன் 1949ஆம் ஆண்டின் 58ஆம் நாணய விதிச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் 2015 பெப்புருவரி 09ஆம் நாள் நிறுவப்பட்டது. இப்பின்னணியில், வங்கியில் தொழிற்படுகின்ற மூன்று கட்டப் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இரண்டாம் கட்டப் பாதுகாப்பு வகிபாகத்தினை வழங்குகின்றதுடன் இலங்கை மத்திய வங்கிக்காக சுயாதீனமானதும் மையப்படுத்தப்பட்டதுமான முகாமைத்துவப் பொறிமுறையொன்றினை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம், திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பணியினை கட்டம் கட்டமாக மேற்கொண்டு வருவதுடன் இதற்கமைய இவ்வாண்டு காலப்பகுதியில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் பன்னாட்டு ஒதுக்குகள் முதலீடு மற்றும் நிதியத் திணைக்களத்தினால் முகாமைப்படுத்தப்படும் உள்ளக முதலீடுகள் நிதியத்தினால் முகாமைப்படுத்தப்படும் முதலீடுகள் என்பனவற்றுடன் தொடர்பான நிதியியல் இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், மதிப்பிடல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் என்பனவற்றில் ஈடுபட்டிருந்தது.

2016இல் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளின் முக்கிய பண்புகள் கீழே தரப்படுகின்றன:

### 1. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத்துடன் தொடர்பான நிதியியல் இடர்நேர்வு

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் கவனம் செலுத்திய பன்னாட்டு ஒதுக்குகள் முதலீட்டுடன் தொடர்பான நிதியியல் இடர்நேர்வுகளின் வகைகளாக சந்தை இடர்நேர்வு (வட்டி வீதம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு) மற்றும் கொடுகடன் இடர்நேர்வு என்பன காணப்பட்டன.

#### சந்தை இடர்நேர்வு

சந்தை இடர்நேர்வு என்பது சந்தையில் ஏற்படும் தளம்பல்களின் காரணமாக ஏற்படக்கூடிய இழப்புக்களாகும். சந்தை இடர்நேர்வு, திருத்தியமைக்கப்பட்ட காலப்பகுதியின் அளவுகள் வட்டி வீத உணர்திறன் மற்றும் இடர்நேர்வு ஏற்புப் பெறுமதி என்பனவற்றினூடாக பெறப்படுகிறது. திருத்தியமைக்கப்பட்ட காலப்பகுதி விளைவில் ஏற்படும் மாற்றங்களுக்கு விலையில் ஏற்படும் சதவீத மாற்றத்தினை அளவிடுவதுடன் வட்டி வீத உணர்திறன் என்பது சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் தளம்பல்களுக்கு பதிலிறுத்தும் விதத்தில் சொத்துப்பட்டியலின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களின் அளவாகும். இடர்நேர்வேற்புப் பெறுமதி குறிப்பிட்டதொரு நம்பிக்கை மட்டத்தில் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் சொத்துப்பட்டியல் முதலீட்டில் ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புத் தொகையினை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

#### கொடுகடன் இடர்நேர்வு

கொடுகடன் இடர்நேர்வு என்பது இணங்கப்பட்ட நியதிகளுக்கிணங்க கடன்பாட்டாளர் அல்லது இணைத்தரப்பினர் தமது கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறுவதன் காரணமாக கடன் தொகையினைச் செலுத்தத் தவறுவதனால் ஏற்படும் இடர்நேர்வாகும். இணைத்தரப்பு இடர்நேர்வு, இணைத்தரப்புக் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ வழிகாட்டல்களின் கீழ் மதிப்பிடப்பட்டு, கண்காணிக்கப்பட்டு, அறிக்கையிடப்பட்டு மற்றும் முகாமைப்படுத்தப்படுவதுடன் அனைத்து வணிகங்களும் ஒப்படைக்கப்பட்ட வரையறைக்குள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் உறுதிப்படுத்தப்பட்டது. வாய்ப்புக்களைக் கொண்ட இணைத்தரப்பினரின் கொடுகடன் இடர்நேர்வு அவர்களது நிதியியல் செயலாற்றங்கள், கொடுகடன் தரமிடல்கள் மற்றும் அவற்றின் சந்தை வெளிப்படுத்துகைகள் என்பனவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட வேளையில் ஏற்கனவேயுள்ள இணைத்தரப்பினர்கள் அவர்களது கொடுகடன் தரமிடல்களின் அடிப்படையில் நாளாந்த அடிப்படையில் மதிப்பிடப்பட்டுக் கண்காணிக்கப்பட்டது. பல இணைத்தரப்பு வெளிப்படுத்துகை வரையறைகள்/ உற்பத்தி வரையறைகள் பிட்ஜ், ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் மற்றும் மூடிஸ் என்பனவற்றின் கொடுகடன் தரப்படுத்தல் மாற்றங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் இவ்வாண்டுப் பகுதியில் மீளாய்வு செய்யப்பட்டதுடன் அதற்கிணங்க திறைசேரி முகாமைத்துவ முறைமையில் ஏற்படுத்தப்பட்டிருந்த வரையறைகளும் திருத்தியமைக்கப்பட்டதுடன் இவை பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தில் அறிவிக்கப்பட்டது. இது, வணிகர்கள் குறித்துரைக்கப்பட்ட வரையறகைக்குள் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதனை இயலச் செய்கிறது. பணச் சந்தை இணைத்தரப்பினர்கள், நிலையான வருமான இணைத்தரப்பினரைவிட, கொடுகடன் இடர்நேர்விற்குக் கூடுதலாக உட்படுவதனால் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் கொடுகடன் செலுத்தத் தவறிய பரஸ்பர பரிமாற்றல்/ பணச் சந்தை இணைத்தரப்பினர்களில் இருப்பு விலைகளை நெருக்கமாகக் கண்காணித்ததுடன் தீவிரமான பணச் சந்தை இணைத்தரப்பினர் மீதான இடர்நேர்வு எச்சரிக்கை அறிக்கையானது நாளாந்த அடிப்படையில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. எனவே, இது பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நிதியியல் ரீதியாக ஆற்றல்வாய்ந்த இணைத்தரப்பினருடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளச் செய்கிறது.

### 2. ஒதுக்குகள் மதியுரை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உலக வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப உதவி

இதன் இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கைகளையும் அறிக்கையிடல் இயலாற்றலையும் பலப்படுத்தும் நோக்குடன் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்துடன் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவத் துறையில் உலக வங்கியின் ஒதுக்குகள் மதியுரை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டப் பணியிலிருந்து தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொண்டது. இது திணைக்களத்தின் தேர்ச்சி அபிவிருத்தியை அதிகரிக்கும்.

### 3. உபாயச் சொத்து ஒதுக்கீடுகள்

இதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் ஆற்றும் விதத்தில், முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் இடர்நேர்வு மற்றும் வருமானம் என்பனவற்றிற்கிடையில் ஏற்றுக்கொள்ளத்தக்க சமநிலையொன்றை எய்துவதன் மூலம் நீண்ட கால முதலீட்டுக் குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ அணுகுமுறையினைப் பின்பற்றுவதன் மூலம் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்கான உபாயச் சொத்து ஒதுக்கீடொன்றினை நிருமாணிப்பதற்காக இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்துடன் இணைந்து பணியாற்றியது. இப்பொறிமுறையானது ஒதுக்கு முகாமைத்துவத்தினை உச்சப்படுத்த உதவிய வேளையில், வேறுபட்ட கால இடைவெளிகளில் வேறுபடுகின்ற திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இச்செயன்முறையில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் தற்போதுள்ள வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ

வழிகாட்டல்களை மீளாய்வு செய்து இரண்டு வேறுபட்ட கொள்கை ஆவணங்களை வரைந்தது. அவையாவன; பன்னாட்டுத் தரங்களுக்கு நிகரான முதலீட்டுக் கொள்கைக் கூற்று மற்றையது முதலீட்டு வழிகாட்டல்கள். இப்பின்னணியில் உபாயச் சொத்து ஒதுக்கீடு, முதலீட்டுக் கொள்கைகள் கூற்று மற்றும் முதலீட்டு வழிகாட்டல்கள் இரண்டிற்கும் பயன்படுத்தப்படும் மிக முக்கியமான கொள்கைகளிலொன்றாகும்.

### 4. உலகளாவிய சந்தை அபிவிருத்திகளைக் கண்காணித்தல்

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் உலகளாவிய சந்தை அபிவிருத்திகளையும் உலகளாவிய நெருக்கமாகக் கண்காணிப்பதுடன், இடர்நேர்வு முகாமைத்துவக் கோணத்திலிருந்து இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் மீது அவை ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை மதிப்பீடு செய்கிறது. இது தொடர்பில், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளுடன் தொடர்பான தற்போதுள்ள முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத்தின் மீது பிரித்தானிய வெளியேற்றம் கொண்டிருக்கக்கூடிய இடர்நேர்வு இலங்கை மத்திய வங்கியின் இணைத்தரப்பினர்களாக விளங்கும் சில முக்கிய வங்கிகளின் அதிகளவான கொடுகடன் இடர்நேர்வுகள் தொடர்பில் மற்றைய வங்கிகளுக்குப் பரவக்கூடிய சாத்தியமான தாக்கம் ஆகிய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தது.

### 5. வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவிற்கான பங்களிப்பு

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம், வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவின் அவதானிப்பாளர் என்ற முறையில் அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் ஆற்றியதுடன் பன்னாட்டு ஒதுக்குகள் முதலீட்டுடன் தொடர்பான சந்தை மற்றும் கொடுகடன் இடர்நேர்வு பற்றி மாதாந்த காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரையினையும் ஆற்றியது. மேலும், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் வெளிநாட்டு ஒதுக்குகள் முதலீடு தொடர்பான முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதிலும் அதேபோன்று இலங்கை மத்திய வங்கியின் உலகளாவிய சந்தை அபிவிருத்திகளில் தாக்கத்தினைப் பகுப்பாய்வு செய்வதிலும் ஈடுபட்டிருந்ததுடன் இவற்றினை வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பித்தது.

### 6. நாளாந்தச் சந்தைத் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் தொடர்ந்தும் நடைமுறைச் சந்தைத் தரவுகளையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்து நாளாந்த அடிப்படையில் ஆளுநருக்குச் சமர்ப்பிக்கிறது. இத்தகவல் சந்தைத் திரவத்தன்மை, குறுங்கால வட்டி வீதங்களின் நடத்தை, பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீடு மற்றும் அரச பிணையங்களுக்கான விளைவு வளைகோட்டின் நடத்தை மற்றும் திறைசேரி நிதியத் தேவைப்பாடு போன்றவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

### 7. உள்ளக முதலீட்டு நிதியம் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவம்

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தில் மைப்படுத்தப்பட்டுள்ள மற்றொரு முக்கியமான இடர்நேர்வு முகாமைத்துவப் பணி யாதெனில் உள்ளக முதலீட்டு நிதியம் தொடர்பான இடர்நேர்வினை முகாமைப்படுத்துவதாகும். உள்ளக முதலீட்டு நிதியம் நிதித் திணைக்களத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பிரிவொன்றினால் முகாமைப்படுத்தப்படுவதுடன் இது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம், இலங்கை மத்திய வங்கியின் ஓய்வூதிய நிதியம், இலங்கை மத்திய வங்கியின் சேம நிதியம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களம், நிதித் திணைக்களம், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஆகிய நான்கு திணைக்களங்கள் வசமுள்ள மற்றைய நிதியங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய 18 உள்ளக ரூபா நிதியங்களை உள்ளடக்கியுள்ளது. இதுவரை தொடர்பான திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த இந்நிதியங்களில் முகாமைப்படுத்தல் அதேபோன்று இத்தனிப்பட்ட நிதியங்களுடன் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் இவ்வாண்டுப் பகுதியில் உள்ளக முதலீடு நிதியத்தின் முதலீடுகள் தொடர்பான முகாமைத்துவ இடர்நேர்வை, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் முகாமைப்படுத்தத் தொடங்கியது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் முதலீட்டுக் கொள்கைக் கூற்றுக்களை வடிவமைத்தலும் முதலீட்டுக் கொள்கைக் கூற்றின் குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் முதலீட்டுச் சொத்துப்பட்டியலுக்காக அடிப்படை அளவுக்குறியீட்டினை அபிவிருத்தி செய்தலும் தொடர்பில் நிதித் திணைக்களத்திற்கு அதன் உள்ளீடுகளை வழங்கிய வேளையில் குழு மட்டத்தில் முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பது தொடர்பில் ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு ஆளுகை அமைப்பிற்கான விதந்துரைப்புக்களையும் வழங்கியது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கிலிருந்து முதலீடுகள் மீதான மாதாந்தம் மேற்கொண்ட பகுப்பாய்வுகளும் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கைகள் கூற்றுடன் இணங்கிச்செல்லும் தன்மையும் மற்றும் முதலீடுகளுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுக் காரணிகளும் எடுத்துக்காட்டப்பட்டன.

### 8. நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கான பங்களிப்பு

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தினால் வசதியளிக்கப்பட்ட நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் காலாண்டுக் கூட்டத்திற்கு ஆளுநர் தலைமை தாங்கினார். ஒப்பீட்டு ரீதியில் நிதியல்லா இடர்நேர்வுகளுக்குப் பெருமளவிற்கு உள்ளாகக்கூடிய இடர்நேர்வுகளைக் கொண்டுள்ள 13 திணைக்களங்களின் நிதியல்லா இடர்நேர்வுகளை மேற்பார்வை செய்வதற்காக நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களப் பணிப்பாளர் கூட்டங்களை இணைத்தல் மற்றும் அங்கத்துவத் திணைக்களங்களின் நிதியல்லா இடர்நேர்வு தொடர்பான இடர்நேர்வுத் தோற்றப்பாடுகளைத் தயாரித்தல் மற்றும் அத்தகைய தகவல்களை நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்குச் சமர்ப்பித்தல் ஆகிய வழிகளின் மூலம் குழுவிற்கான செயலாளராக பணியாற்றி வருகின்றார்.

### 25. செயலகம்

செயலகத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் முதலில் நிறுவப்பட்ட திணைக்களங்களில் ஒன்றாகும். செயலகத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாவன பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு, ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல், விடுப்புத் தொடர்பாக கொள்கைகளை நடைமுறைப்படுத்தல், இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் பட்டப்பின் கற்கைகள், வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் போன்றவை தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத சாதனங்கள் மீதான அளவீட்டுச் சபை தொடர்பான நடவடிக்கைகளை கையாளுதல், பொது விழாக்களை ஒழுங்குபடுத்தல், தபால் அறை பணி வழங்குதல் மற்றும் ஆளுநருக்கு தேவையான செயலக மற்றும்

உபசரணைப் பணிகளை வழங்குதல் ஆகும். இத் தொழிற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் சுமுகமான தொழிற்பாட்டிற்கு பாரியளவில் பங்களித்தன. 2016 இறுதியிலுள்ளவாறு செயலகத் திணைக்களத்தில் 91 அலுவலக உறுப்பினர்கள் பணியாற்றினர்.

**(அ) பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு:**

2016 காலப்பகுதியில் செயலகத் திணைக்களம் சரியான நேர திட்டமிடல்களுடன் பிரதானமாக விலைக்கோரல்களினூடாக ரூ.233.2 மில்லியன் பெறுமதியான மூலதனம் மற்றும் மூலதனமல்லாப் பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்தது. இலங்கை மத்திய வங்கிக்கு பொருட்கள் மற்றும் பணிகளின் நேரம் பிந்தாத வழங்கலை உறுதிசெய்யும் பொருட்டு, கொள்வனவுத் திட்டமிடல் 2016 இலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, செயலகத் திணைக்களம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் மொத்தக் கொள்வனவுத் தேவைப்பாடுகளில் 86 சதவீதத்தினை நிறைவு செய்யக்கூடியதாக இருந்தது. மேலும், செயலகத் திணைக்களம் பகிரங்கப் பொறுப்புக் காப்புறுதி உள்ளடங்கலான இலங்கை மத்திய வங்கியின் அனைத்துச் சொத்துக்களுக்கும் செலவுச் சிக்கனமானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான காப்புறுதியினைப் பெற்றுக்கொண்டது.

**(ஆ) ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல்:**

செயலகத் திணைக்களம் மத்திய வங்கியின் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் மத்திய வங்கி ஓய்வூதிய நிதியம் என்பன தொடர்பான கொடுப்பனவு மற்றும் ஏனைய தொடர்பானவற்றையும் தொடர்ந்து நிருவகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 2000 இற்கு மேற்பட்ட பயனாளிகள் தொடர்புபட்டிருந்தனர்.

**(இ) விடுப்புத் தொடர்பாக கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்:**

2016 காலப்பகுதியில் செயலகத் திணைக்களம் ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் அலுவலக வெளிநாட்டுப் பயணங்களுக்காக 429 அனுமதிகளை வழங்கியுள்ளது. ஆண்டுக் காலப்பகுதியில் செயலகத் திணைக்களமானது வியாபார ஒன்றியங்கள், கழகங்கள், அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கிய பணிகள் தொடர்பான விடயங்களை கையாண்டது.

**(ஈ) இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் பட்டப்பின் கற்கைகள், வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் போன்றவை தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்:**

2016 ஆண்டுக் காலத்தில், செயலகத் திணைக்களமானது 37 ஊழியர்களின் பட்டப்பின் கற்கைகளுக்கான கொடுப்பனவை வழங்கியிருந்ததுடன், 431 ஊழியர்களுக்கான குறுகியகால வெளிநாட்டு பயிற்சிகளுக்கான பயிற்சி படிகளையும் வழங்கியிருந்தது.

**(உ) வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத உபகரணங்கள் மீதான அளவீட்டுச் சபை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அஞ்சல் அறைப் பணிகளை வழங்குதல்:**

ஆண்டுக் காலத்தில், இலங்கை மத்திய வங்கியின் கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு அமைய, வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத அலுவலக உபகரணங்களை அகற்றுவதற்காக அளவீட்டுச் சபையுடன் தொடர்பான நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் நடாத்தப்பட்டன. 2016இல் செயலகத் திணைக்களம் புதுவருட ஆரம்ப வைபவம் மற்றும் நீண்டகால பணிக்கானவிருது வழங்கும் வைபவம், 1996ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இறந்தவர்களை நினைவுகூறும் வைபவம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் 66ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்ட வைபவம் போன்ற பல்வேறு ஞாபகார்த்த நிகழ்ச்சிகளினை ஒருங்கிணைத்து ஒழுங்குமுறைப்படுத்தியது. 2016இல், செயலகத் திணைக்களமானது அதன் அஞ்சல் அறை பணியூடாக நாட்டிற்குள்ளும் வெளிநாட்டிற்கும் 67,590 அஞ்சல்களையும் 10,981 விரைவு அஞ்சல்களையும் அனுப்புவதற்கு வசதிப்படுத்தியுள்ளது.

**(ஊ) ஆளுநருக்குத் தேவையான செயலக மற்றும் உபசரணைப்பணிகளை வழங்குதல்:**

ஆண்டுக் காலப்பகுதியில், செயலக திணைக்களமானது ஆளுநரின் தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் செயலாற்றத்தினை வசதிப்படுத்துவதற்காக செயலக மற்றும் உபசரணைப் பணி உதவிகளை வழங்கியது. வழங்கப்பட்ட செயலக உதவிகளாக நியமனங்கள் மற்றும் கூட்டங்களை அட்டவணைப்படுத்தல், காட்சியுடன் கூடிய விரிவுரைகள், பேச்சுக்கள், குறிப்புக்கள், கட்டுரைகள் போன்றவற்றினை தொகுத்தலும், தயாரித்தலும், நிதிச் சந்தை தகவல்கள், ஊடக சுற்றறிக்கைகளை மற்றும் ஏனைய அறிக்கைகளை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன. உபசரணைப் பணிகள் ஆளுநரின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணங்கள் மற்றும் ஆளுநர் மற்றும் பிரதி ஆளுநர்களின் விருந்துபசாரப் பணிகள், ஆளுநர் மற்றும் வங்கியின் மிக முக்கிய நபர்களின் விஜயங்களுக்கான பணியினை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது.

## 26. பாதுகாப்பு பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது, இவ்வாண்டுக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள், கட்டடங்கள், சொத்துக்கள் மற்றும் தருவிக்கப்பட்ட நாணயங்களை கொண்டுசெல்லல் போன்றவற்றிற்கான பாதுகாப்பினை பலப்படுத்திய வேளையில் இலங்கை மத்திய வங்கியில் குறிப்பிடப்பட்ட சில பாதுகாப்பு கண்காணிப்பு பொறிமுறைகளை ஒழுங்குபடுத்தியது. பாதுகாப்புப் பணிகளின் வலுப்படுத்தலானது அடிப்படையாக இரண்டு முக்கிய துறைகளுடன் அதாவது கீழே சுருக்கிக் கூறப்பட்டவாறு முறைமைகளின் மேம்பாடு மற்றும் பயிற்சி முறைகள் என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகவுள்ளது.

### 26.1 முறைமைகளின் மேம்பாடு

(அ) தீ கட்டுப்பாட்டு முறைமை

இலங்கை மத்திய வங்கியின் சவறின் கற்கை நிலையத்திற்கான புதிய தீ கட்டுப்பாட்டு முறைமைகளை நிறுவுதல் நிறைவுசெய்யப்பட்டது. அனுராதபுரம் பிரதேச அலுவலகக் கட்டடத்திற்கான புதிய தீ தடுப்பு மற்றும் பாதுகாப்பு முறைமை பொருந்தும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. ஆண்டுக் காலப்பகுதியில் தலைமை அலுவலகத்திலும் வேறு வெளிவளாகத்திலும் அமைந்திருக்கும் அனைத்து தீ அணைப்பு உபகரணங்களின் செயற்பாட்டு நிலைமைகள் ஒழுங்கு முறையில் சோதனை செய்யப்பட்டு, திருத்தப்பட்டு மற்றும் மீண்டும் அதே இடத்தில் வைக்கப்பட்டன.

(ஆ) சிசிரிவி கண்காணிப்பு முறைமை

ஆண்டுக் காலப்பகுதியில் தலைமை அலுவலகத்திற்கான முறைமை இற்றைப்படுத்தலுடன் அனைத்து கண்காணிப்புக்களையும் தானியக்க முறையில் கண்காணிக்கப்படுவதுடன் இணைந்து இராஜகிரியவிலுள்ள இலங்கை மத்திய வங்கி சவறின் கற்கை நிலையம்,

தலைமை அலுவலகத்திலுள்ள வாகனத்தரிப்பிடக் கட்டடம், அனைத்து பிரதேச அலுவலகங்கள் மற்றும் விடுமுறைக்கால விடுதிகள் போன்றவற்றிற்கான சிசிரிவி கண்காணிப்பு முறைமையை நிறுவுவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(இ) தடங்கலற்ற வியாபாரத் திட்டம்**

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் என்பவற்றினால் நடாத்தப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டப் பயிற்சிகளில் பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது பங்குபற்றி ஒத்துழைப்பினை வழங்கியது.

**26.2 பயிற்சிகள்**

**(அ) தீ தடுப்பு, தீ எதிர்ப்பு மற்றும் முதல் உதவி நிகழ்ச்சித் திட்டங்கள்**

கொழும்பு மாநகரசபையின் தீ அணைப்புப் பணிகள் திணைக்களம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மையம் போன்றவற்றின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியிலுள்ள அனைத்துத் திணைக்களங்களிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட தீ அணைப்பு மேற்பார்வையாளர்களுக்கு தீ தடுப்பு, தீ எதிர்ப்பு, முதலுதவி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான இரண்டு நாள் பரந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. மேலும் 2016 மார்ச்சில் விமானப்படை மற்றும் கொழும்பு தீயணைப்புப் படை போன்றவற்றின் உதவியுடன் தலைமையலுவலகத்திலுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தீ எதிர்ப்பு மற்றும் தீ பயிற்சி மீதான செயன்முறை விளக்கம் வழங்கப்பட்டது.

**(ஆ) திறன்கள் மற்றும் தகுதிகளைக் கட்டியெழுப்புதல்**

முக்கியமான அமைவிடங்கள் முக்கிய பிரமுகர்களைக் கையாளுதல், பாதுகாப்புக் கடமைகள் மற்றும் பொதுமக்களுடனான தொடர்புகள் போன்றவற்றில் பாதுகாப்பினை வழங்குவதற்காக பாதுகாப்பு அலுவலர்களின் திறன்கள் மற்றும் தகுதிகளை மேம்படுத்தும் பொருட்டு இரண்டு நாட்கள் வதிவிட நிகழ்ச்சித்திட்டமானது 29 பாதுகாப்பு அலுவலர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. பாதுகாப்பு அலுவலர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில், பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது அதன் அலுவலர்களுக்கு அநேக கல்விச் செயற்றிட்டங்களை ஒழுங்குபடுத்தியது. அக் கல்விச் செயற்றிட்டங்கள் பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம், ஊக்கமூட்டும் மனோபாவ நிலைமாற்ற அம்சங்கள், வாடிக்கையாளர் தொடர்புகள் மற்றும் தலைமைத்துவம் போன்றவற்றின் பிரதான பரப்புக்களை உள்ளடக்கியிருக்கிறது.

**(இ) ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் துப்பாக்கி சூட்டுப் பயிற்சி**

ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் இலங்கைத் தரைப்படையுடன் இணைந்து அனைத்து பாதுகாப்பு அலுவலர்களுக்கும் ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் துப்பாக்கி சூட்டுப் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

**27. அலுவலர் பணிகள் முகாமைத்துவம்**

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் ஆண்டு முழுவதும் அனைத்து பயன்பெறுநர்களுக்கும் வினைத்திறனுடனும் பயனுறும் விதத்திலும் நலன்புரி வசதிகளைத் தொடர்ந்தும் மேம்படுத்தியது. இத்தகைய நலன்புரி வசதிகள் அலுவலர் வீடமைப்பு (ஈட்டு) கடன் திட்டம், சேம நிதியக் கடன் திட்டம் மற்றும் அலுவலர் நன்மைகள் திட்டம் என்பனவற்றின் கீழ் கடன்களை வழங்குதல், தொழில் தருநர் பங்களிப்பு மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் செலவுகளை மீளளித்தல் மற்றும் மருத்துவ நிலையம் மற்றும் உணவக வசதிகளை வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் 2016இன் இறுதியில் உள்ளவாறு ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், விதைவைகள்/விதுரர்கள் மற்றும் அவர்களின் பதிவுசெய்யப்பட்ட தங்கியிருப்போர் ஆகியோரை உள்ளடக்கி ஏறத்தாழ 10,000 இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட நன்மை பெறுநர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் வீடமைப்புக் கடன்கள், சேம நிதியக் கடன்கள், ஊர்திக் கடன்கள், கணனிக் கடன்கள் மற்றும் அலுவலர் நன்மைகள் திட்டத்தின் கீழான ஏனைய கடன்களை உள்ளடக்கி 2,188 கடன்களை வழங்கியது. தொடர்பான அனைத்து ஆவணங்களுடனும் விண்ணப்பதாரரால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் இக்கடன்களை வழங்குவதற்கான வழிமுறைகளை அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் கண்காணிப்பு முறைமை ஊழியர்களுக்கான கடன்களின் பகிர்ந்தளிப்பினை வினைத்திறனுடன் மேற்பார்வை செய்வதனை இயலச் செய்தது. சிலிப்ட் முறைமையூடாக சேம நிதியக் கடன்களினை விண்ணப்பதாரிகளின் வங்கி கணக்கிற்கு மாற்றுவதற்காக, தகவல் தொழிநுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் முறைமையொன்று விருத்தி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உணவகம் மத்திய வங்கி அலுவலர்களுக்கு உணவு மற்றும் தேநீர் வழங்குவதனைத் தொடர்ந்தும் மேம்படுத்தியது. உணவகத்தினால் பரிமாறப்பட்ட உணவு மற்றும் வழங்கப்பட்ட தேநீர் போன்றவற்றின் மேம்படுத்தப்பட்ட தரமானது அலுவலர் பணிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், 2016ஆம் ஆண்டுப் பகுதியில் உணவகச் சூழலை மேம்படுத்துவதற்கும் உணவக வசதிகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மருத்துவ நலன்புரித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்து நன்மை பெறுநர்களினாலும் உறப்பட்ட மருத்துவச் செலவினங்களைத் தொடர்ந்தும் மீளளித்தது. 2016இல் மருத்துவச் செலவின மொத்த மீளளிப்புத் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முப்பத்து நான்கு (34%) சதவீதத்தினால் அதிகரித்தது. நாணயச் சபையின் ஒப்புதலின் மூலம், 2016.01.01இன் ஆரம்பத்திலிருந்து மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழான செலவுகளின் வரையறை அதிகரிக்கப்பட்டது. பிரபல்யமான தனியார் வைத்தியசாலையிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மருத்துவ நிலையத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மருத்துவ வசதிகள் பணிநேரங்களில் மத்திய வங்கி அலுவலர்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டன. மேலும், மருத்துவப் பரிசோதனைகளும் ஆய்வுகூட வசதிகளும் நியாயமான கட்டணங்களில் மருத்துவ நிலையத்தில் வழங்கப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மத்திய வங்கி அலுவலர்களின் முக்கிய நலப் பிரச்சனைகள் தொடர்பான அறிவினை அதிகரிப்பதற்காக மூன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. 2016 யூனில், அலுவலர்களுக்கான மருத்துவ முகாமொன்று வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

## 28. புள்ளிவிபரவியல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார மற்றும் விலை உறுதித்தன்மையின் பிரதான செயன்முறைகளை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதனூடாக இலங்கை மத்திய வங்கியின் முதன்மை குறிக்கோள்களை அடைவதற்கு தொடர்ச்சியாக பங்களிப்பு செய்தது. மாதிரி மற்றும் மாதிரியல்லாத நுணுக்கங்களை பாவிப்பதன் மூலம் குறுங்கால முதன்மை பேரண்டப் பொருளாதார மாதிரிகளின் எதிர்வுகூறல் மற்றும் மதிப்பிடல், ஏனைய திணைக்களத்துடன் ஒன்றுசேர்ந்து முன்னேற்ற தொழில்நுட்பங்களை உபயோகித்து கொள்கை எதிர்வுகூறல் பகுப்பாய்வு முறைமை, பாயிசின் வார், காரணி அதிகரிக்கப்பட்ட வார், போன்ற கொள்கை காரணங்களுக்கான பேரண்டப் பொருளாதார மாதிரிகளை உருவாக்குதல், விலை மற்றும் கூலிச் சுட்டெண், இலங்கை சுபீட்ச சுட்டெண், மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை தொகுத்தல், முதன்மை வளங்கிகளிலிருந்து தரவுகளை சேகரித்தல் மற்றும் செயன்முறைப்படுத்தல், முக்கியமாக நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை மற்றும் ஏனைய இரண்டாம் தரவுகள், அளவீடுகளை நடத்துதல் மற்றும் நாணயக் கொள்கை தீர்மானங்களை வகுக்கும் செயன்முறைக்கு வசதியளிப்பதற்கு சேகரிக்கப்பட்ட தரவுகளை கொண்டு பொருளாதார முக்கியத்தவம் வாய்ந்த முன்னோக்கிய குறிகாட்டிகளை தொகுத்தல், வெளியீடுகள் மற்றும் பத்திரிகை வெளியீடுகளூடாக புள்ளிவிபரங்களையும் தகவல்களையும் உரிய நேரத்தில் பரப்புதல், தரவுக் களஞ்சியத்தினை பேணுதல், முதலில் உள்ளக பாவனைக்காகவும் அதன்பின்னர் படிப்படியாக தரவு நூலக வடிவத்தில் பொதுமக்களின் பாவனைக்கு வெளியிடப்பட்டது. உலகளாவிய தரமிடலில் இலங்கையின் நிலையினை முன்னேற்றுவதற்கு பங்களிப்பு செய்தல் போன்ற மேலதிக முதன்மை குறிக்கோள்களை திணைக்களம் உள்ளடக்குகிறது. மேலும், ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அமைப்புக்களுடன் இயலாற்றலை கட்டியெழுப்பும் முன்முயற்சிக்கான மூலவள வழங்குனராகவும் தொழிற்பட்டது.

### 28.1 முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளை எதிர்வுகூறல்

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுவது தொடர்பான முக்கிய இலக்கிற்கு வசதியளிக்கும் விதத்தில் புள்ளிவிபரவியல் திணைக்களம் நுகர்வோர் விலைப் பணவீக்கத்தினையும் குறுங்கால அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியையும் எதிர்வுகூறுகிறது. இவ்எதிர்வுகூறல்கள் நாணயக் கொள்கை வடிவமைப்பு நோக்கங்களைக் கருத்தில் கொண்டு நாணயக் கொள்கைக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், பணவீக்க எறிவுகள், திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டில் கண்டறியப்பட்டவற்றினூடாக பிரதிபலிக்கப்பட்டவாறு உள்ளீடு மற்றும் வெளியீட்டு விலைகளில் ஏற்படும் அபிவிருத்திகளுடன் சேர்ந்து நுகர்வோர் விலைகளின் அசைவுகளை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கத்தின் மீது தாக்கத்தைக் கொண்டிருக்கும் மாறிகள் மீது பெறப்பட்ட மற்றும் உணரப்பட்ட மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் அடிக்கடி இற்றைப்படுத்தப்பட்டன.

எதிர்வுகூறப்படும் நேர பொறிமுறையினைப் பொறுத்து பரந்தளவிலான பணவீக்க எதிர்வுகூறல் முறைமைகள் பயன்படுத்தப்பட்டன. குறுங்கால பணவீக்க எதிர்வுகூறல்கள் முக்கியமாக அண்மைய விலைப் போக்குகளையும் சந்தை அபிவிருத்திகளுடன் இணைந்த எதிர்பார்க்கப்பட்ட குறுங்கால விலை அசைவுகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையான எதிர்வுகூறல்கள் பொருளாதார அளவையியல் நுணுக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்த வேளையில் பணவீக்கத்தின் மீது வழங்கல் மற்றும் கேள்விப்பக்கத் தாக்கம் இரண்டையும் பிரதிபலிக்கும் புதிய மாறிகளைக் கண்டறியும் முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. இது சார்பாக, புள்ளிவிபரவியல் திணைக்களமானது பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்துடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியின் கொள்கை ஆய்வு எதிர்வுகூறல் செயல்முறைக்கு பல எதிர்வுகூறல் மாதிரிகள் கட்டமைப்பிற்கு பங்களிப்புச் செய்தது.

தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் மாறிவரும் செலவின முறை இடமளிப்பதற்கும் சந்தையில் பொருட்கள் சேவைகள் கிடைப்பனவு மாற்றங்களை இணைத்துக் கொள்வதற்கு ஏற்றவகையில் 2016 காலப்பகுதியில் அடியாண்டினை 2006/07=100 இலிருந்து 2013=100 இற்கு திருத்தியமைத்தது. தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் மறுதளமிடப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (அடியாண்டு 2013=100) 2017 சனவரி மாதத்தில் வெளியிடப்பட்டது. புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிற்கு ஏற்றவாறு புள்ளிவிபரவியல் திணைக்களம் எதிர்வுகூறல் முறைமையினை மறுசீரமைப்புச் செய்தது. புள்ளிவிபரவியல் திணைக்களம் கொள்கை வகுப்பு நோக்கங்களுக்காக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் இரண்டிலும் ஏற்படுகின்ற விலை அபிவிருத்திகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது.

பொருளாதாரத்தின் ஒவ்வொரு துணை நடவடிக்கைகளுடனும் தொடர்பான முதலாந்தர மற்றும் இரண்டாந்தரத் தரவுகளைப் பயன்படுத்தி காலாண்டு அடிப்படையில் வளர்ச்சி எதிர்வுகூறல்கள் தயாரிக்கப்பட்டன. முதன்மை பொருளாதார குறிகாட்டிகள், அளவீட்டு கண்டுபிடிப்புக்கள் மற்றும் பொருளாதாரத்தின் துணை நடவடிக்கைகளுடன் தொடர்பான தரவுகள் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்களைத் தொகுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வேளையில் எறிவுகளின் துல்லியமான தன்மையினை மேம்படுத்துவதற்காக மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்கள் புள்ளிவிபரவியல் நுணுக்கங்கள் பயன்படுத்தப்பட்டன. குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல் முறை 2010ஆம் ஆண்டினை மீள்தளப்படுத்திய மொ.உ.உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்ட புதிய பகுப்பாய்வுடன் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, இலங்கை மத்திய வங்கியின் அளவீட்டு பெறுபேறுகள் மற்றும் வெளியக நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் அடிப்படையிலான புதிய குறிகாட்டிகள் இந்த செயன்முறையில் உருவாக்கப்பட்டன.

உள்ளக எதிர்வுகூறல் கட்டமைப்பு முறைமைக்கு மேலதிகமாக புள்ளிவிபரவியல் திணைக்களமானது பன்னாட்டு நாணய சபையின் தொழில்நுட்ப உதவியின் கீழ் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்துடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியின் கொள்கை ஆய்வு எதிர்வுகூறல் முறைமையின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தது. மொ.உ.உற்பத்தி மற்றும் பணவீக்கம் என்பனவற்றை உள்ளடக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளின் நடுத்தர அளவிலான எதிர்வுகூறலுக்காக ஒரு புதிய கெயின்சின் திறந்த பொருளாதார மாதிரி இந்த கட்டமைப்பிற்கு கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டது. இவ் மாதிரியானது மாதிரி மதிப்பீட்டு நிலை முடிவுற்றதும் நாணயக் கொள்கை ஆய்விற்கு பயன்படுத்தப்படும். மேலதிகமாக மொ.உ.உற்பத்திப் பணவீக்க அண்மைக்கால எதிர்வுகூறல்களை உருவாக்குவதற்கு காரணி அதிகரிக்கப்பட்ட வெக்டர் தன்னியக்க இறங்குமுக மாதிரி (FAVAR) மற்றும் கெயின்சின் வெக்டர் தன்னியக்க இறங்குமுக மாதிரி (BAVAR) அபிவிருத்தி செய்யப்பட்டது.

## அட்டவணை II-19
## 2016இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

பெறுமதி ரூ. மில்லியன்

| | செயற்றிட்டத்தின் பெயர் | நிதியிடல் மூலம் | பணித் திட்டங்கள் | மொத்த நிதி ஒதுக்கீடு | 2016இல் நிதி வழங் கல் | வழங்கப் படவுள்ள மீதி நிதியம் | கடன் பெற்றோ ருக்கான ஆண்டு வட்டி வீதம் (ஆண்டு இறுதியில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத்துறை | | | | | | |
| 1.1 | தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | தீங்குப் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கிய கட்டுப்பாட்டு அளவு சான்றிதழைப் பெறும் விதத்தில் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதிச் சந்தையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேயிலை சிறு உடைமையாளர்களின் வருமானத்தை நிலைத்து நிற்கும் அடிப்படையில் அதிகரித்தல். | 1,100 | 17.82 | **135.13** | 9% |
| 1.2 | புதிய அனைத்தையு முள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியம்மற்றும் இலங்கை அரசாங்கத்தின் வட்டி உதவு தொகை | நெல் மற்றும் குறுங்காலப் பயிர்களின் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற நுண்பாக மற்றும் சிறியளவு வேளாண்மையாளர்களின் சமூக பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல் | நிதியத் திற்கான கேள்வியின் அடிப்படையில் | 8,009.21 | வி.கி.* | 7% |
| 1.3 | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியம்மற்றும் இலங்கை அரசாங்கத்தின் வட்டி உதவு தொகை | வர்த்தக அளவிலான பாற்பண்ணைகளை ஊக் குவிப்பதனூடாக பால் மற்றும் பால் உற்பத்தியின் தன்னிறைவை அடைவதற்கு உதவுதல் | நிதியத் திற்கான கேள்வியின் அடிப்படையில் | 1,633.49 | வி.கி.* | 6% |
| 2. | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைகள் | | | | | | |
| 2.1 | சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டம்-கட்டம் II | இலங்கை அரசாங்கம் | நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிற்றப்பட்ட இளைஞருக்கு அவர்களின் சுயவேலைவாய்ப்புச் செயற்றிட்டங்களை நிறுவுவதற்கான நிதியியல் உதவி வழங்குதல் | 75 | 74.9 | - | 7% |
| 2.2 | சுபீட்சக் கடன் திட்டம் (சௌபாக்கியா) | இலங்கை மத்திய வங்கி | எந்தவொரு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அல்லது விரிவாக்குவதற்கு அல்லது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு | 4,767 | 4,767.12 | - | 8% |
| 2.3 | சிறு உடைமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | வே.அ.ப.நி* | மத்திய நாட்டுப் பிரதேசத்திலுள்ள 'ஹடபிம' மற்றும் ' மகாவலி' மீள்குடியேற்றத் திட்டங்களிலுள்ள குறைந்த வருமான சிறு உடமையாளர் சமூகத்தினதும் மொனராகலை மாவட்டத்தின் இடைநிலை வலயத்திலுள்ள வறிய சிறு உடமையாளர்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் | சிஎஉ ஒன்றின் வீதமான 201.381 இன்படி 31.12.2016 இல் உள்ளவாறு சிஎஉ 2.6 (ரூ.523.6 மில்.) | 63.18 | **நிறை வடைந்தது** | 7% |
| 2.4 | வரண்ட வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் - சுழலும் நிதியம் | வே.அ.ப.நி* | மொனராகலை, குருணாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் வறிய வேளாண்மையாளர்களிற்கிடையிலான வறுமை ஒழிப்பும், வருமான உருவாக்கத்திற்கு உதவுதலும் | 252.9 | 2.15 | **0.4** | 10% |
| 2.4 | வரண்ட வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் - சுழலும் நிதியம் | வே.அ.ப.நி* | மொனராகலை, குருணாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் வறிய வேளாண்மையாளர்களிற்கிடையிலான வறுமை ஒழிப்பும், வருமான உருவாக்கத்திற்கு உதவுதலும் | 252.9 | 2.15 | **0.4** | 10% |
| 3 | நுண்பாக நிதித் துறை | | | | | | |
| 3.1 | சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | நன்மைபெறுவோரின் பொருளாதார நிலைமைகளையும் பொது நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு வறிய கிராம மக்களுக்கான வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கு முறைசார் கொடுகடனை வழிமுறைப்படுத்தல் | 346 | 67.84 | **22** | 12% |
| 3.2 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | முறைசார் வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானமுடைய குழுக்களை இணைப்பதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக வறுமையை ஒழித்தல் | 1,031 | 316.74 | அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும் | 10% |
| 3.4 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | | 2,764 | 1,566.96 | அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும் | 10% |

* வி.கி. - விபரம் கிடைக்கவில்லை
வே.அ.ப.நி. - வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம்

### 28.2 விலை மற்றும் கூலிச் சுட்டெண்களைத் தொகுத்தல்

புள்ளிவிபரவியல் திணைக்களம், மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பீட்டு தரவுகளின் அடிப்படையில் கொழும்பு, தெகிவளை, ஹோமாகம, கடுவலெ மற்றும் கெஸ்பாவா செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட 51 துணைப் பிரிவுகளுக்கு அரையாண்டு அடிப்படையில் காணி விலைச் சுட்டெண்ணினை உருவாக்கி வருகின்றது. ஒருமைத் தன்மையினைப் பேணும் பொருட்டு வதிவிடங்கள், வர்த்தக மற்றும் கைத்தொழில் விலைத்தரவுகளுக்காக மூன்று தனித்தனியான சுட்டெண்கள் தொகுக்கப்பட்ட வேளையில் மூன்றினதும் இலகுவான சராசரி காணி விலைச்சுட்டெண்ணாக எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலதிகமாக, புள்ளிவிபரவியல் திணைக்களம் புவியியல் ரீதியாகவும் செயல்முறை ரீதியாகவும் தற்போதுள்ள சுட்டெண்ணினை மேம்படுத்துவதனூடாக பெருந்தோட்ட சொத்து சுட்டெண் பரந்தளவினை மேம்படுத்துவதற்கும் மற்றும் வதிவிடச் சொத்து சந்தையின்இ விசேடமாக அடுக்குமாடி பிரிவு அபிவிருத்தியை அறிந்துகொள்வதற்கும் புதிய சுட்டெண்ணைகளையும் அறிமுகம் செய்வதற்கும் பல்வேறான முயற்சியைகளை மேற்கொண்டது. அதன்படி, கொழும்பு மாவட்டத்தினை உள்ளடக்கியதாக முகாமைத்துவ தகவல்களுக்காக அடுக்குமாடி சொத்து சந்தையின் விலைப் போக்கினைக் கண்காணிப்பதற்கு ஒரு விலைச்சுட்டெண் 2016இல் கட்டமைப்பு செய்யப்பட்டது.

புள்ளிவிபரத் திணைக்களம் பொருளாதாரத்தில் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் அசைவுகளை மதிப்பிடுவதற்காக கூலி வீதச் சுட்டெண்களையும் தொகுக்கின்றது. திணைக்களம், அரச துறை ஊழியர்களுக்கான பெயரளவு மற்றும் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்களையும் கூலி நிர்ணய சபையிலுள்ள ஊழியர்களின் உண்மை கூலி வீதச் சுட்டெண, பெயரளவு கூலி வீதச் சுட்டெண்ணின் அடிப்படையில் தொழில் திணைக்களத்தினாலும் கணிப்பிடப்படுகின்றது. முறைசாரா தனியார் துறை கூலி அசைவுகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. புள்ளிவிபரவியல் திணைக்களம் முறைசார் தனியார் துறை ஊழியர்களின் கூலிப் போக்கினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு புதிய சுட்டெண்ணினை உருவாக்குவதற்கு முன்வந்தது.

### 28.3 இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினைத் தொகுத்தல்

நாட்டினதும் அதன் ஒவ்வொரு மாகாணத்தினதும் ஒட்டுமொத்த சுபீட்சத்தின் நிலைமையினை மதிப்பிடவும் ஒப்பிடவும் கலப்பு குறிகாட்டியான இலங்கை சுபீட்சச் சுட்டெண் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 2015 ஆண்டிற்க்காக தொகுக்கப்பட்டது. இலங்கை சுபீட்சச் சுட்டெண் நாட்டினதும் மாகாணங்களினதும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திகளை பிரதிபலிக்கும் 42 பிரதிநிதி மாறிகளை கொண்டுள்ளதோடு, பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல், மக்களின் நலனோம்புகை மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு ஆகிய மூன்று துணைச் சுட்டெண்கள் தொகுப்பிற்கு உபயோகிக்கப்படுகின்றது. லகாட்டம் சுபீட்சச் சுட்டெண் அணுகுமுறையுடன் அண்மையாக பின்பற்றப்படுகின்ற ஒரு புதிய அணுகுமுறை அதாவது தரவு சீராக்கலுக்குப் பதிலாக அனைத்து மாறிகளும் ஒன்றோடொன்று தொடர்புபட்ட பகுதியளவாக கொண்டுவருவதற்கு தரவுகளை தரப்படுத்துதல், இலங்கை சுபீட்ச சுட்டெண் தொகுப்பிற்கு 2014இல் இருந்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது. திணைக்களம் துணைச் சுட்டெண்கள் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மாறிகளில் ஏற்படும் முன்னேற்றங்களைத் தொடர்ச்சியாகக் கண்டறிந்து வருவதுடன் நாட்டின் ஒட்டுமொத்த சுபீட்சத்தினை விளங்குவதில் சுட்டெண்ணின் பிரதிநிதித்துவத்தன்மையை உயர்த்துவதற்காக முறையியல் சார்ந்த திருத்தங்களும் கருத்திலெடுக்கப்படுகின்றன. அதன்படி 2016 ஆண்டுக் காலப்பகுதியில் மொத்த தொழில்நிலையில் முறை சார் துறையின் தொழில்நிலை குடித்தொகையினை அளவிடுவதற்கு பொருளாதார மற்றும் வியாபார சூழலுக்கு சுட்டடெண்ணின் தரத்தினை வலுப்படுத்துவதற்கு ஒரு புதிய மாறி சேர்த்துக்கொள்ளப்பட்டது.

### 28.4 மாகாண ரீதியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடல்

தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தேசிய வருமானம் மதிப்பீடுகளை பிரித்ததன் மூலம் 2015ஆம் ஆண்டிலும் புள்ளிவிபரவியல் திணைக்களம் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியைக் கணித்து வெளியிட்டது. 2015ஆம் ஆண்டிற்கான எண்தொகைகள் மற்றும் 2014ஆம் ஆண்டிற்கான மீள்தொகுக்கப்பட்ட எண்தொகைகளும் 2016 ஓகத்து மாதத்தில் வெளியிடப்பட்டது. மதிப்பீடுகளின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கு தேசிய எண்தொகைகளை மாகாண அளவில் பிரிப்பதற்கு புள்ளிவிபரத் திணைக்களம் தொடர்ச்சியாக பொருத்தமான குறிகாட்டிகளை ஆராய்ந்துவந்தது. இதனுடன் இசைந்து செல்லும் வகையில் 2016 ஆண்டுக் காலப்பகுதியில் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியைக் மதிப்பிடுவதற்கு மாகாண மட்டத்தில் தொடர்பான குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மொ.உ.உற்பத்தியின் ஒவ்வொரு வரிசை பொருட்களின் பெறுமதியும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. கால்நடை உற்பத்தி நடவடிக்கையின் குறைவேலை சேர்க்கப்பட்டதுடன் பொதிகள் மற்றும் பயணிகள் போக்குவரத்தில் மொத்த சிவில் விமான போக்குவரத்து கையாளப்பட்ட மொத்த சரக்கு என்பன கிடங்கு உள்ளடக்கத்துடன் விரிவாக்கப்பட்டதோடு முறையே வேளாண்மை மற்றும் பணிகள் துறையின் குறிகாட்டிகளை மேலும் வலுப்படுத்தியது மற்றும் குறித்த ஆண்டு காலப்பகுதியில் கைத்தொழில் துறையின் கீழ் கட்டிட நடவடிக்கைகளில் மிகவும் பொருத்தமான மாறிகள் பயன்படுத்தப்பட்டன.

### 28.5 புள்ளிவிபரவியல் அளவீடுகள்

தற்போதைய பொருளாதார நிலைமைகளைக் கண்காணிப்பதற்கும் குறுங்காலச் சந்தை அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வதற்கும் காலாண்டு வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு 2016 ஆண்டுப் பகுதியிலும் தொடர்ந்து இடம்பெற்றது. வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு எதிர்கால பொருளாதார அபிவிருத்திகளை நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் குறிகாட்டியாகவும் பயன்படுகிறது. இவ்வளவீட்டின் இலக்கிடல் குடித்தொகை யாதெனில் பொருளாதாரத்தின் மூன்று முக்கிய நடவடிக்கைகளையும் (வேளாண்மை, கைத்தொழில், பணிகள்) உள்ளடக்குகின்ற பாரியளவு தொழில்முயற்சிகளாகும். இவ்வாண்டுப் பகுதியில் நான்கு சுற்று அளவீடுகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டதுடன், இவ்வளவீட்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் வியாபார நிலைமை, இலாபத்தன்மை, தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் கிடைப்பனவு, விற்பனைகள், கேள்வி மற்றும் இயலளவுப் பயன்பாடு ஆகிய வியாபார உள்ளமைப்புச் சுட்டெண்கள் கணிக்கப்பட்டன. பெறுபேறுகள் நாணயக் கொள்கைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் இப்பெறுபேறுகள் பொதுமக்களின் தகவல்களுக்காக மொத்த வடிவத்தில் காலாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்திலும் வெளியிடப்பட்டன.

கொடுகடன் சந்தையின் கேள்வி மற்றும் வழங்கல் பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரையாண்டு இடைவெளியுடன் கொடுகடன் நிலைமை அளவீடும் 2016ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொடர்ந்தது. இது கேள்விப்பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட கொடுகடன் கேள்வி அளவீட்டினையும் கொடுகடன் சந்தைகளின் வழங்கல்பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட கொடுகடன் வழங்கல் அளவீட்டினையும்

உள்ளடக்குகிறது. நாட்டின் அனைத்து வங்கித்தொழில் நிறுவனங்களையும் உள்ளடக்கும் விதத்தில் கொடுகடன் வழங்கல் அளவீடு வடிவமைக்கப்பட்டது. கொடுகடன் கேள்வி அளவீட்டினைப் பொறுத்தவரையில் இலக்கிடப்பட்ட குடித்தொகையாக பொருளாதாரத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் விளங்கின. கொடுகடன் கேள்வி அளவீடானது மேல் மாகாணத்திலும் மத்திய வங்கி அதன் பிரதேச பிரசன்னத்தினைக் கொண்டிருக்கும் மாகாணங்களுக்கும் 2016இல் நடாத்தப்பட்டது. இவ்வளவீட்டின் பெறுபேறுகள் கொள்கைத் தீர்மான நோக்கங்களுக்காக அரையாண்டு அடிப்படையில் உள்ளக ரீதியாக முகாமைத்துவத்திற்கு கையளிக்கப்பட்டன.

கொள்வனவினை மேற்கொள்கின்ற தொழில்சார்நிபுணர்கள், வியாபாரக் கொள்கைகளை வகுப்போர் மற்றும் பொருளியல் பகுப்பாய்வாளர்களுக்கு கைத்தொழில்களின் நிலைமைகளை தெளிவாக விளக்கும் வகையில் அத்தரவுகளை உரிய நேரத்தில் துல்லியமான தயாரிப்பு மற்றும் பணிகள் துறையின் நடவடிக்கைகளின் ஒரு முன்கூட்டியதான குறிகாட்டிகளாக அவற்றை பயன்படுத்தக்கூடிய தரவுத்தொகுதியை வழங்கும் பொருட்டு தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டது. தயாரிப்பு நடவடிக்கைகளின் தயாரிப்புத் துறைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீட்டினை பொறுத்தவரை, மேல் மாகாணத்தில் முனைப்பாகச் செறிந்திருக்கும் பொருளாதாரத்தின் தயாரிப்புத் துறைக் கைத்தொழில்களின் கொள்வனவு முகாமையாளர்களே இலக்கிடல் குடித்தொகையாகும். இவ் அளவீடானது ஒவ்வொரு மாதத்தின் இறுதி வாரத்தில் 100 நிறுவன பதிலிறுப்பாளர்களின் இலக்குடன் நடைபெற்றது. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு, புதிய கட்டளைகள் உற்பத்தி, தொழில்நிலை, வழங்குநரின் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பனவற்றின் துணைச் சுட்டெண்களுடனும் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள், புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கை, தொழில்நிலை, நிலுவையிலுள்ள வேலைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றிற்கான சுட்டெண்களுடன் மாதத்திற்கு மாத மாற்றங்களை மதிப்பிடுவதற்காக கணிக்கப்பட்டதுடன் இவை கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைக்காக நாணயக் கொள்கைக் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டன. தயாரிப்புத் துறையின் உற்பத்தியாளர் நிலை விலை அபிவிருத்திகளை அறிந்து கொள்வதற்கு 2016 யூலை மாதத்திலிருந்து அறவிடப்படட விலை எனும் புதிய மாறியினை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு அளவீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் பெறுபேறுகளானது பொதுமக்களின் தகவல்களுக்காக 2016 யூன் மாதத்திலிருந்து மாதாந்த அளவில் வெளியிடப்படுகிறது.

பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு, 2006இல் அது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து மாதாந்த அடிப்படையில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போதைய அளவீடானது தொழில்துறை மற்றும் வீட்டுத்துறை என்ற இரண்டு வகையான பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. தொழில்துறை மற்றும் வீட்டுத்துறை புள்ளிவிபரவியல் திணைக்களம் பதிலிறுப்பாளர்களின் தள மீள்மாதிரி அமைப்பின் செயன்முறையை தொடங்கியுள்ளது. பதிலிறுப்பாளர்கள் நடைமுறைப் பணவீக்க உள்ளுணர்வுகள் மற்றும் 12 மாதங்களுக்காக எதிர்பார்க்கப்படும் பணவீக்கம் என்பன மீதான கணியம்சார் மற்றும் தரம்சார், தகவல்கள் இரண்டையும் வழங்கினர். மாதாந்த அடிப்படையிலான அளவீட்டின் பெறுபேறுகள் நாணயக் கொள்கை குழுவிற்கும் கொள்கை வகுப்புச் செயன்முறைக்காகவும் சமர்ப்பிக்கப்பட்டன.

அரச துறை தொழில்நிலையின் அபிவிருத்திகளைக் கண்டறிவதற்காக அனைத்து அரச துறை நிறுவனங்களையும் உள்ளடக்கி அரையாண்டுக்கு ஒருமுறையான அரச துறை தொழில்நிலை அளவீடு மேற்கொள்ளப்பட்டது. மேலும் தொழிற்படை மற்றும் தொழில் சந்தை தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட தகவல்களும் நாட்டின் தொழில்நிலை, தொழிலின்மை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, தொழில் உறவுகள், தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள் மற்றும் தொழிலாளர் உற்பத்தித்திறன் ஆகிய துறைகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. சம்பந்தப்பட்ட தலைப்புக்களின் கொள்கை உருவாக்கத்திற்கு உதவும் வகையில் கூட்டு தரவு பகிர்வு தேசிய மற்றும் சர்வதேச முகவர்களுடன் நடாத்தப்பட்டது.

புள்ளிவிபரவியல் திணைக்களம் ஏனைய இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்களுடனும் ஏனைய வெளிய முகவர்களுடனும் இணைந்து 2017 உலக வங்கியின் சர்வதேச நிதியியல் உள்ளீர்ப்பு அளவீடு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அளவீட்டினை நிறைவு செய்வதற்கு பங்களிப்பு செய்தது.

தனியார் சுகாதார நடவடிக்கைகளின் அபிவிருத்திகளை கண்காணிப்பதற்கு புள்ளிவிபரவியல் திணைக்களம் தனியார் சுகாதார சேவைச் சுட்டெண்ணின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பித்து வைத்தது. நாட்டின் தனியார் சுகாதார நடவடிக்கைகளை பிரதிபலிக்கக்கூடியவாறான ஒரு பொருத்தமான மாதிரியினை தெரிவுசெய்தவற்கான ஒரு பகுதியாக 2016இன் நான்காம் காலாண்டுப் பகுதியில் இலங்கை தனியார் வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ மையங்களினால் சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளர்களின் குடித்தொகை அளவீடு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில், இவ் அளவீடானது தனியார் வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ மையங்கள் வெளியக நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் அனுமதிகளின் எண்ணிக்கையினை மாதாந்த அளவில் சேகரித்து காலாண்டு அடிப்படையிலான சுட்டெணின் தொகுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

### 28.6 நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையினை நிர்வகித்தல்

நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை 1978 தொடக்கம் தொழிற்பட்டு வருவதுடன் முறைமையானது நுகர்வுப்பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மை மற்றும் மீன்பிடிப் பண்டங்களின் உற்பத்தியாளர் விலைகள், முறைசாரா தனியார் துறையின் நாளாந்தக் கூலிகள் மற்றும் வேளாண்மை மற்றும் மீன்பிடிப் பண்டங்களின் எதிர்கால உற்பத்தி மட்டங்களின் எறிவுகள் என்பன வாராந்த, மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. தரவு சேரிப்பானது அரச பாடசாலை ஆசிரியர்களை புள்ளிவிபரவியல் சேகரிப்பவர்களாக கொண்ட நாடளாவிய 106 தரவு சேகரிப்பு மையங்களை கொண்டுள்ளது. மேலும், இம்முறைமையானது புறக்கோட்டைச் சந்தை, மரடகஹகமுல்ல அரிசிச் சந்தை, தம்புள்ள மற்றும் நாரஹன்பிட்டியவுள்ள சிறப்பு பொருளாதார மையங்கள் மற்றும் நீர்கொழும்பு, பேலியகொடை மீன்சந்தைகள் என்பனவற்றிலிருந்து மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைகள் மீதான தரவுகளை நாளாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் அறிக்கையிடுவதற்காக 07 ஆசிரியர்களல்லாத தரவுச் சேகரிப்பாளர்களையும் பயன்படுத்திக் கொண்டது. முகாமைத்துவத் தகவல் முறைமையினை வலுப்படுத்தும் பொருட்டு திணைக்களம் தெரிந்தெடுக்கப்பட்ட சந்தைகளிலிருந்து பல்வேறு உணவுப் பண்டங்களினது மொத்த விற்பனை விலைகளையும் சில்லறை விலைகளையும் நாளாந்த அடிப்படையில் சேகரிக்கத் தொடங்கியது.

நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளானவை பருவகால மாற்றங்களின் பகுப்பாய்வு மற்றும் பிரதேச விலைகள் மற்றும் கூலிகள் வேறுபாட்டினை அறிதல்

விலைச் சுட்டெண்களைத் தொகுத்தல், விலை அசைவுகளை எதிர்வுகூறல், விலைகள் மீதான கொள்கை மாற்றங்களின் தாக்கத்தினை மதிப்பிடல் மற்றும் தேசிய செலவினம் மற்றும் வருமானத்தினை மதிப்பிடல் மற்றும் விலை மற்றும் கூலித் தரவுகளைப் பொதுமக்களுக்கு பரப்புதல் போன்ற பரந்த கொள்கை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டன.

தரவுச் சேகரிப்பின் தரம் மற்றும் சரியான நேரம் என்பனவற்றை பராமரிக்க திணைக்களம் புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களினால் அறிவிக்கப்பட்ட தரவுகள் தொடர்பில் தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினைத் தொடர்ச்சியாக மேற்கொண்டது. தரவு துல்லியமானது என திணைக்களத்தின் அலுவலர்களினால் கொழும்பு மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட சந்தைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அடிப்படை விலைத் தரவுகளை மீண்டும் சோதித்தமையின் மூலம் மேலும் சரிபார்க்கப்பட்டன.

தரவு முறைமையினை மேம்படுத்துவதற்கு தரவுச் சேகரிப்பாளர்களின் பின்னூட்டல் மிக இன்றியமையாததாகையால், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் நிகழ்ச்சித்திட்டத் தொழிற்பாடுகள் தொடர்பான பிரச்சனைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காகவும் ஆசிரிய விலைச் சேகரிப்பாளர்களுக்காக இவ்வாண்டுப் பகுதியில் கொழும்பு, அநுராதபுரம், கண்டி, மாத்தளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து பிரதேச ரீதியான ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன. ஆய்வரங்குகள் புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களின் இயலாற்றலை அபிவிருத்தி செய்வதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தன.

தரவு சேகரிப்பு முறையானது அண்மைக்கால சந்தை அபிவிருத்திகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இடமளிக்கும் வகையில் கடந்த ஆண்டினை போலவே தரவு சேகரிப்பு படிவத்தினை மேம்படுத்தி அறிமுகப்படுத்துவதனூடாக ஆண்டு காலப்பகுதியில் விருத்தி செய்யப்பட்டது. நேரகால எச்சரிக்கை முறைமைக்கு பயன்படுத்தப்பட்ட தரவுப் படிவமும் மேலதிக தகவல் பூர்வமாக மற்றும் பாவனையாளர் இலகுவாக இருப்பதற்கு ஆண்டு காலப்பகுதியில் சீர்செய்யப்பட்டது. மேலும், தரவு சேகரிப்பு முறைமையினையும் தொகுப்பினையும் துரிதப்படுத்துவதற்கு ஆசிரிய தரவு சேகரிப்பாளர்களினால் இலத்தரனியல் தரவு அறிக்கை முறைமை உற்சாகப்படுத்தப்பட்டதோடு நான்கிலொரு சேகரிப்பாளர்கள் இலத்திரனியல் முறையிலான அறிக்கையிடல் முறைமைக்கு 2016 ஆண்டு காலப்பகுதியில் ஈடுபடுத்தக்கூடியதாக இருந்தது. மேலும், புள்ளிவிபரவியல் திணைக்களம் தற்போதைய நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையினை தொழில்நுட்ப பாவனையினூடாக விரைவான தரவு சேகரிப்பு திறமையான செயலாக்கம் போன்ற குறிக்கோள்களை சீரமைப்பு செய்ய ஆரம்ப நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளது.

## 28.7 உலகளாவிய தரப்படுத்தலில் இலங்கையின் நிலைமையினை முன்னேற்றுதல்

### "வியாபாரம் செய்தலை இலகுபடுத்தும்" தரமிடல்

கடந்த காலத்திற்கு ஏற்றவாறே, புள்ளிவிபரவியல் திணைக்களம் இலங்கையின் "வியாபாரம் செய்தலை இலகுபடுத்தும்" தரமிடலை மேம்படுத்துவதற்காக அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. 2016இல் இருந்து, அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் கீழ் உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியோடு முதலீட்டு சூழலினை விருத்திசெய்ய வேண்டிய பொதுவான குறிக்கோளுடன் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு புதிய பணி ஒழுங்குகள் அமைக்கப்பட்டது. இதன் விளைவாக, 2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் திணைக்களம் தற்பொழுது இடம்பெற்றுவரும் சீர்திருத்தங்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்வதற்காக தொடர்பான அரச நிறுவனங்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தமை மிக அண்மைய அபிவிருத்திகளை பங்களிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக அவர்களுடன் கூட்டங்களை ஒழுங்கு செய்தமை; வியாபாரம் செய்தலுடன் தொடர்பான துறைகளில் பணியாற்றுகின்ற அரச மற்றும் தனியார் அலுவலர்களுடன் கலந்துரையாடுவதற்கு உலக வங்கி தூதுக்குழுவிற்கு வசதிகளை ஏற்படுத்தியமை; வியாபாரம் செய்தல் தரமிடலை மேம்படுத்துவது தொடர்பான பன்னாட்டு ஆய்வரங்குகளில் இலங்கையர்களின் பங்கேற்பினை ஒருங்கிணைத்தமை மற்றும் இத்தரமிடலின் கீழ் கண்டறியப்பட்ட மாறிகளை முக்கிய கவனத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் தொடர்பில் உலக வங்கி குழுமத்திற்குச் சரியான நேரத்தில் மிக முக்கியமான தகவல்களைப் பரப்பியமை என்பனவற்றில் ஈடுபட்டிருந்தது.

### ஏனைய உலகளாவிய தரமிடல்கள்

உலகளாவிய அடிப்படையிலான ஆளுகைக் குறிகாட்டிகள், உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண், பொருளாதாரச் சுதந்திரச் சுட்டெண், ஊழல் பூந்துணர்வுச் சுட்டெண், மானிட அபிவிருத்திச் சுட்டெண் செயல்முறை வர்த்தக சுட்டெண், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திகள் அமைப்பு நாட்டிற்கான இடர் வகைப்பாடு மற்றும் உலகளாவிய சுட்டெண்ணின் பொருளாதார சுதந்திரம் ஆகிய உலகளாவிய சுட்டெண்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுவதுடன் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தரமிடலை விருத்திசெய்வதற்கான தந்திரோபயங்கள் தொடர்பான தகவல்கள் முகாமைத்துவத்திற்கும் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகளுக்கு தேவையான வேளைகளில் சமர்ப்பிக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட சுட்டெண்களின் தொகுப்பாளர்களுக்குப் பேரண்டப் பொருளாதார தகவல்களும் தரவுகளும் வாராந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன.

## 28.8 புள்ளிவிபரங்களைப் பரப்புதல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் கொள்கை வகுப்போர், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், தொழில்சார்நிபுணர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தற்போதைய அபிவிருத்திகள் தொடர்பான பரந்தளவிலான சமூகப் பொருளாதாரத் தரவுகளைப் பரப்புவதற்குப் பொறுப்பாக இருக்கின்றது. இவ்வாண்டுப் பகுதியில் திணைக்களம் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக அனைத்து மூன்று மொழிகளிலும் அதன் இரண்டு முக்கிய ஆண்டு வெளியீடுகளான "இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரங்கள் - 2016 தொகுதி XXXVIII" இனை ஓகத்திலும், "இலங்கை சமூகப் பொருளாதார தரவு சிற்றேடு - 2016 - தொகுதி XXXIX" இனை செத்தெம்பரிலும் வெளியிட்டதுடன், மூன்று மொழிகளிலும் மற்றும் இலத்திரனியல் முறையிலும் வெளியிட்டது. இதற்கு மேலதிகமாக புள்ளிவிபரவியல் திணைக்களமானது வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதார குறிகாட்டிகளை வெளியிட்டதுடன் நாட்டின் பொது விலை மட்டத்தில் குறிப்பிடத்தக்க பாதிப்பினை கொண்டுள்ள முதன்மைச் சந்தைகளின் முக்கிய உணவுப் பொருட்களின் விலை போக்கின் பகுப்பாய்வினை வலுப்படுத்துவதற்கு நாளாந்த விலை சேகரிப்பு அறிக்கையினை தயாரித்ததோடு நாளாந்த தரவு சேகரிப்பு அறிக்கை இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தினூடாக 2016 ஆண்டு காலப்பகுதியில் பொது மக்களுடன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2016யிலும் திணைக்களம் மத்திய வங்கி ஆண்டறிக்கையின் இரண்டு அத்தியாயங்களுக்கு பங்களித்ததுடன் மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் மாதாந்த செய்தி திரட்டிற்கும் கிரமமான பங்களிப்பை வழங்கியது.

மேலும், புள்ளிவிபரத் திணைக்களம் தகவல் தொழில்நுட்ப திணைக்கள தொழில்நுட்ப உதவியோடு பல்வேறு பாவனையாளர்களின் நன்மைகருதி 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்ளக இலத்திரனியல் தரவுத் தளத்தினை அபிவிருத்திக்கு ஆரம்பித்து நெறிமுறைப்படுத்தியது. இலத்திரனியல் ஆராய்ச்சி தரவு தளமானது 9 வேறுபட்ட திணைக்களங்களுடன் தொடர்புபட்ட உண்மை, நாணயத்துறை, இறைத்துறை, வெளியக மற்றும் நிதித்துறை தரவுகளை உள்ளடக்கியதான வேறுபட்ட தலைப்புக்களுடனான நேரம் தொடர் தரவுகளை கொண்டுள்ளது. இது சொந்த கேள்விகளுக்கு ஏற்றவாறான உருவாக்கம், அட்டவணைகள் உருவாக்கம், தரவிறக்கம் மற்றும் எதிர்கால தேவைகளுக்காக சேமிப்பு வைத்தல் போன்ற பல தரவு தேவைப்பாட்டினை வழிமுறைப்படுத்துகிறது. இதற்கு மேலதிகமாக, பொதுமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட தரவுத் தளப் பதிப்பினை இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தினூடாக 2017 முதல் காலப்பகுதியில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### 29. நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வை

2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நுண்பாக நிதி நிறுவனங்கள் சட்டத்தில் (நுண்பாக நிதிச் சட்டம்) குறித்துரைக்கப்பட்டவாறு, நுண்பாக நிதி வியாபாரத்தினை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்காக நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் நிறுவப்பட்டது. நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பொறுப்புக்களாவன நுண்பாக நிதி வியாபாரங்களை மேற்கொள்வதற்கான உரிமங்களுக்கான விண்ணப்பங்களைச் செயன்முறைப்படுத்தல், காலாந்தர நியதிச் சட்டப் பரீட்சிப்புக்களினூடாகவும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்களினூடாகவும் உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளை மேற்பார்வை செய்தல், முன்னேற்றம் மற்றும் உரிமம் பெற்ற நுண்பாக நிதி நிறுவனங்கள் தொடர்பான பிரச்சனைகள் மீது கிரமமான அறிக்கைகளை நாணயச் சபைக்குச் சமர்ப்பித்தல், உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுக்கு விதிகளையும் பணிப்புரைகளையும் விடுத்தல், நுண்பாக நிதிக் கம்பனிகளுக்கு ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல், உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் உரிமங்களை இரத்துச் செய்து அவற்றை மூடிவிடுதல், அரசு சாரா நுண்பாக நிதி நிறுவனங்களினைப் பதிவுசெய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பில் தன்னார்வ சமூகப் பணி நிறுவனங்களின் பதிவாளருக்குக் கோட்பாடுகள், நியமங்கள் மற்றும் வழிகாட்டல்களை ஏற்படுத்துதல், நுண்பாக நிதித் துறையில் ஆராய்ச்சிகளை நடத்துதல் மற்றும் பயிற்சி மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. 2016 காலப்பகுதியில் நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளும் மற்றைய நடவடிக்கைகளும் கீழே தரப்படுகின்றன.

#### I. உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுக்கு விதிகளையும் பணிப்புரைகளையும் விடுத்தமை

உரிமம் வழங்குவதற்கான பிரமாணங்கள் மற்றும் உரிமக் கட்டணங்கள் தொடர்பில் இரண்டு விதிகளும் குறைந்தபட்ச மைய மூலதனம், நியதி ஒதுக்குகள், வைப்புக்கள், குறைந்தபட்ச திரவச் சொத்துகளைப் பேணுதல், பங்குதாரர்களை மதிப்பிடல், பணிப்பாளர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/ பொது முகாமையாளர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல், கடன் வசதிகளுக்கான ஒழுங்குவிதிகள் மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் என்பன தொடர்பாக 8 பணிப்புரைகளும் 2016 ஒத்தோபர் 27ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நாணயச் சபையினால் விடுக்கப்பட்டன.

#### II. தன்னார்வ சமூகப் பணி நிறுவனங்களின் பதிவாளர் மற்றும் ஆர்வலர்களுடனுமான கிரமமான கூட்டங்கள்

அரசு சாரா நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வை தொடர்பில் தன்னார்வ சமூகப் பணி நிறுவனங்களின் பதிவாளருக்கான கோட்பாடுகளையும் நியமங்களையும் வழிகாட்டல்களையும் ஏற்படுத்தும் பொருட்டு திணைக்களம் தன்னார்வ சமூகப் பணி நிறுவனங்களின் பதிவாளர், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் நுண்பாக நிதியினை நடத்துவோர் சங்கம் என்பனவற்றுடன் கிரமமான கூட்டங்களை நடத்தியது.

#### III. நுண்பாக நிதித் துறையின் மீது நடத்தப்பட்ட அளவீடு

ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை அடையாளம் காணும் விதத்தில் காத்திரமானதும் வினைத்திறன் மிக்கதுமான ஒழுங்குமுறைப்படுத்தும் முறைமையினை வடிவமைக்கும் பொருட்டு இலங்கை நுண்பாக நிதி நடத்துவோர் சங்கத்தின் உதவியுடன் நுண்பாக நிதி நிறுவனங்கள் மீது அளவீடொன்று மேற்கொள்ளப்பட்டது.

#### IV. ஆய்வு விஜயங்கள் மேற்கொள்ளல்

நுண்பாக நிதித் தொழில் துறையினால் பின்பற்றப்படுகின்ற தற்போதைய நடைமுறைகள், முறைமைகள் மற்றும் செயன்முறைகளைப் பழக்கப்படுத்தும் பொருட்டு பல்வேறு நுண்பாக நிதி நிறுவனங்களுக்கும் ஆய்வு விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் அரசு சாரா நுண்பாக நிதி நிறுவனங்களுக்கான ஒழுங்குவிதிகளை வடிவமைக்கும் பொருட்டு, ஆசிய பிராந்தியத்தினை விசேட கவனத்தில் கொண்டு நுண்பாக நிதித் துறையினை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பாக பன்னாட்டு அனுபவங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேலும், நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்கள அலுவலர்களும் அனைத்தையுமுள்ளடக்கிய நுண்பாக நிதி ஒழுங்குவிதிகளில் அனுபவங்களைக் கொண்டிருந்த பிராந்திய மத்திய வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை முறைமைகளை ஆராய்வதற்காக அங்கு விஜயங்களை மேற்கொண்டனர்.

#### V. விழிப்புணர்வு மற்றும் இயலளவினைக் கட்டியெழுப்புதல்

திணைக்களம், பல அரசு சாரா நிறுவனங்கள், சனச கூட்டுறவுச் சங்கங்கள், திவிநெகும வங்கித்தொழில் சங்கங்கள் என்பனவற்றிற்கு நுண்பாக நிதிச் சட்டம் மற்றும் அது தொடர்பில் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதன் மூலம் நுண்பாக நிதிக் கைத்தொழில் பற்றிய விழிப்புணர்வினையும் இயலளவையும் கட்டியெழுப்புவது பற்றிய மற்றைய பல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது. மேலும், நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் இதே விடயங்கள் தொடர்பில் இலங்கை நுண்பாக நிதி நடத்துவோர் சங்கத்தினாலும் தன்னார்வப் பணி நிறுவனங்களின் தேசிய நடவடிக்கை முன்னணியினாலும் ஒழுங்குசெய்யப்பட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கூட்டங்களிலும் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளை ஆற்றியது.

### 30. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வை திணைக்களம், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்காக 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் மூலம் மற்றும் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் மூலம் ஆளுகை செய்யப்பட்டு வருகின்றது. மேலும் 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதனிலை வணிகர்களின்

மேற்பார்வை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள், நியதிப் பரீட்சிப்புக்கள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்புக்களை நடாத்துதல், ஒழுங்குமுறைப்படுத்தல், ஒப்புதல்களை வழங்குதல், பணிப்புரைகளையும் முன்மதிப்புடைய தேவைப்பாடுகளையும் விடுத்தல், அதிகாரமின்றி நிதி வியாபாரங்களைக் கொண்டு நடத்துகின்ற மற்றும் வைப்புக்களை ஏற்றுக் கொள்கின்ற கம்பனிகளைப் புலனாய்வு செய்தல் என்பனவாகும். மேலதிகமாக இத் திணைக்களமானது, பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உதவுதல், நிதித்துறையின் திறனை வளர்த்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளை கவனித்துக் கொள்ளல் என்பனவற்றிலும் ஈடுபட்டுள்ளது.

2016 இறுதியில், 46 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் 70 பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களும் 15 முதனிலை வணிகர்களும் காணப்பட்டன. இவ்வுரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் முதனிலை வணிகர்களினதும் பெயர்கள் இந்த பகுதியின் இறுதியில் தரப்பட்டுள்ளன. 2016இல் விடுக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்படுள்ளன.

### 30.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மேற்பார்வை

#### அ. நியதிப் பரீட்சிப்பு நடாத்துதல்

i. 2016இல் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் வினைத்திறன் மற்றும் உறுதித்தன்மை என்பனவற்றை கவனத்தில் கொண்ட மேற்பார்வைப் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. **இந்த கட்டமைப்பின்** கீழ் நிதி நிறுவனங்களின் நீண்டகால உறுதித்தன்மையானது துறைகளின் வருவாய் வளர்ச்சி, பன்முகப்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் சந்தை மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் திறன் என்பனவற்றினூடாக மதிப்பிடப்படுகின்றது. மேலும், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் வியாபார நடவடிக்கையில் நிலைத்திருப்பதற்கான நிதி இடையேற்பாடு செலவுகளின் வினைத்திறனானது மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

ii. 2016இல் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 30 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் வருடாந்தப் பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. கடன் இழப்புக்களுக்கான ஒதுக்கம் போதுமானளவில் இல்லாமை, உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள தவறுகள், கம்பனி ஆளுகைப் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாமை, வியாபார நடவடிக்கைகளின் உயர் வினைத்திறனின்மை, வளர்ந்து வரும் வியாபார நடவடிக்கை, குறிப்பாக நுண்பாக நிதியியலில் இருக்கும் இடர்நேர்வு மற்றும் சில நிறுவனங்களில் காணப்படும் வியாபார தொடர்ந்து செல்லல் கரிசனைகள் என்பன பரீட்சிப்பின் போது கண்டறியப்பட்ட விடயங்களாகவுள்ளன.

iii. மேலதிகமாக, நிதிநிறுவனங்களிலுள்ள குறிப்பிட்ட பிரச்சனைகள் மற்றும் நிதி அறிக்கைகள் மற்றும் கேள்விக்குரிய கம்பனிகளுக்கிடையிலான பரிமாற்றம் போன்றவற்றிலுள்ள மேற்பார்வை பிரச்சனைகள் தொடர்பாக 6 வரையறுக்கப்பட்ட நோக்கம் கொண்ட பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டது.

iv. நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பரீட்சிப்பு அறிக்கைகள் மற்றும் விதந்துரைப்புக்கள் என்பன குறித்த கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்படுத்தல் நடவடிக்கைகளுடன் சேர்த்து தொடர்பான பணிப்பாளர் சபைகளுக்கு வழங்கப்பட்டதுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மேற்பார்வைக் கரிசனைகள், இணங்கப்பட்ட காலப் பகுதியொன்றினுள் கட்டுப்படுத்துவதற்கு எடுத்துவரும் வழிமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### ஆ. தொடர்ச்சியான கண்காணிப்பை நடாத்துதல்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களமானது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் நிதி நிலைமையை மதிப்பிட மற்றும் தேவையான சீர்படுத்தல் நடவடிக்கையை மேற்கொள்ள நேர காலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் குறிகாட்டிகளை இனங்காண்பதன் மூலம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் கண்காணிப்பை மேற்கொள்கின்றது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் தகவல்கள், கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள், முகாமைத்துவ கடிதங்கள், வெளிவாரித் தரமிடல் மற்றும் பத்திரிகை அறிக்கைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. திரவத்தன்மை பிரச்சினை காரணமாக வியாபார செயற்பாடுகளை மேற்கொள்ளாத இரண்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தவிர்ந்த அனைத்து கம்பனிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. உள்ளக தரமிடல் முறைமையூடாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் இடர்நேர்வுகளை அடையாளம் காணும் விதத்தில் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உதவும் முகமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் நான்கு காலாந்தர கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

#### இ. நலிவடைந்த உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மீதான தீர்மான நடவடிக்கைகள்

2016இல் போதிய திரவத்தன்மை அற்ற மற்றும் மூலதன போதுமையற்ற நலிவடைந்த நிறுவனங்களில் நிலைத்திருக்கின்ற நீண்டகால பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவர வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டது. இதற்கமைய நாணயச்சபை மூன்று நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கு மீள்கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் தீர்மானத் திட்டமொன்றை அதனுடன் தொடர்பான சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதலளித்தது. மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான விரிவான திட்டங்களை பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் தற்பொழுது ஈடுபடுகின்றது. நிறுவனத்தின் உறுதிப்பாட்டை நிலைப்படுத்தவும் நிறுவனத்தை மீளமைக்கும் முகமாகவும் மூன்று நிறுவனங்களின் பணிப்பாளர் சபை மாற்றியமைக்கப்பட்டது. மேலதிகமாக, நலிவடைந்த கம்பனிகளை மீளமைக்கும் நோக்கத்திற்காக பணிப்பாளர் சபையானது முதலீட்டாளர்களை இனங்கண்டுகொள்ள வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள்

மேற்பார்வை திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்ட அதேவேளை அந்நிறுவனங்களின் முன்னேற்றங்களை மேற்பார்வை செய்வதற்கான பணிப்பாளர் சபை, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் வெளிக்கள கணக்காய்வாளர்களுடன் தொடர்ச்சியான கூட்டங்கள் நடைபெற்றன.

**30.2 முதனிலை வணிகர்கள் மேற்பார்வை**

**அ. நியதிப் பரீட்சிப்புக்களையும் தொடர்ச்சியான கண்காணிப்புக்களையும் நடாத்துதல்**

ஏற்கனவே இருக்கின்ற முதனிலை வணிகர்களுக்கான மேற்பார்வைக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்து வலுப்படுத்தும் முகமாக நாணயச் சபையானது முதனிலை வணிகர்களை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்யும் தொழிற்பாட்டை 03.06.2016 அன்றிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்திலிருந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு மாற்றத் தீர்மானித்தது. பரீட்சிப்பு நோக்கத்தினை அகலப்படுத்துவதற்கும் கணிப்பீட்டு முறைமையினை வலுப்படுத்தும் நோக்கிலான முதனிலை வணிகர்களின் இடர்நேர்வு தன்மையினை கணிப்பிடுவதற்கும், பரீட்சிப்பு செயன்முறையானது வலுப்படுத்தப்பட்டது. யூன் 2016இல் வங்கியல்லா நிதியியல் நிறுவன மேற்பார்வைத் திணைக்களத்திற்கு மேற்பார்வை கையளிக்கப்பட்ட பின்பு இரண்டு முதனிலை வணிகர்களின் பரீட்சிப்பு நிறைவு பெற்றுள்ளது.

**ஆ. என்ட்ரஸ்ட் செக்யூரிடீஸ் பிஎல்சி மீதான தீர்மான நடவடிக்கைகள்**

என்ட்ரஸ்ட் செக்யூரிடீஸ் பிஎல்சி இன் ஆற்றலற்ற நிதியியல் நடைமுறைகளின் விளைவாக, 2016இல் திரவமில் நிதியியல் நிலைமை தொடர்பான முறையியல் ரீதியான கரிசனைகள் எழுந்தன. அதிகளவிலான உரிய நேரத்தில் செலுத்தத் தவறிய அரச பிணையங்களிலான மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் காணப்பட்டன. நாணய, வங்கியியல் மற்றும் நிதியியல் முறைமையினதும், முக்கியமாக அரச பிணையங்கள் சந்தையினதும் ஒட்டுமொத்த உறுதிப்பாட்டிற்கு எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய தடங்கல்களை தடுக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கியானது, என்ட்ரஸ்ட் செக்யூரிடீஸ் பிஎல்சி இன் சபையை மீள் உருவாக்கல் மற்றும் என்ட்ரஸ்ட் குழுமத்தில் இடம்பெற்ற ஆற்றலற்ற நடைமுறைகள் மற்றும் நிதியியல் முறைகேடுகள் பற்றிய விரிவான புலனாய்வுகளை நடாத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டது. இதன் கண்டுபிடிப்புகள் சட்ட நடைமுறைப்படுத்துதல் அதிகாரங்களுக்கு (நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, நாணயச் சபையானது பிணையமிடப்பட்ட மீள்கொடுப்பனவு மற்றும் உடனடி விற்பனை கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதற்கும் அத்தோடு சட்டம் மற்றும் நிதியியல் அனுமதிகளை பெறவேண்டிய, பிணையமற்ற மீள்கொடுப்பனவு கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்மான திட்டத்திற்கும் முன் அனுமதியை அளித்தது.

**30.3 பணிப்புரைகள், முன்மதியுடைய தேவைப்பாடுகள், ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல்**

**அ. பணிப்புரைகளையும் முன்மதியுடைய தேவைப்பாடுகளையும் விடுத்தல்.**

i. **உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளைத் திறத்தல், மூடிவிடுதல், வியாபார தலங்களை மீளமைத்தல் தொடர்பான பணிப்புரை:**

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினைத் திறத்தல், மூடுதல் மற்றும் வியாபாரத் தலங்கைளை வேறு இடங்களில் அமைத்தல் என்பன தொடர்பில் தற்போதுள்ள கொள்கைகளையும் நடைமுறைகளையும் வலுப்படுத்தி ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக புதியதொரு ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பு விடுக்கப்பட்டது.

ii. **வைப்புக்கள் மற்றும் கடன் சாதனங்கள் மீதான வட்டி வீதம் தொடர்பான பணிப்புரை:**

வைப்புக்கள் மற்றும் கடன் சாதனங்கள் மீதான உச்ச வட்டி வீதத்தினை பெறுவதற்கான அடிப்படையாக பயன்படுத்தப்படும், திறைசேரி உண்டியல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினை கணிப்பிடும் அதிர்வெண்ணானது காலாண்டிலிருந்து அரையாண்டிற்கு திருத்தப்பட்டது. வட்டி வீதங்களின் திடீர் மாற்றங்களினால் ஏற்படும் தாக்கத்தினை நடுநிலைப்படுத்தும் நோக்கில் இது திருத்தப்பட்டது.

**ஆ. ஒழுங்குமுறைப்படுத்தும் கட்டமைப்பின் மீளாய்வு**

i. 2016இல் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வை திணைக்களமானது, மேலும் முன்னேற்றங்களை சிபாரிசு செய்யும் நோக்கில், அனுமதி அளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டு தற்போது நடைமுறையிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தும் கட்டமைப்பினை அனைத்துமுள்ளடக்கிய ஆய்வினூடாக மீளாய்வு செய்தது. இம்மாற்றங்களானவை, வங்கியியல் துறையில் காணப்படும் சிறந்த நடைமுறைகள் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் அண்மைக்கால அபிவிருத்திகள் என்பவற்றோடு இணங்கிச் செல்லும் நோக்கில் செய்யப்படுகின்றது. இத்திருத்தங்கள், உரித்தான ஆர்வலர்களின் ஆலோசனையுடன், இத்துறைக்கு அறிவிக்கப்படும்.

ii. நாணயச்சபை 2016இல், ஒரு உதவி ஆளுநர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளர், பொதுப்படுகடன் திணைக்கள பணிப்பாளர் மற்றும் தொடர்பான திணைக்களங்களின் தொடர்பான அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஓர் அதிகாரசபையினை, முதனிலை வணிகர்களின் ஒழுங்குமுறைப்படுத்தும் பொறிமுறையினை மீள்பார்வை செய்து, தற்போது காணப்படும் மேற்பார்வை பொறிமுறைக்கு மாற்றங்களை சிபாரிசு செய்வதற்காக நியமித்தது. இவ் அதிகார சபையானது தனது அறிக்கையினை, தேவையான நடவடிக்கைகளுக்காக இலங்கை மத்திய வங்கியின் மூத்த முகாமைத்துவத்திற்கு சமர்ப்பித்துள்ளது.

**இ. ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல்**

i. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான மேற்பார்வைத் திணைக்களம் அமைப்பு அகவிதிகளின் திருத்தம் துணைக் கம்பனிகளை உருவாக்குதல், படுகடன் சாதனங்களை வழங்குதல், வங்கி மூலதனத்தை அதிகரித்தல், புதிய முதலீட்டாளர்கள் மூலம் மூலதனத்தை அதிகரித்தல், வெளி மூலங்களிலிருந்து வியாபாரத் தொழிற்பாடுகளை பெற்றுக் கொள்ளுதல், புதிய பணிப்பாளர்களையும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களையும் நியமித்தல் பதிவு விலாசத்தை மாற்றுதல், வியாபார தலங்களை மீளமைத்தல், உரிமையை மாற்றல் மற்றும் 101 புதிய கிளைகளைத் திறத்தல் என்பனவற்றிற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்கியது.

ii. சா்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட்டுக்கு நிதிக் குத்தகை உரிமம் வழங்கப்பட்டதுடன் மக்கள் வங்கியின் நிதிக் குத்தகை உரிமம் வேண்டுகோளின் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டது. மேலும் த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிடெட் ஆனது முதனிலை வணிகராக தொழிற்படுவதை இரத்து செய்தது.

### 30.4 அதிகாரமின்றி நிதித் தொழிலை நடாத்துவதன் மீதான புலனாய்வுகள்

சந்தை தகவல்கள் மற்றும் பொது மக்களின் முறைப்பாடுகளுக்கமைய திணைக்களமானது அதிகாரமின்றி நிதித் தொழிலை நடத்துபவர்கள் மீது புலனாய்வுகளை மேற்கொள்கிறது. 2016இன் இறுதியில், 14 புலனாய்வுகள் செயற்பாட்டிலிருப்பதுடன், அதிகாரமின்றி நிதித்தொழிலை நடாத்துவதாக தீர்மானிக்கப்பட்ட கம்பனிகள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஆலோசனைகள் மேற்காள்ளப்பட்டது.

### 30.5 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் பொதுமக்கள் விழிப்புணா்வு மற்றும் திறனை விருத்தி செய்தல்.

#### அ. பொதுமக்கள் விழிப்புணா்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்களிலும் முதலீட்டுத் திட்டங்களிலும் முதலீடு செய்வதனால் ஏற்படும் இடா்நோ்வுகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டும் நோக்குடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பாா்வைத் திணைக்களம் 28 பொதுமக்கள் விழிப்புணா்வுக் கூட்டங்களை நடத்தியதுடன் 9 இலத்திரனியல் ஊடக விளம்பரங்களையும் ஒலிபரப்புச் செய்தது. உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் பட்டியலையும் பயன்மிக்க ஏனைய தகவல்களையும் கொண்ட ஏறத்தாழ 15,000 துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட்டன.

#### ஆ. துறையின் திறனை அபிவிருத்தி செய்தல்

பொருளாதாரம், உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை மற்றும் அவற்றை ஒழுங்குமுறைப்படுத்தும் அபிவிருத்திகள் போன்ற விடயங்கள் தொடா்பான தமது மனோபாவங்களை மத்திய வங்கி, உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் என்பவற்றிற்கிடையே பகிா்ந்து கொள்ளும் நோக்கில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பாா்வைத் திணைக்களமானது ஆளுநரின் தலைமையில் இந்நிறுவனங்களின் தலைமை நிா்வாக அதிகாரிகளுடனான சந்திப்புக்களை நடாத்தியது. அத்தோடு திணைக்களமானது, இத்துறை தொடா்பான விடயங்களை விவாதித்து அவற்றை சரிசெய்யும் நடவடிக்கைகளை செயற்படுத்தும் நோக்கில், உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், வெளியக கணக்காய்வாளா்கள் மற்றும் பன்னாட்டு முகவராண்மைகள் என்பவற்றுடனான தொடா்ச்சியான சந்திப்புக்களை நடாத்தியது. மேலும் இது தொடா்பில், மத்திய வங்கியின் வங்கிக் கற்கைகள் நிலையம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி அமா்வுகளில், இத்திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள் வள அலுவலா்களாக பணியாற்றினா்.

### 30.6 அதிகாரமற்ற நிதியியல் நிறுவனங்களின் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல்.

#### i. கோல்டன் கீ கிறடிற் காா்ட் கம்பனி லிமிட்டெட்

மத்திய வங்கியினால் உயா் நீதிமன்றத்தில் சமா்ப்பிக்கப்பட்ட மீள்கொடுப்பனவு மாதிரிகளின்படி பிணைய வைப்பு உடமையாளா்களுக்கு முற்பண நிதியத்தினை பயன்படுத்தி 3 தொகுதிகளாக மேற்கொள்ளப்படுவதோடு அரசாங்கமானது 3ஆவது தொகுதியை வழங்கும் செயன்முறையிலுள்ளது. ரூ. 4,055 மில்லியனில் அரசாங்கம் ரூ.500 மில்லியனை வழங்கியுள்ளது. அரசாங்கமானது 3வது தொகுதிக் கொடுப்பனவை தவணை அடிப்படையில் வழங்க தீா்மானித்திருப்பதுடன், நிதி கிடைத்தவுடன் மீதி வைப்பாளா்களுக்கு மீள்கொடுப்பனவு வழங்கப்படும்.

#### ii. ஏனைய அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள்

த பினான்ஸ் அன்ட் ஹரண்டி புறொப்பா்ட்டி டெவலப்பா்ஸ் பிறைவேற் லிமிடெட் மற்றும் எவ் அன்ட் ஜி றியல் எஸ்டேட் கம்பனி லிமிடெட் என்பனவற்றின் வைப்பாளா்களினால் சமா்ப்பிக்கப்பட்ட வழக்கின் அடிப்படையில் 2015இல் உச்ச நீதிமன்றம் த பினான்ஸ் அன்ட் ஹரண்டி புறொப்பா்ட்டி டெவலப்பா்ஸ் பிறைவேற் லிமிடெட் மற்றும் எவ் அன்ட் ஜி றியல் எஸ்டேட் கம்பனி லிமிடெட் என்பனவற்றின் பணிப்பாளா் சபைக்கு இரண்டு கம்பனிகளினதும் வைப்பாளா்களினதும் சுயாதீனமான சங்கங்களிலிருந்து தலா 2 உறுப்பினா்களாக 4 உறுப்பினா்களை நியமிக்க உச்ச நீதிமன்றம் ஒப்புதலளித்தது. மேலும், நீதிமன்ற புதிய பணிப்பாளா் சபை மத்திய வங்கியினால் 2013.10.23 அன்று சமா்ப்பிக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டினைத் தொடருமாறு கட்டளையிட்டது. த பினான்ஸ் அன்ட் ஹரண்டி புறொப்பா்ட்டி டெவலப்பா்ஸ் பிறைவேற் லிமிடெட் மற்றும் எவ் அன்ட் ஜி றியல் எஸ்டேட் கம்பனி லிமிடெட்டில் நியமிக்கப்பட்ட பணிப்பாளா் சபையானது உச்ச நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் நடவடிக்கைத் திட்டங்களை நிறைவேற்றத் தவறியது தெரிய வந்தது. ஆகையால் உச்ச நீதிமன்றமானது 4 உறுப்பினா்களை 2016.09.30 இலிருந்து பணிப்பாளா் சபைக்கு நியமிக்க தீா்மானித்தது. மேலும் ஒரு உறுப்பினரை த பினான்ஸ் அன்ட் ஹரண்டி புறொப்பா்ட்டி டெவலப்பா்ஸ் பிறைவேற் லிமிடெட் மற்றும் எவ அன்ட் ஜி றியல் எஸ்டேட் கம்பனி லிமிடெட் என்பனவற்றிற்கு உச்ச நீதிமன்றம் 2016.11.22 இலிருந்து நியமித்தது.

### 30.7 பொதுமக்களின் முரண்பாடுகளை கையாளுதல்

நியாயமற்ற வாடிக்கையாளா் நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட கடன் தொடா்பாக நிவாரணங்களைப் பெறுதல் என்பன தொடா்பில் பொதுமக்களிடமிருந்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் பற்றி பெறப்பட்ட முறைப்பாடுகளுக்குத் தீா்வு காண்பதற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பாா்வைத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டது.

## 31. பயிற்சி மற்றும் அபிவிருத்தி

வங்கியின் மனித மூலதன அபிவிருத்திகளில் உருவாகிவரும் தேவைகளைப் பூா்த்திசெய்தல் நோக்குடன் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் 2015 யூலையில் நாணயச் சபையினால் மீள் நிறுவப்பட்டது. பயிற்சி இடைவெளியினை நிரப்புவதற்காக பயிற்சி தேவைப்பாடுகளை அடையாளம் காணுதலும் உபாயங்களை உருவாக்குதலும், வருடாந்த பயிற்சித் திட்டத்தினை தயாரித்தலும் நடைமுறைக்கிடலும், அறிவுத்திறன் இயலளவை கட்டியெழுப்புவதற்கு வசதிப்படுத்தல், வங்கி அலுவலா்களுக்கு அவா்களின் பட்டப்பின் படிப்பிற்கு உதவுதல், வங்கி ஊழியா்களுக்காக வெளிநாட்டு/ உள்நாட்டு குறுகிய கால பயிற்சிக்கான சந்தா்ப்பங்களை வழங்குதல் மற்றும் அலுவலா்களுக்கிடையே அறிவினைப்

இணைப்பு I

## சட்டத்திற்கிணங்க உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் மத்திய வங்கியில் உரிமம் பெற்ற பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் (2016 இறுதியிலுள்ளவாறு)

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1 அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2 அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3 ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4 ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5 ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
6 அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
7 பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
8 பிராக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
9 சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
10 சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
11 சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
12 சிற்றிசன்ஸ் டெவலப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
13 சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
14 கொலம்பு ட்ரஸ்ட் பினான்ஸ் பிஎல்சி
15 கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
16 கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17 ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்
18 எச்என்பீ கிறமீன் பினான்ஸ் லிமிடெட்
19 ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
20 கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
21 எல்பீ பினான்ஸ் பிஎல்சி
22 எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி
23 மெல்ஸ்ரா றீகல் பினான்ஸ் லிமிடெட்
24 மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
25 மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி
26 மல்ரி பினான்ஸ் பிஎல்சி
27 நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
28 ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி
29 பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
30 பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
31 றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்
32 சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட்
33 செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
34 செரன்டிப் பினான்ஸ் லிமிடெட்
35 சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
36 சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
37 சியப்பதா பினான்ஸ் பிஎல்சி
38 சொவ்றலொஜிக் பினான்ஸ் பிஎல்சி
39 சம்மிட் பினான்ஸ் பிஎல்சி
40 ஸ்வர்ணமகால் பினான்ஷியல் சேர்விசஸ் பிஎல்சி
41 த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
42 த ஸ்டான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
43 ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44 ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
45 யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
46 வெலிபல் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்பட்டதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்படுகிறது. அதேவேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

---

**(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்**

1 அமானா வங்கி பிஎல்சி
2 இலங்கை வங்கி
3 கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
4 டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
5 அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
6 எம்சிபி பாங்க் லிமிடெட்
7 நஷனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
8 நேஷன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி
9 பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
10 சம்பத் பாங்க் பிஎல்சி
11 செலான் பாங்க் பிஎல்சி
12 யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**(ஆ) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
2 லங்காபுத்ர டெவலப்மன்ட் பாங்க் லிமிடெட்
3 பிரதேசிய சங்வர்தன பாங்க்
4 சணச டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
5 சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்

**(இ) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

1. அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
2. கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட்
3 இசுறு லீசிங் கம்பனி லிமிடெட்
4 எல்ஓஎல்சி மைக்ரோ கிரடிட் லிமிடெட்
5 நியூவெஸ்ட் கப்பிட்டல் லிமிடெட்
6 எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி
7 யுனிசன்ஸ் கப்பிட்டல் லீசிங் லிமிடெட்

**(ஈ) சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட் தவிர்ந்த மேலே பட்டியலிடப்பட்டுள்ள உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்**

---

### அடிப்படை

1 அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட்
2 இலங்கை வங்கி
3 கப்பிட்டல் அலையன்ஸ் லிமிடெட
4 கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
5 என்ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி
6 பர்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் லிமிடெட்
7 நற் வெல்த் செகுரிட்டீஸ் லிமிடெட்
8 என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட்
9 பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
10 மக்கள் வங்கி
11 பேப்பச்சுவல் ரெஷரீஸ் லிமிடெட்
12 சம்பத் பாங்க் பிஎல்சி
13 செலான் பாங்க் பிஎல்சி
14 யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
15 வெல்த்ரஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட்

பகிர்ந்துகொள்வதற்கு வசதிப்படுத்தல் போன்றவை பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளாகும்.

**பட்டபின் கற்கைகள்**

2016இல், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் அவுத்திரேலியா மற்றும் யப்பான் போன்ற நாடுகளிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் 3 அலுவலர்கள் முனைவர் நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கும் 15 அலுவலர்கள் முதுமானிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் தொடர்வதற்கு அனுசரணை வழங்கிய வேளையில் அலுவலர் ஒருவருக்கு உள்நாட்டு பல்கலைக்கழகத்தில் முனைவர் நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான அனுசரனையினை வழங்கியதன் மூலம் 2016 காலப்பகுதியில், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், உயர்வகுப்பு அலுவலர்களின் பட்டபின் கற்றைகளுக்கு அனுசரணை வழங்குதலுக்கு வசதியளித்தது. அதேவேளை, ஆண்டுக் காலப்பகுதியில் முனைவர் நிகழ்ச்சித் திட்டத்தினை நிறைவுசெய்த 3 அலுவலர்களும் முதுமானிப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினை நிறைவு செய்த 18 அலுவலர்களும் இலங்கை மத்திய வங்கிப் பணிக்குத் திரும்பினர். இலங்கை மத்திய வங்கியின் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012 இலிருந்து 2016 வரையான காலப்பகுதியில் பட்டப்பின் படிப்பைத் தொடங்கிய மற்றும் நிறைவு செய்த அலுவலர்களின் எண்ணிக்கையை கீழேயுள்ள அட்டவணை II - 01 காட்டுகிறது.

**குறுங்காலப் பயிற்சி:**

வங்கி அலுவலர்களின் தகைமை இடைவெளிகளைக் குறைக்கும் நோக்குடன் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் 1,246 பொருத்தமான குறுங்கால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்கியது. இத்தகைய பயிற்சி இடைவெளிகள் 2015இன் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த தகைமைகள் திட்டமிடல் செயன்முறையினூடாக அடையாம் காணப்பட்டன.

**குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி:**

ஆண்டுக் காலப்பகுதியில், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தினால் 319 குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள், புகழ்பெற்ற வெளிநாட்டுப் பயிற்சி நிறுவனங்கள், இங்கிலாந்து வங்கி, டியூச்புண்டஸ் வங்கி, இந்தியறிசேர்வ் வங்கி, மலேசிய நெகரா வங்கி, கொரிய வங்கி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் வங்கி போன்ற முக்கிய மத்திய வங்கிகள் போன்றவற்றினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள், ஆய்வரங்குகள் மற்றும் கற்றல் சுற்றுலா போன்ற முறைகளில் வழங்கப்பட்டன. மத்திய வங்கி அலுவலர்கள், பன்னாட்டு நாணய நிதியம்(ப.நா.நி), உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, தென்கிழக்காசிய மத்திய வங்கிகள், பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கி போன்ற பன்னாட்டு நிதியிடல் முகவர்கள் மற்றும் ஆராச்சி நிறுவனங்கள் போன்றவற்றினால் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களிலும் பங்கு பற்றியிருந்தனர். 2016இல் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தினால் நாட்டிற்கு வெளியிலான 10 கற்கை விஜயங்களுக்கு வசதியளித்திருந்தது. 2016இல் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட குறுங்கால வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களின் விபரம் கீழே அட்டவணை II-02இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை II - 02 குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி - 2016**

| துறை | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | வாய்ப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நாணயக்கொள்கை,பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரம் | 57 | 71 |
| நிதியியல் முறைமைஉறுதிப்பாடு | 47 | 62 |
| இடர்நேர்வுமுகாமைத்துவம்,சட்டம் மற்றும் இணங்குவிப்பு | 27 | 34 |
| சொத்துப்பட்டியல் முகாமைத்துவம் | 27 | 40 |
| மத்தியவங்கித்தொழில் | 11 | 14 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் கொடுப்பனவுமுறைமை | 20 | 27 |
| நாணயமுகாமைத்துவம் | 8 | 9 |
| மனிதவளமுகாமைத்துவம் | 5 | 11 |
| நுண்பாகநிதி | 7 | 15 |
| ஏனையவை | 14 | 36 |
| மொத்தம் | 223 | 319 |

பயிற்சித் திட்டங்களினூடாக பெறப்பட்ட அறிவினையும் வெளிப்படுத்தல்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பல்வேறுவகையான ஒப்படைகளின் மூலம் தொடர்பான அலுவலர்களினால் பெறப்பட்ட குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சியின் செயல்திறனை தொடர்ந்து மதிப்பிட்டது. இந்நடவடிக்கைகள் முகாமைத்துவத்தினால் நியமிக்கப்பட்ட பயிற்சிக்கான துணைக் குழுவொன்றினால் கண்காணிக்கப்பட்டது. இதன்படி, 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில், 6 பயிற்சிக்கான துணைக்குழு கூட்டம் நடைபெற்றதுடன் குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்களினால் 37 அத்தகைய ஒப்படைகள் நிறைவு செய்யப்பட்டன. 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலுவலர்களினால் நிறைவு செய்யப்பட்ட ஒப்படைகளின் விபரம் கீழேயுள்ள

**அட்டவணை II 01: இலங்கை மத்திய வங்கியின் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012 இலிருந்து 2016 வரையான காலப்பகுதியில் பட்டப்பின் படிப்பைத் தொடங்கிய மற்றும் நிறைவு செய்த அலுவலர்களின் எண்ணிக்கை. (2012 - 2016)**

| கற்கைகள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் |
| முனைவர் பட்டம் | 4 | 2 | 6 | 0 | 5 | 2 | 3 | 5 | 4 | 3 |
| முதுமானிப் பட்டம் | 18 | 17 | 11 | 19 | 24 | 11 | 19 | 21 | 15 | 18 |

அட்டவணை II-03 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II 03 : 2015இல் குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களினால் நிறைவு செய்யப்பட்ட ஒப்படைகள்**

| வகை | ஒப்படைகளின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கான வழிகாட்டல்கள் | 2 |
| கட்டுரைகள் மற்றும் காட்சிப்படுத்தலுடன் கூடியவிரிவுரைகள் ஊடாக அறிவினைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு | 64 |
| முறைமைகள் மற்றும் செய்முறைகளை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள் | 8 |
| மொத்தம் | 74 |

குறுங்கால உள்நாட்டுப் பயிற்சி

2016இல், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், முக்கியமாக, பொருளாதாரம், புள்ளிவிபரம், கணக்கியல், வங்கித்தொழில், தகவல் தொழில்நுட்பம், சட்டம், கணக்காய்வு, நிதிய முகாமைத்துவம், இடர்நேர்வு முகாமைத்துவம், செயலக நடைமுறைகள், மனித மூலதன முகாமைத்துவம், வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, நிதியியல் சந்தைகள், வெளிநாட்டுச் செலாவணி, நாணயம் மற்றும் பிரதேச அபிவிருத்தி போன்ற விடயங்களில் பிரதானமாக, வங்கித் தொழில்கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் மற்றும் ஏனைய புகழ்மிக்க உள்நாட்டு நிறுவனங்கள் போன்றவற்றில் கூட்டங்கள், பன்னாட்டு கருத்தரங்குகள், மாநாடுகள், உச்சி மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் உள்ளடங்கலாக வங்கி ஊழியர்களுக்கு 927 குறுங்கால உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியது. வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநிலையம் மற்றும் ஏனைய நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை முறையே 461 ஆகவும் 466 ஆகவும் காணப்பட்டது.

செயலமர்வுகள் மற்றும் அறிவினை பகிர்வு

2016இல், மத்திய வங்கி அலுவலர்களின் காலத்துக்கேற்ற முக்கிய திறன் இடைவெளிகளை நிரப்பும் நோக்குடன், வங்கித்தொழில் கற்கைகள் நிலையத்தின் ஒத்துழைப்புடன் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், தடவியல் கணக்கியல் பரப்புக்களை உள்ளடக்கி ஒரு செயலமர்வினை ஒழுங்குபடுத்தியது. மேலும், 2016இல் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது 02 கட்டமைக்கப்பட்ட உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒழுங்குபடுத்தியிருந்தது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் அறிவை அதிகரிப்பதனை வசதிப்படுத்துவதற்காக ஏனைய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் பயிற்சி மாற்றல் அபிவிருத்தி திணைக்களத்தினுள் ஒழுங்குபடுத்தப்பட்ட மாதாந்த அரங்கின் கீழ் பொருளாதாரம், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் போன்றகாலத்திற்கேற்ற தலைப்புக்களில் பல்வேறுபட்ட தொழில்துறை நிபுணர்களினால் 06 காட்சிப்படுத்தல்களுடன் கூடியவிரிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும், பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி திணைக்களமானது வெளிநாட்டு பயிற்சிகளில் பங்குபற்றிய அலுவல்களினால் மேற்கொள்ளப்பட்ட 04 காட்சிப்படுத்தலுடன்கூடிய விரிவுரைகள் மற்றும் பட்டபின் படிப்பினை முடிவுசெய்து பணிக்கு திரும்பிய அலுவலர்களினை மேற்கொள்ளப்பட்ட 09 காட்சிப்படுத்தல்களுடன் கூடிய விரிவுரைகள் போன்றவற்றிற்குரிய விதியளித்திருந்தது.